அறிஞர் தமிழ் மாலை

அருணா வெளியீடு : கய

# அருணா தமிழ்மாலை

\- நான்காம் படிவம்

சிறப்புப் பகுதி

தொகுப்பாசிரியர் :

வித்துவான் ம. வி. இராகவன்

இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளி

தியாகராயநகரம்

அருணா பப்ளிகேஷன்ஸ்

தியாகராயநகரம் :: சென்னை-17

முதற்பதிப்பு : நவம்பர், 1954.

R.B 156
1-55
70557

## நன்றியுரை

இத் தமிழ் மாலையின்கண் மணம்வீசும் தமிழ் மலர்களை அருளிய ஆசிரியர்கள், உரிமையாளர்கள் அனைவருக்கும் எம் உளமார்ந்த நன்றி உரியது.

— தொகுப்பாசிரியர்.

அச்சிட்டோர் : நவபாரத் பிரஸ், சென்னை-1.

# பதிப்புரை

'அருணா தமிழ் மாலை' தமிழ்ச் சோலையிலே நறு மணங் கமழும் பல நன்மலர்களின் தொகுப்பு ஆகும். உயர்நிலைப் பள்ளி நான்காம்படிவ மாணவர்க்கு அரசியலார் வகுத்துள்ள பாட இயலைத் தழுவியது. மொழிப்பயிற்சி, பொருளுணர்ச்சி ஆகிய இருவகை களிலும் மாணவர்கட்கு இன்றியமையாது வேண்டப் படுவன யாவும் இதன்கண் இடம் பெற்றுள்ளன.

புதுமுறைப்படி தாய்மொழிப் பயிற்சி பொது, சிறப்பு என இருவேறு பகுதிகளாக அமையவேண்டும் என்பதையொட்டி இத் தொகுப்பும் பொதுப் பகுதி, சிறப்புப் பகுதி என இரு தனிப்பகுதிகளாக வெளி வருகின்றன.

பாடவியலின் குறிப்புக்கும், வகுப்பின் தரத்திற் கும், மாணவரின் மனப் பண்பிற்கும், இயல்பூக்கங் கட்கும் ஏற்ப விளங்கவேண்டும் இத் தமிழ்மாலை எனப் பெருமுயற்சி செய்யப்பட்டிருக்கின்றது. குறிப்புரை, இலக்கண விளக்கங்கள், பயிற்சி வினக்கள் முதலியன வும் இதன்கண் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர்களும் அதிகாரிகளும் இம்முயற்சியினை அன்புடன் ஏற்று ஆதரவளித்து எம்மை மேன்மேலும் ஊக்குவார்கள் என நம்புகின்றோம்.

இம் முயற்சியில் எமக்குப் பல்லாற்றானும் உதவிய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் எமது நன்றி.

தொகுப்பாசிரியர்.

# பொருளடக்கம்

## சிறப்புப்பகுதி - பாமாலை


1. வாழ்த்து

1. கடவுள்—தாயுமான அடிகள் ... 1
2. தமிழ்மொழி—ரா. வேங்கடாசலம் பிள்ளை ... ,,
3. சுதந்திர தேவி—சுப்பிரமணிய பாரதியார் ... 2

2. அறவுரை

1. அறநெறிச்சாரம்—முனைப்பாடியார் ... 3
2. நாலடியார்—சமண முனிவர் ... 4

3. காதை

1. குசேலோபாக்கியானம்—வல்லூர் தேவராசப்பிள்ளை 5
2. வில்லி பாரதம்—வில்லிப் புத்தூரார் ... 9
3. பாஞ்சாலி சபதம்—சுப்பிரமணிய பாரதியார் ... 13

4. சிறு நூல்கள்

1. சகல கலாவல்லி மாலை—குமரகுருபர சுவாமிகள் ... 15
2. ஏரெழுபது—கம்பர் ... ,,
3. கலைசைச் சிலேடை வெண்பா—சுப்பிரமணிய முனிவர் ... 16
4. ஊசல்—பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ... ,,
—வேதநாயகம் பிள்ளை ... 17
5. அம்மானை—இரட்டையர்கள் ... ,,
—பண்டித. ந.மு. வேங்கடசாமி நாட்டார் ... ,,

5. பழம் பாடல்கள்

1. சிலப்பதிகாரம்—இளங்கோவடிகள் ... 18
2. மணிமேகலை—சீத்தலைச் சாத்தனார் ... ,,
3. நற்றிணை—நல்வேட்டனார் ... 19
4. பதிற்றுப் பத்து—பாலைக் கௌதமனார் ... ,,
5. கலித்தொகை—நல்லந்துவனார் ... ,,
6. புறநானூறு—ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ... 20
—பிசிராந்தையார் ... ,,
—கணியன் பூங்குன்றனார் ... ,,

## சிறப்புப்பகுதி-உரைநடை


| | | |
|---|---|---|
| 1. | தமிழ்மொழி—வித்துவான். ம. வி. இராகவன் ... | 21 |
| 2. | ஆதிரை பிச்சையிட்டது— டாக்டர் மா. இராசமாணிக்கனுர் ... | 24 |
| 3. | தமிழர் நாகரிகம்—யோகி. சுத்தானந்த பாரதியார் ... | 27 |
| 4. | இயற்கையோடு இயைந்த வாழ்வு— ஈ. த. இராசேசுவரி அம்மையார் ... | 30 |
| 5. | தமிழ்நாட்டுத் தலைநகரங்கள்— டாக்டர். அ. சிதம்பர நாதச் செட்டியார் ... | 34 |
| 6. | பசிக்குப் பகைவன்—மொ. அ. துரை அரங்கசாமி ... | 38 |
| 7. | தமிழ் இசை—குன்றக்குடி அடிகள் ... | 42 |
| 8. | பண்டை உரைநடை—அடியார்க்கு நல்லார் ... | 47 |
| | ,, —இளம்பூரணர் ... | ,, |
| | ,, —பரிமேலழகர் ... | 48 |
| 9. | பெண்ணுரிமை—திரு. வி. கலியாண சுந்தரனுர் ... | 49 |
| | குறிப்புரையும் பயிற்சி வினுக்களும் ... | 53 |

# 1. வாழ்த்து

## 1. கடவுள்

[இப்பாடல் கடவுள் வாழ்த்து. இது கடவுளை அவருடைய பொதுவான தன்மைகளையே கூறி வாழ்த்துவதாக அமைந்துள்ளது. இதனைப் பாடியவர் **தாயுமான அடிகள்.** இவர் சோழ நாட்டில், வேதாரணியம் எனப்படும் திருமறைக் காட்டில் தோன்றியவர் : வேளாளர் குலம் : சைவ சமயம் : தந்தை யார் கேடிலியப்ப பிள்ளை : ஞானசிரியர் மௌனகுரு : காலம் 17–ஆம் நூற்றுண்டு. இவர் கால அரசன் விசய ரகுநாத சொக்கலிங்க நாயகர். இவர் முதலில் அவ்வரசனிடம் அரசாங்கக் கணக்கராக இருந்தார் : பிறகு துறவியானுர்.]

அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே !
　　ஆரமிர்தே ! என்கண்ணே! அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே ! கருணை நீங்காப்
　　பூரணமாய் நின்றஒன்றே ! புனித வாழ்வே !
கருதரிய கருத்ததனுள் கருத்தாய் மேவிக்
　　காலமும்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையும் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
　　விழுப் பொருளே ! யான்சொலும் விண்ணப்பம் கேளே.

## 2. தமிழ் மொழி

[தமிழ் மொழியை வாழ்த்துவதாக அமைந்துள்ளது இப்பாடல். இதில் தமிழ் மொழியின் பெருமைகள் பேசப்படுகின்றன. இதனை இயற்றியவர் **கரந்தைக் கவியரசு. ரா. வேங்கடாசலம் பிள்ளை.** இவர் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவராகவும். திருவையாற்றுக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் இருந்தவர்.]

வானர்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
　　மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே !
தேனர்ந்த தீஞ்சுவைசால் திருமாலின் குன்றம்
　　தென்குமரி ஆயிடைநல் செங்கோல்கொள் செல்வி !

காஞர்ந்த தேனே ! கற் கண்டே ! நற் கனியே !
கண்ணே!கண் மணியே!அக் கட்புலஞ்சேர் தேவி!
ஆஞத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!
அம்மே!நின் சீர்ப்பெருமை அறைதல்யார்க் கெளிதே !

## 3. சுதந்திர தேவி

[இது சுதந்திர தேவி வாழ்த்து. எத்துணைத் துன்பம் நேரினும் சுதந்திரத்தைப் போற்றிப் பாதுகாத்தலில் தவறலாகாது என்னும் கருத்து இப்பாட்டில் விளக்கப் பட்டுள்ளது. இதனைப் பாடியவர் **தேசீய கவி சுப்பிரமணிய பாரதியார்.** இவர் திருநெல்வேலி மாவட்டத்து எட்டையபுரத்தினர்; தந்தையார் சின்னசாமி ஐயர்; தாயார் இலட்சுமி அம்மையார். இவர் இளமையிலேயே கவி பாடும் திறமுடையராய், 'பாரதி' எனும் சிறப்புப் பெயர் பெற்றவர்; நாட்டு விடுதலை இயக்கத்திற் சேர்ந்து தொண்டு ஆற்றியவர்; தம் கவிதைகளால் தமிழ் மக்கள் உள்ளத்தில் விடுதலை வேட்கையை எழுப்பி, உணர்ச்சி யூட்டி, ஊக்கம் தந்தவர். இவர் பல செய்யுள் நூல்களும், உரை நடை, கட்டுரை நூல்களும் இயற்றி உதவியுள்ளார்.]

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற் ருலும்,
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்,
சுதந்திர தேவி ! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே. 1

நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்,
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்,
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்,
அன்னவர் வாழ்க்கை பாழாம்;
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார். 2

# 2. அறவுரை

## 1. அறநெறிச்சாரம்

[இஃது ஒரு நீதி நூல். தரும வழிகளில் சாரமாக உள்ள உண்மைகளைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. அற நெறி—அறம்+நெறி: அறமாகிய நெறி: பண்புத் தொகை. அறத்தினது நெறி எனப் பிரித்து ஆறும் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ளப்படும். நெறிச்சாரம்—நெறிகளின் சாரமானது: ஏழாம் வேற்றுமைத் தொகை. இந்நூல் இருநூற்றிருபத்தாறு வெண்பாக்களைக் கொண்டது: காட்சி, ஒழுக்கம், ஞானம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது: கீழ்க் கணக்கு நூல்களைப் போலச் சிறப்பாக மதிக்கப்படுவது. இதனை இயற்றியவர் முனைப்பாடியார். இவர் சமண சமயத்தவர்; காலம் 9-ஆம் நூற்றாண்டு.]

### தற்புகழ்ச்சி

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்(கு)
அச்சாணி யன்னதோர் சொல். 1

### பொறுமை

எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்,—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுக லாற்றின்
பிறிதெனினும் வேண்டா தவம். 2

### கீழோர் நெஞ்சு

வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அறிதாகும்;—அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு. 3

### செல்வத்தின் பயன்

செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லவாம்
தான மறவாத தன்மையரேல், அஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு. 4

## 2. நாலடியார்

[இது பதினெண்கீழ்க் கணக்கு என்னும் நூல்தொகையைச் சேர்ந்ததொரு நீதி நூல். நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆகியிருப்பதால் இஃது இப்பெயர் பெற்றது. நானூறு பாக்களைக் கொண்டிருப்பதால் இது நாலடி நானூறு என்றும் வழங்கப்படும். நான்கு+அடி=நாலடி ; 'ஆர்' சிறப்புப் பொருள் உணர்த்தும் விகுதி. நாலடி என்பது முதலில் நான்காகிய அடிகளைக் கொண்ட பாட்டைக் குறித்தது ; பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பிறகு அப்பாட்டுக்களால் ஆகிய நூலுக்குப் பெயராயிற்று ; கருவியாகு பெயர். இஃது அறம், பொருள், இன்பம் ஆகிய இம்மைப் பயன்கள் மூன்றையும் கூறுவது ; அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது ; "நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்று திருக்குறளோடு ஒப்பவைத்து மதிக்கப்படுவது ; போப்பையரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருப்பது. இதனை இயற்றியோர் சமண முனிவர் பலர் என்பர். இதனைத் தொகுத்துக் கோத்தவர் பதுமனார் என்னும் புலவர். இதன் காலம் கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டு என்பர் ஆராய்ச்சியாளர்.]

### பொருள்

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும் ;
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்(து)
அடுவது போலும் துயர். 1

### அறப் பயன்

உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்(கு)—அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும். 2

### நல்லார் சேர்க்கை

ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் ;—ஓரும்
குலமாட்சி யில்லாரும் குன்று போல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. 3

### கல்வியின் சிறப்பு

இம்மை பயக்குமால் ; ஈயக் குறைவின்றால் ;
தம்மை விளக்குமால் ; தாமுளராக் கேடின்றால் ;
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. 4

# 3. காதை

## 1. குசேலோபாக்கியானம்

### குசேலன் கண்ணனை அடைதல்

[குசேல+உபாக்கியானம்—குசேலோபாக்கியானம். குசேலருடைய சரித்திரத்தைக் கூறும் கிளைக்கதை என்பது இதன் பொருள். உபாக்கியானம்—கிளைக்கதை. இது பாகவதத்தில் வரும் கிளைக்கதைகளுள் ஒன்று. குசேலர் என்பதற்கு அற்பமான (கந்தை) ஆடையை உடையவர் என்பது பொருள். இஃது இவருக்குக் காரணப் பெயர். இவர் இயற்பெயர் 'சுதாமர்' என்பது. இந்நூலின் ஆசிரியர் **வல்லூர். தேவராசப் பிள்ளை.** இவர் தொண்டை நாட்டு வல்லூரினர்; கருணீகர் குலத்தினர்; தந்தையார் வீராசாமிப் பிள்ளை; காலம் 87 ஆண்டுகட்கு முன்னது. இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர்.]

[குசேலர் இல்லற வாழ்க்கையில் பொருளின்றி வறுமையால் வாடினார்; மனைவி சுசீலையின் வேண்டுகோளுக்கு இணங்கித் தம் இளம்பருவ நண்பராகிய கண்ணபிரானைக் காணத் துவாரகை சென்று அரண்மனை வாயிலை அடைந்தார். அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சி கீழே தரப்படுகின்றது.]

### குசேலர் துவாரபாலகரை வேண்டல்

''எளியனேன் மறையோர் தம்குலத் துதித்தேன்;
    என்பெயர் குசேலன்;மிக் கொலிக்கும்
நளிகொள்வெண் தரங்கப் பாற்கடல் நாப்பண்
    நாகணைத் துயிலொழிந் தடியார்க்(கு)
அளிசெய்தல் லார்க்கி றுறுத்திட அவதா
    ரஞ்செய்த கண்ணபி ரானோ(டு)
இளமையில் பற்பல் கலைபயின் றுள்ளேன்
    இசைக்குமுக் குற்றமும் அகல. 1

'' வச்சிரத் தடக்கை வாசவன் ஏவ
    மஞ்சினம் பொழிசிலா மழையை
நச்சும்விண் ணுரிஞ்சும் போகுயர் குவட்டோர்
    நாகம்ஏந் தித்தடுத் தருளும்
அச்சுதன் பால்சென் றேழையேன் வருகை
    அறிவித்தென் றனையவண் சேர்த்தல்
மெச்சுநும் கட''னென் றுரைத்தனன் எவரும்
    விரும்புறு குசேலமா தவனே. 2

### துவார பாலகர் இழித்துரைத்தல்

“ பொருள்நனி உளனென் றியாரும்
புகலுமோர் வார்த்தை வேண்டும் ;
இருகையும் கடகம் வேண்டும் ;
இலங்குகுண் டலங்கள் வேண்டும் ;
வருவிரல் ஆழி வேண்டும் ;
மார்பிடை மதாணி வேண்டும் ;
உருவமுத் தாரம் வேண்டும் ;
உயர்ந்தபட் டாடை வேண்டும். 3

“ சிவிகைமுன் ஊர்தி வேண்டும் ;
செழும்பொருள் செலவு வேண்டும்,
குவிகைஏ வலரும் வேண்டும் ;
கோலமார்ந் திருக்க வேண்டும் ;
கவிகைதாங் குநரும் வேண்டும் ;
கையுறை சிறப்ப வேண்டும் ;
அவிகையில் விளக்கம் வேண்டும்;
அரசவை குறுகு வார்க்கே. 4

“ இத்தலை வாய்நிற் கின்ற
இவர்க்கெலாம் இரும்பொன் உண்டு ;
மெத்திய ஏவ லாளர்
மிகவுமுண்(டு) ஆத லாலே
எத்தனைப் பற்பல் நாள்காத்
திருக்கினும் குற்றம் இல்லை ;
பொத்துநோய் மிடிக்கோட் பட்ட
நினக்கிது பொருந்தா தாகும். 5

### குசேலர் வருத்தம்

“ மின்செய்த மதாணி யாம்!முத்
தாரமாம் ! விளங்கு பட்டாம்!
பொன்செய்த ஊர்தி யாம்!இப்
போதுயாம் பெறுவ தெங்கே!
நன்செயல் நம்மூ தாதை
நாளினும் கேட்ட தின்றால்!
என்செய்வோம்? எண்ணு தொன்றை
இயற்றுதல் என்றும் தீதே. 6

### துவாரபாலகருள் ஒருவன் கூறல்

"யாரென நினைத்தீர் இந்த
இருந்தவத் தலைவன் தன்னை?
சேருறு பொய்மை யில்லன் ;
செறிந்தநோன் புழந்த நல்லன் :
வாருறு மறைகள் வல்லன் ;
மற்றெங்கும் செல்வான் அல்லன் :
ஏருறும் இனிய சொல்லன்
என்னவே யாம்உள் கோடும். 7

ஆவாஇம் மறையோனைக் காண்தொறும்உள்
ளகத்துவகை அரும்பா நின்ற(து) ;
ஓவாது மெய்யினிடைப் புளகம்எழு
கின்றது ; கண் உருகா நின்ற ;
நாவாரத் துதிப்பதற்குத் துடிதுடிக்கின்
றது ; விரைந்து நாம்போய் இன்னே
தேவாதி தேவனுக்கித் தவன்வரவை
விண்ணப்பம் செய்ய வேண்டும். 8

### கண்ணனிடம் குசேலர் வருகை உரைத்தல்

"ஆதிநாள் ஐய நின்னோ(டு)
அருங்கலை கற்று ளானும்,
போதவும் சிறந்த நட்புப்
பூண்டுகொண் டவனும், கந்தை
மேதகக் கொண்ட நீரான்,
மெய்ம்மறை யவர்கு லத்தான்,
கோதறு குணத்தின் மிக்கான்,
குசேலன்என் றியம்பி னுன்பேர். 9

"வற்றியென் பெழுந்த யாக்கை
மாதவன் நின்மேல் வைத்த
பற்றினை யெம்ம னோரோ
பகுத்தறிந் தளக்க வல்லார் ?
இற்றைநாள் வந்து வாயில்
இருக்கின்றான் ; எதிர்ந்த போரில்
வெற்றிகொள் கழற்கால் வேந்தே !
விண்ணப்பம் இதுவே" என்றார். 10

### கண்ணன் உவகை

என்றலும் உவகை விம்ம,
எழில்முகம் மலர்ச்சி காட்ட,
பொன்றலில் கருணை பொங்கிப்
பொழிதர ''விரைவி னில்சென்(று)
இன்றுநம் வாயில் வந்த
இருந்தவத் தலைவன் தன்னை
மன்றஇங் கழைப்பீர்'' என்று
வாய்மலர்ந் தருளி னனே. 11

### துவாரபாலகர் குசேலரிடம் கூறுதல்

நின்னுடை வரவு ரைத்தேம்,
நிருபனுக் கப்போழ் துற்ற
பன்னரும் களிப்பை யாமோ
பகர்ந்திட வல்லேம் ஐய!
முன்னம்அங் கிருந்த இன்பம்
முழுவதும் மறந்து நின்றான் ;
நன்னர்நெஞ் சுடைய நீரார்
நட்பினில் சிறந்த துண்டோ ? 12

தாயது வருகை கேட்ட
தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி
நெஞ்சினுள் உவகை பூப்ப,
'போய்அழைத் திடுமின் இன்னே !,
போய்அழைத் திடுமின் இன்னே !,
போய்அழைத் திடுமின் இன்னே !'
எனவிரை பொருளில் சொற்றான். 13

### குசேலர் கண்ணனை அடைதல்

''ஆதலின் எம்பி ரானுக்
ககத்துமிக் குவகை உய்ப்ப
ஏதமில் முனிவர் ஏறே,
எழுந்தரு ளுக!' என் றங்கைப்
போதகம் கூப்பி னார்கள்.
பொருக்கென எழுந்து செம்மை
வேதம்முற் றுணர்ந்த ஐயன்
விரைதர நடக்க லுற்றான். 14

## 2. வில்லி பாரதம்

[பாரதம், இராமாயணம் இவ்விரண்டும் நம் நாட்டின் இரு பெரிய இதிகாசங்கள். பழைய வரலாறு ஒன்றைப் பல கிளைக்கதைகளோடு விரித்து விளக்கிக் கூறும் பெருநூல் இதிகாசம் எனப்படும். பாரதம் என்பது பரதனது வமிசத்தில் தோன்றினவர்களுடைய வரலாற்றைக் கூறுவது; இது வடமொழியில் தத்திதாந்த நாமம் எனப்படும். பரதன், துஷ்யந்தனுக்குச் சகுந்தலையினிடம் பிறந்தவன். பாரதர்=பாண்டவரும் துரியோதனுதியரும். பாரதம் முதலில் வியாச முனிவரால் வடமொழியில் இயற்றப்பட்டது; பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது. இது வியாச பாரதம் எனப்படும். வில்லி பாரதம்=வில்லிப்புத்தூராரால் தமிழில் இயற்றப்பட்ட பாரதம். இது வியாச பாரதத்தை முதனூலாகக்கொண்டு அகத்திய பட்டருடைய பால பாரதத்தையும் தழுவி இயற்றப்பட்டது.]

[வில்லிப்புத்தூரார், திருமுனைப்பாடி நாட்டில் உள்ள சனியூரில் வீரராகவன் என்னும் அந்தணருக்குப் புதல்வராகப் பிறந்தவர்; வைணவ சமயத்தவர்; வடமொழி தமிழ் மொழி ஆகிய இரு மொழிகளிலும் பெரும் புலமை பெற்றவர்; கொங்கர் கோமானுகிய வக்கபாகை வரபதியாட்கொண்டான் என்னும் அரசனல் ஆதரிக்கப் பெற்றவர்; அவன் விருப்பத்திற்கிணங்கிப் பாரதத்தின் முதல் பத்துப் பருவங்களைத் தமிழில் விருத்தப்பாவால் பாடினவர். இவர் காலம் சற்றேறக்குறைய 450 ஆண்டுகட்கு முன்னது. இவரே யன்றி, பெருந்தேவனுர், நல்லாப்பிள்ளை, அரங்கநாதக் கவிராயர் ஆகியோரும் பாரதத்தைத் தமிழில் இயற்றியுள்ளனர்.]

[பாரதத்தின் ஐந்தாவது பிரிவாகிய உத்தியோக பர்வத்தில் உள்ள 'வாசுதேவனைப் படைத்துணை அழைத்த சருக்கம்' என்னும் பகுதி இங்குப் பாடமாகத் தரப்படுகின்றது. பாரதப் போருக்கு நாள் குறித்த பின்னர், துரியோதனன் கண்ணனைத் தனக்குப் படைத்துணையாமாறு அழைக்கவேண்டித் துவாரகை வருகின்றுன். அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சி இப்பகுதியில் கூறப்படுகின்றது.]

### துரியோதனன் துவாரகை அடைதல்

தேயமெங் கெங்கும் செங்கோல்
    செலுத்துமத் திகிரி வேந்தர்
ஆயவர் தம்மைக் கூட்ட
    அடைவினில் தூது போக்கி,
காயமும் உயிரும் ஆகிப்
    பொருள்தொறும் கலந்து நின்ற
மாயவன் தன்னைக் கூட்ட
    வளர்மதில் துவரை சேர்ந்தான். 1.

### கண்ணன் அறிதுயில் கொள்ளல்

வந்தமை அறிந்து, கொற்ற
    வாயிலோர் தம்மை நோக்கி,
'அந்தன்மா மதலை வந்தால்
    அறிவியா தழைமின்'', என்று

சந்திரன் ஒடுங்கி நிற்பத்
    தபனனே சரிக்கு மாறு
பந்தனை இலாதான் யோகத்
    துயில்வரப் பள்ளி கொண்டான். 2

### துரியோதனன் கண்ணன் முடிப்பக்கம் அமர்தல்

பொற்புடைப் புனிதன் கோயில்
    புறத்தினில் அனிகம் நிற்ப,
சற்பவெம் பதாகை வேந்தன்
    தடையறத் தனிச்சென் றெய்தி,
உற்பல வண்ணன் பள்ளி
    உணர்தரு காறும் இட்ட
சிற்பவண் தவிசின் ஏறித்
    திருமுடிப் பக்கம் சேர்ந்தான். 3

### அருச்சுனன் வந்து கண்ணன் திருவடிப்பக்கம் நிற்க, கண்ணன் விழித்து நோக்குதல்

'வந்திலன் விசயன்,' என்று
    வான்துயில் புரிந்த அண்ணல்
சிந்தனை செய்யும் வேளை,
    சிந்தையில் கடிய தேரோன்
பந்தனை அறுக்கும் பாத
    பங்கயம் பணிந்து நிற்ப,
முந்துற விழித்து நோக்கி
    முகமலர்ந் தருள்செய் தானே. 4

### கண்ணன் துரியோதனனைத் தழுவி முகமனுரைத்தல்

நின்றவன் இருந்த வேந்தன்
    வரவினை நிகழ்த்த, நேமிப்
பொன்திகழ் படையோன் அந்தப்
    பொய்த்துயில் பாயல் நீங்கி,
'மன்றலந் தொடையல் மார்பா!
    வரவெமக் குரைசெ யாதென்?'
என்றுரம் நெருங்கப் புல்லி
    இன்சொலால் உவகை செய்தான். 5

### இருவரும் கண்ணனைப் படைத்துணையாமாறு வேண்டுதல்

'இருவிரும் வந்த வாறென்?
இயம்புதிர்!' என்று வாச
மருவிரி துளப மாலை
மரகத வண்ணன் கேட்ப,
'செருவில்நீ எமக்கு வெம்போர்
செய்துணை ஆக வேண்டும்
பொருவிலோய்!' என்று கொண்டவ்
விருவரும் புகன்ற காலை, 6

### கண்ணன் பாண்டவர்க்கே உதவ நேர்ந்தமையைத் தெரிவித்தல்

'உற்றமர் உதவி செய்வான்
உதிட்டிரன் தனக்கு முன்னே
சொற்றனம் ஆங்கண்; இங்கும்
துயிலுணர் பொழுதத் தின்று
விற்றிறல் விசயன் முந்த
விழிக்கிலக் காணுன்,' என்று
பற்றறத் துணிந்து சொன்ஞன்
பாண்டவர் சகாய ஞுன். 7

### துரியோதனன் வேண்டுகோளும் கண்ணன் உடன்பாடும்

முடைகமழ் முல்லை மாலை
முடியவன் தன்னைப் 'போரில்
படையெடா தொழிதி,' என்று
பன்னகத் துவசன் வேண்ட,
நெடியமா முகிலும் நேர்ந்து,
'நினக்கினி விசய! போரில்
அடுபடை இன்றிச் செய்யும்
ஆண்மையென்? அறைதி,' என்ருன். 8

### அருச்சுனன் கண்ணனைத் தேரோட்ட வேண்டுதல்

'செருமலி ஆழி அங்கைச்
செழுஞ்சுடர்! நின்றென் தேரில்
பொருபரி தூண்டின், இந்தப்
பூதலத் தரசர் ஒன்ருே!

வெருவரும் இயக்கர் விண்ணோர்
விஞ்சையர் எனினும், என்கை
வரிசிலை குழைய வாங்கி
மணித்தலை துமிப்பன் !' என்றான். 9

### கண்ணன் துரியோதனனுக்கு உறுதி கூறுதல்

அடர்சிலை விசயன் இவ்வா(று)
இசைத்தலும், அமலன் வஞ்சப்
படவர வுயர்த்த வென்றிப்
பார்த்திவன் தன்னை நோக்கி,
'நடையுடைப் புரவித் திண்டேர்
நானிவற் கூர்வ தன்றி
மிடைபடை ஏவி நும்மோ(டு)
அமர்செயேன் வேந்த !' என்றான். 10

### பலராமர் முதலியோரைப் படைத்துணையாக அளித்தல்

'எம்மையே ஒழிய உள்ள
யாதவ குலத்து ளோர்கள்
தம்மையும், எம்மு னை
தாலகே துவையும் சேரச்
செம்மையோ டுதவி யாகக்
கொண்டுநீ செல்க,' என்று
மும்மையும் உணர்ந்த நாதன்
முன்னுறப் பின்னும் சொன்னான் ; 11

### துரியோதனன் பலராமரைக் காணுதல்

' கிருதவன் மாவக் ரோணி
கிளர்படை யோடு நின்பால்
வருவன்,' என் றுரைத்து, வேண்டும்
மதுரவாய் மைகளும் கூறி,
மருதுபோழ்ந் திட்ட செங்கண்
மாயவன் விடுப்ப, ஏகிக்
கருதலான் வினயம் ஒன்றும்
கண்ணன்முன் னோனைக் கண்டான். 12

### துரியோதனன் பலராமனை வேண்டிக்கொண்டு அத்தினபுரி சேர்தல்

கண்ணனங் கருளிச் செய்த
கட்டுரைப் படியே சங்க
வண்ணனுக் கிளவல் சொன்ன
மாற்றமும் அரசன் சாற்றி,
'எண்ணருந் தொகைகொள் சேனை
யாதவ குமர ரோடே
அண்ணலே! வரு'கென் ருேதி
அத்தின புரிபுக் கானே. 13

## 3. பாஞ்சாலி சபதம்

[பாண்டவர்களின் மனைவியாகிய பாஞ்சாலி துரியோதனனது சபையில் செய்த சபதத்தை விரிவாகக் கூறுவது இந்நூல். பாஞ்சாலி=பாஞ்சால நாட்டு அரசனுகிய துருபதன் மகள்: திரௌபதி. இது வடமொழியில் தத்திதாந்த நாமம் எனப்படும். துரியோதனன் பாண்டவர் உயர்வு கண்டு பொருமைப் படுவதும், தருமனை அழைத்துச் சூதாடி வெல்வதும், திரௌபதியை அரசவையில் அழைத்துத் துகிலுரிந்து மானபங்கம் செய்வதும், திரௌபதி கடுஞ்சினம் கொண்டு சபதம் செய்வதும் ஆகிய செய்திகள் இதில் உணர்ச்சி வேகத்தோடு அழகாகக் கூறப்பட்டுள்ளன. இதனை இயற்றியவர் **தேசீயக் கவி சுப்பிரமணிய பாரதியார்.** இவர் வரலாறு முன்னர்க் கூறப்பட்டுள்ளது.]

[சகோதரர்களாகிய பாண்டவர்களோடு பகைமை பாராட்டாது ஒற்றுமையாக இருக்குமாறு கூறிய தந்தை திருதராட்டிரனைத் துரியோதனன் காய்ந்து கூறும் பகுதி கீழே தரப்படுகின்றது.]

பாம்பைக் கொடியென் றுயர்த்தவன்—அந்தப்
பாம்பெனச் சீறி மொழிகுவான்;—அட!
தாம்பெற்ற மைந்தர்க்குத் தீதுசெய்—திடுந்
தந்தையர் பார்மிசை யுண்டுகொல்?—கெட்ட
வேம்பு நிகரிவ னுக்குநான்—சுவை
மிக்க சருக்கரை பாண்டவர்!—அவர்
தீம்பு செய்தாலும் புகழ்கின்ருன்!—திருத்
தேடினு மென்னை யிகழ்கின்ருன்! 1

'மன்னர்க்கு நீதி யொருவகை—பிற
மாந்தர்க்கு நீதிமற் றேர்வகை,'—என்று
சொன்ன வியாழ முனிவனை—இவன்
சுத்த மடையனென் றெண்ணியே,—மற்றும்
என்னென்ன வோகதை சொல்கிருன் ;—உற
வென்றும்நட் பென்றுங் கதைக்கிருன் ;—அவர்
சின்ன முறச்செய வேதிறங்—கெட்ட
செத்தையென் றென்னை நினைக்கிருன் ! 2

மாதர்த மின்ப மெனக்கென்ருன் ;—புவி
மண்டலத் தாட்சி யவர்க்கென்ருன் ;—நல்ல
சாதமு நெய்யு மெனக்கென்ருன் ;—எங்கும்
சாற்றிடுங் கீர்த்தி யவர்க்கென்ருன் ;—அட !
ஆதர விங்ஙனம் பிள்ளைமேல்—வைக்கும்
அப்ப னுலகினில் வேறுண்டோ ?—உயிர்ச்
சோதரர் பாண்டவர் தந்தை நீ—குறை
சொல்ல இனியிடம் ஏதையா ? 3

சொல்லின் நயங்க ளறிந்திலேன் ;—உனைச்
சொல்லினில் வெல்ல விரும்பிலேன் ;—கருங்
கல்லிடை நாருரிப் பாருண்டோ ?—நினைக்
காரணங் காட்டுத லாகுமோ ?—என்னைக்
கொல்லினும் வேறெது செய்யினும்,—நெஞ்சிற்
கொண்ட கருத்தை விடுகிலேன் !—அந்தப்
புல்லிய பாண்டவர் மேம்படக்—கண்டு
போற்றி யுயிர்கொண்டு வாழ்கிலேன் ! 4

வாதுநின் னேடு தொடுக்கிலேன் ;—ஒரு
வார்த்தைமட் டுஞ்சொலக் கேட்பையால் ;—ஒரு
தீது நமக்கு வராமலே—வெற்றி
சேர்வதற்(கு) ஓர்வழி உண்டுகாண் !—களிச்
சூதுக்(கு) அவரை அழைத்தெல்லாம்—அதில்
தோற்றிடு மாறு புரியலாம் ;—இதற்(கு)
ஏதும் தடைகள் சொல்லாமலே—என(து)
எண்ணத்தை நீ கொளல் வேண்டுமால். 5

# 4. சிறு நூல்கள்

## 1. சகல கலாவல்லி மாலை

[இது கலைமகளின் மீது பாடப்பட்ட மாலை என்னும் பிரபந்தம். சகல கலா வல்லி—கலைமகள்; பல கலைகட்கும் உரிய தலைவியாகிய கொடி போன்றவள் என்பது பொருள். மாலை என்பது ஒரு வகைப் பிரபந்தம். பல மலர்களால் தொடுக்கப்படும் மாலைபோலப் பல பாக்களால் அழகாகத் தொகுத்துப் பாடப்படுவது. இதனைப் பாடியவர் குமர குருபர சுவாமிகள். இவர் திருநெல்வேலி மாவட்டத்து ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரினர்; சைவ வேளாள மரபினர்; தந்தையார்: சண்முக சிகாமணிக் கவிராயர்; காலம் 17-ஆம் நூற்றுண்டு; திருச் செந்தூர் முருகப் பெருமான் அருள் பெற்று அவரைப் பாமாலையால் பாடினவர்; இளமையிலேயே துறவு பூண்டவர். இவர் ஞானசிரியர் ஆணைப்படி காசிக்குச் சென்று அங்கு மடம் அமைக்க இடம் பெறுவதற்காகக் காசியை ஆண்ட முகமதிய அரசனைக் கண்டு பேச விரும்பி, தாம் இந்துஸ்தானி மொழியறிவு பெற அருள் புரியுமாறு கலைமகள் மீது இம்மாலையைப் பாடி வேண்டினர் என்பர்.]

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவில் பணியச்செய் வாய்,படைப் போன்முதலாம்
விண் கண்ட தெய்வம் பலகோடி யுண்டேனும் விளம்பிலுன்போல்
கண் கண்ட தெய்வம் உளதோ? சகல கலாவல்லியே! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்,பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே! கனகக் குழையும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே! சகல கலாவல்லியே! 2

## 2. ஏரெழுபது

[இஃது உழவுத் தொழிலைச் சிறப்பித்துப் பாடப்பட்டதொரு பிரபந்தம்; எழுபது பாக்கள் கொண்டது. இதில் உழவு, உழவர், உழுகருவிகள் ஆகியவை பலவாறு சிறப்பிக்கப்பட்டுள்ளன. அலப்படை, தாற்றுக்கோல் ஆகியவற்றின் சிறப்பைக் கூறும் இருபாடல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்நூலை இயற்றியவர் கவிச் சக்கரவர்த்தி கம்பநாடர். இவர் சோழ நாட்டுத் திருவழுந்தூரில் பிறந்து வாழ்ந்தவர்; சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்; தமிழ் மன்னர் மூவராலும் போற்றப் பட்டவர்; கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டினர். இவர் இயற்றிய பெருநூல் இராமாயணம். அது கம்ப ராமாயணம் என வழங்கும். சரசுவதி யந்தாதி, சடகோபரந்தாதி, திருக்கை வழக்கம் முதலியனவும் இவர் இயற்றியனவாகக் கூறுவர்.]

குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளும் இவைநான்கும் படைத்துடைய ராளுலென் ?
மடைவாளை வரும்பொன்னி வளநாடர் தங்கள்கலப்
படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே. 1

வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்;
பொங்கோதைக் கடற்ருனைப் போர்வேந்தர் நடத்துபெரும்
செங்கோலை நடத்துங்கோல் ஏரடிக்கும் சிறுகோலே. 2

## 3. கலைசைச் சிலேடை வெண்பா

[இது கலைசை என்னும் ஊரைப் பற்றிச் சிலேடை வெண்பாக்களால் சிறப்பித்துக் கூறும் நூல். " கலைசை—தொட்டிக் கலை என்னும் ஊர். இது தொண்டை நாட்டில் உள்ளது. சிலேடை—ஒரு சொல்லோ, தொடரோ இரு பொருள் பட அமைத்துப் பாடுவது. இதனை இயற்றியவர் **சுப்பிரமணிய முனிவர்**. இவர் தொண்டை நாட்டில் உள்ள தொட்டிக்கலை என்னும் ஊரினர்; சைவ சமயத்தவர்; 140 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்.]

தேந்தா மரைஞிமிறுந் திண்வயவர் தூணிகளும்
**காந்தாரம் பாடுங்** கலைசையே—மாந்த
வருங்கடுக்கை யான்வாங்கி மாந்தினன்தேன் தேங்க
வருங்கடுக்கை யான்வாழ் மனை. 1

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
**காவலரைச்** சூழும் கலைசையே—மேவும்
அரிவையம்பா கத்தான் அரனொருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தான் அகம். 2

## 4. ஊசல்

[இப்பாடல் திருவரங்கப் பெருமானை ஊசலாடி யருளுமாறு வேண்டுவதாக அமைந்துள்ளது; மணவாள தாசர் என்னும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய திருவரங்கக் கலம்பகம் என்னும் நூலில் உள்ளது.]

உருமாறிப் பலபிறப்பும் பிறந்துஞ் செத்தும்
ஊசலா டுவதடியேன் ஒழியும் வண்ணம்
கருமாயத் தென்னெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறுப் பூட்டி

மருமாலைத் துளவசைய ஆடிருசல்!
மணிமகரக் குழைபசைய ஆடிருசல்!
திருமாது புவிமாதோ டாடிருசல்!
திருவரங்க ராசரே யாடிருசல்! 1

[இதுவுமோர் ஊசல் பாட்டு. இது பெண்கள் பலர் திருமால் திறம் பாடி ஊசலாடுவதாக அமைந்துள்ளது. இதனைப் பாடியவர் திரு. வ. வேதநாயகம் பிள்ளை, எம்.ஏ., பி.எல்.]

கையால் கயிறணைத்துக் கால்விசைத்து மேலெழும்பி
வெய்யோன் அறியா விரைமலர்ப்பூங் காவகத்தே
செய்யாள் கணவன் திருமால் திறம்பாடி
மையார் விழிமருள ஆடாமோ ஊசல்!
மணிவண்ணன் பேர்பாடி ஆடாமோ ஊசல்! 2

## 5. அம்மானை

[இது மூன்று பெண்கள் அமர்ந்து அம்மானைக் காய் வைத்து ஆடிக் கொண்டு பாடுவதாக அமைவது; மூவருள் ஒருத்தி முதல் இரண்டடிகளில் ஒரு செய்தியைச் சொல்வதாகவும், இரண்டாமவள் பின்னிரண்டடிகளில் அதன் மீது ஒரு வினவை எழுப்புவதாகவும், மூன்றுமவள் இறுதியடியில் அவ் வினவிற்கு விடையிறுப்பதாகவும் பாடப்படும். இறுதியடியில் பெரும்பாலும் சிலேடை அமைத்துப் பாடுவது மரபு. இப்பாடலைப் பாடியவர் இரட்டையர்கள்.]

ஈசன் பசுவாகி ஏமனொரு கன்றாகி
வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார், அம்மானை!
வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் ஆமாயின்
காசளவு பாலும் கறவாதோ? அம்மானை!
கன்றை யுதைகாலி கறக்குமோ? அம்மானை! 1

[இதுவுமோர் அம்மானைப் பாட்டு. இது தமிழ் மொழியின் தனிச் சிறப்பைப் பாடி அம்மானை ஆடுவதாக அமைந்துள்ளது. இதனைப் பாடியவர் பண்டித, திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார்.]

தேங்குசுவை யிற்கவினிற் றிகழ்பழமை யின்மிகுந்த
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழ்கா ணம்மானை!
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழே ஆமாயின்,
ஆங்கிலத்திற் பொருள்மிகவே அளித்திடுமோ? அம்மானை!
அகத்தும் புறத்தும் அளித்திடுங்கா ணம்மானை! 2

# 5. பழம் பாடல்கள்

## 1. சிலப்பதிகாரம்

[இப்பாடல்கள் சிலப்பதிகாரம் 'மங்கல வாழ்த்துப்பாடல்' என்னும் பகுதியில் உள்ளவை; முறையே திங்கள், ஞாயிறு, மழை ஆகிய மூன்றையும் போற்றுவன. சிலப்பதிகாரம் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று; கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறுவது; இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. இதன் காலம் கடைச்சங்க காலம்; அஃதாவது ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முன்.]

### திங்கள்

திங்களைப் போற்றுதும்; திங்களைப் போற்றுதும்;
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான். 1

### ஞாயிறு

ஞாயிறு போற்றுதும்; ஞாயிறு போற்றுதும்;
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம்திரித லான். 2

### மழை

மாமழை போற்றுதும்; மாமழை போற்றுதும்;
நாமநீர் வேலி உலகிற்(கு) அவனளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான். 3

## 2. மணிமேகலை

[இது மணிமேகலையில் உள்ள 'பாத்திரம் பெற்ற காதை' என்னும் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று; சிலப்பதிகாரத்தோடு கதைத் தொடர்புடையது. கோவலனுக்கு மாதவியிடம் பிறந்த மகள் மணிமேகலை. அவள் வரலாற்றைக் கூறுவது இந்நூல். இது சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்டது.]

### உயிர் கொடுத்தோர்

ஆற்றுநர்க்(கு) அளிப்போர் அறவிலை பகர்வோர்;
ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை;
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.

## 3. நற்றிணை

[இது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்திற்கு உரிய ஒழுக்க முறைகளை விளக்கிக் கூறும் பாட்டுக்களைக் கொண்டதொரு தொகைநூல்; சங்க நூல் தொகையாகிய எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று; கடவுள் வாழ்த்துடன் 401 பாக்களைக் கொண்டது; பலவேறு புலவர்களால் பாடப் பெற்றது; அகப் பொருளை விளக்குவது. இப்பாடல் நல்வேட்டனுரால் பாடப்பட்டது.]

### செல்வம்

நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்
செல்வம் அன்று ;தன் செல்வினைப் பயனே ;
சான்ருேர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம்என் பதுவே.

## 4. பதிற்றுப் பத்து

[இது, பத்தாகிய பத்துச் (நூறு) செய்யுட்களாலான நூல்; இதில் உள்ள ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு புலவரால் பாடப் பெற்றது. இந்நூல் முழுவதும் சேர மன்னர்களின் சிறப்பினைக் கூறுவதாகவே அமைந்துள்ளது. இதுவும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. பாடப் பகுதி மூன்றும் பத்திலிருந்து எடுக்கப்பட்டது. இப்பத்து பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனுர் என்னும் புலவர் பாடியது.]

### *அறத்தை அழிப்பன*

சினனே காமம் கழிகண் ணேட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை
தெறல்கடு மையொடு பிறவும்இவ் வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்.

## 5, கலித்தொகை

[இதுவும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது கலிப் பாக்களாலான தொகை நூல். இது திணை பற்றிப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐந்து பிரிவுகளையுடையது; நூற்றைம்பது பாக்களைக் கொண்டது. பாடப் பகுதி நெய்தற் கலி என்னும் பகுதியில் உள்ளது. இதனைப் பாடியவர் நல்லந்துவனுர்.]

### குணங்களின் இயல்பு

பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல் ;
அன்பெனப் படுவது தன்கிளை செருஅமை ;
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல் ;
பொறையெனப் படுவது போற்ருரைப் பொறுத்தல்.

## 6. புறநானூறு

[இந்நூலும் சங்கநூல் தொகைகளுள் எட்டுத் தொகையைச் சேர்ந்தது. இது புறப்பொருள் பற்றிய நானூறு பாக்கள் கொண்டது; பல புலவர்களால் பலவேறு காலங்களில் தனித் தனிப் பாடப்பட்ட பாடல்களின் தொகுதி. கீழே தரப்பட்டுள்ள மூன்று பாட்டுக்களும் இந்நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. அவற்றுள் முதற் பாட்டு, ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனாலும், இரண்டாவது பிசிராந்தையாராலும், மூன்றாவது கணியன் பூங்குன்றனாராலும் பாடப் பட்டவை.]

### கல்வியின் சிறப்பு

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ;
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
'மூத்தோன் வருக!' என்னா தவருள்
அறிவுடை யோனா றரசும் செல்லும் ;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

### நரையின்மைக்குக் காரணம்

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர் ;
யான்கண் டனையரென் இளையரும் ; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் ; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

### இனம் இனத்தோடு சேரும்

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும், தொடைபுணர்ந்(து)
அருவிலை நன்கல மமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றும் சான்றோர்
சான்றோர் பால ராப ;
சாலார் சாலார் பலரா குபவே.

# 1. தமிழ் மொழி

## வித்துவான். ம. வி. இராகவன்

மக்கள் பேசும் ஆற்றல் படைத்தவர்கள். ஒருவர் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை மற்றவர்க்கு எடுத்துச் சொல்லும் திறம் மக்களுக்கே உண்டு. அதன் துணைகொண்டே மக்கள் அறிவு வளர்ச்சி பெற்ற மற்ற உயிர்களினும் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். அதற்குக் கருவியாகப் பயன்படுவது மொழி ஆகும். உலக மக்களிடையே ஆயிரக்கணக்கான மொழிகள் வழக்கில் உள்ளன. நம் நாட்டு மக்களிடையிலும் பலவேறு மொழிகள் வழங்கி வருகின்றன. ஒவ்வோர் இனத்தாரும் ஒவ்வொரு மொழியைத் தொன்றுதொட்டுப் பேசி வருகின்றனர். அவ்வாறு பழங்காலம் தொடங்கி வழி வழியாகப் பேசிவரும் மொழி அவரவர்க்குத் தாய் மொழி என்று கூறப்படும். தமிழர்களாகிய நமக்குத் தாய் மொழி தமிழ் ஆகும்.

நம் நாட்டில் வழங்கும் மொழிகள் வட இந்திய மொழிகள், தென் இந்திய மொழிகள் என இரு வகையினுள் அடங்கும். வட இந்திய மொழிகளில் தலைசிறந்தது ஆரியம் என்னும் சீரிய மொழி. வட இந்திய மொழிகள் பலவற்றுக்கும் ஆரியமே தாய் மொழியாகும். அதனால் அது சிறப்பாக 'வட மொழி' என்று வழங்கலாயிற்று. அவ்வாறே தென் இந்திய மொழிகளில் தமிழ் மொழி தலைசிறந்தது. தென் இந்தியாவில் வழங்கிவரும் தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு முதலிய மொழிகள் யாவும் தமிழ் மொழியினின்று கிளைத்தனவே ஆகும். அதுபற்றியே நம்முன்னோர் தமிழைத் 'தென் மொழி' என்று வழங்கினர்.

தமிழ் மொழி காலத்தால் மிக்க பழமை வாய்ந்தது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழ் உயர்ந்த நிலையை அடைந்து சிறந்து விளங்கியுள்ளது. இதனோடு ஒத்த பழம் பெரு மொழிகள் யாவும் பல்லாண்டுகட்கு முன்னரே பேச்சு வழக்கு ஒழிந்தன,

தமிழ் மொழி ஒன்றே இன்றளவும் மக்களால் பேசப்பட்டு வருகின்றது. தமிழ் மிக்க இனிமையுடைய மொழியாகும். தமிழ் என்னும் சொல்லுக்கே 'இனிமை' என்பது பொருள். தமிழ் மென்மையும் எளிமையும் தெளிவும் உடையதாக இருப்பதே அதன் இனிமைக்குக் காரணமாகும். தமிழ் நிறைந்த சொல் வளமும் சிறந்த இலக்கணக் கட்டுப்பாடும் உடையது. அதனல் இது வேறு பல மொழிகளைப் போலப் பெரிதும் கலப்புக்கு இடம் தராமல் தூய்மை உடையதாகவும் விளங்கி வருகின்றது. இக் காரணங்கள் பற்றியே பழம் புலவர்கள் இதனை மென்றமிழ், இன்றமிழ், செந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், பைந்தமிழ் எனப் பலவாறு பாராட்டியுள்ளனர்.

ஆதியில் அகத்திய முனிவர் தமிழ் மொழியை ஆராய்ந்து வளம்படுத்தினர். தொல்காப்பியர் இலக்கணம் வகுத்து இதனை உரப்படுத்தினர். பழங்காலத் தமிழரசர் இதனைப் பாராட்டி வளர்த்தனர். சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை வேந்தர்களும், குறுநில மன்னர்களும், வள்ளல்களும் தமிழைத் தம் உயிரினும் சிறந்ததாகக் கருதிப் போற்றினர். அவர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதைத் தம் தலையாய கடமையாகக் கொண்டு ஒழுகினர்; புலவர்கட்கு உண்டியும் உடையும் உறையுளும் உதவினர்; பொன்னும் மணியும் பொழிந்தனர்; நாடும் ஊரும் வழங்கினர். இவ்வாறு அவர்கள் தாய் மொழிப் புலவர்களைப் போற்றி வந்தமையால், அப்புலவர் பெருமக்கள் வாழ்க்கைக் கவலை இன்றி, தமிழ்ப் பணி புரிந்து வந்தனர்.

மூவேந்தருள்ளும் தமிழ் மொழியைச் சிறப்பாகப் போற்றி வளர்த்த பெருமை பாண்டியர்க்கே உரியது. பாண்டியர் தம் தலைநகரங்களில் தமிழ்ச் சங்கங்களை அமைத்தனர். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் சிறந்து விளங்கிய புலவர்கள் பலர் அச்சங்கங்களில் கூடி, பழைய நூல்களை ஆராய்ந்தும், புதிய நூல்களை ஆக்கியும் தமிழ் மொழியை வளம்பெற வளர்த்து வந்தனர். அச்சங்கங்கள் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என்பன. முதல் இரு சங்கங்களில் தோன்றிய நூல்கள் பலவும் காலப்போக்கில் அழிந்து ஒழிந்தன. இப்பொழுது உள்ள நூல்கள் பெரும்பாலும் கடைச்சங்க நூல்களே ஆகும்.

கடைச்சங்கம் இப்பொழுது உள்ள மதுரை நகரில் நடைபெற்றது. அது சற்றேக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்குமுன் நடந்தது என்பர். அதில் நக்கீரர், கபிலர், பரணர்,

மாங்குடி மருதனார் முதலிய நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்து வந்தனர். அவர்கள் தலைமையில் நானூற்று நாற்பத்து ஒன்பது புலவர்கள் பாடல்கள் பாடினர். கடைச் சங்கத்தில் தோன்றிய நூல்கள் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என இரு பெருந் தொகைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றை இன்று தமிழ் மக்கள் 'சங்க நூல்கள்' என்று போற்று கின்றனர். பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல் தொகையில் உள்ள நூல்களில் கடைச்சங்க காலத்துத் தோன்றியவை சிலவும் உள்ளன. 'பொது மறை' என்றும், 'தமிழ் மறை' என்றும் போற்றப்படும் ஒப்பற்ற திப்பிய நூலாகிய திருக்குறள் கடைச் சங்க காலத்தில் இயற்றப்பட்டதே ஆகும்.

கடைச்சங்க காலத்திற்குப் பிறகும் தமிழ் தழைத்து வளர்ந்து வந்துள்ளது. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங் காப்பியங்களும், சூளாமணி, நீலகேசி, உதயணன் கதை, நாககுமார காவியம், யசோதர காவியம் என்னும் ஐஞ்சிறு காப்பியங்களும் கடைச்சங்க காலத்திற்குப் பின்னர்த் தோன்றியவை ஆகும். இக் காலத்தில் பௌத்தரும் சமணரும் தமிழைச் செழிக்கச் செய்தனர். பல இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் இயற்றப்பட்டன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப் பாடல்களைப் பாடி, தமிழைத் தெய்வத் தமிழாக்கினர்.

பிற்காலத்தில் தோன்றிய சோழ மன்னர்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றித் தமிழ் மொழியைப் பேணி வளர்த்தனர். கம்பர், புகழேந்தி, சேக்கிழார் போன்ற தலைசிறந்த புலவர்கள் தோன்றி, கம்ப ராமாயணம், நள வெண்பா, பெரிய புராணம் போன்ற பெருங் காவியங்களைச் செய்து வழங்கினர். சோழ மன்னர்க்குப் பிறகு சில செல்வர்களும் மடாதிபதிகளும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழ் வளத்தைப் பெருக்கி வந்தனர். சில ஆண்டுகட்கு முன் பாரதியார் என்னும் கவிஞர் பெருமான் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் முழங்கச் செய்தார். இன்று நம் அரசாங்கமே தமிழ் மொழியைத் தழைக்கச் செய்யும் அரும்பணியை மேற் கொண்டுள்ளது. அதனால், தாய் மொழியாகிய தமிழ் இன்று முதன் மொழியாகித் தலைமை பெற்று விளங்குகின்றது.

# 2. ஆதிரை பிச்சையிட்டது

**டாக்டர் மா. இராசமாணிக்கனுர்**
எம்.ஓ.எல்., எல்.டி, பிஎச்.டி

"ஆதிரையின் கணவன் சாதுவன் என்பவன்; ஒழுக்கம் கெட்டவன்; கணிகை ஒருத்தியிடம் வாழ்ந்து, அவள் கொடுத்த உணவையே உண்டுவந்தான்; தன் செல்வம் அனைத்தையும் கணிகையர்க்கும் சூதாட்டத்திற்கும் தொலைத்தான். கணிகையும் அவனைத் துறந்தாள். பிறகு அவன் பொருள் ஈட்டிவரக் கருதி வங்கத்தில் ஏறிச் சென்ற வணிகரோடு கூடிச்சென்றான். கப்பல் காற்றினால் அலைக்கப்பட்டுக் கடலிற் கவிழ்ந்தது. சாதுவன், ஓடிந்த பாய்மரத் துண்டைப்பற்றி நீந்தி, ஆடையற்ற நாகர் வாழும் மலைப்பக்கத்தை அடைந்தான்.

"கப்பலிலிருந்து தப்பிப் பிழைத்துப் பூம்புகாரை அடைந்தோர், 'உன் கணவன் இறந்தனன்' என்று ஆதிரையிடம் அறிவித்தனர். அவள் வருந்திப் புலம்பிச் சுடுகாடடைந்து, குழிவெட்டித் தீயை மூட்டி, "என் கணவன் போன வழியே யானும் போவேன்," என்று அதனில் விழ்ந்தாள். ஆனால் அந் நெருப்பு அவளுடைய படுக்கையையும் புடவையையும் பூசிய சாந்தையும் சூடிய மாலையையும் சிறிதும் சிதைக்காமலும், அவளை எரிக்காமலும் குளிர்ந்த நீர் போல் இருந்தது. அவள்,

"விரைமலர்த் தாமரை ஒருதனி இருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருந்தாள்.'

அவள், 'ஐயோ! தீயும் கொல்லாத் தீவினையாட்டியேன்! என் செய்வேன்!' என்று ஏங்கினாள். அப்பொழுது வானத்தில் அசரீரி தோன்றி, 'ஆதிரையே, உன் கணவன் நாகர் வாழும் மலைப் பக்கத்தில் இருக்கிறான். விரைவில் 'சந்திரதத்தன்' என்னும் வணிகனது கப்பலில் ஏறி இவண் வருவான். நீ துயர் ஒழிக!' என்னும் நற்செய்தியை அறிவித்தது. ஆதிரை ஆனந்தக் கடலில் ஆழ்ந்தவளாய்த் தன் மனையை அடைந்து, கணவன் வருகையை எதிர் நோக்கி, அறங்கள் பலவற்றைச் செய்துகொண்டிருந்தாள் நிற்க,

"சாதுவன் நாகர் நாட்டில், களைப்புற்று ஒரு மரநிழலில் உறங்கிக்கொண்டிருந்தான். அவ்வேளையில் அந்நாட்டு வாழும் ஆடையற்ற நாகர் சிலர் அங்கு வந்தனர்; சாதுவனைக் கண்டு, 'இவன் கடலிலிருந்து துன்பப்பட்டு வந்துள்ளான். ஊன் நிறைந்த இவனது உடல் நமக்கு இனிய உணவாகும்' என்று கருதி, அவனை எழுப்பினர். சாதுவன் எழுந்து அவர்கள் மொழியிலேயே பேச, அவர்கள் வியப்புற்று மரியாதையுடன் நின்று, 'நீர் எங்கள் தலைவன் பால் வரவேண்டும்' எனக் கூறி அவனை அழைத்துச் சென்றனர்.

"நாகர் குரு கட்குடங்களும், மிகுந்த முடை நாற்றமும் சூழக் காய்ந்த வெண்மையான என்புக் குவியலாகிய ஆசனத்தில், கரடி தன் பிணவொடு இருந்ததுபோல ஒரு பெண்ணுடன் அமர்ந்திருந்தான். சாதுவன் அவனைக் கண்டு நாகர் மொழியில் பேசி அவனைத் தன் வயமாக்கிக் கொண்டான். அக் குருமகன், 'நீ வந்த காரணம் யாது?' என, சாதுவன் கடற் பயணத்தில் தான் அடைந்த இன்னலை விளக்கினான். உடனே குருமகன் தன் ஏவலரை அழைத்து, 'உணவின்றிக் கடலில் உழன்று வந்த இவற்கு ஓர் இளநங்கையையும், கள்ளையும் ஊனையும் வேண்டிய அளவும் கொடுங்கள்' என்றான். அக்கொடுமொழி கேட்ட சாது வன் அயர்ந்து, 'வெவ்வுரை கேட்டேன், வேண்டேன்' என்றான். குருமகன், 'பெண்டிரும் உண்டியும் இன்றெனில், மாக்கட்கு ஞாலத்து உறுபயன் உண்டோ? உண்டெனிற் காட்டு,' என்றான். உடனே சாதுவன்,

"மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற(து) உண்மையின்,
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென வுணர்தலின் உரவோர் களைந்தனர்"

என்று பதில் கூறினான்.

"உடனே குருமகன் நகைத்து, 'நீ, உடம்பை விட்டு உயிர் வேறு இடம் புகும் என்னும் கருத்துப்படக் கூறுகின்றனை. அவ் வுயிர் எப்படி வேறிடம் செல்லும்? அதனை விளங்கவுரை' என் றான். சாதுவன், 'நமது உடலில் உயிர் இருக்கையில் ஏதேனும்

ஒரு துன்பம் வரின், அதை உணர்ந்து உடல் வருந்துகின்றது. உயிர் நீங்கியபின், உடலை நெருப்பிலிட்டுக் கொளுத்தினாலும் அதை உணர்வதில்லை அன்றோ? ஆதலால் உடம்பைவிட்டு ஏதோ ஒன்று போய்விட்டது என்பதை நாம் உணர்கிறோம் அல்லவா? அந்த ஒன்றே உயிர் என்பது. அது வேறொரு புகுமிடம் உடையதென் பதை யாவரு மறிவர். நாம் கனாக் காண்கையில். நமது உடல் இருந்த இடத்தில் இருப்ப, உயிர்வேறோர் உடலின் வழியே மற்றோர் இடத்தை அடைகின்றது என்பதை உணர்கிறோம் அல்லவா?' என்றான்.

நாகன் நல்லுணர்வடைந்தான்; சாதுவன் அடிகளிற் பணிந்து, 'நான் கள்ளையும் ஊனையும் கைவிடின் உயிர் வாழேன். ஆதலின் எனக்குத் தக்க நல்லற வழியைக் காட்டுக,' என்று வேண்டினான். சாதுவன் இசைந்து, கவிழ்ந்த கப்பலிலிருந்து எவரேனும் இவ் விடத்தை அடையின், அவர்களை வதையாது காத்தல் வேண்டும்; தானே இறக்கின்ற உயிரின் ஊனைத் தவிர வேறு எதனையும் கொன்று தின்னலாகாது,' என்றான். குரு, 'இஃது என்னால் பின் பற்றத் தக்கதே. நாங்கள் பன்முறை கப்பல் கவிழ்ந்து அல்ல லுற்ற மக்களின் பொருள்களைக் கவர்ந்துள்ளோம். அவரது செல் வம் இதோ இருக்கின்றது. நீ எடுத்துச் செல்' என்றான்.

"சாதுவன் அச் செல்வத்தை எடுத்துக்கொண்டு சந்திர தத்தன் என்பானது கப்பலில் ஏறிக் கடல் கடந்து பூம்புகாரை அடைந்தான்; தன்னை எதிர்நோக்கி இருந்த மனைவியின் அகமும் முகமும் மலர வீடடைந்தான்; அவளோடு இன்புற்று நல்லறம் புரிந்துகொண்டு பெரியோர் போற்ற வாழ்கின்றான்.

"இத்தகைய பெருமை பொருந்திய பத்தினிப் பெண்மணியான ஆதிரையினிடம் பிச்சை பெறுக," என்று காய சண்டிகை மணி மேகலையிடம் கூறினாள். உடனே மணிமேகலை ஆதிரையின் இல்லத்தின் வாயிலில் புனையா ஓவியம் போல நின்றாள். ஆதிரை வெளிப் போந்து, மணிமேகலையைத் தொழுது வலங்கொண்டு, 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக' எனக் கூறி, அமுத சுரபி நிறையுமாறு அன்னமிட்டாள்.

# 3. தமிழர் நாகரிகம்

## யோகி. சுத்தானந்த பாரதியார்

தமிழாலயத்தில் உலாவுவோம் : தமிழர் நாகரிகம், வீர தீரம், அருளன்பு, அறிவுப் பெருக்கம், செங்கோன்மை, தொழிற்புலமை, வளமை, வண்மை முதலியவற்றைத் தெரிந்துகொள்வோம், சுற்றிலும் எத்தனை அழகிய கோயில்கள்! இவற்றில் பல கல் வெட்டுக்கள்! அவை நம் வீரர், மன்னர், வித்தகப் புலவர் புகழை விளக்கும். இக்கோயில்களில் கண்ணையும் கருத்தையும் கவரும் பல சிலைகளும் சிற்பச் செல்வங்களும் காணப்படுகின்றன. அவை தமிழரின் கலைத்திறனை நன்கு விளக்குவன. இக்கோயில்களில் திருவாய்மொழி, தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருப் புகழ், தாயுமானவர் பாடல் முதலியவற்றைக் கேட்கிறோம். அவை உள்ளஞ் சிலிர்க்க உயிரில் பாய்ந்து நம்மைப் பரவசப்படுத்து கின்றன. அருளும் அழகும் ஆழ்ந்த பொருளும் பொருந்திய இந்தத் தெய்வ மணிவாக்குகளே தமிழரின் நாகரிகச் சுவடிகள். இவையே தமிழ்ச் சமுதாயத்தை உண்டாக்கின். திருச்சி, திருப்பதி, பழனி போன்ற கோயில்கள் மலைமீது கட்டப் பட்டுள்ளன. அவை தமிழரின் சிற்பப் புலமையை விளக்கும். காளத்தி, சிதம்பரம், காஞ்சி, தஞ்சை, திருவரங்கம், மதுரை' திருநெல்வேலி, இராமேச்சுரம் கோயில்கள் தமிழரின் ஒப்பற்ற கடவுளுணர்வையும் கலைச் சுவையையும் விளக்குகின்றன. இக் கோயில்களை அமைத்த சிற்பிகளின் பெயர்கள் நமக்குத் தெரிய வில்லை. மேனாட்டில் என்றால், இத்தகைய அருங்கலைப் புலவருக் குப் பெரிய வரலாறுகள் எழுதியிருப்பர்.

தமிழர், அழகையும் அறிவையும் வணங்கி, அருளொளியைத் தேடும் இயல்பினர். சாதாரண மன்னரைப் பாடும் பாட்டுக்கள் தமிழருக்குப் பொருட்டன்று; மன்னர்க்கும் மன்னரான இறை வனைப் போற்றும் அருட் பாடல்களையே தமிழர் விரும்புவர். கேவலம் சில போர்களை வென்று புகழ் பெற்ற மன்னர், வீரர் வரலாறுகள் தமிழர் மனத்தைக் கவரவில்லை. பரிசிலுக்குப் பாடிய பாக்கள் தமிழர் உள்ளத்தை அள்ளவில்லை. யாதினும்

கொடியது அகப்போர்; அதை வென்று மனத்தை இறைவனிடம் வைத்து, அவனருளால் அவன் புகழ் பாடிய "கடவுட் புலவர்" திருவாக்குகளே தமிழரைக் காந்தம்போற் கவர்ந்தன. தமிழர் மக்களை "நடமாடும் கோயில்க"ளென மகிழ்ந்தனர்; எல்லோரும் ஒருகுலம் என்றுணர்ந்தனர். "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பது தமிழர் கொள்கை. வாழ்வையெல்லாம் தமிழர் இந்தக் கடவுளுணர்வைச் சுற்றியே அமைத்தனர்.

இன்றும் ஒரு கோயிலை யொட்டியே மாந்தர் வாழ்வு அமைந்திருப்பதைத் தமிழ் நாட்டிற் பற்பல இடங்களிற் காணலாம். எத்தனையோ அரசர், செல்வர், வீரர் இக்கோயில்களுக்குச் சிறப்புச் செய்தனர். அக்கால மன்னர் அளித்த பட்டயங்களையும், அவர் செய்த திருப்பணிகளையும் கோயில் தருமகர்த்தாக்கள் இன்றும் காட்டுவர். இத்தகைய திருப்பணிகளாலும் காணிக்கை களாலும் அக்கால மன்னரும் வீரரும் தம்மைக் கடவுளுக்கு உரிமையாக்கலே பெருமையெனக் கருதினர். செல்வர் தமது பொருளைத் தந்தனர். உடல், பொருள், ஆவியெல்லாம் அளித்து, அன்புறுதியுடன் இறைவனுக்கு ஆளாவதே வாழ்வின் நோக்க மெனத் தமிழர் கருதினர். "கற்றதன் பயன் கடவுளைத் தொழுதல்", "பிறவிப்பயன் இறைவனை அடைதல்" என்று தமிழ் மறைகள் முழங்குகின்றன. அறிவு புலமை ஆற்றல் அனைத்தையும் இறைவனுக்கும் அறவினைகளுக்குமே தமிழர் பெரும் பாலும் செலவிட்டனர். ஈகைக்கும், பொது நலத்திற்கும், கடவுளன்பிற்கும், அறிவிற்கும் ஏற்றபடியே தமிழுலகம் மாந்தரை மதித்துப் பெருமை செய்யும். பழங்காலக் கவிகள் நல்ல தருமவான்களைப் புகழ்ந்து பாடினர்.

கோயில் வழிபாடு, திருப்பணி, கலையழகு, தேர்த் திருவிழா, வாகனம், பாட்டு, வாத்தியம், நடனம், கோயிலுக்கு வருவோர் உடுக்கும் உடைகள், அவர் நடைமுறை இவற்றைப் பார்த்துத் தமிழரின் நாகரிகத்தைக் கணிக்கலாம். தமிழ் நாட்டில் விசுவகர்மாக்கள், சிற்பிகள், தட்டார், கருமார், சித்திரர், நாவலர், பாவலர், பாடகர், நால்வகைக் கருவி களும் நன்கு தேர்ந்தவர், நடனப் புலவர், அருண்மறை யோது வார், மந்திரர், மருத்துவர், அணிமணி செய்வோர். பட்டு பஞ்சு மயிர் ஆடை நெய்வோர் மிகச் சிறந்து விளங்கினர், அறுபத்து

நான்கு கலைகளும் தேர்ந்த எத்தனையோ அறிவாளர் இங்கே துலங்கினர் என்பதற்குச் சான்று நமது கோயில்களே. முற்கால மன்னரும் செல்வரும் ஏற்படுத்திய கட்டளைகள் இன்றும் கோயில்களில் நிறைவேறி வருகின்றன. கோயிலிற் போடும் விளக்கு முதல் பெரிய தேர்த்திருவிழா வரை, எல்லாம் தமிழ்நாட்டுத் தருமவான்கள் வைத்த திட்டப்படியே நடந்து வருகின்றன. அவை ஒவ்வொன்றும் தமிழர் நாகரிக விளக்கமே.

சமரச முழக்கம் தமிழ் நாட்டிலே தான் எழுந்தது. உலக ஒற்றுமைக்கான "பிரமஞான சங்கம்" அருட்சோதி வள்ளலாரின் "சுத்த சமரச சன்மார்க்கச் சங்கம்", சுத்தான்ம யோகத்தில் மாந்தர் உள்ளொற்றுமையுடன் தெய்வீக வாழ்வு வாழச் செய்யும் "அறவோர் திருக்கூட்டம்" முதலிய வெல்லாம், தமிழ் நாட்டிலேயே வேரூன்றியுள்ளன. "தோமா" முனிவர் (St. Thomas) முதன் முதல் கிறிஸ்து "சுவிசேஷங்" கொண்டு (Bible) சென்னைக்கே வந்தார். இக்காலம் எப்படியிருப்பினும், எதிர்காலத் தமிழகம் உலகிற்கு அறிவொளி காட்டும் என்பதில் தடையில்லை. தமிழ் நாடு சர்வ சமரசாலயம். தமிழ்க் கோயில்களில் கலைமகளும் திருமகளும் வெற்றி நடம் புரிகின்றனர். இவற்றைத் தவிர, ஆங்காங்கே கிராமங்களில் வில்லடிச்சான், ஐயனர், கொளிகறுப்பன், வீரன் கோயில்களைக் காணலாம். இவை யெல்லாம் அக்காலத்தில் தமிழ் வீரர் தொழுத இடங்கள். இரவில் இங்கே வீரர் போர்க் கலை பயின்றனர். இக்கோயில்களில் வில், வாள், ஈட்டி முதலிய போர்க்கருவிகளைக் காணலாம். சில திருவிழாக்களிலும் போர் விளையாட்டுகள் நடப்பதுண்டு. இவை யெல்லாம் தமிழர் வீரவாழ்விற்கு அறிகுறிகளாகும்.

ஆங்காங்கு இன்று காணும் மன்னர் அரண்மனைகள் தமிழரின் வீரவாழ்விற்கும், ஆட்சித் திறமைக்கும் அறிகுறியாவன. தஞ்சாவூர் அரண்மனையிலுள்ள ஆயுதசாலையை நோக்குக; எத்தனை விதமான போர்க்கருவிகள் தமிழரால் கையாளப்பெற்றன சரபோஜி மன்னன் தர்பார் செய்த இடத்தைப் பாருங்கள்! எத்தனை இராஜ தந்திரிகளும் கவிகளும் கலைஞரும் பாடகரும் நாடகரும் அந்த அரச முன்னிலையை அலங்கரித்தனர்! இவ்வாறே மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, எட்டையபுரம் அரண்மனைகள், சென்னைப் பொருட்காட்சிச் சாலை முதலிய இடங்கள், தமிழரின் விரப்பெருமைக்கும் ஆட்சித் திறனுக்கும் சரியான அத்தாட்சிகளாக விளங்குகின்றன.

# 4. இயற்கையோடு இயைந்த வாழ்வு

**திருமதி ச. த. இராசேசுவரி அம்மையார்,** எம்.ஏ., எல்.டி.

மக்கள் நிலத்தின்மேல் நடக்கின்றனர்; நீரின்மேல் மிதக்கின்றனர். இன்னோர் வானத்தில் பறக்க விரும்புவதும் இயல்பே. வானத்தில் பறந்து போவதென்றால், மக்கள் மனத்தில் இரண்டு எண்ணங்கள் எழுகின்றன. ஒன்று பறவையின் எண்ணம். இறக்கை கொண்டு பறக்கலாம் என்பதே இந்த எண்ணம். பறவையைக் கண்கூடாகப் பார்க்கிற மக்களுக்குக் காட்சி யளவையால் எழுவதாகும் இந்த எண்ணம். வீட்டிலிருந்து வெளியே போவதென்றால், செருப்புப் போட்டுக்கொண்டு போவது போல, வானத்தில் போவதென்றால், இறக்கையை மாட்டிக் கொண்டு போவதென்று மக்களுக்குப் பலமுறையும் தோன்றியது. இந்த எண்ணமே ஆகாயவிமானமாகப் பழுத்துள்ளது. மற்றோர் எண்ணம் கடலில் மிதக்கும் கப்பலின் எண்ணமாகும். காற்றிலே மிதந்து செல்வது என்பதே இந்த எண்ணம். நீரில் மிதக்கும் கப்பல் நீரைவிட இலேசாக இருத்தல் வேண்டும். காற்றில் மிதக்கும் கப்பல் காற்றினும் இலேசாக இருத்தல் வேண்டும். இங்குள்ள அருமைப்பாடு இத்தகைய இலேசான பொருள்களை அமைப்பதிலேயேயாம். நீரிலே மிதக்கும் கப்பலில் ஏறிச்செல்வது போல, வானமாகிய பெரிய வெட்டவெளியில் அலைகிற காற்றுக் கடலிடையே மிதக்கிற கப்பலில் ஏறிச் செல்லலாம் என்னும் எண்ணம் அடிக்கடி மக்களுக்குத் தோன்றியது. இந்த எண்ணமே காற்றாடியாய்ப் பூத்து, கூண்டாய்க் காய்த்து, வானக் கப்பலாய்ப் பழுத்தது.

இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்க்கையே இனிய வாழ்க்கை. இயற்கையின் இயல்பை அறிவதே அதனை வெல்லுவதாம். காற்று வீசுகிறது: அதற்கு ஏற்ப இளமைப்போதிலே சிறுவன் காற்றாடி செய்து அதனைப் பறக்கவிட்டு விளையாடுகிறான். வயிறு வளர்க்க வழிதேடும் ஒருவன் காற்றாலை (Wind Mill) செய்து தண்ணீர் இறைத்துப் பயிரிட்டுப் பிழைக்கிறான். இதுவே உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பதன் முதற்படியாகும். சில இயற்கை முறைகளையும் இயற்கைக்கு அடிமையாகி அறிந்தபின்,

இவ்வாறு அவற்றை நம் கையாட்களாக ஆக்கி அடக்கி ஆள்கிரேம். நம் கைகளும் கால்களும் நம்மை விட்டுப் பிரியாக் கருவிகள்; வாளும் வேலும் பிரியும் கருவிகள். இயற்கையை அறிந்ததும் இப்பிரியும் கருவிகளும், நம்முடைய கையும் காலுமாக வேலை செய்ய வருகின்றன. வண்டி மனிதனுக்கு ஒரு கால் அன்றே? தடி அவனுக்கு ஒரு கையன்றே? இக்காலத்திலோ சிறிய சிறிய கருவிகள் என்பவைகள் எல்லாம் பெரிய எந்திரங்களாக வளர்ந்துள்ளன.

இந்த எந்திரங்களை இயற்கைச் சட்டத்திற்குத் தக்கபடி அமைத்தலும் வேண்டும்; அதற்குத் தக அவைகளை வேலை வாங்குதலும் வேண்டும். வானக் கப்பலும் இப்படிப்பட்டதோர் எந்திரமே. என்ன அது? ஒரு பை—அதிலே என்ன? நிறைய ஆவி—எத்தகைய ஆவி? காற்றினும் மெல்லிய ஆவி—அஃது என்ன ஆவி? ஹைடிரஜன் (**Hydrogen**) ஆகலாம். ஹீலியம் (**Helium**) ஆகலாம். ஆதலின் அந்த ஆவி வானக் கப்பலை மேலே தூக்குகிறது. அவ்வளவேயோ? அதனை ஓட்ட ஏதேனும் ஆற்றலை விளைக்கும் எந்திரமும் அதில் உண்டோ? ஆம் உண்டு. மக்கள் அமர அறைகளும் உண்டோ? ஆம் உண்டு. இவ்வ அனைத்தையும் தூக்குகிறதா அது? ஆம், எளிதாகத் தூக்குகிறது. எனவே, இவை அனைத்தும் கூடியதோர் அமைப்பே வானக் கப்பலாகும். எனவே, வானக் கப்பல் என்பது தன்னுடைய மேற்போர்வைக்குள்ளே அடைபட்டிருக்கும் இலேசான ஆவியினிடத்தே விளங்கி, மேலோங்கித் தூக்கிச் செல்லும் ஏற்றச் சக்தியினல் காற்றிலே மிதந்து, ஏதேனும் வேருெரு சக்தியினல் ஒடுகிற காற்று எந்திரமே என்பதாயிற்று. இந்த எந்திரமும் இயற்கைச் சட்டத்திற்கு இயைய அமைய வேண்டும்; இயைய இயங்க வேண்டும்.

இயற்கைப் பொருள்கள் மூன்று நிலையில் உள்ளன. கல்லும் மண்ணும் போல் கெட்டியாக உள்ளவை திடப்பொருள்களாம் (**Solids**). தண்ணீர்போல்வன திரவப்பொருள்களாம் (**Liquids**). காற்றைப் போல் உள்ளன வாயுப்பொருள்களாம் (**Gases**). பொருள்களின் இலக்கணத்தை அறிய விரும்புவோர் இவற்றின் அழுத்தம் (**Pressure**), அடர்த்தி (**Density**), நேர் வேகம் (**Velocity**) என்பவற்றைப் பற்றிய சட்டங்களை அறிதல் வேண்டும். திடப்பொருள்களுள் தகைவு (**Stress**), நிலைப்பு (**Stability**), பிகுத்தன்மை (**Tenacity**) முதலியவற்றைப் பற்றிய இயற்கை உண்மை

களை அறிதல்வேண்டும். இவற்றிற்குத் தக்கபடியன்றோ பொருள் களைக் கொண்டும், ஓடிப்பொருள்களைக் கொண்டும் வானக் கப்பலை அமைத்தல் வேண்டும். கெட்டியாம் தரையிலிருந்து ஓடியாம் காற்றிடையே, இக்கப்பல் மிதந்து இயங்க வேண்டும் அன்றோ ?

பயணம் போதலைப் பற்றி அன்றோ பேசுகிறோம்? ஓரிடத்தி லிருந்து மற்றோர் இடத்திற்கு மக்களும் போக விரும்புகின்றனர்; பொருள்களும் போகவேண்டி யிருக்கின்றன. இவற்றை மனித னுவது தூக்கிச் செல்லவேண்டும்; விலங்காவது தூக்கிச் செல்ல வேண்டும்; காற்றுவது பாய்மரத்தை ஓட்டிப் படகைத் தள்ள வேண்டும்; மண்ணெண்ணெயாவது தானுேடியை ஓட்ட வேண்டும்; நீராவியாவது புகைவண்டியை உந்தவேண்டும். இந்த உண்மையைத் தெருவிலே போகிற விறகுதலையனும் இந்த நாளில் நன்கு அறிந்துள்ளான். விஞ்ஞானப் புலவரின் சிறப்பு என்னே! பலவேறு வகையான இவற்றிடையே ஓர் ஒற்றுமையைக் கண்டு ஒரு பொதுப் பெயர் இடுவதே இவர்கள் பெருமை. திறன் (**Power**) என்ற பொதுப் பெயரே இவர்கள் கண்ட புதுக் காட்சி. நாட்டுப்புறங்களில் நீர் இறைக்கும் எந்திரம் முதலியன வேலை செய்யும் திறனைக் கணக்கிட்டு ஒப்பு நோக்கி, "இத்தனை குதிரைத் திறன் (**Horse Power**)" என்று நாட்டுப்புற மக்களும் இன்று பேசி வருகின்றார்கள். எனவே, மக்களையோ, பொருளையோ கொண்டு செல்ல என்ன திறன் செலவாகிறது எனக் கணக்கு எடுக்கலாம். ஒரு முறையைவிட மற்றொரு முறை எவ்வளவு சிக்கனமானது என்று ஆராயவும் இடம் ஏற்படுகிறது. நாம் கொடுக்கும் "சத்தம்" இந்தத் திறனை ரூபாய், அணு, பை எனப் பண விதமாகப் பேசுகிற பேச்சேயாம்.

மெதுவாகக் காலந் தாழ்த்திக்கொண்டு போனுலும் கவலை இல்லை என்ருல் பெரிய பெரிய பொருள்களையும் தண்ணீரின் மேல் குறைந்த செலவில் கொண்டு போகலாம். பக்கிங்காம் கால்வாயில் படகுகள் கட்டைகளையும், மூட்டைகளையும் ஏற்றி வருவதை நாம் பார்க்கவில்லையா ? சத்தம் எவ்வளவு குறைவு! ஆனுல் வேகமாகப் போகவேண்டுமானுல் இந்தச் செலவு ஏறிக் கொண்டே போகிறது. கப்பலும் பெரிதாகிக்கொண்டு போகப் போக வேகம் ஏறிக்கொண்டே போக முடியாது அந்த வேகத் திற்கும் ஓர் எல்லை உண்டு அந்த வேகத்தைக் கடக்கவேண்டு மானுல் வானக் கப்பலில் செல்லவேண்டும்.

படகின் சத்தத்தையும், புகை வண்டியின் சத்தத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பூனை அளவும் யானை அளவுமாக இருக்கக் காண்கிறோம். தரையோ, நீர்போல ஒரே மட்டமாக இல்லை; தரையிலே குறுக்கிட்டு நிற்கும் தடைகள் மிகப் பல. ஒரு பக்கம் மேடு, ஒரு பக்கம் பள்ளம். இதுவே தரையின் சிறப்பியல்பு. ஆகவே தண்ணீரில் போகும்போது ஏற்படும் செலவு போலத் தரைமேல் வேகத்திற்குத் தக்கபடி செலவு ஏறிவரும் என்று சொல்ல முடியாது. செலவானது தடைகளைத் தாண்டுவதனைப் பெரிதும் பொறுத்திருக்கிறது. குறைந்த வேகத்தில் செல்லுவதற்கும், மிகுந்த வேகத்தில் செல்லுவதற்கும் இங்கே செலவு பெரிதும் மாறுபடுவதில்லை. ஆனால் செலவு மிகுதிப்படாமல் நினைத்தபடி எல்லாம் வேகத்தை உயர்த்திக்கொண்டே போகலாம் என மனப்பால் குடிக்கலாகாது; இந்த வேகத்திற்கும் ஓர் எல்லை உண்டென வண்டியிற் போகும் நமக்கு நன்றாகத் தெரியும்.

நீரில் போவதை விடவும், தரையில் போவதை விடவும், காற்றில் போவதற்குத்தான் செலவு குறைவு. அங்கே தடை ஏது? மேடு ஏது? பள்ளம் ஏது? அங்கே தடையாக உள்ளது காற்று ஒன்றுதான். தரையில் போகும்போது தரை மட்டம் எப்படி இருக்கிறது என ஆராய்ந்துகொண்டே போதல்வேண்டும். காற்றிலோ அந்தக் கவலையே இல்லை; காற்றிலே உராய்வும் (**Friction**) குறைவு. ஆகவே, ஆகாயத்திலே செல்லும் வண்டியின் வேகத்திற்கு எல்லையே இல்லை. நீர்க் கப்பலில் போகும்போது நீரோடும் இடந்தேடிப் போகவேண்டும். காற்றே எங்கும் இருப்பதால் இவ்வாறு வழிதேடிச் செல்லவேண்டுவதில்லை, சிறிது உயரம் சென்றதும் எதுவும் வழியாம். மனம்போன போக்கெல்லாம் காற்றும் போகும். அதன் வேகம் எல்லையற்ற வேகமாம் (**Great speed**). ஒரே சீரான வேகமாகவும் (**Uniform speed**) அது விளங்கக்கூடியது. இவ்வாறு நிகழக்கூடியது காற்றில் மட்டுமேயாம். இதனால் அன்றே மக்கள் வானத்தில் பறக்க முன்வந்து இன்று அதனையே சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இன்று மட்டுமா? நந்திக் கிராமத்தில் தீக்குளிக்க இருந்த பரதனிடம் விரைந்து வர விரும்பிய இராமபிரானார், புஷ்பக விமானத்திலன்றே பறந்து வந்தார் என்று அன்றே புலவர்களும் எழுதி வைத்துள்ளார்கள்!

# 5. தமிழ்நாட்டுத் தலைநகரங்கள்

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ.,

பழங்காலத் தமிழகம் என்றவுடனே, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்பது அறியப்படும். அக்காலத் தமிழ் நாட்டைப் பற்றிய செய்திகள் கடைச்சங்ககால இலக்கியம் எனக் கூறப்படுவனவற்றுள் குறிக்கப்பட்டுள; சிறப்பாகப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் ஆகியவற்றுள் சொல்லப் பட்டுள. அவற்றுட் சிலவற்றைக் காண்போம்.

பழைய தமிழ்நாடு சேர சோழ பாண்டியர்களால் ஆளப் பட்டது என்பது யாவரும் அறிந்ததே. சேரர்களுடைய தலைநகரம் வஞ்சி; சோழருடையது காவிரிபுகும்பட்டினம்; பாண்டியருடையது மதுரை.

இந்த நகரங்களில் காவிரிபுகும்பட்டினத்தைப் பற்றி அறிவன வற்றை முதலிற் காண்போம். அங்கே பலதிறப்பட்ட மக்கள் வாழ்ந்தனர்; தட்பவெப்பநிலை நன்ருக அமைந்திருந்தது; கடற் காற்று இனிமையாக வீசிக்கொண்டிருந்தது; மண் நல்ல வளம் பொருந்தியதாக இருந்தது. அந்நகரமக்களின் சிறந்த தொழில் உழவே. காவிரியாறு கடலொடு கலந்த அவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மைக்காக வானத்தை நோக்கி வாழ்ந்தவர் அல்லர். நெல்லும் கரும்பும் நிறைய விளைவிக்கப்பட்டன. அடுத்த சிறப்புடைய கைத்தொழிலாய் அமைந்திருந்தது நெசவே. அந் நகரத்திற் பஞ்சமும் தொழுநோயும் ஏற்பட்டதில்லை. அந் நகரத்தைச் சோழ அரசன் ஆண்டுவந்தான். அவ்வரசனை நாட்டின் முதற்குடி யாக மதித்தார்கள். இது,

> "பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
> ....................குடிகள்"

என்ற சிலப்பதிகாரப் பகுதியால் அறியப்படும்: அவ்வரசன் செங் கோலினனாக ஆண்டுவந்தான். அமைச்சர், புரோகிதர், சேனா பதியர், தூதுவர், சாரணர் என்பவர்கள் அவனுக்கு உற்ற துணைவ ராய் இருந்து உதவிவந்தார்கள். அவர்களை 'ஐம்பெருங் குழுவினர்'

என்ருர்கள். இவரை யல்லாமல் 'எண்பேர் ஆயத்தார்' என்பாரும் அரசனுக்கு உறுதுணையாய் அமைந்திருந்தனர். அவர்கள் கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் என்பவர்கள்.

அரசன் தக்க ஆட்களை அமைத்து, வரிகளை உரிய முறையில் வாங்கிக் குடிமக்களின் நன்மைக்குப் பயன்படுத்திவந்தான். உதாரணமாக, கரிகால் வளவன் என்ற சோழன் தன் நகர எல்லையை அடைந்த பண்டங்கட்குச் சுங்கம் வாங்கும்படி பணித்தான். அவ்வாறு சுங்கம் வசூலிக்கப்பட்டுவிட்ட பொருள்களின் மீது அவனுடைய ஏவலர்கள் அவனது புலி முத்திரையை இடுவது வழக்கம். இங்ஙனம் அவனது நகரத்தில் இறக்குமதி செய்து குவிக்கப்பட்ட பண்டங்கள் பல குன்றுகளைப் போலக் காட்சி அளித்தன.

அந்நகரத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் இன்ன என்ற விவரமும் அறிகிரும். அரேபியாவிலிருந்து கப்பல்களிற் குதிரைகளும், மேற்குக் கடற்பக்கத்திலிருந்து படகுகளில் மிளகுப் பொதிகளும், மேருவிலிருந்து மாணிக்கமும், பொதியமலையிலிருந்து சந்தனமரமும், பாண்டி நாட்டிலிருந்து முத்துக்களும், கீழ்க்கடற் பகுதியிலிருந்து பவளங்களும் வந்திறங்கின என அறிகிரும்.

ஈழநாட்டிலிருந்து பனைவெல்லம் முதலிய சில உணவுப்பொருள்களும், பர்மாவிலிருந்து சில மணப்பொருள்களும், சீன தேசத்திலிருந்து கர்ப்பூரம் குங்குமம் முதலிய பொருள்களும் வந்திறங்கின.

காவிரிபுகும்பட்டினத்தில் வாழ்ந்த மக்களிற் சிலர் பகற்பொழுதில் ஓய்வுநேரத்தை எவ்வாறு கழித்தனர் என உருத்திரங் கண்ணனர் கூறியுள்ளார். நன்ருக உண்டுடுத்து வாழ்ந்த அவர்கள் சில வேளைகளில் ஊர் நடுவேகூடி, ஆட்டுக்கிடாவையும், சிவல் என்னும் பறவையையும் முட்டவிட்டு, விளையாட்டுப் பார்ப்பது வழக்கம். இன்னும் சில வேளைகளில், களரியிற் புகுந்து குத்துச் சண்டை, கவண்கல் எறிதல் முதலியவற்றில் ஈடுபடுவர். பலவேளைகளில், கடலாடியும், புனல் படிந்தும், நண்டுகளைப் பிடித்து ஆட்டியும், அலைகளோடு போட்டியிட்டும் பொழுதுபோக்குவர். இரவில் பட்டாடைகளை நீக்கி மெல்லிய பருத்தி ஆடைகளை உடுப்பர்; பாடல்கள் கேட்பர்; நாடகம் காண்பர்; வெண்ணிலவின் பயனையும் துய்ப்பர்.

அவர்களிற் சிலர் பூவும் புகையும் விற்றவர்கள்; சிலர் வண்ணமும் சுண்ணமும் விலை பகர்ந்தவர்கள்; சிலர் பட்டாலும்

எலி மயிராலும் பருத்தி நூலாலும் ஆன ஆடைகளை இயற்றி விலைக்கு விற்றவர்கள். இன்னும் சிலர் அவரை, துவரை முதலிய எண்வகைத் தானியங்களை விற்று ஊதியம் தேடினவர்கள்; சிலர் பிட்டும் அப்பமும் விற்றவர்கள் ; மீன் விற்றவரும் உப்பு விற்றவரும் உண்டு; வெண்கலக் கன்னாரும் செம்புக் கொட்டிகளும், மரவேலை, செய்த தச்சரும், உழைத்துழைத்துக் களைத்துப்போன கொல்லரும், நாடகம் நயந்தும் ஆடல்கள் ஓர்ந்தும் வந்தார்கள் என அறிகிறோம். காவிரிபுகும்பட்டினத்திலே, உருக்குத் தட்டாரும், பணித்தட்டாரும், சிற்பாசிரியர்களும், சித்திரக்காரர்களும், தையற்காரர்களும் விரும்பித் தொழில் புரிந்தனர் என அறிகிறோம். துணியினாலும் நெட்டியினாலும், பூ, வாடாமாலை, பொய்க்கொண்டை முதலிய பொருட்களை அமைக்கும் கைத்தொழில் வல்லவர்கள் இருந்தார்கள். இவர்களைப்பற்றிச் சிலப்பதிகாரம் புகார்க்காண்டத்திற் செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. புகாரின் கடற்கரைப்பக்கம் மருவூர்ப்பாக்கம் என ஒரு பிரிவாகவும் உட்பக்கம் பட்டினப்பாக்கம் என ஒரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. மருவூர்ப்பாக்கத்தில் தொழிலாளரும், பட்டினப்பாக்கத்தில் அரசரும் செல்வரும் வாழ்ந்திருந்தனர்.

மதுரையாகிய பாண்டியர் நகரத்தைக் குறித்து மாங்குடி மருதனார் 'மதுரைக் காஞ்சி'யிற் கூறியுள்ளார். மதுரை ஆறு கிடந்தாற்போன்ற அகன்ற தெருக்களை உடையது. தெரு ஆறு போலவும் இருபக்கத்து வீடுகள் ஆற்றின்கரை போலவும் அமைந்திருந்தன. இனி, மதுரையின்கண் உள்ள கடைகளில் இரவிலும் பகலிலும் எவ்வாறு வாணிகம் நடந்தது என்பதை அறிவோம். அந்திக்கடையை அங்காடி என்றும், பகற் கடையை நாளங்காடி என்றும் கூறுவது அக்கால மரபு.

சிலர் அறுத்த சங்கினை வளையல் முதலியனவாகக் கடைந்து தருவர் ; சிலர் அழகிய மணிகளுக்குத் துளையிடுவர் ; சிலர் பொன்னை உரைத்து மாற்றுக் காண்பர் : சிலர் பொன்வேலை செய்வர் ; சிலர் புடவை விற்பர்; சிலர் அருமையான ஓவியம் வரைவர்; சிலர் சிற்றுடையும் பெரும்புடவைகளும் கொண்டு வந்து தத்தம் சிறுவரோடும் நான்கு தெருக்கள் கூடும் இடங்களில் கால்கடுக்க நின்று விற்பர். பலாப்பழம், வாழைப்பழம், மாம்பழம், பாகற்காய், வழுதுணங்காய், வாழைக்காய், கிழங்குகள், கீரை முதலானவற்றை விற்கும் பல இரவுக் கடைகள் உண்டு.

இவ்விரவுக் கடைகளெல்லாம் முதல் யாமத்திலேயே மூடப் பட்டுவிடும். பிறகு, இரண்டாம் மூன்றும் யாமங்களிலே ஊர்க் காவலர்கள் உறுதியுடன் நகரில் உலாவப்போவர். மழைபெய்து தெருவில் நிறைய நீரோடிக்கொண்டிருக்கிற பொழுதிலும், தம் கடமையில் வழுவாராய்க் கையில் வில்லும் அம்புமாக இவர்கள் திரிவார்கள் என மதுரைக்காஞ்சி சொல்லுகிறது.

மதுரை நகரத்தில் அக்காலத்தில் தொழில்புரிந்தார் இவரிவர் எனச் சிலப்பதிகாரம் கூறுவதை நோக்குவோம். சிலர் செம்பாலும் வெண்கலத்தாலும் பற்பல பாத்திரங்கள் செய்வர். சிலர் ஆனைக் கொம்பு முதலியவற்றைக் கடையும் தொழிலில் ஈடுபடுவர். வண்டியும் தேர்வட்டையும் தேர்க்கொடுஞ்சியும் செய்வோர் பற்பலர் உண்டு. கையில் துலாக்கோலோடும் மரக்காலோடும் நின்று பண்டங்களை நின்றவிடத்திலேயே அளந்துகொடுப்போர் பலர். சில கடைகளில் ஆடகப் பசும்பொன் விற்கப்படும். இங்கே, ‘சாம்பூநதம் விற்கப்படும்,’ இங்கே ‘சாதரூபம், கிளிச் சிறை விற்கப்படும்,’ என்ற குறிப்புப்பட எழுதப்பட்ட கொடிகள் திகழும். அதனால், சாமான் வாங்குவோர் ஒவ்வொரு கடையிலும் புகுந்து திரும்பாமல் வேண்டிய கடையில் புகக்கூடிய வசதி செய்யப்பட்டிருந்தது என அறிகிறோம்.

சேரர் பேரூர் ஒரூரின் தனிநிலை பெறுததாய் நானிலத்தின் பான்மையும் பொருந்தப்பெற்றிருந்தது என்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகிறது. அந்நகரத்தில் மலையும் கடலும் கானும் வயலு முண்டு என்று சொல்லத்தக்கபடி ஒரு வருணனை காணப்படு கிறது. “குறத்தியர் பாடிய குறிஞ்சிப்பாட்டினையும், உழவர் பாடிய ஓதைப்பாணியையும், இடையர் பாடிய குழலின் பாணியையும், நுளைச்சியர் பாடிய நெய்தற்பாணியையும்,” செங்குட்டுவன் மனைவி கேட்டனளாய்ப் படுக்கையில் இருந்தாள் எனக் கூறப்பட்டிருப்ப தால், அந்நகரத்தின் தட்பவெப்பநிலை கலப்பு வாய்ந்தது என்பது பெறப்படும். அங்கு வாழ்ந்த மக்கள் வேட்டுவரும், உழவரும், இடையரும், பரதவரும் ஆகிய பலதிறத்தவர் என்பதும் பெறப் படும். அந்த நகரத்தில், சிவனுக்கும் திருமாலுக்கும் சிறந்த கோயில்கள் அமைந்திருந்தன.

# 6. பசிக்குப் பகைவன்

**மொ. அ. துரை அரங்கசாமி, எம்.ஏ., எம்.ஓ.எல்.**

நெடுந்தூரம் நடந்துவந்த இளைப்பால், அச் சோலையில் அவன் தன் மனைவியோடு தங்கினான். காற்றுத் தண்ணென வீசியது. மரமடர்ந்த சோலையாதலின், நறுமணமும் குளிர்ச்சியும் களைப்பை விரைவில் போக்கின. யாழும் குழலும் பிற இசைக்கருவிகளும் அடங்கிய காவடியைக் கட்டிக்கொண்டு அவன் புறப்பட எழுந்தான். 'இனி, நம் பசியும் வறுமையும் ஓட்டம் பிடிக்கப் போகின்றன' என்ற எண்ணத்தால் அவன் முகத்தில் களிப்பு மிக்கது.

வயிறு வற்றிக்கிடக்கும் அவன் முகத்தில் களிப்புக் குறியைக் கொண்டு, அவனிடம் ஏதோ சிறப்பு இருக்கவேண்டுமென்று எண்ணி, விரைந்து வந்து அவன் முன் நின்றான், அவன் இனத்தான் ஒருவன். அவனும், யாழ் குழல் முதலிய இசைக் கருவிகளைக் காவடியில் கட்டித் தோளில் ஏந்தியிருந்தான். வந்தவனை இதற்கு முன்பு அவன் அறியான்; அவனையும் வந்தவன் அறியான்.

வந்த பாணன் இருந்த பாணனை உற்று நோக்கினான்! இருந்தவனிடம் பொருளோ உணவோ ஒன்றும் இல்லை. வந்தவனுக்கு அவனை ஏதாவது கேட்கவும் வாய் வரவில்லை. அவன் மிகவும் களைத்துப் போயிருந்தான். காரணமில்லாமல் இருந்த பாணன் களிப்புக்கொள்வானேன். ஒரு வேளை வெறி பிடித்தவனோ என்று கூட வந்தவன் நினைத்திருக்கலாம்.

இருந்த பாணனுக்கு வந்த பாணனின் திகைப்பு வெளிச்சமாயிற்று. அவனுக்கு உண்மை கூற, இருந்த பாணன் விரும்பினான்; தான் பெறப்போகும் இன்பத்தை அவனும் பெற நினைத்தான். பாண் சாதியர் இயல்பு அது.

"உனக்கு வறுமை தீரவேண்டும் என்ற விருப்பம் இருப்பின் என்னோடு வருகிறாயா ஈர்ந்தூருக்கு?" என்றான் இருந்த பாணன்.

"ஈர்ந்தூரா? அஃது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?" என்று கேட்டான் வந்த பாணன்.

“இதோ அருகில்தான் உள்ளது.”

“அப்படி ஒன்றும் அருகில் பெரிய நகரமாகக் காணப்பட வில்லையே! ஒரு சிறிய ஊராகத்தானே காணப்படுகிறது. அங்கே நம்முடைய இசையைப் போற்றும் அரசர் உளரோ? நம் வறுமையைப் போக்க அரசரால் அன்றோ கூடும்?”

“அறியாது கூறினாய்! ‘பாண்பசிப் பகைஞன்’ என்றே பட்டந் தாங்கிய ஒரு வள்ளல் ஈர்ந்தூரில் இருக்கின்றான். அவன் அரசன் அல்லன் என்பது உண்மையே; பாண்டியனிடம் படைத் தலைவனாக இருப்பவன். அம் முடிமன்னனன் அவன் சிறப்புக் கண்டு ஈர்ந்தூரை அவனுக்கு உரிமையாக்கியிருக்கின்றான். ஆகவே, அவனை **ஈர்ந்தூர் கிழான்** என்று வழங்குவர். ஆனால், அவன் **தோயன் மாறன்** என்ற பெயருடையவன்.”

“அப்படியா? நான் அறியாது போனேன். பாண்டியன் படைத்தலைவனிடம் செல்வம் மிகவே இருக்கும். எனவே நம் வறுமை தீரும். ஆனால் புறப்படலாம்!”

“புறப்படலாம் என்றது தக்கதே! ஆனால், அவனிடம் செல்வம் மிகவே இருக்கும் என்று கருதுகின்றாயே, அதுதான் இல்லை. அவனிடம் நாடோறும் விடாது தொடர்ந்து கொடுப்பதற் குரிய செல்வம் இல்லை.”

“அப்படியானால், உனக்கு வேண்டுமானால் சிறிது கிடைக்க லாம். எனக்கு ‘இல்லை’ என்ற பதில்தானே வரும்!”

“அதுவும் இல்லை. தன்னை அடைந்தவர்க்கு, ‘இல்லை’ என்று சொல்லி வெறுங்கையோடு அனுப்பவும் மாட்டான் அப் பெருமான்.”

“அவன் இயல்பு தெரிந்தால், நீ அவ்வாறு கருதமாட்டாய். அரசனுக்குப் பகைவரால் துன்பம் வருவது தெரிந்தால், உடனே அவன் போருக்குத்தானே புறப்பட்டுப் போவான்; பகைவர் பலராக அவனைச் சூழ்ந்துகொண்டாலும் வீரம் குன்றான். பகைவர் வாள் அவன் உடலைச் சுவைக்க எண்ணும். உடலைத் திருப்பிக்கொள்ள அவன் எண்ணான். நன்றாகச் சுவைக்க இடந் தருவான். அம்புகள் அவன் குருதி நாடிகளில் தோய்ந்து சுவை யுறப் பருக எண்ணும். அவற்றிற்கும் தாகந்தீர அவன் இட மளிப்பான். ஊர் நடுவே மருந்து மரம் ஒன்று இருந்தால், ஊரி

ளுள்ளார், தமக்குத் தேவை நேர்ந்தபோதெல்லாம் அம்மரத்தின் பட்டையைச் செதுக்கிக்கொள்வது நாம் யாண்டும் காணும் காட்சியன்ருே? மரம், தன்னிடம் பட்டையை வெட்டிக்கொள்ளுதல் கூடாது என மறுத்தல் உண்டோ? அதனுல் அது பட்டுப்போவதும் உண்டோ? அதுபோல், முகத்திலும், மார்பிலும், இனி வேறு ஒரு வாளோ, அம்போ, வில்லோ வடுச் செய்வதற்கு இடமில்லை யாகும்படி முன்னரே அவன் வடுக்களைப் பெற்றுள்ளவன். அவ் வடுக்களே அவன் உடலை அழகு செய்யும் அணிகள். அத்தகைய வீரன், இல்லோர் யாரேனும் தன்னை நோக்கி வருவாரோ என்று பார்த்தவண்ணம் இருப்பான். அவன் ஒரு பெரிய வள்ளல்."

"வள்ளலாக இருக்கலாம்! கொடுக்க எண்ணம் இருக் கலாம்! பொருள் இல்லாவிட்டால் கொடுப்பது எப்படி? எனக் கொன்றும் புரியவில்லையே! நான் வேறு எங்கேயாவது போகிறேன். உன்னுடன் வருவதிற் பயனென்றும் ஏற்படாது என்பதை நான் தெளிவாக அறிந்துகொண்டேன்."

"உண்மையை அறிந்துகொள்ளும் இயல்பு உன்னிடம் உள்ளது. நம் பாணர் குலத்திற்கே உண்மை யறியும் உணர்வு நெருங்கிய தொடர்புடையது. ஆனுல் நான் கூறுவதிலும் உண்மை யிருக்கிறது என்பதை உணர்ந்து என்னுடன் வா."

"என்ன ஐயனே! பொருளில்லாதவன் பொருள் எப்படிக் கொடுக்க முடியும்? அவனைப் பார்த்தால், கேட்கத்தான் எப்படித் தோன்றும்?"

"நம் குல இயல்பு, கேட்டுப் பெற்று உண்டு உவகை கூர்வதே! ஆகவே, யான் அவனிடம் செல்வேன். அவனிடம் பொருள் இராதுதான்! அவனை நான் இரக்கவும் பின்வாங்கேன். உடனே கொல்லனை அவன் வரவழைப்பான்."

"கொல்லனையா? எக் கொல்லனை? எதற்காக? இன்ப புரிக்குப் பபணச்சிட்டுத் தருவதற்கா?"

"அப்படி யெல்லாம் அந்த வள்ளலைப் பற்றி நினைப்பது பெரும் பாவந்தரும். போர்வாள், வில் முதலியன வடித்துத் தரும் இருப்புக் கொல்லனைத்தான் அவன் வரவழைப்பான்."

"வரவழைத்துப் பின் யாது செய்வான்?"

"நான் மாறனை இரந்த முறையில், மாறன் கொல்லனை இரப்பான்."

"கொல்லனை இரந்தால் பொருள் கிடைக்குமோ? அவனிடம் பொருள் மிகுதியும் உண்டா?"

"திருத்தமான நிலையையுடைய நீண்டதொரு வேலை வடித்துத் தருவாயாக!" என்று மாறன் கொல்லனை இரப்பான்.

"வேல் எதற்கு? ஒரு வேல்கூடவா படைத்தலைவனுக்குப் பஞ்சம்?"

"வேல் எதற்கா? அது பொருள் தரும்! வேலை ஏந்திக் கொண்டு, உடனே பக்கத்தில் உள்ள ஊரில் செல்வ மிக்க வர்களை அடைந்து அவன் பொருள் கேட்பான்; இல்லை யென்று மறுத்தால் வேலைக் காட்டுவான்; அதற்கும் இசையார் எனின் வேலிற்கு அவர்களை உணவாக்கிப் பொருள் கொண்டுவருவான்; எல்லாம் நொடிப்பொழுதில் நிகழும். பெரும்பான்மையாக, யாவரும் கேட்டவுடனே பொருள் கொடுப்பதில்லை. ஆகவே. வேல் அடிக்கடி பகைவர் மார்பில் புகுந்து கூர்மை யிழக்கும்; சிறிது சிதையவும் சிதையும். ஆகவே, படைகள் எல்லாம் ஓயாமல் வேலை செய்து செய்து கொல்லன் கூட்டத்திற்கே திரும்பிச் செல்லுமே ஒழியப் படைக்கலக் கொட்டிலில் சிறிது நேரமும் தங்கி ஓய்வு பெறு. அங்ஙனமாக, அவனல் ஒரு வேல்கூட நல்ல நிலையில் வைத்திருக்க முடிவதில்லை."

"அதற்கு இரப்பானேன்? 'வடித்துக்கொண்டு வா' என்று அதிகாரத்தோடு கொல்லனைக் கேட்கலாகாதா?"

"பலமுறை வடிப்பவனுக்கு வெறுப்புத் தோன்றலாமன்றோ! அது கண்டால், இரக்கச் செல்லும் நமக்கும் மனவேதனை ஏற்படுமே; 'ஏன் இங்கே இரக்க வந்தோம்' என்று கூட எண்ணிவிடுவோம் அல்லவா? ஆகவே நம் சுற்றத்தார் பசியால் சுருங்கிக் கிடக்கும் வயிற்றைச் சுட்டிக்காட்டி, இனிய சொல்லினல், 'அருள் கூர்ந்து உடனே ஒரு வேலை வடித்துத் தருவாயாக" என்று இரப்பு மொழியிலேயே அவன் கூறுவான். 'இரக்க இரத்தக்கார்க் காணின்' என்பது அருமறை யன்றோ?"

"உண்மையிலேயே நல்ல வள்ளல்! பண்பாடுமிக்க வள்ளல்! அறியாது கூறிவிட்டேன், எழு போவோம்."

# 7. தமிழ் இசை

ஸ்ரீலஸ்ரீ தய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள்
குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனகர்த்தர்

மெய்யன்பர்களே! தமிழிசைச் சங்கத்தின் இந்த ஆண்டுப் பண் ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்கி வைக்கின்ற பெருவாய்ப்பு நமக்குக் கிடைத்தது பற்றிப் பெரிதும் மகிழ்கின்றோம்; இந்த வாய்ப்பினை நல்கிய தமிழிசைச் சங்கத்தாருக்கு நமது அன்பையும், ஆசியையும் உரியவாக்கிப் பணிமேற் செல்ல விழைகின்றோம்.

### இசையின் பெருமை

இசை, இன்பம் தருவது; ஒருங்கே பொறி புலன்களுக்கு இன்பம் தருகின்ற பெருமை இசைக்கு உண்டு. "இசை" என்னுஞ் சொல்லுக்கு "வயப்படுத்துவது", "இசைவிப்பது" என்பது பொருள். மரஞ் செடி கொடிகள் முதலிய ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு படைத்த மக்கள் வரையில் எல்லா உயிர்களையும் வசப்படுத்துகின்ற ஆற்றல் இசைக்கு உண்டு. உயிரற்ற கல், மண், நீர், காற்று முதலிய சடப் பொருள்களையும், பாடுகின்றவர்களின் எண்ணத்தோடு இசைத்து இயங்கச் செய்கின்ற ஆற்றல் இசைக்கு உண்டு; உணர்ச்சியற்றவர்களுக்கும், உணர்ச்சியை ஊட்டுகின்ற பேராற்றல் இசைக்கு உண்டு; கன்னெஞ்சையும் கசிவிக்கச் செய்கின்ற திறன் இசைக்கு உண்டு; அலிகளுக்கும் ஆண்மைக்கன லேற்றுகின்ற திறன் இசைக்கு உண்டு; நல்லுணர்வை நல்குகின்ற திறன் இசைக்கு உண்டு; குழந்தை உள்ளத்தைத் தருகின்ற திறனும் இசைக்கு உண்டு; எடுத்த யாவினும் வெற்றி தருகின்ற இணையற்ற வாய்ப்பும் இசைக்கு உண்டு.

### இசையும் வாழ்க்கையும்

உலகியல் துன்பம் சூழ்ந்தது; துன்பம் தோன்றுவண்ணம்—தளர்ச்சி காட்டாத வண்ணம் மகிழ்ச்சியூட்டுவது இசை. இசை ஒரு கலை; வெற்றுக் கலையல்ல; வாழ்க்கையிலே தோய்ந்த கலை. வறண்ட வாழ்க்கையிலே இன்பம் பிலிற்றுகின்ற பேரூற்று இசை.

இம்மைக்கும் மறுமைக்கும் வழித் துணையாக அமைகின்ற வாய்ப்பும் இசைக்கு உண்டு. எனவே வாழ்க்கையிலே இன்பம் பயக்கின்ற தொன்றாக இசை அமைந்திருக்கிறது.

*தமிழகமும் இசையும்*

தமிழ் மக்களது வாழ்க்கையிலே இசை ஒன்றியிருந்தது; இருக்கிறது. தமிழ் வளர்த்த சங்கங்களிலே இசை பயிலுகின்ற இடம் தனியே இருந்தது; அத்தகைய இடத்தை "இசைச் சூழல்" என்று குறிக்கின்றார் வாதவூரடிகள். தமிழ் 'முத்தமிழ்' என்று தான் பேசப் பெறுகின்றது. தமிழ்ச் சமுதாயத்தில் குழந்தைப் பருவ முதல் இறுதிக்காலம் வரையில் இசை தோய்ந்திருக்கிறது. பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியூட்டி உறங்க வைக்க "ஊசற் பாட்டுக்கள்" பாடப்பெற்றன; அப்பாட்டுக்கள் "ஊசல்வரி" என்று சங்க இலக்கியங்களில் பேசப் பெற்றுள்ளன. இன்னும் விளையாடுங் காலத்தில் பாடுகின்ற பாட்டுக்கள் "கந்துகவரி" முதலியன. "மங்கல வாழ்த்துப் பாடல்", "செருப்பறை", "வள்ளைப்பாட்டு" முதலிய பாவினங்களும் சங்க காலத்தில் பயின்றன. இவையல்லாமல் ஆறுகள், கடற்கரைகள், முதலியவற்றின் இயற்கையின் எழிலின்பத்தில் ஈடுபட்டுப் பாடிய பாடல்கள் ஆற்றுவரி, கானல்வரி முதலியனவாம். தெய்வத்தைப் பரவும் பாட்டுக்கள் "தேவபாணி" எனப்படும். சங்க நூல்களில் "பரிபாடல்" என்பதும் ஒன்று. அது முற்றும் இசைப்பாட்டினாலேயே ஆனது. "பரிபாட்டு" என்பது ஒருவகையான இசைப்பாட்டுக்குப் பெயர். இவ்வாறு பண்டைத் தமிழ் மக்கள் எந்நிலையிலும் இசைப் பாடல்களில் மனந்தோய்ந்து மகிழ்ந்திருக்கிறார்கள். தற்பொழுதும் தமிழ் நாட்டிலே எந்தத் தொழிலிலும் இசையைப் பயன்படுத்திக் களைப்புத் தெரியாத நிலையில் வேலையை முடிக்கின்றனர். அவை ஏற்றப்பாட்டு, உழவுப் பாட்டு முதலியனவாம்.

"பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்" என்று பட்டினப் பாலையில் வருகின்ற தொடர் பண்டைத் தமிழ் மக்களது வாழ்க்கையில் இசை தோய்ந்திருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். தமிழ் மொழி முத்தமிழாகவே இயங்கிற்று என்பதை முதலில் சொன்னோம். தமிழிலக்கண ஆசிரியர் அகத்திய முனிவர் முத்தமிழுக்கும் இலக்கணம் செய்தார். சிகண்டியார் என்னும் புலவர் "இசை நுணுக்கம்" என்று ஒரு இசைத் தமிழ் நூல்

செய்தார். "பழுதற்ற முத்தமிழ்ப் பாடல்" என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தைப் புகழ்கின்ருர். அடியார்க்கு நல்லாரும் இசைத் தமிழின் இயல்புகளை நன்கு அறிந்தவர். இங்ஙனமெல்லாம் இசை நலம் பண்டைக்காலத்தில் மிகவும் சிறந்திருந்த தென்றே தெரிகின்றது. கண்ணகனுர், கண்ணனுகனுர், கேசவனுர், நந்நாகனுர், நல்லச்சுதனுர், நாகனுர், பித்தாமத்தார், பெட்டகனுர் முதலிய பெருமக்கள் பலரும் இசைத்தமிழ்ச் செல்வர்களாக விளங்கினர். இவர்களெல்லாம் பரிபாடலுக்கு இசை வகுத்தவர்களாவர்.

***தமிழிசையின் அவசியம்***

இசை உயிர்; பாடல் உடல். உயிரின்றி உடல் இயங்காது. உடல் இன்றேல் உயிருக்கும் இயக்கம் இல்லை; பயனுமில்லை. எனவே பாடுகின்ற பாடல்களின் பொருளை உணர்கின்ற நிலை வருகிறபொழுதே சாதாரண மக்களிலிருந்து பெரியவர்கள்வரை இசைக்கலையின் பயனை அனுபவிக்க முடியும். மேலும் வாழ்க்கையை வளம்படுத்தத்தானே கலைகள்? வெறும் இசை கேட்கச் சிறிது நேரம் இன்பமாக இருக்குமேயொழிய வளம் பயப்பதில்லை. நல்ல கருத்துள்ள பாடல்களை இசையுடன் பாடுகின்றபொழுது கேட்பதில் நல்ல உணர்ச்சியையும், மெய்ப்பாட்டையும் அடைய முடிகிறது; உண்மை இன்பத்தையும் அனுபவிக்க முடிகிறது. எனவே தமிழிசைதான் இந்த நாட்டிற்குத் தேவை என்று நிச்சயமாக நம்புகின்ருேம். இந்த நம்பிக்கை வேற்று மொழியின்கண் உள்ள வெறுப்பினுல் அல்ல என்பதையும் உணர்த்த ஆசைப்படுகின்ருேம். தமிழ்ச் சமுதாயத்தைத் திருத்த-உயர்த்த அவர்கள் எளிதில் கேட்டு அனுபவிக்கக்கூடிய தமிழிசை தேவை என்ற எண்ணத்தால்தான் இங்ஙனம் சொல்லுகின்ருேம். நாட்டின் தேவையறிந்து தக்க காலத்தில் தமிழிசை இயக்கத்தைக் கண்ட **ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார்** அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

***சமயமும் இசையும்***

தமிழ் மக்கள் கலைகள் அனைத்தையும் கடவுள் தொண்டுக்கே பயன்படுத்தினர். புலமை, ஓவியம், சிற்பம், இசை முதலிய கலைகளெல்லாம் கடவுள் தொண்டுக்கே பயன்படுத்தப்பெற்றன. அதனுலன்ருே சிற்பககலைக் களஞ்சியங்களாக, ஓவியக்கலையின்

உறைவிடமாக ஆலயங்கள் அமைந்தன. ஆலயங்களில் தேவாரங்கள் பண்ணுடன் ஓதப்பெறவும், ஏனைய இசை வாத்தியங்கள் வாசிக்கவும், தமிழ் மன்னர்கள் இறையிலியாக நிலங்கள் அளித்துள்ளனர். சிறப்பாக இசை, சமயத்திற்கென்றே கருதப் பெற்றது.

தமிழ் மக்கள் சமயத் துறையில் இசையைப் பெரிதும் போற்றினர்; இறைவனையே ஏழிசையாகவும், இசையின் பயனாகவும் கண்டு வழிபட்டனர். ஆண்டவனை அகங்குளிர்ந்த உள்ளத்துடன் இசையொன்றப் பாடுகின்ற பண்பு தமிழ் மக்களுக்கே உரியது. ஆண்டவன் தமிழோடு இசை கேட்கின்ற பெரு விருப்பினனாக விளங்குகின்றான் என்றே அவர்கள் உணர்ந்து ஓதினர். ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலிய சமயப் பெருமக்கள் இசை கலந்த பாடல்களைப் பாடிப் பரமனை மகிழ்வித்ததோடு, மக்களிடையேயும் பக்தி உணர்ச்சியைப் பரப்பினர். இசையின்கண் எழுந்த வேட்கையினால் மதுரை ஆலவாயண்ணல், யாழ்ப்பாணருக்குத் திருமுகங் கொடுத்தார். அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய ஆனாய நாயனார், ஏழிசையைக் குழலில் ஊதிப் பேரின்பப் பெருநிலை பெற்றார். இசையினால் இறைவனை ஏத்துதலாற் பெறும் பயனை, "அளப்பில் கீதஞ் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே" என்று அநுபூதிச் செல்வர் சொல்லுகின்றார். பிற்காலத்தில் தமிழிசை, சமயத்தின் அரவணைப்பிலேயே வளர்ந்தது; இன்றும் தமிழிசை நிலவுவது இசை நலத்தோடு அமைந்த தேவாரப் பதிகங்களால்தான்.

**பண்ணிசை**

முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலே இசைக்கருவிகளைப் பற்றிப் பேசுகின்றபொழுது, "மிடற்றுப் பாடல்" என்று ஒன்று குறிக்கின்றார். இது வாய்ப்பாட்டைக் குறிக்கும். இங்ஙனம் இசைக் கருவிகளோடு "மிடற்றையும்" சேர்த்துச் சொன்ன பெருமை தமிழுக்கே உரியது.

இசை, பண் உருவங் கொள்ளும்போது "பண்கள்" எனவும் "திறங்கள்" எனவும் பாகுபாடு கொள்ளப்படும். அவற்றுள் ஏழு நரம்புகளும் நிறைந்தது பண்; அதற்குக் குறைந்த நரம்புகள் அமைந்தது திறம். திறங்கள் பண்களுக்கு இனமானவை. ஒளியில் ஏழுவகையான நிறங்களிருந்து இயங்குதல்போல ஒலிகளும் ஏழு

வகைகளாக இயங்கி வெளியிற் காரியங்களை நிறைவேற்றுகின்றன. அவ்வெழுவகை ஒலிப்பிரிவுகளே இங்கு ஏழு நரம்புகள் எனப் பட்டன. நிலங்களுக்கும், காலங்களுக்கும் எனப் பண்களை முறைப்படுத்தியும் வைத்திருக்கின்றனர். சிறப்பாகக் காலைநேரத் துக்கு மருதப் பண்ணும் மாலை நேரத்துக்கு செவ்வழிப் பண்ணும் உரியவாகும். பண்ணிசையின் ஆக்கத்திற்குத் தேவார ஆசிரியர் கள் மூவரும் செய்த தொண்டு மிகவும் போற்றுதற்குரியது.

**செய்யவேண்டுவன**

தமிழிசை இயக்கம் வலுப்பட நல்ல கீர்த்தனைகள் வேண்டும்; அக்கீர்த்தனைகள் பொருட் செறிவும் இசைப் பொருத்தமும் பெற் றிருத்தல் வேண்டும். இத்தகைய கீர்த்தனைகளின் பெருக்கிற்குச் சாகித்ய கர்த்தாக்கள் இசைப் புலமையும் • தேர்ச்சியும் பெற வேண்டும். தமிழ்ப் புலவர்களும் இசை நுணுக்கங்களைக் கற்று முத்தமிழ் வளர்ச்சிக்குப் பணி செய்யவேண்டும். தமிழிசைக் கலை யின் வளர்ச்சிக்குப் பயன்படக் கூடியவைகளை யெல்லாம், நாடு, இனம், மொழி என்ற வேற்றுமைகளைப் பாராது நாம் கைக் கொள்ள வேண்டும். தேவாரப் பாக்களை அவற்றிற்குரிய பண் முறையில் ஓதுதலே நன்மை பயக்கும். இசையுலகின் ராகங் களுக்கும், பண்களுக்கும் சிற்சில பண்களில் களை வித்தியாசம் இருப்பதைக் காணலாம். இந்த மாதிரியான செய்திகளை யெல் லாம் அமைதியான உள்ளத்துடன் ஆய்ந்து முடிவு செய்து, தமி ழிசையுலகுக்கு ஆக்கமளிக்கத் தமிழிசைச் சங்கம் தலைப்பட்டது போற்றுதற்குரியது.

**தொகுப்பு**

இசைக்கலை, வாழ்க்கையிலே தோய்ந்து விளங்குகின்ற பெருமை படைத்ததென்பதையும், தளர்ந்த வாழ்க்கையில் உணர்ச்சியைத் தந்து இன்பம் பயப்பது இசை என்பதையும், தமிழ்மக்களது வாழ்க்கையில் கருக்குழி முதல் சவக்குழி வரையில் இசைகலந்திருக்கிறது என்பதையும், தமிழ்மக்கள் கலைகள் அனைத் தையும் இறைவழிபாட்டிலேயே ஈடுபடுத்தி மகிழ்ந்தனர் என்பதை யும், சங்க காலத்திலே தமிழிசைக்கென்றே நூல்கள் இருந்தன என் பதையும், இசை வளர்ச்சியில் தேவார ஆசிரியர்கள் செய்த தொண்டு மதிப்பிற்குரியது என்பதையும், பண்ணிசையின் கருவூல மாகத் தேவாரங்கள் விளங்குகின்றன என்பதையும், பிறவற்றை யும் நினைவுபடுத்தினோம்.

# 8. பண்டை உரைநடை

## அடியார்க்கு நல்லார்

(1)

தான் வளர்த்த கீரி தன் பிள்ளையைக் காத்திருந்ததாக ஒரு பாம்பனுக அதனைக் கௌவித் துணித்த குருதி வாயோடு தன் வரவு பார்த்து எதிர்கொண்டதனைத் தன் பிள்ளையைக் கடித்ததெனக் கருதித் தன் கையின் மணையாற் புடைக்க அது மரித்தலாலே வடதிசையை நோக்கிக் கங்கையாடப் போகின்ற கொழுநனை மனைவி பின்செல்லப் பொறுதிகழ்ந்து, 'நின்னுெழுக்கத்தின் உண்டு மனையறத்தின்கண் வாழும் வாழ்க்கை இனிக் கடவதன்று; ஆதலான் வடமொழி வாசகமெழுதிய இவ்வேட்டினை உணரக்கடவ பொருளையறியும் மாந்தர் கையகத்தே நீ கொடுக்க'வெனச் சொல்லி அவன் போக, பீடிகைத் தெருவினும் மாடமறுகினும் பிறர் மனைகளினும் போகி மீளத்திரிந்து, 'கருமக் கழிபலங் கொண்மி'னெனக் கூவும் அருமறையாட்டியைக் கூவி 'நீ இங்ஙனமாதற்கு நீயுற்ற இடர்யாது? இக்கூறிய தியா'தென்று கேட்ப, அம்மாதர் தான் கொலை செய்தலாற் கொழுநன் பிரிய அவனைக் காணுது மிக்க துன்பமுற்றதனைக் கூறி, 'இத்திறமாகிய பொருளை எழுதிய ஏட்டினை வாங்கிக்கொண்டு கைப்பொருளைத் தந்து எனது கடுந்துயரைக் களைக'வென்று சொல்ல, 'அஞ்சா தொழி; நின்துயரை யானே களைகேன்; நின்னெஞ்சின் மிக்க துயரத்தை இனி நீங்குவாயாக'வெனச் சொல்லி, அப்பொழுதே தருமாசனத்தோர் உரைத்த நூல் வழியே அப் பார்ப்பனிக்கு உளதாகிய கொலைப்பாவம் நீங்குதற்குத் தானத்தையுஞ் செய்து அவள் துன்ப நீக்கி, காட்டு நெறிக்கட்போன கணவனையும் கூட்டி, அவர்க்கு மேலுள்ள காலத்திற்குத் தளராத பல படைப்பரிய செல்வத்தோடே மிக்க கைப்பொருளையும் கொடுத்து, வேள்வியையும் செய்வித்த தொலையாத செல்வனே!

## 2. இளம்பூரணர்

எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க வென்பது மரபு. என்னை? "ஆயிர முகத்தா னகன்றதாயினும்,

பாயிர மில்லது பனுவலன்றே" என்பவாகலின். பாயிரமென்பது புறவுரை. அது நூற்குப் புறவுரையேல் அது கேட்டு என்னை பயனெனின், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள்போல இன்றியமையாச் சிறப்பிற்றுயும், திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம்போல அலங்காரமாதற் சிறப்பிற்றுயும் வருதலானும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனில் குறிச்சி புக்க மான்போல மாணுக்கன் இடர்ப்படுமாகலானும், பாயிரம் கேட்டல் பயனுடைத்தாயிற்று. அப் பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைத்து. எல்லா நூன்முகத்தும் பொதுவாக உரைக்கப்படுதலிற் பொதுவெனப்பட்டது. "ஈவோன்றன்மை" முதலிய நூலுட் சொல்லும் பொருளல்லாத புறப்பொருளைக் கூறும் பொதுப் பாயிரம் போலாது, நூலகத்தெல்லாம் பயத்தன் மாத்திரையே யன்றி அந்நூலிற் சொல்லப்படுகின்ற பொருள் முதலிய உணர்த்தலின் அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற் சிறந்த ஆடைபோல நூற்குச் சிறத்தலால் சிறப்பெனப்பட்டது.

## 3. பரிமேலழகர்

கடவுள் வாழ்த்தாவது, கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். வான்சிறப்பாவது அக் கடவுளது ஆணையால் உலகமும் அதற்குறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற் கேதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். இல்வாழ்க்கையாவது இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு. வாழ்க்கைத்துணை நலமென்பது அவ் வில்வாழ்க்கைத் துணையாகிய இல்லாளது நன்மை. அன்புடைமையாவது வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனுதல். இல்லறம் இனிது நடத்தலும், பிற வுயிர்கண்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனுகலின், இது வேண்டப்பட்டது. இனியவை கூறலாவது மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல். நடுநிலைமையாவது, பகை, நொதுமல், நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. இது நன்றி செய்தார்மாட்டு அந் நன்றியினை நினைத்தவழி சிதையுமன்றே, அவ்விடத்தும் சிதைய லாகாதென்றற்கு செய்ந்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது.

# 9. பெண்ணுரிமை

திரு. வி. கலியாணசுந்தரனர்

'எல்லாவற்றிலும் முதன்மைபெற்று விளங்கும் பெண்ணிற்கு உரிமை வழங்கவேண்டுமா? வேண்டாவா?' என்னும் ஆராய்ச்சியும் இவ்வுலகிற் சில இடங்களில் நடைபெற்று வருகிறது. உரிமை என்பது ஒருவர் கொடுப்பதுமன்று; மற்ருெருவர் வாங்குவதுமன்று. அஃது எவரிடத்தும் எல்லாவிடத்தும் இயல்பாய் அமைந்துகிடப்பது. சிலர் தமக்குள்ள வன்மையால் பிறர் உரிமையை மறித்தும் பறித்தும் வருகின்றனர்; ஒருவர் உரிமைக்கு மற்ருெருவர் கேடு சூழ்வதினும் கொடிய பாவம் பிறிதொன்றிருக்கிறதென்று தெரியவில்லை.

*உரிமை*

உரிமையானது உயிர்கட்குக் கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு பெரிய இயற்கைக் கொடை. தன்னைப்போலவே உயிர்களும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி உலகில் வாழவேண்டு மென்பது கடவுள் நோக்கம். அவ்வருள் நோக்கத்துக்கு மாறுபட்டுப் பிறர் உரிமையைத் தடிவோர், கடவுள் உண்மையில் உறுதியுடையோராகார். எவ்வுயிர் உரிமைக்கும் எவரும் கேடு நிகழ்த்தலாகாதென்பது பொது அறம். அங்ஙனமாக, மன்பதையின் தோற்ற வளர்ச்சிக்கெனக் கடவுளருளால் தாய்மை பெற்றுள்ள மென்மைப் பெண்மகளின் உரிமையை, வன்மை ஆண்மகன் சில இடங்களில் மறித்தும் பறித்தும் இருக்கிருன்! இயற்கை நியதிக்கு முரண்ி நின்று, பெண்ணுரிமையைக் கடிந்து, 'பெண்ணுக்கு எவ்வளவில் உரிமை வழங்கலாம்; எவ்வளவில் வழங்கல் கூடாது' என்னும் ஆராய்ச்சியில் தலைப்படல் எத்தகை அறியாமை! பெண்ணின் உரிமையைக் கெடுக்கவும் வழங்கவும் இம்மகன் யாவன்? அவ்வுரிமையைக் கடிந்த மறத்துக்குக் கழுவாய் தேட வேண்டுவது இவன் கடமை என்று யான் கூறுவேன்.

*அஃறிணையுலகில் பெண்ணுரிமை*

பெண்ணுரிமைக்குக் கேடு எவ்வுலகில் விளைந்திருக்கிறது? அஃறிணையுலகிலா? ஆறறிவுடைய மக்கள் உலகிலா? வெட்கம்!

வெட்கம்! புல், செடி, கொடிகளில் ஆணினம் தம் தம் பெண்ணினத்தின் உரிமையைத் தகைந்திருக்கிறதா? ஆண் பறவை பெண் பறவையின் உரிமையைக் கெடுத்திருக்கிறதா? எவ்விலங்காதல் தனது பெண்ணினத்தின் உரிமையை உடைத்திருக்கிறதா? அஃறிணை உலகில் பெண்ணுரிமைக்குப் பழுது நிகழ்ந்ததில்லை. பாழான ஆறறிவுடைய உயர்திணை உலகிலேயே பெண்ணுரிமைக்குப் பழுது நேர்ந்திருக்கிறது.

### ஆண் கொடுமை

பழுது தொன்றுதொட்டு இடையீடின்றி நிலவி வருவதன்று; சில நூற்றாண்டுக்கு முன்னரே பெண்ணுலகில் பழுது நுழைந்தது. இதற்குக் காரணம் ஆணுலகின் தன்னலமேயாகும். வலிய ஆணின் கொடுமை, மெலிய பெண்ணின் உரிமையைப் பறிமுதல் செய்தது. வலிய ஆண்முன் மெலிய பெண் என் செய்வாள்?

### பெண்ணுரிமையுள்ள நாடு

பெண்ணுரிமை, பொதுவாக உலகில் பல இடங்களிலும், சிறப்பாகச் சில இடங்களிலும் பின்னைநாளில் கடியப்பட்டது. பெண்ணுரிமையுள்ள நாடுகள் செழுமையுற்றிருப்பதும் அவ்வுரிமை இல்லா நாடுகள் செழுமையற்றிருப்பதும் கண்கூடு. பெண், நாட்டின் தாயாகலான், அவள் அடிமைப்படும் இடம் அடிமைப்படல் இயல்பு.

### நாகரிகத்துக்கு அறிகுறி

மேல்நாட்டார், தாம் பெண்ணுரிமை கடியாமல் வாழ்தலால், தாம் நாகரிக நுட்பம் உணர்ந்தவரென்றும், கீழ்நாட்டார் பெண்ணுரிமை கடிந்திருப்பதால் அவர் நாகரிக நுட்பம் உணராதவரென்றும் கருதுகின்றனர். ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டின் பெண்மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறதென்பது எவரும் ஏற்கத்தக்க உண்மை. பெண்மக்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, இடுக்கணுமின்றிப் பிறப்புரிமை இன்பத்தை எங்கே நுகர்கிறார்களோ, அங்கேயுள்ள ஆண்மக்கள் நாகரிக நுட்பமுணர்ந்தவர்களாகிறார்கள். அந்நாடே நாகரிகம் பெற்றதாகும்.

### கீழ்நாடு

கீழ் நாட்டின் பழைய வரலாற்றை நோக்குழிப் பெண்மக்கள் அடிமை வாழ்வு நடத்தினார்களென்பது விளங்கவில்லை. கீழ்நாட்டுச் சரித்திரங்களில் இவ்வுண்மையைக் காணலாம்.

பண்டைத் தமிழ்நாட்டில் பெண்ணுரிமையும், அவ்வுரிமைக் குயிரனைய கல்வியும், பிறவுமிருந்தமையான், அந்நாளைய பெண் மக்கள் வீரத்தாய்மார்களாகவும், வேறு பல அருஞ்செயல் நிகழ்த் தும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் இருந்தார்கள். பழந்தமிழ் நாட்டுப் பெண்மக்களின் வீரச் செயல்களும் பிறவும் போற்றற் குரியன. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுகிறேன்.

நரம்பு எழுந்து தோல் வற்றிய முதியவள் ஒருத்தியின் ஒரு புதல்வன் போர்க்கோலங் தாங்கி அமர்க்களஞ் சென்றனன். 'அவன் போரிடைப் புறமுதுகிட்டுப் பட்டான்' என்று பலர் போந்து அம்முதியவள்பால் அறைந்தனர். அதுகேட்ட அன்னை, தனது முதுமையைச் சிறிதுங் கருதாது, வாள் தாங்கி, 'இவர் கூற்று மெய்யாயின், அவனுக்குப் பாலூட்டிய எனது மார்பை இவ்வாளால் அறுப்பேன்!' என்று எழுந்து, போர்க்களம் புகுந்து, மைந்தனைத் தேடி ஆண்டுக் குவிந்து கிடந்த பிணங்களை வாளால் பெயர்த்துப் பெயர்த்துப் பார்த்தனள். அங்கே தன்னொரு மகன் மருமத்திடை ஊறு தாங்கி, இறந்துபட்டிருத்தலைக் கண்டு, அத் தாய் அவனை ஈன்ற பொழுதினும் பெரிதும் உவந்தனள். இவளல்லளோ வீரத் தாய்?

மற்றுமொரு பெண்மணியின் கொழுநன் போர்க்களத்தில் மறப்போர் புரிந்து இன்னுயிர் துறந்தான். அவன் உயிர்துறந்த மறுநாள், மாற்றூர் செருப்பறை கேட்டு, அப் பெண்மகள், தன் னொரு மகனை அழைத்துத் தலைமயிர் நீவிப் போருடை புனைந்து, வேல் கைத் தந்து, 'போர்க்களம் போய்வருக!'' என்று மகிழ்ச்சி யோடு வழிகூட்டி அனுப்பினள் இவளது வீரம் கொழுநன் பிரி வையும் மறக்கச் செய்தது!

**கண்ணகி** என்னும் கற்புக் கடவுளைப் பற்றிக் கேள்வியுறாத தமிழர் அரியர். அப்பெருமாட்டியின் வீரச் செயலை விளம்பவும் வேண்டுமோ? கண்ணகியும் அவளது ஆருயிர்த் தலைவன் கோவ லனும் தாம் பிறந்த சோழநாடு நீத்துப் பாண்டிநாடு போந்து, ஆண்டு வாணிபஞ் செய்ய வேண்டிக் கண்ணகியின் காற் சிலம்பை விற்கக் கோவலன் சென்றபோது, ஆங்குக் களவுபோன பாண்டிமாதேவியின் சிலம்பே அச்சிலம்பென்று, கோவலன்மீது பழிசுமத்தி, மன்னன் ஆணைப்படி அவனைக் கொலைஞர் கொன் றனர். அக்கொலைச்செய்தி கேட்ட கண்ணகி 'என்னருமை

நாயகன்மீது பொல்லாத களவுப்பழி சுமத்தியா இவ்வரசு கொன்றது!' என்று வீரக் கிளர்ச்சியுடன் எழுந்து, பாண்டியன் வாயில் நுழைந்து, அவன் ஆணைபெற்று, அவனருகே சென்று தன் வரலாறு கூறித் தன் நாயகனைக் கொன்றது கொடுங்கோன்மை என்று வாதம் புரிந்தாள். 'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று' என்று மன்னன் எதிர்வாதம் புரிந்தான். பின்னைக் கண்ணகியின் வலியுறுத்தல்மீது, வேந்தன், கொலைக்குக் காரணமாக நின்ற கண்ணகியின் ஒரு காற்சிலம்பினை உடைத்துப் பார்த்ததும் அதனுள் மணி இருத்தல் கண்டு, அவன் 'யானோ அரசன்; யானே கள்வன்!' என்று நடுக்குற்று, அரியாசனத்தினின்றுங் கீழே சாய்ந்து மாய்ந்தான். இத்துணை அருவினை கண்ணகி என்ற பெண்வழி நிகழ்ந்தது! 'நாயகன் கொல்லப்பட்டான். நமக்கென்ன இங்கு வேலை? தந்தை தாயர்க்கு அறிவித்து வீடு சேரலாம்' என்னுங் கோழை எண்ணம் கண்ணகியின் உள்ளத்தில் உறவில்லை. 'நாயகனை அநியாயமாகக் கொன்றுதீர்த்தது பிழை' என்று வேந்தன் முன்னே வாது செய்து, உண்மை கிளத்தி, அவன் மனச்சான்றே அவனைக் கொல்லுமாறு செய்ததன்றோ கண்ணகியின் வீரம்! இத்தகைய வீரத்தாய்மார் வாழ்ந்த நாடு இத் தமிழ்நாடு. வீரத்துக்கு அடிப்படை அந்நாளில் பெண்மக்களுக்கிருந்த உரிமையேயாகும். உரிமையில்லா இடத்தில் வீர எழுச்சி ஏது?

## குறிப்புரையும் பயிற்சி விளுக்களும்

# 1. வாழ்த்து

1. கடவுள்: பழச்சுவை-பழத்தினது சுவை; ஆறும் வேற்றுமைத் தொகை. ஆர் அமிர்து-அரிய அமிர்தம்; அருமை+அமிர்து; பண்புத் தொகை. நீங்கா; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பூரணம்-முழுமை. புனித வாழ்வு-தூயவாழ்வு. கருத்து-மனம். நினைவு. தேசம்-இடம். கருவி-மெய். வாய். கண். மூக்கு. செவி என்னும் புறக் கருவிகளும். மனம். சித்தம். புத்தி. அகங்காரம் என்னும் அகக் கருவிகளும். உயிர்த்திரள்-உயிர்த்தொகுதி. விழுப் பொருள்-சிறந்த பொருள்; விழுமம்+பொருள்; உரிச் சொல் தொடர்.

2. தமிழ் மொழி: வான் ஆர்ந்த-ஆகாயம் அளாவிய. பொதியில்-பொதியமலை. மதி-சந்திரன்; சந்திரன் போன்ற தமிழ் மகள்; உவமையாகுபெயர். மூவேந்தர்-சேர சோழ பாண்டியர். திஞ்சுனை-தீம்+சுனை; இனிய சுனை. சால்-மிக்க; நிறைந்த. திருமாலின் குன்றம்-திருவேங்கடமலை. தென்குமரி-தென்முனையி லுள்ள கன்னியா குமரி. கான்-மணம். கட்புலம் கண்+புலம்; கண்ணுகிய புலம். ஆறுத-குறையாத. அறைதல்-சொல்லுதல்.

3. சுதந்திரம்: இதம்-நன்மை. இடர்-துன்பம். பதம்-பதவி. திரு-செல்வம். இன்னல்-துன்பம். மறக்கிலேன்-எதிர்மறை வினை முற்று.

# 2. அறவுரை

## 1. அறநெறிச்சாரம்

1. பல-பலநூல்கள். தற்புகழ-தன்னைப் புகழ்ந்துகொள்ள. தன்+புகழ; இரண்டாம் வேற்றுமைத் தொகை. அலர் கதிர் ஞாயிறு-பரந்த கிரணங்களை யுடைய சூரியன். அச்சு ஆணி-வண்டியின் அச்சில் கோக்கப்படும் ஆணி; இது கடையாணி என்று வழங்கப் படுகின்றது

2. எள்ளி-இகழ்ந்து. இன்னச்சொல்-கடுஞ்சொல். கொள்ளி வைத்தால் போல்-எரிகொள்ளியைக் கொண்டு சுட்டதுபோல. வேண்டா; எதிர்மறை வினைமுற்று.

3. வைகலும்-நாள்தோறும். மெல்லென்றல்-மென்மைத் தன்மை அடைதல். சால-மிகவும்: உரிச்சொல். நல்லறம்-நல்லற நூல்கள். நன்மை+அறம்; பண்புத் தொகை. அறம்-அற நூல்கள்; ஆகுபெயர். கீழ்கள்-கீழ்மக்கள்; பண்பாகுபெயர். வல்லென்னும்-வன்மையுடையதாய் இருக்கும்.

4. பெற்றூர்; வினையாலணையும் பெயர். சினம் கடிந்து-கோபத்தை நீக்கி. செவ்வியராய்-நல்ல குணமுடையவராய். கிளை-சுற்றம். உவமையாகுபெயர். பாத்து உண்டு-பிரித்துக் கொடுத்துத் தானும் உண்டு. தானம்-கொடை. வைப்பு-சேமித்து வைக்கப்பட்ட பொருள்; தொழிலாகு பெயர்.

## 2. நாலடியார்

1. வடு–குற்றம். இலா; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வைய்த்து–உலகத்தில். மன்னிய–நிலைபெற்ற. மூன்று–அறம். பொருள். இன்பம். நடுவணது–இடையில் உள்ளதாகிய. பொருள். இருதலை–இருபுறங்களிலுமுள்ள அறமும் இன்பமும். உலைப் பெய்து–கொல்லன் உலையில் இட்டு. அடுவது–காய்ச்சுவது.

2. உறக்கும் துணையது–நகத்தால் கிள்ளியெடுக்கும் அளவு சிறிய தாகிய. ஈண்டி–கிளைகளோடு நெருங்கி வளர்ந்து. இறப்ப–மிகுதியாக. பய்ந்தா அங்கு–தருவது போல; உயிரளபெடை. வான் சிறிதா–ஆகாயமும் சிறிதென்னும் படி.

3. அங்கணம்–சலதாரை; சாக்கடை. உரவு நீர்–மிக்க நீர்; கடல் நீர்; ஆற்று வெள்ளம் போன்ற மிக்க நீர். பிரிதாகி–வேறாகி. தீர்த்தம்–தூய்மையுடைய நீர். மாட்சி–சிறப்பு. குன்று–மலை. நலமாட்சி நல்லோர்–நன்மை மாட்சிமைப் பட்ட. நல்ல சிறப்புடைய நல்லோர்.

4. இம்மை–இவ்வுலக வாழ்வுக்குரிய பயன்கள்; ஆகுபெயர். பெயக்கு மால்–தரும்; ஆல்–அசை. விளக்கும்–புகழால் விளங்கச் செய்யும். தாம் உளரா–தாம் உயிரோடு இருக்கும் வரை. கேடு–கெடுதல். அழிதல்; முதனிலை திரிந்த தொழிற்பெயர். எம்மை உலகத்தும்–எத்தன்மைப்பட்ட உலகத்திலும். மம்மர்–மயக்கமாகிய (அறியாமையாகிய) நோய். காணேம்; தன்மைப் பன்மை எதிர் மறை வினைமுற்று.

# 3. காதை

## 1. குசேலோபாக்கியானம்

1. தூய்துஆ–பரிசுத்தமாக. தொக்க–திரண்ட. செய்ய–செந்நிறமான; குறிப்புப் பெயரெச்சம். நக்க–மலர்ந்த. கமலத்தோன்–பிரமன்.

2. நளி–குளிர்ச்சி. தரங்கம்–அலை. நாப்பண்–நடுவில். நாகணை–நாகம்+அணை. பாம்பாகிய படுக்கை. அளி–கருணை. அல்லாதார்க்கு–அடியரல்லாத பாவிகளுக்கு. ஈறு–அழிவு; முதனிலை திரிந்த தொழிற்பெயர். முக்குற்றம்–ஐயம். திரிபு. அறியாமை; மூன்று+குற்றம்; பண்புத் தொகை.

3. தடக்கை–பெரியகை. தட+கை; உரிச்சொல் தொடர். வாசவன்–இந்திரன். மஞ்சுஇனம்–மேகக்கூட்டம். சிலா மழை–கல்மழை. நச்சும்–விரும்பும். போகுயர்–மிக உயர்ந்த. குவடு–சிகரம். நாகம்–மலை. கோவர்த்தனமலை. வருகை–தொழிற் பெயர்.

4. உலகு–உலகில் உள்ளவர்கள்; இடவாகு பெயர். மாற்றலர்–பகைவர். கூற்று ஊர்–யமலோகம். செகுத்து–கொன்று. இகுத்த–இழிவான. அற்றுய்கொல். கொல்; இடைச் சொல். மூப்பு–தொழிற்பெயர்; மூ+பு.

5. நனி-மிகுதியாக. உரிச்சொல். ஆழி-மோதிரம். மதாணி–மார்பில் அணியும் ஆபரணம்; பதக்கம். உருவம்-ஒளி.

6. சிவிகை பல்லக்கு. முன்-முதலிய. ஊர்தி-வாகனம். குவிகை-கூப்பிய கை. ஏவலர்-வேலையாட்கள். கோலம்-அழகு. கவிகை-குடை. கையுறை-காணிக்கை. அவிகைஇல்-அவியாத. விளக்கம்-விளக்கு.

7. இத்தலைவாய்-இவ்விடத்தில். இரும்பொன்-மிக்க பொருள்; இருமை+பொன்; பண்புத் தொகை. மெத்திய-விரும்பிய. பொத்து நோய்-வருந்தும் நோயாகிய. மிடிக்கோட்பட்ட-வறுமையால் பீடிக்கப்பட்ட; கோள். முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

8. மின்செய்த-ஒளி பொருந்திய. முத்தாரம்-முத்து+ஆரம்-முத்தினால் ஆன மாலை; மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. பொன் செய்த-பொன்னால் செய்யப்பட்ட. முதாதை-முன்னோர். இன்றால்-ஆல். அசை. இன்று-குறிப்பு வினைமுற்று.

9. நோன்பு-விரதம். உழந்த-வருந்திச் செய்து மெலிந்த. வார்-(பல சாகைகள்) நீண்ட. மறைகள்-வேதங்கள். ஏர்-அழகு. கோடும்-கொள்வோம்; தன்மைப் பன்மை வினைமுற்று; கொள்+தும்.

10. ஆ ஆ-வியப்புக் குறிப்பு. உள் அகம்-மனம். உவகை-மகிழ்ச்சி. அரும்பா நின்றது-தோன்றுகிறது. ஓவாது-நீங்காமல். மெய்-உடல். புளகம்-மயிர்ச் சிலிர்ப்பு. கண்; பால்பகா அஃறிணைப் பெயர். நின்ற-பலவின் பால் வினைமுற்று.

11. போதவும்-மிகவும். மேதக சிறப்பாக. நீரான்-தன்மையன். மெய்ம் மறை-மெய்ம்மை+மறை; பண்புத் தொகை. கோது-குற்றம். மிக்கான்-மிகு+ஆன்.

12. யாக்கை-உடல். பற்று-அன்பு. இற்றைநாள்-இன்று. வாயில்-இலக்கணப் போலி. கழல்-வீரகண்டை; வீரர் காலில் அணியும் அணி.

13. விம்ம-மிக. எழில்-அழகிய. மலர்ச்சி-தொழிற்பெயர். பொன்றல்-அழிதல்; தொழிற்பெயர். மன்ற-நிச்சயமாக. அழைப்பீர்; ஏவல் பன்மை வினைமுற்று.

14. கிளர்ந்தெழும்-பொங்கியெழும். துள்ள-மேலும் மேலும் மிக. களிப்பு. வாட்டம்; தொழிற் பெயர்கள். வாடு+அம். நீத்து-கடந்து. கோட்டம்-கோணல். செய்ய-நற்குணமுடைய; நேர்மையான.

15. நிருபன்-அரசனாகிய கண்ணன். பன்னரும்-பன்ன+அரும். நன்னர்-நல்ல. நீரார்-குணமுடையோர். சிறந்தது; வினையாலணையும் பெயர். உண்டோ. ஓ. எதிர்மறைப் பொருளில் வந்த இடைச்சொல்.

16. அழைத்திடுமின்-ஏவல் பன்மை வினைமுற்று. இன்னே-இப்பொழுதே. 'போய் அழைத்திடுமின் இன்னே' என்னும் தொடர் அடுக்கி வந்திருப்பது அடுக்குத் தொடர்: விரைவுப் பொருள் குறித்து வந்தது. விரைபொருளில். விரைவுப் பொருளில்; "விரைசொல் அடுக்கே மூன்று வரம்பாகும்" (தொல் காப்பியம்) சொற்றான்-சொன்னான்.

17. அகத்து-மனத்தில். உய்ப்ப-உண்டாக. ஏதம்-குற்றம். முனிவர் ஏறு-முனிவர்களில் சிறந்தவன். எழுந்தருளுக; வியங்கோள் வினைமுற்று; வேண்டல் பொருள். அங்கை-அகம்+கை. அழகிய கையுமாம். போது-தாமரைப்பூ. பொருக்கென-விரைவாக. ஐயன்-குசேலன்.

## 2. வில்லி பாரதம்

1. செங்கோல்-செம்மை+கோல். பண்புத்தொகை. அரசாட்சிக்கு உவமையாகுபெயர். திகிரி-ஆணைச் சக்கரம். அடைவினில்-முறையே. காயம்-உடல். காயமும் உயிரும்; எண்ணும்மைகள். வளர்மதில்-வினைத்தொகை. துவரை-துவாரகை: மரூஉ.

2. வந்தமை-தொழிற்பெயர். அந்தன்-கண்ணில்லாதவன்; திருதராட்டிரன். மதலை-பிள்ளை; துரியோதனன்; உவமையாகுபெயர். அழைமின்; ஏவல் பன்மை வினைமுற்று. தபனன்-சூரியன். பந்தனை-பாசங்கள். இலாதான்-வினையாலணையும் பெயர்.

3. பொற்பு-அழகு. கோயில்-இலக்கணப் போலி. அனிகம்-சேனை. சற்பவெம்பதாகை-பாம்புக் கொடி. வேந்தன்-துரியோதனன். உற்பலம்-குவளைமலர். உற்பல வண்ணன்-குவளைமலர் போன்ற நிறமுடையவன்; கண்ணன்: உவமைத் தொகை. தவிசு-ஆசனம்.

4. விசயன்-அருச்சுனன். அண்ணல்-பெருமையடையுவன்; கிருட்டினன். வேலை-சமயம். கடிய-விரைவான. பந்தனை-பற்று. பங்கயம்-தாமரை. பாதபங்கயம்; உருவகம்.

5. நின்றவன் - (இங்கே) அருச்சுனன்; வினையாலணையும் பெயர். நேமி-சக்கரம். பாயல்-படுக்கை. மன்றல்-வாசனை. தொடையல்-பூமாலை. உரம்-மார்பு. புல்லி-தழுவி. இன்சொல்-இனிமை + சொல்; பண்புத்தொகை.

6. இயம்புதிர்-ஏவல் பன்மை வினைமுற்று. வாசமரு-மிக்க வாசனை. மரகத வண்ணன்-உவமைத் தொகை. செரு-போர். வெம் போர்-வெம்மை + போர்; பண்புத்தொகை. செய்துணை; வினைத்தொகை. பொருவிலோய்-ஒப்பில்லாதவனே.

7. உதிட்டிரன்-தருமபுத்திரன். சொற்றனம்-சொன்னோம். வில் + திறல்; விற்றிறல். திறல்-வலிமை. சகாயன்-துணைவன்.

8. முடை-நெய் வாசனை. ஒழிதி; ஏவல் ஒருமை வினைமுற்று; ஒழி + த் + இ; த்-எழுத்துப் பேறு. பன்னகத்துவசன்-பாம்புக் கொடியோன்; துரியோதனன். முகில்-மேகம் போலும் நிறமுடைய கிருட்டினன்; உவமையாகுபெயர். அடுபடை-கொல்லும் ஆயுதம்; வினைத்தொகை.

9. செருமலி ஆழி-போரில் சிறந்து விளங்கும் சக்கராயுதம். செழுஞ்சுடர்-செழுமை + சுடர்-பண்புத்தொகை; செழுமையான ஒளி வடிவமாக உள்ளவன். பொருபரி-வினைத்தொகை; போர் செய்யும் குதிரை. வெருவரும்-பார்ப்பவர் அஞ்சத்தக்க. இயக்கர் - விஞ்சையர்; தேவ இனத்தார். வரிசிலை; வினைத்தொகை. மணித்தலை-மணிமுடி அணிந்த தலை. மணி; ஆகுபெயர். துமிப்பன்; தன்மை ஒருமை வினைமுற்று.

10. அடர் சிலை-வினைத்தொகை; தாக்கும் வில். அமலன்-குற்றமற்றவன்; கிருட்டினன். பார்த்திவன்-அரசன்; துரியோதனன். புரவி-குதிரை. திண்டேர்-திண்மை + தேர்-பண்புத் தொகை. மிடை-நெருங்கிய. மிடைபடை; வினைத் தொகை. அமர்-போர். செயேன்-தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று.

11. எம்முன்-எம் தமையன். தாலகேது-பனைக் கொடியையுடைய பலராமன். மும்மை-மூன்று கால நிகழ்ச்சிகள்; ஆகுபெயர்.

12. கிருதவன்மா-கிருட்டினனால் அனுப்பப்பட்ட யாதவ சேனைக்குத் தலைவன். அக்குரோணி-நால்வகைப் படைகளைக்கொண்ட பெருந் தொகையின் ஓர் அளவு. கிளர்படை-வினைத்தொகை. மதுர வாய்மை-இனிய மொழி. மருது-மருதமரம். போழ்ந்திட்ட-முறித்துத் தள்ளின. செங்கண்-செம்மை + கண். பண்புத் தொகை. வருவன்; வா + வ் + அன். கண்டான்; காண் + ட் + ஆன். விநயம் ஒன்றும் கருதலான்-நன்மை சிறிதும் அறியாதவனான துரியோதனன்.

13. கட்டுரை-உறுதிமொழி. சங்க வண்ணன்-பலராமன்; சங்குபோலும் வெண்மை நிறமுடையவன்; உவமைத் தொகை. இளவல்-தம்பியாகிய கிருட்டினன். மாற்றம்-சொல். அரசன்-துரியோதனன். சாற்றி-சொல்லி. வருக; வியங்கோள் வினைமுற்று. வருக+என்று-வருகென்று.

## 3. பாஞ்சாலி சபதம்

1. துரியோதனன்: பாம்புக் கொடியன். சிறி-கோபித்து. தீம்பு-தீமை. திரு-செல்வம். பாண்டவர் தீமை செய்தாலும் புகழுந் தந்தை. தான் செல்வந் தேடின் இகழ்வதா?

2. தேவகுருவான வியாழன் அரசருக்குரிய நீதி வேருகவும், மற்றைய மக்கள் நீதி வேருகவும் வகுத்துள்ளான். கதைக்கிருன்-சொல்லுகிருன். சின்னமுற-சிதைந்து அழிய.

3. மந்திரம்-ஆலோசனை. செந்திரு-நல்ல செல்வம். செம்மை+திரு. செந்திரு: பண்புத் தொகை. 'தந்தையை ஒப்பவரில்லை; இது இகழ்ச்சிக் குறிப்பு. காண்: முன்னிலைசைச் சொல்.

4. அட! : இகழ்ச்சிக் குறிப்பு.

5. கருங்கல்லிடை நாருரிப்பாருண்டோ?: பிறிதுமொழிதல் என்னும் அணி. புல்லிய-இழிந்த.

6. காண்: முன்னிலையசைச் சொல். களிச் சூது-மகிழ்ச்சியைத் தரும் சூதாட்டம். வேண்டுமால்-ஆல், அசை.

# 4. சிறு நூல்கள்

## 1. சகலகலா வல்லி மாலை

1. பண்-பாட்டு; ஆகுபெயர். படைப்போன்-பிரமன். கண்கண்ட-பிரத்யட்சமான. உளதோ-ஓ; இடைச் சொல்; எதிர்மறைப் பொருள்: இல்லை என்பது பொருள்.

2. பொருட்சுவை-பொருள் இனிமை; பொருள்+சுவை. சொற்சுவை-சொல் இனிமை; சொல்+சுவை. நாற்கவி-நான்கு+கவி; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவி. பணி-தொண்டு. பங்கயாசனம்-தாமரை மலராகிய இருக்கை; பங்கய+ஆசனம்: தீர்க்க சந்தி. பசும்பொன்-பசுமை+பொன்; பண்புத் தொகை. பொற்கொடி-பொன்+கொடி வேற்றுமைத் தொகை. கனகம்-பொன். குழை-காதணி. ஐம்பால்-கூந்தல்; ஐந்து வகையாக முடிக்கப்படுவது. குழற்காடு-உருவகம்.

## 2. ஏரெழுபது

3. புரவி-குதிரை. படையாள்-காலாள் படை. மடை-வயல் வாய்மடை. வாளை-ஒருவகை மீன். பொன்னி-காவிரி. கலப்படை-கலப்பை.

4. வெங்கோபம்-வெம்மை+கோபம்; பண்புத்தொகை. கலி-வறுமை. விளைவயல்; வினைத்தொகை. பைங்கோல முடி-பசுமையான அழகிய நாற்று முடி. பைங்கோலம்-பசுமை+கோலம்; பண்புத்தொகை. பொங்கு ஓதை-மிகுகின்ற ஓசை: வினைத்தொகை. கடற்றானை-கடல்போன்ற தானை; உவமைத் தொகை. தானை-சேனை. சிறுகோல்-தாற்றுக் கோல்; சிறுமை+கோல்; பண்புத் தொகை.

### 3. கலைசைச் சிலேடை வெண்பா

1. ஞிமிறு-வண்டு. வயவர்-வீரர். தூணி-அம்புத் தூணி. காந்தாரம் பாடும், காந்து ஆர் அம்பு ஆடும். காந்தாரம்-ஒரு பண். காந்து ஆர் அம்பு-சினத்தல் பொருந்திய அம்பு. மாந்த அரும்-உண்ணுவதற்கு அரிய. கடு-விஷம். கடுக்கை-கொன்றை.

2. பாவலர்-புலவர். காவலர்-அரசர்; காஅலர்-சோலையிலுள்ள மலர். அரிவை அம்பாக-திருமாலைக் கூர்மையான அம்பாகக் கொண்டு. அரண் ஒரு மூன்று-முப்புரம். அரிவை அம் பாகத்தான். அரிவை-பார்வதி.

### 4. ஊசல்

1. உரு மாறி-வடிவம் மாறி. ஊசலாடுவது-அலைவது. கருமாயத்து-மிக்க வஞ்சனையையுடைய. மரு-மணம். துளவு-துளசி. ஆடிர் ஊசல்-ஊசல் ஆடிர். ஆடிர்-ஆடுவீராக; முன்னிலைப் பன்மை வினைமுற்று. திருமாது-இலக்குமி. புவிமாது-பூமிதேவி.

2. வெய்யோன்-சூரியன். அறியா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். விரை-வாசனை. கா-சோலை. செய்யாள்-திருமகள். திறம்-புகழ். ஆடாமோ-ஆடுவோம். மணி வண்ணன்-நீலமணி போலும் வண்ணன்: திருமால்; உவமைத் தொகை.

### 5. அம்மானை

1. வீசுபுகழ்-பரவிய புகழ். ஈசன் பசுவாகவும் எமன் கன்றாகவும் ஆரூர் வீதியில் வந்தது. மனுநீதிச் சோழன் வரலாற்றிற் காணும் செய்தி. கன்றை உதை காலி-கன்றைப் பாலூட்ட விடாமல் உதைக்கும் காலையுடையது. பசு; கன்றாக வந்த எமனை (மார்க்கண்டேயனுக்காக) உதைத்த காலையுடையவர்: சிவபெருமான்.

2. கவின்-அழகு. திகழ்பழமை: வினைத்தொகை. பைந்தமிழ்-பசுமை+தமிழ்; பண்புத் தொகை. அகம்-அகப்பொருள். புறம்-புறப்பொருள். ஆங்கிலத்தில் இல்லாத அகப்பொருள் புறப்பொருள் அமைப்புத் தமிழில் உள்ளது.

## 5. பழம் பாடல்கள்

### 1. சிலப்பதிகாரம்

1. திங்கள்-சந்திரன். கொங்கு-மகரந்தப் பொடி, தேன். தார்-மாலை. சென்னி-சோழ மன்னன். அம்கண் உலகு-அழகிய இடமகன்ற உலகம். அளித்தலான்-காத்தலால். அலர்தார்-வினைத்தொகை. வெண்குடை-வெண்மை+குடை; பண்புத்தொகை. உலகு-இடவாகுபெயர். போற்றுதும்-தன்மைப் பன்மை வினைமுற்று.

2. ஞாயிறு-சூரியன். காவிரி நாடன்-சோழமன்னன். திகிரி-ஆணைச் சக்கரம்; அதிகாரம். பொன் கோட்டு மேரு-பொன்மயமான சிகரங்களையுடைய மேருமலை. வலம் திரிதல்-வலமாக வருதல். கோடு+மேரு-கோட்டு மேரு; கோட்டை உடைய மேரு; இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

3. மாமழை-பெரிய மழை. நாமநீர்-அச்சம் தரும் கடல். நீர் கடலுக்கு ஆகுபெயர். வேலி-வேலியாக உடைய (சுற்றிலும் உடைய). அளி-கருணை. மேல்-ஆகாயம். சுரத்தல்-வளத்தைப் பெருக்குதல். நாம் என்னும் உரிச்சொல் நாம எனத் திரிந்து வந்தது.

## 2. மணிமேகலை

ஆற்றுநர்—பசியைப் பொறுத்துக் கொள்ளத் தகுந்தவர்; செல்வர். அற விலை பகர்வோர்-தருமத்தை விலைக்கு விற்போர். ஆற்ரு மாக்கள்—பசியைப் பொறுத்துக் கொள்ள மாட்டாத வறியர். களைவோர்-போக்குவோர். மெய்ந் நெறி—உண்மை நெறி; அஃதாவது அறநெறி. மேற்றே—மேலதே. மண்திணி ஞாலம்—மண் திணிந்த நிலவுலகம். ஆற்றுநர், அளிப்போர், கொடுத்தோர்; வாழ்வோர்-வினையாலணையும் பெயர்கள். ஆற்ரு-ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம். அரும்பசி-அருமை+பசி. பண்புத்தொகை. மேற்று-குறிப்பு வினைமுற்று. மெய்ந்நெறி—மெய்ம்மை+நெறி. பண்புத்தொகை. வாழ்க்கை-தொழிற்பெயர். திணி ஞாலம்—வினைத்தொகை.

## 3. நற்றிணை

1. நெடிய மொழிதல்-உயர்ந்த பட்டப் பெயர்களால் வழங்கப்பெறு தல்; கடிய ஊர்தல்-விரைவில் செல்லும் ஊர்திகளில் செல்லுதல்; செய்வினை-ஊழ்வினை; வினைத்தொகை. புன்கண்-துன்பம்; அஞ்சும்-அஞ்சி அவரை ஆதரிக்கும்; பண்பின்—பண்பட்ட தன்மையினை யுடைய; மென்கண்-மென்மை யான இயல்பு. நெடிய, கடிய-குறிப்பு வினையாலணையும் பெயர்கள்.

## 4. பதிற்றுப் பத்து

1. சினம்-கோபம்; கழிகண்ணோட்டம்—அளவிறந்து ஒருவரை உவத்தல். அச்சம்-பகைவர்க்கு அஞ்சுதல். அன்புமிக உடைமை-பொருளினிடத்து அளவுக்கு மிஞ்சிய பற்று உடையோனுதல் (உலோபக் குணம்). தெறல் கடுமை-அளவுக்கு மீறிய தண்டனை. பிற-மதம், மானம் முதலானவை. அறந் தெரிதகிரி—தருமத்தையே தெரிந்து செலுத்தும் ஆணைச் சக்கரம். தெரிதிகிரி-வினைத்தொகை. வழியடை—தடை. செங்கோல் செலுத்தும் அரசனுக்கு வேண்டப்படாத குற்றங்கள் இதனுள் கூறப்பட்டுள்ளன.

## 5. கலித்தொகை

1. பண்பு—மக்கள் தன்மை; பாடு-உலகமுறைமை; கிளை-சுற்றம்; உவமையாகு பெயர். செருஅமை-சினந்து அகற்றுமை; எதிர்மறைத் தொழிற் பெயர். பேதையார்—அறியாதவர்; நோன்றல்—பொறுத்தல்; தொழிற் பெயர். நோன்+தல். போற்ருர்—பகைவர்; வினையாலணையும் பெயர்.

## 6. புறநானூறு

1. உற்ற உழி—(துன்பம்) உண்டான இடத்து. உறுபொருள்—மிக்க பொருள்; உரிச்சொற்ருெடர். பிற்றை நிலை—பின்னின்று வணங்கும் நிலைமை. முனியாது-வெறுக்காமல். நன்று—அழகியது; நல்லது. ஓர் அன்ன-ஒரு தன்மை யராகிய. உடன் வயிற்றுள்ளும்-ஒரு வயிற்றில் பிறந்தோரிலும். சிறப்பின் பாலால்-கல்விச் சிறப்பால். திரியும்—வேறுபடுவாள். ஆறு—(சென்ற) வழி.

2. யாண்டு—கழிந்த ஆண்டுகள். யாங்கு ஆகியர்—எவ்வாறு பெற்றீர். ஆகியர்; முன்னிலை வினைமுற்று. மாண்ட—மாட்சிமைப் பட்ட; பெயரெச்சம். யான் கண்டனையர்-நான் கருதிய அதனையே கருதிச் செய்வர். அல்லவை-முறையல்லாதவை; எதிர்மறை வினையாலணையும் பெயர் செய்யான்-செய்யாமல்; முற்றெச்சம். அதன் தலை—அதற்கு மேலாக. ஆன்று-நற்குணங் களால் அமைந்து. அவிந்து-பணிந்து. அடங்கிய-ஐம்புலனும் அடங்கிய.

3. துகிர்-பவழம். பயந்த-தரப்பட்ட. காமரு-விரும்பத்தக்க. தொடை புணர்ந்து-கோவையாக அமைந்து. கலம்-ஆபரணம்.

# பயிற்சி வினாக்கள்

## பாமாலை

### 1. வாழ்த்து

1. தாயுமான அடிகள், சுப்பிரமணிய பாரதியார்—இவர்களைப் பற்றிச் சரித்திரக் குறிப்பு வரைக.
2. தாயுமானவர் இறைவனை எவ்வெவ்வாறு சிறப்பித்துள்ளார்?
3. இறைவன் உயிர்த்திரளை ஆட்டும் முறை யாது?
4. தமிழ் மொழியின் சிறப்புக்கள் யாவை?
5. தமிழ் மொழி எம்மலையின்மிசை வளர்கின்றது?
6. தமிழ் மொழி வளர்த்த மூவேந்தர் யாவர்?
7. தமிழ் நாட்டின் வட, தென் எல்லைகள் யாவை?
8. பாரதியாரின் சுதந்திரப் பற்று எவ்வாறு விளங்குகிறது?
9. 'அணிகள் வேய் பிணைத்தோடொப்பார்'—யார்?

## 2. அறவுரை

### 1. அறநெறிச் சாரம்

1. அறநெறிச் சாரம்—குறிப்பு வரைக.
2. தற்புகழ்ச்சி கூடாதென்பது எவ்வாறு வற்புறுத்தப்பட்டுள்ளது?
3. பொறுமையிற் சிறந்த தவம் இல்லை என்பது எவ்வாறு விளக்கப் பட்டுள்ளது?
4. கீழ்மக்கள் இயல்பு யாது? அவர்களுக்குக் கூறப்பட்டுள்ள உவமையை விளக்குக.
5. செல்வம் பெற்றவர் செய்யவேண்டுவன யாவை?
6. பிரித்தெழுதுக :—
   தற்புகழ், அச்சாணி, சினங்கடிந்து, பாத்துண்டு.
7. தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு எழுதுக:- **அலர்கதிர் ஞாயிறு, கைக்குடையும் காக்கும், கீழ்கட்குக் கல்லினும் வல்லென்னும் நெஞ்சு, தானம் மறவாத** தன்மை யரேல்.

### 2. நாலடியார்

1. நாலடியார்—குறிப்பு வரைக.
2. நாலடியாரில் பொருளின் சிறப்பு எவ்வாறு விளக்கப்பட் டுள்ளது?

3. அறப்பயன் தன்மை யாது? அதற்குக் கூறப்பட்டுள்ள உவமையை விளக்குக.
4. குலமாட்சி இல்லாரும் குன்றுபோல் நிற்பர்—எப்பொழுது?
5. 'ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால், பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்'—இவ்வுவமையை விளக்குக.
6. கல்வியின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
7. பிரித்து எழுதுக:—அறப்பயன், குலமாட்சி, கேடின்று.
8. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு எழுதுக:
வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், உலைப்பெய்து அடுவது, நிழற்பயன் தாஅங்கு, எம்மை உலகத்தும் யாம்காணேம்.

## 3. காதை

### 1. குசேலோபாக்கியானம்

1. குசேலோபாக்கியானம்—குறிப்பு எழுதுக.
2. இந்நூலாசிரியர் வரலாற்றை வரைக.
3. குசேலர்—பெயர்க்காரணம் கூறுக.
4. குசேலர் துவாரபாலகரிடம் தம்மை எவ்வாறு அறிமுகப் படுத்திக் கொண்டார்?
5. குசேலர் துவாரபாலகரை வேண்டிக்கொண்டது யாது?
6. அரசவையை அடைவார்க்கு வேண்டும் தகுதிகள் யாவை?
7. துவாரபாலகர் குசேலரைக் குறித்து இரங்கிக் கூறியது யாது?
8. துவாரபாலகர் உரைகேட்டுக் குசேலர் எவ்வாறு வருந்தினர்?
9. அறிவுமிக்க துவாரபாலகர் ஒருவர் குசேலர் பெருமையை எவ்வாறு எடுத்துரைத்தார்?
10. துவார பாலகர் குசேலர் வருகையைக் கண்ணனிடம் எவ்வாறு அறிவித்தனர்?
11. குசேலர் வருகை கேட்ட கண்ணன் நிலை யாது?
12. துவார பாலகர் கண்ணன் மகிழ்ச்சியைக் குசேலரிடம் எவ்வாறு தெரிவித்தனர்?
13. பின்வரும் உவமையை விளக்குக:
"தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி".
14. இடம் காட்டிப் பொருள் விளக்குக.
"பொத்துநோய் மிடிக் கோட்பட்ட நினக்கிது பொருந்தாதாகும்.'
"எண்ணு தொன்றை இயற்றுதல் என்றும் நீதே"

15. பிரித்தெழுதுக :—
பாற்கடல், முக்குற்றம், பட்டாடை, கழற்கால்.

16. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு எழுதுக.
வச்சிரத் தடக்கை வாசவன், ஏழையேன் வருகை அறிவித்து,
குவிகை ஏவலரும் வேண்டும், இன்று நம் வாயில் வந்த,
ஏதமில் முனிவர் ஏறே எழுந்தருளுக.

17. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.
இருக்கின்றான், மிக்கான், உரைத்தனன்.

## 2. வில்லி பாரதம்

1. வில்லி பாரதம்–குறிப்பு வரைக.
2. வில்லிப்புத்தூரார் வரலாற்றைப் பற்றிக் குறிப்பு வரைக.
3. துரியோதனன் துவாரகைக்கு வந்தது ஏன் ?
4. கண்ணன் வாயிலோர்க்குக் கூறியது யாது ?
5. கண்ணன் எங்ஙனம் அறிதுயில் கொண்டான் ?
6. துவாரகைக்கு வந்த துரியோதனன் யாது செய்தான் ?
7. அருச்சுனன் வந்து யாது செய்தான் ?
8. கண்ணன் துரியோதனனை எவ்வாறு வரவேற்றான் ?
9. இருவரும் கண்ணனை யாது வேண்டினர் ?
10. கண்ணன் படைத்துணை வேண்டிய துரியோதனனுக்கு யாது கூறினான் ?
11. துரியோதனன் கண்ணனை வேண்டியது யாது ?
12. 'அடுபடை யின்றிச் செய்யும் ஆண்மை யென் ?' என்ற கண்ணனுக்கு அருச்சுனன் கூறியது யாது ?
13. கண்ணன் துரியோதனனுக்குக் கூறிய உறுதிமொழி யாது ?
14. துரியோதனன் கண்ணனிடம் பெற்ற படைத்துணை யாது ?
15. 'மருது போழ்ந்திட்ட செங்கண் மாயவன்'—இதில் அடங்கிய வரலாற்றை வரைக.
16. இடம் காட்டிப் பொருள் விளக்குக.
    (i) 'அந்தண்மா மதலை வந்தால் அறிவியா தழைமின்'
    (ii) 'இருவிரும் வந்தவாறென் இயம்புதிர்'
17. பிரித்தெழுதுக :—
    செங்கோல், விற்றிறல்.

18. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு எழுதுக.

வளர்மதில் துவரை சேர்ந்தான், நின்றவன் இருந்த வேந்தன் வரவினை நிகழ்த்த, உற்பல வண்ணன் பள்ளி உணர்தருகாறும், கொண்டு நீ செல்க, இருவிரும் வந்தவாறென் இயம்புதிர்.

19. பகுபத உறுப்பிலக்கணம் வரைக.

அழைமின், கொண்டான், கண்டான்.

## 3. பாஞ்சாலி சபதம்

1. பாஞ்சாலி சபதம்—குறிப்பு வரைக.
2. இந்நூலின் ஆசிரியரைப் பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.
3. துரியோதனன் தந்தையைக் காய்ந்து கூறிய மொழிகளைப் பதினைந்து வரிகளில் தொகுத்து எழுதுக.
4. 'கல்லிடை நார் உரிப்பார் உண்டோ?'—இஃது எதனை விளக்க வந்தது?
5. துரியோதனன் இறுதியாகத் தந்தையிடம் வற்புறுத்திய செய்தி யாது?
6. பாஞ்சாலி, வியாழ முனிவன்—குறிப்பு வரைக.

## 4. சிறு நூல்கள்

1. சகல கலாவல்லி மாலை, ஏரெழுபது, கலைசைச் சிலேடை வெண்பா—குறிப்பு எழுதுக.
2. சிலேடை, ஊசல், அம்மானை—பொருள் விளக்குக.
3. குமர குருபர சுவாமிகள், கம்பர், சுப்பிரமணிய முனிவர்—வரலாற்றுக் குறிப்பு எழுதுக.
4. குமர குருபர சுவாமிகள் சகல கலாவல்லியை வேண்டுவன யாவை?
5. சகல கலாவல்லி எவ்வெவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளாள்?
6. கலப்படை எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
7. ஏரடிக்கும் சிறுகோலின் சிறப்பு யாது?
8. பொருள் விளக்குக: "மடைவாளை வரும் பொன்னி வளநாடர்", "வெங்கோபக் கலிகடந்த வேளாளர்", "விளைவயலுள், பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்".

9. சிலேடைப் பொருளை விளக்குக :—

"தேந்தா மரை ஞிமிறும் திண்வயவர் தூணிகளும்
காந்தாரம் பாடுங் கலிசை."

"ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலிசை."

11. பிள்ளைப்பெருமாளையங்கார் திருவரங்கப் பெருமானை எவ்வாறு ஊசலாட வேண்டுகிறார் ?

12. பெண்கள் ஊசலாடும் முறை எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

13. 'ஈசன் பசுவாகி ஏமனொரு கன்றாகி வீசு புகழ்ஆரூர் வீதி'வந்த வரலாறு யாது ?

14. 'கன்றை யுதைகாலி கறக்குமோ ?'—பொருள் நயத்தை விளக்குக.

15. தமிழ் மொழியின் சிறப்பியல்புகள் யாவை ?

16. தமிழ், ஆங்கிலத்திற் பொருள் மிக அளிப்பது எவ்வாறு ?

## 5. பழம் பாடல்

1. திங்களைப் போற்றவேண்டுவது ஏன் ?

2. ஞாயிறு, சோழன் திகிரிக்கு ஒப்பாவது எவ்வாறு ?

3. மழையை ஏன் போற்றவேண்டும் ?

4. அறவிலை பகர்வோர் யாவர் ?

5. உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை யார் மேலது ?

6. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவது எவ்வாறு ?

7. செய்வினைப் பயனாவன யாவை ?

8. சான்றோர், செல்வம் என்பது எதனை ?

9. அறத்தை அழிப்பன யாவை ?

10. பண்பு, அன்பு, அறிவு, பொறை—இவற்றின் இயல்புகளைக் கூறுக.

11. கல்வியைக் கற்கும் முறை யாது ?

12. கல்வியின் சிறப்பு எவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது ?

13. பிசிராந்தையார் தமக்கு நரை தோன்றாமைக்குக் கூறும் காரணங்கள் யாவை ?

14. சான்றோர் சான்றோர் பால ராவதற்குக் கூறப்பட்டுள்ள உவமையை விளக்குக.

# தமிழ் உரைநடை

## பயிற்சி வினக்கள்

### 1. தமிழ்மொழி

1. தமிழைத் தென்மொழி என்றது ஏன் ?
2. ஆதியில் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பணிபுரிந்தோர் யாவர் ?
3. பாண்டியர் தமிழை எவ்வாறு வளர்த்தனர் ?
4. சங்க நூல்கள் என்பன யாவை ?
5. கடைச் சங்க காலத்திற்குப் பிறகு தமிழ் எவ்வாறு வளர்ந்தது ?
6. பிற்காலத்தில் தமிழ் வளர்ந்த வரலாற்றை எழுதுக.

### 2. ஆதிரை பிச்சையிட்டது

1. சாதுவன் யார் ? அவன் நாகா மலைப்பக்கம் அடைந்த வரலாறு யாது ?
2. தன் கணவன் இறந்தான் என்பது கேட்ட ஆதிரை யாது செய்தாள் ?
3. ஆதிரை கேட்க அசரீரி அறிவித்த செய்தி யாது ?
4. சாதுவன் நாகர் குருமகனை எவ்வாறு அடைந்தான் ?
5. கள்ளும் ஊனும் மறுத்ததற்குச் சாதுவன் கூறிய காரணம் யாது ?
6. உயிர் உடம்பைவிட்டு வேறிடம் புகும் என்பதைச் சாதுவன் குருமகனுக்கு எவ்வாறு விளக்கினன் ?
7. சாதுவன் குருமகனுக்குக் கூறிய அறவழி யாது ?
8. குருமகன் சாதுவனுக்கு எவ்வாறு சிறப்புச் செய்தான் ?

### 3. தமிழர் நாகரிகம்

1. கோயில்களால் பெறும் பயன்கள் யாவை ?
2. தமிழரின் தனியியல்பை விளக்குக.
3. கோவிலை யொட்டியே தமிழர் வாழ்வு அமைந்திருப்பது எவ்வாறு ?
4. தமிழர் நாகரிகத்தைக் காப்பது எவ்வாறு ?
5. தமிழர் நாகரிக விளக்கங்கள் யாவை ?
6. தமிழ்நாடு சமரசத் தன்மையைப் போற்றிய வகையை விளக்குக.

7. தமிழர் வீரவாழ்விற்கு அறிகுறிகள் யாவை?
8. தமிழரின் வீரப் பெருமைக்கும் ஆட்சித் திறனுக்கும் அத்தாட்சிகளாக விளங்குவன யாவை?

## 4. இயற்கையோடு இயைந்த வாழ்வு

1. விமானம் தோன்றிய வரலாற்றைச் சுருக்கி வரைக.
2. இயற்கையை மனிதன் எவ்வாறு பயன் படுத்தி யுள்ளான்?
3. வானக்கப்பலின் அமைப்பை விளக்குக.
4. இயற்கைப் பொருளின் மூன்று நிலைகள் யாவை?
5. பொருள்களின் இலக்கணத்தை அறிய விரும்புவோர் எவற்றை அறிதல் வேண்டும்?
6. 'குதிரை ஓட்டம்' என்பது பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
7. நீர்ப்பயணத்தையும் நிலப்பயணத்தையும் ஒப்பிடுக.
8. வானத்தில் செல்லும் பயணத்தை ஏன் மக்கள் சிறந்ததாகக் கருதுகிறார்கள்?

## 5. தமிழ் நாட்டுத் தலைநகரங்கள்

1. முற்காலத் தமிழகத்தின் நிலையை அறியப் பயன்படும் நூல்கள் எவை?
2. காவிரிபுகும் பட்டினம்—வளம் என்ன?
3. ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் எவை?
4. பொழுதுபோக்கு எவ்வாறு நடந்தது?
5. காவிரிபுகும் பட்டினத்தில் இருந்த தொழிலாளர்கள் யாவர்?
6. இரவுக்காலம் அங்கு எவ்வாறிருக்கும்?
7. மதுரை நகரத் தொழிலாளர் யாவர்?
8. சேரன் பேரூர் அமைப்பு எத்தகையது.

## 6. பசிக்குப் பகைவன்

1. சோலையில் இருந்த பாணன் நிலையைக் கூறுக.
2. பாண் சாதியார் இயல்பு யாது?
3. 'பாண் பசிப் பகைஞன்'—யார்? அவனைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
4. ஈந்தூர் கிழான் இயல்புகளை விளக்கி யெழுதுக.
5. கிழான் கொல்லனை யாது இரப்பான்? ஏன்?
6. கிழான் கொல்லனை வேண்டாது இரப்பது ஏன்?

## 7. தமிழ் இசை

1. இசைக்குள்ள தனிச் சிறப்பு யாது?
2. இசை வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுகின்றது?
3. தமிழ் மக்கள் வாழ்க்கையில் இசை ஒன்றியிருந்ததை விளக்குக.
4. தமிழிசையின் அவசியத்தை விளக்குக.
5. தமிழ் மக்கள் கலைகள் அனைத்தையும் கடவுள் தொண்டுக்கே பயன்படுத்தியது எவ்வாறு?
6. சமயத் துறையில் இசை போற்றப்பட்டதை விளக்குக.
7. தமிழிசை இயக்கம் வலுப்படச் செய்யவேண்டுவன யாவை?
8. தமிழிசை இயக்கத்தைக் கண்டவர் யார்?

## 8. பண்டை உரை நடை

### 1

1. இப்பகுதியை நும் சொற்களில் அமைத்து எழுதுக.
2. மறையாட்டி செய்த பாவச்செயல் யாது?
3. மறையவன் கங்கையாடச் சென்றது ஏன்?
4. பின்சென்ற மனைவியை நோக்கி மறையவன் சொன்னது யாது
5. கணவனைப் பிரிந்த மறையாட்டி யாது செய்தாள்?
6. கோவலன் மறையாட்டிக்கு எவ்வாறு அருள் புரிந்தான்?

### 2

1. இப்பகுதியை நும் சொற்களில் அமைத்து எழுதுக.
2. பாயிரம் கேட்டலின் பயனை விளக்குக.
3. பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம்—விளக்கி வரைக.

### 3

1. இப்பகுதியை நும் சொற்களில் அமைத்து எழுதுக.
2. வான் சிறப்பு, இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், அன்புடைமை, இனியவை கூறல், நடுவு நிலைமை—இவை பரிமேலழகரால் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன?
3. நடுவு நிலைமை செய்ந்நன்றி யறிதலின் பின் வைக்கப்பட்டது ஏன்?

## 9. பெண்ணுரிமை

1. பெண்ணுலகில் பழுது நுழைந்தது எவ்வாறு ?
2. மேல் நாட்டார் கீழ்நாட்டாரைப் பற்றி யாது கருதுகின்றனர் ?
3. எது நாகரிகம் பெற்ற நாடாகும் ?
4. கீழ்நாட்டுச் சரித்திரங்களில் எவ் வுண்மையைக் காணலாம் ?
5. பழந் தமிழ்நாட்டுப் பெண் மக்களின் வீரச் செயல்களை இரு உதாரணங்களால் விளக்குக.
6. கண்ணகியின் வீரத்தைப் பத்து வரிகளில் விளக்கி வரைக.

அருணா வெளியீடு : கூ

# அருணா தமிழ்மாலை

\- நான்காம் படிவம்

தொகுப்பாசிரியர் :
வித்துவான் ம. வி. இராகவன்
இராமகிருஷ்ணமிஷன் உயர்நிலைப் பள்ளி
தியாகராயநகரம்

அருணா பப்ளிகேஷன்ஸ்
தியாகராயநகரம் :: சென்னை-17

முதற்பதிப்பு : நவம்பர், 1954.

நன்றியுரை —

இத் தமிழ் மாலையின்கண் மணம்வீசும் தமிழ் மலர்களை அருளிய ஆசிரியர்கள், உரிமையாளர்கள் அனைவருக்கும் எம் உளமார்ந்த நன்றி உரியது.

— - தொகுப்பாசிரியர்.

அச்சிட்டோர்: நவபாரத் பிரஸ், சென்னை-1.

# பதிப்புரை

'அருணு தமிழ் மாலை' தமிழ்ச் சோலையிலே நறு மணங் கமழும் பல நன்மலர்களின் தொகுப்பு ஆகும். உயர்நிலைப் பள்ளி நான்காம்படிவ மாணவர்க்கு அரசியலார் வகுத்துள்ள பாட இயலைத் தழுவியது. மொழிப்பயிற்சி, பொருளுணர்ச்சி ஆகிய இருவகை களிலும் மாணவர்கட்கு இன்றியமையாது வேண்டப் படுவன யாவும் இதன்கண் இடம் பெற்றுள்ளன.

புதுமுறைப்படி தாய்மொழிப் பயிற்சி பொது, சிறப்பு என இருவேறு பகுதிகளாக அமையவேண்டும் என்பதையொட்டி இத் தொகுப்பும் பொதுப் பகுதி, சிறப்புப் பகுதி என இரு தனிப்பகுதிகளாக வெளி வருகின்றன.

பாடவியலின் குறிப்புக்கும், வகுப்பின் தரத்திற் கும், மாணவரின் மனப் பண்பிற்கும், இயல்பூக்கங் கட்கும் ஏற்ப விளங்கவேண்டும் இத் தமிழ்மாலை எனப் பெருமுயற்சி செய்யப்பட்டிருக்கின்றது. குறிப்புரை, இலக்கண விளக்கங்கள், பயிற்சி வினக்கள் முதலியன வும் இதன்கண் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர்களும் அதிகாரிகளும் இம்முயற்சியினை அன்புடன் ஏற்று ஆதரவளித்து எம்மை மேன்மேலும் ஊக்குவார்கள் என நம்புகின்றோம்.

இம் முயற்சியில் எமக்குப் பல்லாற்றாலும் உதவிய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் எமது நன்றி.

தொகுப்பாசிரியர்.

# பொருளடக்கம்

## பொதுப்பகுதி - பாமாலை


1. வாழ்த்து

1. கடவுள்—இராமலிங்க அடிகள் ... 1
2. தமிழகம்—திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ... ,,
3. பாரதநாடு— ,, ... 2
4. காந்தியடிகள்—பண்டிதை அசலாம்பிகையார் ... ,,

2. அறவுரை

1. நீதிநெறி விளக்கம்—குமரகுருபர சுவாமிகள் ... 3
2. சிறுபஞ்ச மூலம்—காரியாசான் ... 4
3. திருக்குறள்—திருவள்ளுவர் ... 5

3. காதை

1. ஆசிய ஜோதி—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ... 7
2. நளவெண்பா—புகழேந்தியார் ... 10
3. இரட்சணிய யாத்திரிகம்—எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை 13
4. மானவிஜயம்—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் 16

4. துதிப் பாடல்கள்

1. தேவாரம்—அப்பர் சுவாமிகள் ... 19
2. பெருமாள் திருமொழி—குலசேகரப்பெருமாள் ... ,,
3. திருப்பாவை—ஆண்டாள் ... ,,
4. திருப்புகழ்—அருணகிரிநாதர் ... 20
5. அன்னையழுங்கல் அந்தாதி—வீரமாமுனிவர் ... ,,

5. சிறு நூல்கள்

1. நால்வர் நான்மணிமாலை—சிவப்பிரகாச சுவாமிகள் ... 21
2. அழகர் அந்தாதி—பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ... 22

6. தனிப் பாடல்கள்


| | | |
|---|---|---|
| சிலேடை—காளமேகப் புலவர் | ... | 24 |
| சொற் சுவை ,, | ... | ,, |
| வினுவிடை—இராமச்சந்திர கவிராயர் | ... | ,, |
| யானைப் பரிசு—அந்தகக் கவி வீரராகவர் | ... | 25 |
| வறுமையும் செல்வமும்—சொக்கநாதப் புலவர் | ... | ,, |
| சீட்டுக்கவி—சரவணப் பெருமாள் கவிராயர் | ... | 26 |
| உழவின் உயர்வு—கம்பர் | ... | ,, |


7. வருணனை


| | | |
|---|---|---|
| நாடு—புகழேந்திப் புலவர் | ... | 27 |
| நகரம்—முத்தொள்ளாயிரம் | ... | ,, |
| மலை—திரிகூட ராசப்பக் கவிராயர் | ... | ,, |
| ஆறு—இளங்கோவடிகள் | ... | 28 |
| சோலை—கம்பர் | ... | ,, |
| செவ்வானம்—சுப்பிரமணிய பாரதியார் | ... | ,, |
| நிலவு—வில்லிப்புத்தூரார் | ... | 29 |
| ஞாயிறு—பாரதிதாசனர் | ... | ,, |
| வீரத்திருவுரு (வ. உ. சி.)—நாமக்கல் கவிஞர் | ... | ,, |


8. புதுமைப் பாடல்கள்


| | | |
|---|---|---|
| பெண்விடுதலை—சுப்பிரமணிய பாரதியார் | ... | 30 |
| திறமான புலமை— ,, | ... | ,, |
| கவிமணியின் ஆசை—தேசிகவிநாயகம் பிள்ளை | ... | 31 |
| கவிஞரின் கட்டளை—நாமக்கல் கவிஞர் | ... | ,, |
| கவிஞரின் அழைப்பு—பாரதிதாசனர் | ... | ,, |
| சமரசம்—திரு. வி. கலியாணசுந்தரனர் | ... | 32 |
| அருட்பணி—சுத்தானந்த பாரதியார் | ... | ,, |


## பொதுப்பகுதி - உரைநடை


| | | |
|---|---|---|
| 1. நீயும் உனது நாடும்—தெ. பொ. மீனுட்சிசுந்தரனர் | ... | 33 |
| 2. தமிழ்நாடு—ரா. பி. சேதுப்பிள்ளை | ... | 38 |
| 3. வாழ்க்கைப் போராட்டம்—பண்டித ஜவஹர்லால் நேரு | ... | 43 |
| 4. அருள் ஞானத் தந்தை—ரோமெய்ன் ரோலந்து | ... | 46 |
| 5. என் ஆசிரியர்—டாக்டர் உ. வே. சாமிநாதையர் | ... | 49 |

6. வாழ்க்கைக்கு வழிகாட்டி— ... 55
டாக்டர் சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார்
7. அன்னைக்கு—டாக்டர் மு. வரதராசனர் ... 58
8. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ... 62
வித்துவான் எஸ். ஆறுமுகமுதலியார்
9. வார்ப்பிரும்பு—மு. அருணசலம் ... 65
10. கலையும் தொழிலும் ... 69
வித்துவான் கி. வா. ஜகந்நாதன்.
11. ஜப்பான் செலவு—எஸ். இராமசாமி நாயுடு ... 71
12. தமிழர் கலைகள்—ரா. கிருஷ்ணமூர்த்தி ... 75
13. பஞ்சாயத்து ஆட்சி— ... 79
எம். எம். கிருஷ்ணசாமிப்பிள்ளை.
14. பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள்— ... 84
சோம. லெ. இலக்குமணச் செட்டியார்
15. ஔவையார் தூது—சிவ. குப்புசாமிப் பிள்ளை ... 88
குறிப்புரையும் பயிற்சி வினாக்களும் ... 93


★

## பொதுப் பகுதி - பாமாலை

# 1. வாழ்த்து

## 1. கடவுள்

[கடவுள் வாழ்த்து–கடவுளை வாழ்த்தும் வாழ்த்து. இழே தரப்பட்டுள்ள பாடல் கடவுளை, அவருடைய தன்மைகளையே கூறி வாழ்த்துவதாக அமைந் துள்ளது. இப்பாடலைப் பாடியவர் **இராமலிங்க அடிகள்**; சோழ நாட்டில் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூரில் தோன்றியவர்: கருணீகர் குலம்: சமயம்: சைவம்; தந்தையார்; இராமையாப் பிள்ளை; தாயார்; சின்னம்மை யார்; காலம்; 19–ஆம் நூற்றுண்டு: வடலூரில் தருமசாலையும் ஞானசபையும் அமைத்துத் தமிழ்ப் பாக்கள் பாடிச் சமரச சன்மார்க்கத்தைப் போதித்து வந்தவர். இவர் பாடிய பாடல்கள் **திருவருட்பா** என்னும் பெயரால் தொகுக்கப் பெற்றுள்ளன.]

மருந்தானை, மணியானை, வழுத்தா நின்ற
 மந்திரங்கள் ஆனானை, வான நாட்டு
விருந்தானை. உறவானை, நண்பி னானை,
 மேலானை, கீழானை, மேல்கீழ் என்னப்
பொருந்தானை, என்னுயிரிற் பொருந்தி னானை,
 பொன்னானை, பொருளானை, பொதுவாய் எங்கும்
இருந்தானை, இருப்பானை, இருக்கின் றானை,
 எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 1

## 2. தமிழகம்

[இப்பாடலைப் பாடினவர் தமிழ்ப் பெரியார் **திரு. வி. கலியாணசுந்தர முதலியார்**, இவர் தமிழ்ப் புலமை சான்ற பெரியார்; இராயப்பேட்டையில் இருந்த வெஸ்லி கல்லூரியில் சிறிதுகாலம் தமிழாசிரியராக இருந்தவர்: பின்னர் பொதுப் பணியில் ஈடுபட்டுக் காந்திய இயக்கத்திற் சேர்ந்து தேச விடுதலைக்கும் தொழிலாளர் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டவர்: பல செய்யுள் நூல்களும் உரை நடை நூல்களும் இயற்றியும், தமிழில் சீரிய முறையில் செய்தித் தாள்களைத் தொடங்கி நடத்தியும் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்துள் ளவர். பல்லாண்டுகளாகச் சென்னை, இராயப்பேட்டையில் வாழ்ந்து அண்மையில் அமரநிலை எய்தியவர். இப்பாடல் அவரது 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

வேங்கடமே தென்குமரி வேலையெல்லை நாடு ;
மென்மைகன்னி இனிமைகனி மேன்மைமொழி நாடு;
தேங்கமழும் பொதிகைமலை தென்றலுமிழ் நாடு ;
திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு ;
பாங்குபெறு பாலி பெண்ணை பாவைபொன்னி நாடு ;
பாவளர்ந்த வையையோடு பழம்பொருநை நாடு ;
தேங்குசுனை பளிங்கருவி தெளிசாரல் நாடு ;
சிற்றேடை கால் பரந்த செய்யதமிழ் நாடே, 2

## 3. பாரத நாடு

[இதுவும் திரு. வி. க. அவர்களால் பாடப்பட்டதாகும். 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்' என்ற நூலின் மற்றொரு பாடல்.]

மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியு நாடு ;
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு ;
உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு ;
ஒண்தொழிலும் வாணிபமும் ஓங்கியசீர் நாடு ;
கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு ;
கடவுளருட் கோவில்களே காட்சியளி நாடு ;
பலசமய உண்மையெலாம் பரந்தொளிரு நாடு ;
பழமைமிகு புகழ்பெருகு பாரதநன் னாடே. 3

## 4. காந்தியடிகள்

[இப்பாடல் பண்டிதை அசலாம்பிகை அம்மையார் எழுதிய காந்தி புராணத்திலிருந்து எடுக்கப்பட்டது. இவ்வம்மையார் நம் பாரத நாட்டிற்கு உரிமை தேடித்தந்து புது வாழ்வு அளித்த தந்தை காந்தியடிகளின்பால் பேரன்பு உடையவர். காந்தியடிகளின் வாழ்வையும் தொண்டையும் குறித்து ஆயிரக் கணக்கான இனிய செந்தமிழ்க் கவி மலர்கள் தொடுத்துத் தமிழ் வளம் பெருக்கியவர்.]

அருணனெடும் ஒளிக்கதிர்கள் சென்றுலவும்
அவனியிலும் அதற்கப் பாலும்
மருள்நெறிசேர் சுயநலமா மாயவிரு
ளிரிந்தோட மதிக்க வொண்ணுக்
கருணையெனும் அளிக்கதிர்கள் தமைவீசி
யிலகுமருட் காந்தி யேந்தல்
வருணமலர்த் திருவடிகள் மாநிலத்திற்
பல்லாண்டு மருவி வாழ்க ! 4

# உ. அறவுரை

## 1. நீதிநெறி விளக்கம்

[நீதியாகிய நெறியினை விளக்கிக் கூறும் பாட்டுக்களால் ஆகியிருப்பதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் **குமரகுருபர சுவாமிகள்.** இவர் தென் பாண்டி நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில், சைவ வேளாள மரபில் தோன்றியவர். இவர் தந்தையார் சண்முக சிகாமணிக் கவிராயர்; காலம் 17-ஆம் நூற்றுண்டு. இவர் இளமையிலேயே துறவறம் பூண்டு வாழ்ந்தவர். அக்காலத்தில் மதுரையில் இருந்து ஆட்சி புரிந்து வந்த திருமலை நாயக்கர் என்னும் நாயக்க மன்னரின் விருப்பத்திற்கு இணங்கி, இவர் இந்நூலை இயற்றினர் என்றும், நாயக்க மன்னர் இருபதினுயிரம் பொன் வருவாயுடைய அரியநாயகிபுரத்தை இவருக்குப் பரிசாக அளித்தார் என்றும் கூறுவர். செந்தமிழ்த் தெய்வமாகிய செந்தில் முருகனின் திருவருள் பெற்று, அப்பெருமானைப் பாடிப் பரவிய பெரியார் இவர்.]

### பெரியோர் பணிவு

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப ;—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு. 1

### பெருமைபெறும் வழி

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு ;—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். 2

### செல்வமும் தாழ்மையும்

கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும் ;—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். 3

### ஆள் வினை

காலம் அறிந்தாங் கிடனறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து—மேலும்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும். 4

## 2. சிறுபஞ்சமூலம்

[இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களாவன : நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்ச மூலம், இன்னிலை (கைந்நிலை எனவும் கூறுவர்), முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பன. கண்டங் கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர் என்னும் ஐந்து வேர்களாலாகிய 'சிறுபஞ்ச மூலம்' என்னும் மருந்து மக்கள் உடல் நோயைப் போக்கி நலத்தைப் பெருக்குவது போல, ஐந்து ஐந்து நீதிகளைக் கூறும் வெண்பாக்களாலாகிய இந்நூல் மக்கள் அறியாமையாகிய மனநோயைப் போக்கி அறிவை விளக்குவதால் இப்பெயர் பெற்றது. சிறுபஞ்ச மூலம் என்னும் தொடர் சிறுமை—பஞ்சம்—மூலம் எனப் பிரிக்கப்படும். பஞ்சம்—ஐந்து. மூலம்—வேர். இந்நூலை இயற்றியவர் **காரியாசான்** என்னும் புலவர்.]

### வாழும் முறை

தான்பிறந்த இல்நினைந்து, தன்னைக் கடைப்பிடித்து,
தான்பிற ரால்கருதற் பாடுணர்ந்து;—தான்பிறரால்
சாவ எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்
வாழ்க எனவாழ்தல் நன்று. 1

### பெருமையும் சிறுமையும் நன்றும்

பிழைத்தல் பொறுத்தல் பெருமை; சிறுமை
இழைத்ததீங் கெண்ணி இருத்தல்;—இழைத்த
பகைகெட வாழ்வதும், பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 2

### அறச் செயல்கள்

குளம்தொட்டு, கோடு பதித்து, வழிசித்து,
உளம்தொட்டு உழுவய லாக்கி,—வளம்தொட்டுப்
பாகு படுங்கிணற்றோ(டு) என்றிவ்வைம் பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கத் தினிது. 3

### நகைத்தற்கு உரியவை

நாணிலான் சால்பும், நடையிலான் நல்நோன்பும்,
ஊணிலான் செய்யும் உதாரதையும்,—ஏணிலான்
சேவகமும், செந்தமிழ் தேறான் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை. 4

## 3. திருக்குறள்

[திருக்குறள் என்பதற்கு அழகிய குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் என்பது பொருள். குறள் வெண்பாக்களால் ஆகியிருப்பதால் இந்நூல் 'குறள்' எனப் பெயர் பெற்றது. 'திரு' என்பது அடைமொழி. இஃது ஒரு நீதி நூல்: பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று: வாழ்க்கைப் பயன்களாகிய அறம், பொருள், இன்பம் மூன்றையும் விளக்கிக்கூறுவது: அறத்துப்பால், பொருட் பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுதிகளை யுடையது: 133 அதிகாரங்கள் கொண்டது: 1330 குறட்பாக்கள் அடங்கியது. இஃது உலக மொழிகளிலுள்ள தலைசிறந்த நூல்களுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது: இதுவரை பதினெட்டு மொழி களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சாதி, சமயம், மொழி, நாடு என்னும் வேறுபாடின்றி மக்களினம் முழுவதும், எக்காலத்திலும் ஏற்றுப் பயன் பெறுதற் குரிய பொதுவான உண்மைகளை வெளியிடுவதால் இது 'பொது மறை' என்றும் போற்றப்படுகிறது.

இதனை இயற்றிய ஆசிரியர் திருவள்ளுவர். இவர் சென்னையைச் சார்ந்த மயிலாப்பூரில் பிறந்து வளர்ந்தவர் என்றும், மதுரையில் வாழ்ந்தவர் என்றும் கூறுவர். இவர் சாதி சமயங்களைக் கடந்த அருளாளராக வாழ்ந்த பெரியார். வள்ளுவர் என்பது இவருக்குத் தொழில் பற்றி வந்த பெயர் என்றும், வள்ளுவர் அரசர்க்குரிய கருமத் தலைவர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இவர் வரலாற் றைப் பற்றித் தமிழ் நாட்டில் பல கதைகள் வழங்கி வருகின்றன. இவர் காலம் கடைச்சங்க காலம்; அஃதாவது 2000 ஆண்டுகட்கு முன்னதாகும்.]

### கடவுள் வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

### வான் சிறப்பு

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று. 2

### நீத்தார் பெருமை

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 3

### அறன் வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசில னாதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற. 4

### அன்புடைமை

அன்பிலா ரெல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 5

### இனியவை கூறல்

இனிய வுளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 6

### செய்ந்நன்றியறிதல்

நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 7

### நடுவு நிலைமை

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்ருேர்க்(கு) அணி. 8

### அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 9

### ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 10

### பொறையுடைமை

ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 11

### வெஃகாமை

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 12

### புறங்கூருமை

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும். 13

### பயனில சொல்லாமை

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல் ;
மக்கட் பதடி யெனல். 14

### தீவினையச்சம்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 15

# 3. காதை

## 1. ஆசிய ஜோதி

### புத்தரும் இடைச்சிறுவனும்

[ஆசிய நாடுகளில் ஒன்ருன இந்தியாவில் தோன்றி உலகம் முழுவதும் ஒளி பரப்பிய புத்தர் பெருமான் வரலாற்றைக் கூறும் பகுதிகள் சிலவற்றைக் கூறுவது 'ஆசிய ஜோதி' என்னும் நூலாகும். இது. **எட்வின் அர்னல்ட்** என்னும் ஆங்கிலேயர் எழுதியுள்ள 'ஆசிய ஜோதி' (Light of Asia) என்னும் கவிதை நூலைத் தழுவி இயற்றப்பட்டது. இதனை இயற்றியவர் **கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.** இவர் திருவாங்கூர் நாட்டைச் சேர்ந்த தேரூர் என்னும் ஊரினர்; 1876–ஆம் ஆண்டில் பிறந்தவர்; தந்தையார்: சிவதாணுப் பிள்ளை; தாயார்: ஆதிலட்சுமி அம்மாள். இவர் பல கவிதை நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அருளித் தமிழ் வளம் பெருக்கிக் கவிமணியாகத் திகழ்ந்தவர்; அண்மையில் அமரநிலை எய்தியவர்.

அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழி நடந்த களைப்பால் காட்டு வழியில் சோர்வுற்று மயங்கிக் கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச் சிறுவன், தன் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினபோது, பிறப்பினுல் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இதன்கண் கூறப்படுகிறது.]

*ஆயர் சிறுவன் புத்தரைக் காணல்*

ஆடுகள் மேய்த்துவரும்—ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்
வாடிக் கிடந்தவனைச்—செல்லும்
வழியின் மீதுகண்டான். 1

*தழைகளை அருகில் நடுதல்*

வையகம் வாழ்ந்திடவே—பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெய்யிலில் வெந்திடாமல்—தழைகள்
வெட்டி அருகில்நட்டான். 2

*சிறுவன் தயங்கி நிற்றல்*

" தெய்வ குலத்திவனை—எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யா"தெனவே—சிறிது
சிந்தை தயங்கிநின்ருன். 3

### புத்தர் வாயில் பால் கறத்தல்

உள்ளந் தெளிந்துடனே—வெள்ளா(டு)
ஒன்றை அழைத்துவந்து
வள்ளல் மயக்கொழிய—மடுவை
வாயில் கறந்துவிட்டான். 4

### நட்ட தழைகளின் காட்சி

நட்ட தழைகளெல்லாம்—வளர்ந்து
நாற்புற மும்கவிந்து
கட்டிய மாளிகைபோல்—வனத்தில்
காட்சி யளித்ததம்மா! 5

பூவோடு காய்கனியும்—தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே
மேவு பலமணிகள்—இழைத்த
விதானமும் ஆனதம்மா! 6

### சிறுவன் புத்தரைத் தொழுது நிற்றல்

ஐயனை இவ்வுலகம்—காணற்
கரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுதுநின்றான்—சிறுவன்
களங்கமில் லாவுளத்தான். 7

### புத்தர் மயக்கம் தெளிந்து பால் வேண்டுதல்

நிலத்திற் கிடந்தஐயன்—மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
" கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தருவாய் " என்றான். 8

### கலத்திலே பால் தரலாகாதெனல்

" ஐயையோ! ஆகா "தென்றான்—சிறுவன்
" ஐயனே நானுமுனைக்
கையினால் தீண்டவொண்ணா—இடையனோர்
காட்டு மனிதன் " என்றான். 9

### புத்தர் மறுமொழி

உலகம் புகழ்பெரியோன்—இந்த
வுரையினைக் கேட்டந்நாள்
அலகில் கருணையினால்—சொன்ன
அமுத மொழியிதுவாம்: 10

"ஓடும் உதிரத்தில், — வடிந்து
ஒழுகும் கண்ணீரில்,
தேடிப் பார்த்தாலும் — சாதி
தெரிவ துண்டோ அப்பா? 11

"இடர்வ ரும்போதும், — உள்ளம்
இரங்கி டும்போதும்,
உடன்பி றந்தவர்போல் — மாந்தர்
உறவு கொள்வரப்பா. 12

"பிறப்பி னுல்எவர்க்கும் — உலகில்
பெருமை வாராதப்பா;
சிறப்பு வேண்டுமெனில் — நல்ல
செய்கை வேண்டுமப்பா. 13

"நன்மை செய்பவரே — உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே — அண்டித்
தீண்ட வொண்ணுதார்." 14

**புத்தர் மீண்டும் பால்தர வேண்டுதல்**

நிலத்து யர்ஞானி — இவை
நிகழ்த்தி "என்தம்பீ!
கலத்தி லேகொஞ்சம் — பாலைக்
கறந்து தா "என்ருன். 15

**புத்தர் தளர்ச்சி நீங்கல்**

ஆயர் சிறுவனும் — கலத்தில்
அளித்த பாலையுண்டு
தாயி னும்இனியன் — கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 16

## 2. நள வெண்பா

[இது நிடத நாட்டு அரசனுகிய நளனது சரித்திரத்தைக் கூறும் வெண்பாக்களாலானதொரு காவிய நூல்; இயற்றிய ஆசிரியர் **புகழேந்தியார்.** இவர் தொண்டை நாட்டில், செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள **பொன் விளைந்த களத்தூரில்** பிறந்தவர்; வேளாள மரபினர்; திருமால் பக்தர்; சற்றேறக் குறைய எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர்; வெண்பாப் பாடுவதில் வல்லவர். சோழ நாட்டில் உள்ள முரணை என்னும் ஊரிலிருந்து ஆட்சி புரிந்து வந்த சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசன் இவரை ஆதரித்து வந்தான். அவன் வேண்டுகோளுக்கு இணங்கியே இவர் இந் நள வெண்பாவை இயற்றினுர் என்பர்.

இந்நூல் சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று பிரிவுகளாக உள்ளது. பாடப் பகுதி இடையதாகிய கலிதொடர் காண்டத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. விதர்ப்ப நாட்டு மன்னன் மகளாகிய தமயந்தி, **சுயம்வரத்**தின்போது தேவர்களையும் பிற மன்னர்களையும் விலக்கி, தான் காதலித்த நிடத நாட்டு மன்னனுகிய நளனுக்கு மாலை சூட்டினுள். அதனைப் பொருத கலிபுருடன் நளனைப் பற்றித் துன்புறுத்திய செய்தி இப்பகுதியில் கூறப்படுகிறது.]

### தேவர்கள் கலிபுருடனைக் காணல்

வேலை பெருஅமுதம் வீமன் திருமடந்தை
மாலை பெறுதகலும் வானுடர்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியில் ஆக்கும்
இருங்கலியைக் கண்டார் எதிர். 1

### அவன் தமயந்தியை மணக்கப் போகின்றேன் எனல்

'ஈங்குவர வென் ?' என் றிமையவர்தம் கோன்வினவத்
தீங்கு தருகலியும் செப்பினுன் :—'நீங்கள்
விருப்பான வீமன் திருமடந்தை போடும்
இருப்பான் வருகின்றேன் யான்'. 2

### தமயந்தி நளனுக்கு மாலை சூட்டினமை அறிதல்

'மன்னவரில் வைவேல் நளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான்;—உன்னுடைய
உள்ளக் கருத்தை ஒழித்தே குதி'யென்றான்
வெள்ளைத் தனியானை வேந்து. 3

### கலி தமயந்தியின் வாழ்வைக் கெடுப்பேன் எனல்

'விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதின்—எண்ணம்
கெடுக்கின்றேன்; மற்றவள்தன் கேள்வனுக்குக் கீழ்மை
கொடுக்கின்றேன்' என்றான் கொதித்து. 4

### கலி புட்கரனைத் தூண்டுதல்

'நன்னெறியில் சூதால் நளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே!
போதுவாய் என்னுடனே' என்றான் புலைநரகுக்(கு)
ஏதுவாய் நின்றான் எடுத்து. 5

### புட்கரன் நளனிடம் போதல்

புன்னை நறுமலரின் பூந்தா திடையொதுங்கும்
கன்னி இளமேதிக் கால்குளம்பு—பொன்னுரைத்த
கல்லேய்க்கும் நாடன் கவருடப் போயினான்
கொல்லேற்றின் மேலேறிக் கொண்டு. 6

### நளன் சூதாட உடன்படல்

'ஏன்றோம் இதுவாயின் மெய்ம்மையே எம்மோடு
வான்றோய் மடல்தெங்கின் வான்தேறல்—தான்தேக்கி
மீதாட வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னுடன்
சூதாட' என்றான் துணிந்து. 7

### மந்திரிகள் அறிவுரை

காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல்,
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினையாமை வைகும் திருநாடா! செம்மை
நினையாமை பூண்டார் நெறி. 8

### நளன் இசையாமை

'தீது வருக, நலம்வருக, சிந்தையால்
சூது பொரவிசைந்து சொல்லினோம்;—யாதும்
விலக்கலிர்நீர்' என்றான் வரால்ஏற மேதிக்
கலக்கலைநீர் நாடன் கனன்று. 9

[சூதாட்டத்தில் நாடும், செல்வமும், அனைத்தும் தோற்றான் நளன். 'உன் மனைவியைப் பணயம் வைத்து ஆடுக' எனப் புட்கரன் வற்புறுத்துகிறான்.]

### நளன், தமயந்தியை நோக்கிக் கூறுதல்

'இனிச்சூ தொழிந்தோம்; இனவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனல்நாடன் பொன்மகளே!
நாம்போதும்' என்றான் நளன். 10

### நாடிழந்து வெளியேறுதல்

மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல்—தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினான் அன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. 11

### நகர மக்கள் துயரம்

'ஆருயிரின் தாயே! அறத்தின் பெருந்தவமே!
பேரருளின் கண்ணே! பெருமானே!—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்' கென்றார் தம்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. 12

### தமயந்தியை மக்களோடு விதர்ப்பநாடு செல்லுமாறு கூறுதல்

'காதல் இருவரையும் கொண்டு கடுஞ்சுரம்போக்(கு)
ஏதம் உடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்!
வீமன் திருநகர்க்கே மீ'ளென்றான்; விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான். 13

### அவள் மக்களை மட்டும் அனுப்பும்படி வேண்டல்

'செங்கோலாய்! உன்றன் திருவுள்ளம் ஈதாயின்
எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்க்கே—நம்கோலக்
காதலரைப் போக்கி அருள்'என்றாள்; காதலருக்(கு)
ஏதிலரைப் போல எடுத்து. 14

### நளன் அந்தணனுடன் மக்களை அனுப்பல்

'பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்—தாதைக்குக்
காட்டுநீ' என்றான்; கலங்காத உள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து. 15

### குழந்தைகள் துயரம்

தந்தை திருமுகத்தை நோக்கி, தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி;—'எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ?' என்றார்; விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது. 16

[இவ்வாறாக நாடாண்டு செல்வச் செழிப்பிலே இன்பத்தின் எல்லையில் வாழ்ந்த நள தமயந்தியர் மக்களையும் பேண வகையின்றிக் கலியினால் துன்பத்திற்கு ஆளாயினர்.]

# 3. இரட்சணிய யாத்திரிகம்

## தீயமகன் திருந்தியது

[இஃது ஆன்மாவைப் பாதுகாப்பதற்காகச் செய்த பயணத்தைப் பற்றிக் கூறும் நூல். ஆன்மாவின் பாதுகாப்பை விரும்பி வேத நெறியில் ஒழுகுப வர்க்கு வரும் நிகழ்ச்சிகளை இந்நூல் கூறுகிறது. இது **ஜான் பன்யன்** (John Bunyan) என்னும் ஆங்கிலப் புலவரால் இயற்றப்பெற்ற ஆங்கில நூலைத் தழுவி ஆக்கப்பெற்றது. இதனை இயற்றியவர் H. A. கிருஷ்ணப் பிள்ளை; திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ரெட்டியார்பட்டி என்னும் ஊரில், வேளாளர் குலத்தில், 1827-ஆம் ஆண்டில் பிறந்தவர்; கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி வாழ்ந்தவர். இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள், இரட்சணிய சமய நிர்ணயம் முதலியன இவர் இயற்றிய வேறு நூல்கள்.

இப்பகுதி, மகன் செய்த தவறுகளைத் தந்தை மனமார மன்னித்து அவனை ஆட்கொண்டானென்பது பற்றிக் கூறுகின்றது.]

### இளையவன் பாகம் பெறுதல்

ஒருவன்அன் புடைய தந்தைக்
கோரிரு புதல்வர் உள்ளார்;
இருவரில் இளையான், 'ஐய!
என்ஒரு பாகம் எற்குத்
தருக' என் றிரந்து கேட்பத்
தந்தைதன் உரிமை யாவும்
நிருவிகற் பாகப் பங்கிட்(டு)
உதவினன் நேர்மை யாக. 1

### பொருளை இழத்தல்

கைப்பொருள் கண்டான்; தந்தை
கரைந்தசொற் பொருளைக் காணான்;
மெய்ப்பொருள் அறியான்; உள்ளம்
விழைந்தசிற் றின்ப மாய
பொய்ப்பொருள் நச்சி ஓடிப்
புறம்புபோய்த் தந்தை ஈந்த
அப்பொருள் இழந்தான்; அந்தோ!
அகதியா யினன்சின் னாளில். 2

### வறுமையால் வருந்துதல்

அங்கொரு குடும்பி தன்னை
அடுத்தவன் பன்றி மேய்த்துத்
திங்களோர் இரண்டு மூன்று
செல்ல, அத் தேசம் எங்கும்

வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து
வெதுப்பிடும் பசிக்காற் றுனுய்
நுங்கினுன் பன்றிக் கூட்டும்
நொறுங்குகுற் றுமித்த விட்டை. 3

குற்றுமித் தவிடும் கிட்டாக்
கொடும்பஞ்சம் அதிக ரிக்கச்
சற்றுளம் தெளிந்தா னுகிச்
சஞ்சலித் தழு'தென் தந்தைக்(கு)
உற்றவூ ழியர னேகர்
உண்டு தேக் கெறிய, யான் ஓர்
துற்றுண வின்றி ஆவி
சோர்குவ லிதென்துர்ப் புத்தி. 4

'புகலொன்றும் இல்லேன்' என்னுப்
புந்தியில் பிழையை உள்ளி
மிகவுள முடைந்து நைந்தான் ;
மெய்ம்மனத் தாபங் கொண்டான் ;
'தகவுடைத் தாதை பக்கல்
சார்குவ னேல்,தான் பெற்ற
மகவெனப் பரிவர் அல்லால்
மறுத்திடார்' எனத்தே றுற்றுன். 5

**மீண்டும் தந்தையைச் சார்தல்**

ஒல்லையே எழுந்தான், தந்தை
உத்தம குணமுன் ஈர்க்க
அல்லல்செய் பசிபின் உந்த
அடுத்தனன் ; அறிந்து தந்தை
வல்லைவந் தணைந்து, முத்தி
மகிழ்ந்தனன் ; மகவா சைக்கோர்
எல்லையும் உளவோ ? மைந்தன்
எத்தனைப் பிழைசெய் தாலும். 6

**தன் நிலை கூறி வருந்துதல்**

'எந்தையே ! எந்தை யே !' என்
றேங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந் 'துமக்கு முன்னும்
தெய்வத்துக் கெதிரு மாகப்

புந்தியற் றளவில் பாவம்
    புரிந்தனன் ; இனியான் உந்தம்
மைந்தனென் றுரைக்கத் தானும்
    அபாத்திரன் ; மதியொன் றில்லேன். 7

**மன்னிக்க வேண்டுதல்**

'ஐய ! மன் னிக்கச் சித்த
    மாயின்மற் றளிய னேன்யான்
உய்யுமா றருளி நும்பால்
    ஊழியத் தொருவ னுக்கி
வையகத் திருத்து' கென்னு
    வாய்திறந்து அரற்றி நிற்ப,
'நையல்'என் றருளிக் கூட்டிச்
    சென்றனன் அகத்துள் நண்பால். 8

**தந்தை மகனை ஆதரித்தல்**

'மகன் இவன் மரித்தான் ; இன்னே
    மறுத்துயிர் பெற்று னுகத்
தகவுடை விருந்தெ மர்க்குச்
    சமைக்'கெனப் பணித்து, மைந்தற்(கு)
உகவையின் வத்தி ராதி
    உடுத்தருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ்கொண் டாடி
    இருந்தனன் புதல்வ னேடும். 9

[மகன் செய்த புன்மைகள் அனைத்தும் மறந்து அவன் அவல நிலைகண்டு உள்ள முருகிய தந்தையைப் போன்றே இறைவனும், உயிர்கள் அவன் திருவருளை நாடிச் சென்ற காலத்தே அவற்றின் புன்செயல்களை மறந்து இரக்கங்காட்டி ஆதரிப்பான் என்பது இப்பகுதியின் கருத்து. அக் கருத்து, தன் பங்குக்குரிய செல்வம் அனைத்தையும் இழந்து வயிற்றுச் சோற்றுக்கும் வகையற்றிருந்த மகனை 'மாண்டவன் மீண்டான்' என்று மகிழ்ச்சிப் பெருக்கால் தந்தை வரவேற்றுப் புத்தாடை அணிகள் புனைந்து மகிழும் பாசம் தெளிவுபட விளக்கப்பட்டுள்ளதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.]

## 4. மான விஜயம்

இது மானத்தின் வெற்றியைக் கூறுவதொரு செய்யுள் நாடக நூல். சேரமான் கணைக்கால் இரும்பொறை என்னும் செந்தமிழ் அறிந்த சேரவேந்தன் சோழன் செங்கணானோடு போர் செய்து தோற்று, அவனால் சிறையிடப் பட்டிருந்த போது சிறைகாவலர் இழிவாக நடத்தியதைப் பொருது வருந்தி உயிர் நீத்த வரலாறு இதில் நாடக முறையில் அமைத்துக் கூறப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் 'பரிதிமாற் கலைஞன்' என்னும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார். இவர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்; ஆங்கில மொழிப் பயிற்சியில் பி. ஏ. பட்டம் பெற்றவர்; தமிழ் மொழியிற் பெரும் புலமை வாய்ந்தவர்; எடுத்த ஓசையும் மிடுக்கு நடையும் அமைந்த செந்தமிழ்ப் பாக்களைப் பாடும் ஆற்றல் சிறந்தவர். இவர் செந்தமிழில் உரை நடையிலும் செய்யுள் நடையிலும் சிறந்த பல நூல்களைச் செய்து செந்தமிழைச் சிறப்பித்துள்ளார்.

*ஆடுங்களம்*

**இடம் :** *சிறைச்சாலை*
**காலம் :** *முற்பகல்*
**பாத்திரங்கள் :** *சிறை காவலர், சேரமான்.*

[சேரன் கணைக்கால் இரும்பொறை சோழ நாட்டுச் சிறைச் சாலையில் இருக்கிறான். சிறை காவலர் சேரனைக் குறித்து இழிவாகப் பேசுகின்றனர். சேரன் அவர்கள் நிலைக்கு இரங்குகின்றான்; பின் அவர்களில் ஒருவனை நோக்கி, பருக நீர் தருமாறு கேட்கிறான். காவலர் அவனை மதியாமல் இகழ்ந்து பேசி நகையாடுகின்றனர். சேரன் தன் நிலை குறித்துத் தன்னுள் பலபல நினைந்து வருந்துகின்றான். அந்நிலையில் சிறைகாவலன் இரண்டாமவன் தண்ணீர் கொண்டு வருகிறான்.]

**சிறைகாவலன் முதல்வன் :–** (*கைகாட்டி*)

கொண்டுபோ, விரைவாக் கொண்டுபோய்க் கொடு.

**சிறைகாவலன் இரண்டாமவன் :–** (*தடுத்து*)

மண்டு தாகமோ மன்னவ ருக்கே ?
என்னடா அவசரம் ? இன்னும் கொஞ்சம்
நேரம் கழித்து நீட்டினால் குடிக்கிறான்.
தாமதம் செய்தால் தலைபோ யிடுமோ ?

**முதல்வன் :–** (*இரக்கமுற்று*)

இல்லை, இல்லை. எனைவேண்டி யாவது
நல்லதண் ணீரென்று நயத்தொடு நீட்டு.
தவிச்ச வாய்க்குத் தண்ணீர் இல்லையோ ?

**இரண்டாமவன் :–** (இணங்கி)

அப்படி யானல் அங்ஙனே போய்நான்
கொடுத்து வருகிறேன் ; கூடவா ராதே.

**முதல்வன் :–** (*சிரித்து*)

எடுத்துக் கொள்ளடா எல்லாப் பரிசையும்.

**இரண்டாமவன் :–** [*சேரனிடம் சென்று நிமிர்ந்து நின்றவாறே வணக்கமின்றி ஒருகையால், உரத்த குரலில்*]

தண்ணீர் சாமி !— (எதிரில் வந்து)

தண்ணீர் ஐயா !

(*நகையாடி*)

என்ன?நீர் கேட்டது தண்ணீர் தானே ?
பித்தந் தானே ? சித்தப் பிரமையோ ?
மெத்தப் படித்த புத்திக் கேடோ ?
என்னடா பெரிய இழவு !

**முதல்வன் :–** (*வெறுப்புடன்*)

அங்ஙனே வைச்சிட்(டு) இங்ஙனே வாடா.

**இரண்டாமவன் :–** (வெகுண்டு)

குடிச்சால் குடியும், குடியா விட்டால்
கொட்டிக் கவிழும். வெட்டி வேலை.

**முதல்வன் :–** (*யோசித்து*)

நேர மாயிற்று ; நீயும் நானும்
உண்ணவேண் டாமா ?

[*இருவரும் போகின்றனர்*]

**சேரமான் :–** (*முகம் விளர்த்து*)

நாடும் இழந்தேன் ; நல்லினம் இழந்தேன் ;
பீடும் இழந்தேன் ; பெருமையும் இழந்தேன் ;

* * * *

போரில் தொலைந்த புன்மையேன் தனக்கு
வீரனென் னும்பெயர் விளம்பல் தகாது.
விழுப்புண் பட்டு மேதக வீழ்ந்து

செழிப்புடன் வீரர் செவ்விய துறக்கம்
எய்துவர். அந்தோ! நைதலார் எளியேன்
சாகிலேன் இருந்தேன்; போகிலேன் நின்றேன்.

*　　*　　*　　*

பகைவன் கையகப் பட்டுச் சிறையில்
நகைபல ராட ஞமலி போல
இருப்புத் தொடரில் பிணிப்புண் டீண்டை
இருத்தலில் சாதல் எத்துணை மேன்மை?
இனியிவ் வாழ்வெனக் கினியது கொல்லோ?

மானமே உயிரினும் மாண்புடைத் தாமால்.
நீரின் வேட்கை ஆரத் தணிந்தியான்
யாரைக் காத்தல் இயலுமோ? அறியேன்.
நீரும் வேண்டேன்; பாரும் வேண்டேன்;
சாவு வேண்டினேன். *　　*

*　　*　　*　　*

மானமே யாருயிர்; மான மேயறம்;
மானமே செம்பொருள்; மான மேயின்பம்;
மானமே பேரொளி; மான மேபுகழ்;
மானமே யெவற்றினு மாட்சி சான்றதால்.
இத்தகை மானம திழந்த பின்னரும்

உத்தம முடலென வுணர்ந்து சாகிலர்
தத்தம் யாக்கையைத் தகவி லாதையோ
நித்தமும் பேணுவார் நீச ரல்லரோ?

*　　*　　*　　*

[நாவறட்சி மேலிடுதலான் மந்தமான குரலில்]

உடலே! செய்ய உடலே! இதுகாறும்
எனக்கிட மாகி யிருந்த உடலே!

உனக்கினி யேனுய் உன்னைப் பேணி
வாழ்தல் விரும்பேன்; வறட்சி மிக்குத்
தாழ்த லுற்றேன்; தாதாய்!
என்னையும் காத்தி நின்னருள் கொடுத்தே.

[உயிர் விடுகின்றான்.]

# 4. துதிப் பாடல்கள்

## 1. தேவாரம்

[தேவாரம்: சைவ சமய குரவர்கள் நால்வருள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்போர் மூவரும் சிவபெருமான் மீது பாடிய தோத்திரப் பாடல்களின் தொகுதி. தே+ஆரம்—தெய்வத்திற்குச் சாத்தப்படும் பாமாலை; தே+வாரம் எனப் பிரித்து, தெய்வ விஷயமான சொல்லொழுக்கும் இசையொழுக்கும் உடைய பாடல் என்றும் பொருள் கொள்ளப்படும். இத்தேவாரப் பாடல் அப்பரால் பாடப்பட்டது. அப்பர் என்பது திருநாவுக்கரசரின் வேறு பெயர்களுள் ஒன்று. இவர் நடு நாட்டில் உள்ள திருவாமூரில், சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர்; தந்தையார்: புகழனார்; தாயார்: மாதினியார்; பிள்ளைத் திருநாமம்: மருள்நீக்கியார். இவர் காலம் 7-ஆம் நூற்றாண்டு. இப் பாடல் திருப்பாதிரிப்புலியூர் இறைவன் மீது பாடிய பதிகத்திலிருந்து எடுக்கப்பட்டது. திருப்பாதிரிப்புலியூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது; இப்பொழுது கூடலூர்ப் புது நகரம் என்று வழங்குகின்றது.]

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான், மனத் துள்ளிருக்க
ஏன்றான், இமையவர்க் கன்பன், திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தான் தன்னடி யோங்களுக்கே.

## 2. பெருமாள் திருமொழி

[இது நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் உள்ளது; குலசேகரப் பெருமாள் பாடிய பாசுரங்கள் அடங்கிய பகுதி. குலசேகரப் பெருமாள் வைணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவர்; சேர நாட்டில், திருவஞ்சைக்களத்தில் தோன்றியவர்: அரச மரபினர்; தந்தையார்: திருவிடவிரதன்; காலம் 8-ஆம் நூற்றாண்டு. விற்றுவக்கோடு என்பது சேர நாட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று.]

தருதுயரம் தடாயேல் உன்சரணல்லால் சரணில்லை;
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி யதுவேபோன் றிருந்தேனே.

## 3. திருப்பாவை

[பாவை என்பது கன்னிப்பெண்கள் நோற்கும் ஒரு நோன்பு: சிறந்த கணவரைப் பெறவும், நாடு செழிக்க மழை பெய்யவும் வேண்டி மார்கழி மாதத்தில் நோற்கப்படுவது. அதனைப் பற்றிய பாடலின் தொகுதியும், 'பாவை' எனப்படும். திருப்பாவையைப் பாடியவர் ஆண்டாள். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். பாண்டிய நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றியவர்; பெரியாழ்வாரின் செல்வ மகள். இவர் காலம் 8-ஆம் நூற்றாண்டு.]

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த மடிபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

## 4. திருப்புகழ்

[இது முருகப் பெருமானுடைய சிறந்த புகழைப் பரவிப் பாடிய பாடல்களால் ஆகிய நூல். இதில் உள்ள பாடல்கள் அனைத்தும் வெவ்வேறு சந்தங்கள் அமைந்த பல வேறு வண்ணங்களாலாகியவை. இந்நூலைப் பாடியவர் **அருணகிரிநாதர்.** இவர் நடுநாட்டுச் சைவத் திருப்பதிகளுள் ஒன்ருகிய திருவண்ணுமலையில் வாழ்ந்தவர்; இவர் காலம் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னையது.]

இருவினையின் மதிமயங்கித்—திரியாதே,
  எழுநரகி லுழலுநெஞ்சுற்—றலையாதே,
பரமகுரு அருள்நினைந்திட்—டுணர்வாலே,
  பரவுதரி சனையை என்றற்—கருள்வாயே,
தெரிதமிழை உதவுசங்கப்—புலவோனே!
  சிவனருளு முருக! செம்பொற்—கழலோனே!
கருணைநெறி புரியுமன்பர்க்—கெளியோனே!
  கனகசபை மருவுகந்தப்—பெருமாளே!

## 5. அன்னையழுங்கல் அந்தாதி

[இப்பாடல் கிறிஸ்து பெருமான் துதி. இது வீரமா முனிவரால் பாடப்பெற்றது. இவர் இயற்பெயர் **கான்ஸ்டண்டைன் பெஸ்கி** என்பது. இவர் இத்தாலிய நாட்டினர்; தமிழ் நாட்டிற்கு வந்து இறுதிக்காலம் வரையில் இங்கேயே தங்கி, கிறிஸ்து சமயப் பிரசாரம் செய்தவர்; தமிழ் மொழியைக் கற்றுப் புலமைபெற்று, தேம்பாவணி முதலிய பல தமிழ் நூல்களை இயற்றி உதவியவர்; ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தவர்; முந்நூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்.]

இடருற்ற ஞாலமும் வானும் உளவுயிர் என்னெவையும்
மடிவற்று வாழ மனுவுடற் போர்த்து மறவினையால்
திடனற்ற கூளி கொடுங்கோல் துரந்தெமைத் தேற்றுவிப்பான்
படியுற்று வந்தருள் சேசெனும் நாமம் படைத்தவனே!

# 5. சிறு நூல்கள்

## 1. நால்வர் நான்மணி மாலை

[இது சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சைவ சமய குரவர் நால்வர் மீதும் பாடப்பெற்ற நான்மணி மாலை என்னும் பிரபந்தம். நான் மணி மாலை: முறையே வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைப் பாக்களும் விரவிவர அந்தாதித் தொடை அமைத்து நாற்பது பாக்களால் பாடப்படும் ஒரு வகைப் பிரபந்தம். இதனைப் பாடினவர் **சிவப்பிரகாச சுவாமிகள்**. இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர்; வீர சைவர்; அண்ணாமலை ரெட்டியார் என்னும் செல்வர் ஆதரவில் துறைமங் கலத்தில் வாழ்ந்தவர்; இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.]

### நேரிசை வெண்பா

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் தண்டை 1
வெறித்தண் கமலமே வீடு.

### கட்டளைக் கலித்துறை

விட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்த!பொது
வாட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே. 2

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

படியிலா நின்பாட்டில் ஆரூர!
நனிவிருப்பன் பரம னென்ப(து)
அடியனே னறிந்தனன்;வான் றொழுமீசன்
நினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்,
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே. 3

### நேரிசை ஆசிரியப்பா

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ,
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ,
யாதோ சிறந்த தென்குவீ ராயின்,
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சுநெக் குருகி நிற்பவர் காண்கிலேம்;
திருவா சகமிங் கொருகா லோதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே. 4

## 2. அழகர் அந்தாதி

[இஃது அழகப்பெருமான் மீது பாடப்பட்ட அந்தாதி என்னும் பிரபந்தம். அழகர்: மதுரைக்கு அருகில் உள்ள திருமாலிருஞ் சோலைமலையில் எழுந்தருளி யுள்ள திருமால். அந்தாதி: முன் செய்யுளின் இறுதி (அந்தம்) அடுத்த செய்யுளின் முதலாக (ஆதி) அமைய நூறு பாக்களால் பாடப்படுவதொரு பிரபந்தம். இதனை இயற்றியவர் **திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.** மணவாள தாசர் என்பது இவருக்கு வழங்கும் வேறு பெயர். இவர் சோழ நாட்டில் உள்ள திருமங்கை என்னும் ஊரினர்; வைணவர்; திருவரங்கப் பெருமானுக்குத் தொண்டு செய்து வாழ்ந்தவர்; எண்ணூறு ஆண்டுகட்கு முன் இருந்தவர். இவர் எட்டுப் பிரபந்தங்கள் பாடியுள்ளார். அவற்றின் தொகுதி 'அஷ்டப் பிரபந்தம்' எனப் படும்.]

### நெஞ்சிற்கு உரைக்கும் உபதேசம்

நீராழி வண்ணனை, பாலாழி
நாதனை, நின்மலனை,
சீராழி அங்கைத் திருமகள்
கேள்வனை, தெய்வப்புள்ளூர்
கூராழி மாயனை, மாலலங்
காரனை, கொற்றவெய்யோன்
ஓராழித் தேர்மறைத் தானையென்
ஞான்றும் உரைநெஞ்சமே. 1

### அழகரிடத்துச் செய்யும் விண்ணப்பம்

**உ**ரைமாற்றம் உண்டென் பொறியைந்தும்
உன்னிடத் தன்றியுண்ணும்
இரைமாற்ற வேண்டும்; இதுவேஎன்
விண்ணப்பம் என்னப்பனே!
உரைமாற் றளவற்ற பொன்னுடுத்
தாய்!வில் லெடுத்திலங்கை
வரைமாற் றலரைச்செற் றுய்!அழ
கா! கரு **மாணிக்கமே!**

### பித்தர் அல்லாதவர்

**மாணிக்** கநகம் புரைமேனி
மாலுக்கு, வார்சடையோன்
பாணிக் கனகம் பலியொழித்
தானுக்கு, பச்சைத்துழாய்
ஆணிக் கனக முடியலங்
காரனுக்(கு), அண்டமெல்லாம்
பேணிக் கனகனுக் குப்பித்த
ரானவர் **பித்தரன்றே.**

### அழகனை வேண்டுதல்

**பித்**தரும் பாநின்ற நெஞ்சனை,
வஞ்சனை, பேருலகோர்
கைத்தரும் பாவி யெனுங்கடை
யேனை, கடைக்கணியாய்;
முத்தரும் பாரும் தொழுமழ
கா!வண்டு மூசுந்துழாய்
புத்தரும் பார்முடி யாய்!அடி
யாரைப் புரப்பவனே!

# 6. தனிப் பாடல்கள்

[தனிப்பாடல் என்பது புலவர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியைப் பற்றியும் கேட்போர்க்குச் சுவை பயக்குமாறு தனிப் பாடலாகப் பாடுவது. ஒவ்வொரு புலவர் வரலாற்றிலும் இத்தகைய தனிப் பாடல்களைக் காணலாம். இவ்வாறு பல வேறு புலவர்களால் பாடப்பட்ட தனிப் பாடல்களைக் கண்டு தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்கள். அது 'தனிப் பாடல் திரட்டு' எனப்படும். அந்நூலிலிருந்து சில பாடல்கள் கீழே தரப்படுகின்றன.

கீழ்வரும் முதல் இரண்டு பாக்களைப் பாடியவர் **காளமேகப் புலவர்.** இவர் கும்பகோணத்தை அடுத்த நாதன் கோவில் என்னும் ஊரினர்; 16-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்; சிலேடை, வசை, நகை முதலியவை அமைந்த வேடிக்கைப் பாக்கள் இயற்றுவதில் வல்லவர்; ஆசுகவி எனப் புகழ் பெற்றவர். கீழ்வரும் இரண்டு பாக்களுள் முதலாவது சிலேடை; மற்றையது சொற்சுவை அமைந்தது. சிலேடையாவது இரு பொருள்படப் பாடுவது.]

### சிலேடை

பெரியவிட மேசேரும்; பித்தர்முடி யேறும்;
அரியுண்ணும்; உப்புமேல் ஆடும்;—எரிகுணமாம்;
தேம்பொழியும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். 1

### சொற்சுவை

பாணர்க்குச் சொல்லுவதும், பைம்புனலை மூடுவதும்,
தாணு உரித்ததுவும், சக்கரத்தோன்—ஊணதுவும்,
எம்மானை ஏத்துவதும், ஈசனிடத் தும்,சிரத்தும்
தைம்மாசி பங்குனிமா தம். 2

### வினு விடை

[இது **இராமசந்திர கவிராயர்** பாடியது. இவர் தொண்டை நாட்டு இராசநல்லூரினர்; 19-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்; சகுந்தலை விலாசம், பாரத விலாசம் என்னும் நாடக நூல்களைச் செய்தவர். இவர் பாடிய தனிப் பாடல்கள் பல. வினு விடையாவது ஒரு செய்யுளில் வினுக்களை முதலில் தொடுத்து அடுக்கிப் பின் ஈற்றில் அவற்றிற்குரிய விடைகளைத் திறம்பட அமைத்துப் பாடுவது. இது 'வினு வுத்தரம்' எனவும் படும்.]

இரவல னேயுனக் கில்லாத தென்ன? விதயமென்ன?
பரவுண வேது? சுவையற்ற தென்ன? சொற் பான்மையென்ன?
தரவுரை செய்திட வென்ருன், அதற்கொன்றுஞ் சாற்றிலன்யான்;
வரதிரு வேங்கட நாதாவென் றேன்; பொன் வழங்கினனே. 3

## யானைப் பரிசு

[இதனைப் பாடியவர் அந்தகக்கவி வீரராகவ முதலியார். இவர் பிறவிக்குருடர்; தொண்டை நாட்டினர்; இவர் ஊர் 'உழலூர்' என்பர். இவர் காஞ்சிபுரத்தில் கல்வி கற்றவர்; பரராசசிங்கனிடம் பரிசு பெற்றவர்; மூந்நூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். யானைக்குரிய பல பெயர்களும் சிலேடைப் பொருளில் அமையுமாறு இச்செய்யுள் சுவை நிரம்பப் பாடப்பட்டுள்ளது.]

இம்பர்வா னெல்லையிரா மனையே பாடி
யென்கொணர்ந்தாய் பாணநீ என்றாள் பாணி;
வம்பதாங் களபமென்றேன்; பூசு மென்றாள்;
மாதங்க மென்றேன்; யாம் வாழ்ந்தோ மென்றாள்;
பம்புசீர் வேழமென்றேன்; தின்னு மென்றாள்;
பகடென்றேன்; உழுமென்றாள் பழனந்தன்னை;
கம்பமா வென்றேன்; நற் களியா மென்றாள்;
கைம்மாவென் றேன்; சும்மா கலங்கினாளே. 4

## வறுமையும் செல்வமும்

[இது சொக்கநாதப் புலவரால் பாடப்பட்டது. இதனைக் காளமேகப் புலவர் பாடினதாகவும் கூறுவர். இதில் புலவர் வறுமை நிலையையும் செல்வச் சிறப்பையும் அழகாகப் பாடியுள்ளார்.]

இந்திரன் கலையா யென்மருங் கிருந்தான்;
அக்கினி யுதரம்விட் டகலான்;
எமனெனைக் கருதா நரனெனக் கருதி;
நிருதிவந் தென்னையென் செய்வான்?
அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்;
அகத்தினில் மக்களும் யானும்;
அனிலம தாகு மமுதினைக் கொள்வோம்;
யாரெதி ரெமக்குள ருலகில்?
சந்தத மிந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மெம்மை, நிலைசெய்சற் கீர்த்திச்
சாளுவ கோப்பைய னுதவும்
மந்தர புயத்தான் திப்பைய ராயன்
மகிழ்வொடு விலையிலா வன்னேன்
வாக்கினாற் குபேர னாக்கினன், அவனே
மாசிலீ சானபூ பதியே. 5

## சீட்டுக்கவி

[புலவர் தாம் விரும்பிய ஒருவருக்குச் செய்யுள் வடிவில் எழுதி விடுக்கும் கடிதம் 'சீட்டுக் கவி' எனப்படும். அது புலவருடைய பெருமையும் தேவையும் விளங்க அமைந்திருக்கும். புலவர்கள் பலர் அரசர்கட்கும் வள்ளல்கட்கும் எழுதி விடுத்த சீட்டுக் கவிகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று கீழே தரப் பட்டுள்ளது. இஃது அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயரால் முத்துக்கறுப்பண்ணன் என்னும் வள்ளலுக்கு எழுதி விடுக்கப்பட்டதாகும். இவர் 18-ஆம் நூற்றாண்டினர். இவர் பாடிய பாடல்கள் பல தனிப் பாடல் திரட்டில் உள்ளன.]

கல்விச் சமுத்திரம் ; கமலா லயம் ; தமிழ்க்
கடல்மடை திறந்த வெள்ளம் ;
கற்பனை பிறப்பிடம் ; கலைமகள் இருப்பிடம் ;
கவிமாரி பொழியு மேகம் ;
சொல்விற் பனம்விளையு மதுரக் களஞ்சியம் ;
தோன்றுகற் பூர தீபம் ;
சுகிர்தகுண **அவதானி சரவணப் பெருமாள்**கை
தொட்(டு) எழுதி விட்ட சனது :
வில்லுக்(கு) அருச்சுனன் ; சொல்லுக்(கு) அரிச்சந்த்ரன்
வெற்றிக்கு விக்ர மார்க்கன் ;
வித்தைக்(கு) அகத்தியன் ; **முத்துக் கறுப்பண்ண**
விலட்சணன் எதிர்ந்து காண்க !
மல்வெற்றி யாயென்று தாயென்று நீயென்று
மாலென்று வேலென் றுகா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற(து) அருள் புரிகவே. 6

## உழவின் உயர்வு

[இது கம்பநாட்டாழ்வாரின் 'ஏரெழுபது' என்னும் நூலிலிருந்து எடுக்கப் பட்டது. ஏரெழுபது உழவின் உயர்வைக் குறித்த எழுபது பாடல்களைக் கொண்டது. கம்பர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ; சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர். இவர் செய்த பெருநூல் இராமகாதை ; சிறு நூல்கள் ஏரெழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, மற்றும் பல தனிப் பாடல்கள்.]

கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனின், புகழ்சால் இயல்இசைநா டகம்நடக்கும்;
சீர்நடக்கும்; திறன்நடக்கும்; திருஅறத்தின் செயல்நடக்கும் ;
பார்நடக்கும்; படைநடக்கும்; பசிநடக்க மாட்டாதே. 7

# 7. வருணனை

[இப்பகுதியில் நாடு, நகரம், மலை, ஆறு போன்ற இயற்கைக் காட்சிகளை இனிது வருணித்துப் பாடப்பட்டுள்ள பாடல்கள் சில தரப்பட்டுள்ளன. இவை மாணவர்களின் கற்பனைத் திறனைத் தூண்டி வளர்க்கும் தன்மை வாய்ந்தவை.]

## நாடு

[இது நளனுடைய நிடத நாட்டைப் பற்றிய வருணனைப் பாடல். இது நள வெண்பாவிலிருந்து எடுக்கப்பட்டது. இதனைப் பாடியவர் **புகழேந்திப் புலவர்.**]

காமர் கயல்புரள, காவி முகைநெகிழ,
தாமரையின் செந்தேன் தளையவிழ,—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு. 1

## நகரம்

[இஃது உறையூரின் புனைந்துரை. உறையூர் சோழ அரசர்களுடைய தலை நகரங்களுள் ஒன்று. இப்பாடல் **முத்தொள்ளாயிரம்** என்னும் பழந்தமிழ் நூலில் உள்ளது.]

மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்
சால மிகுவதோர் தன்மைத்தால்;—காலைய
விற்பயில் வானகம் போலுமே வெல்வளவன்
பொற்பார் உறந்தை அகம். 2

## மலை

[இது குற்றால மலையைப் பற்றிய வருணனைப் பாடல். இது 'குற்றாலக் குறவஞ்சி' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதனைப் பாடியவர் **திரிகூட ராசப்பக் கவிராயர்.**]

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்;
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்;
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்;
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்;
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்;
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே. 3

### ஆறு

[இச்செய்யுளில் காவிரியாறு புனைந்துரைக்கப்பட்டுள்ளது. இது **சிலப்பதிகார**த்திலிருந்து எடுக்கப்பட்டது. இதனைப் பாடியவர் **இளங்கோவடிகள்.**]

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய்; வாழி! காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த வெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை; அறிந்தேன் வாழி! காவேரி! 4

### சோலை

[இஃது ஒரு சோலையைப் பற்றிய வருணனைப் பாடல். இது **கம்பராமாயண**த்திலிருந்து எடுக்கப்பட்டது. இதனைப் பாடியவர் **கம்பர்.**]

குயிலினம் வதுவை செய்ய, கொம்பிடைக் குனிக்கு(ம்) மஞ்ஞை
அயில்விழி மகளி ராடும் அரங்கினுக்(கு) அழகு செய்ய,
பயில்சிறை அரச அன்னம் பனிமலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழ, தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை. 5

### செவ்வானம்

[மாலைக் காலத்து வானின் தோற்றம் இதில் மிக அழகாக வருணிக்கப்பட்டுள்ளது. இது **தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார்** இயற்றிய **பாஞ்சாலி சபதத்**திலிருந்து எடுக்கப்பட்டது.]

பார்! சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட்டு எரிவன! ஓகோ!
என்னடீ இந்த வண்ணத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்!—செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்!—வெம்மைதோன் றுமே
எரிந்திடும் தங்கத் திவுகள்!—பாரடீ!
நீலப் பொய்கைகள்!—அடடா! நீல
வண்ணம் ஒன்றில் எத்தனை வகையடி!
எத்தனைச் செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை!—கரிய பெரும் பெரும் பூதம்!
நீலப் பொய்கையில் மிதந்திடும் தங்கத்
தோணிகள்! சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ் சிகரங்கள்! காணடி ஆங்கு,
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட் கடல்! ஆகா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள், ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்! 6

### நிலவு

[பல நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே தோன்றும் முழுமதியின் இன்பத் தோற்றத்தை இப் பாடல் புனைந்துரைக்கின்றது. இது வில்லி பாரதத்தில் உள்ளது. இதனை இயற்றியவர் வில்லிபுத்தூரார்.]

கானெலா மலர்ந்த முல்லை ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற,
வேனிலான் விழவின் வைத்த வெள்ளிவெண் கும்பமென்னத்
தூநிலா மதியம் வந்து குணதிசைத் தோன்றிற் றம்மா. 7

### ஞாயிறு

[இது சூரியனைப் பற்றிய புனைந்துரைப் பாடல்: கவிஞர் பாரதி தாசன் பாடியது. இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம்: பாரதியாரோடு நெருங்கிய தொடர்புகொண்டவர்; கவிதை. உரை நடை நூல்கள் பல இயற்றியவர். இவர் பாடல்கள் தமிழர்க்குப் புத்துணர்ச்சி யூட்டும் தன்மையன. இதில் காலைச் சூரிய ஒளியின் செயல்கள் புது முறையில் புனைந்துரைக்கப்பட்டுள்ளன.]

எழுந்தன உயிரின் கூட்டம்
இருள்இல்லை! அயர்வும் இல்லை!
எழுந்தனை ஒளியே! எங்கும்
எங்கணும் உணர்ச்சி வெள்ளம்!
பொழிந்தநின் கதிரோவ் வொன்றும்
பொலிந்தேறி, மேற்றி சைமேல்
கொழுந்தோடக் கோடி வண்ணம்
கொழித்தது சுடர்க்கோ மானே! 8

### வீரத்திருவுரு (வ. உ. சி.)

[இப்பாடல் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையால் பாடப்பட்டது. இவர் சேலம் மாவட்டத்தில் நாமக்கல் என்னும் ஊரினர்: நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டு தேசியக் கவிதைகள் பல பாடித் தமிழ் நாட்டின் தேசிய இயக்கத்திற்கு ஊக்கமும் உணர்வும் ஊட்டியவர்; கவிதை நூல்கள், உரை நடைப் புதின நூல்கள் பல இயற்றியவர். இப்பாடல் வீரர் வ. உ. சிதம்பர னாரின் திருவுருவத்தை நினைவூட்டும் கவிதை ஓவியம்.]

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சு கேட்கும்!
கறுப்பெனினும் சிரிப்புமுகம் கருணை காட்டும்!
குள்ளமென்னும் ஓர்உருவம் இருகை கூப்பிக்
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்க நிற்கும்!
வெள்ளையின்றி வேறுநிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்!
கொள்ளைகொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்!
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால். 9

# 8. புதுமைப் பாடல்கள்

[புதிய எண்ணங்களைப் புது முறையில் வெளியிடும் புதுமைக் கவிஞர்களுடைய பாடல்கள் சில இப்பகுதியில் தரப்பட்டுள்ளன. வருங்காலப் புதுமுறை வாழ்வுக்குத் தம்மைப் பண்படுத்திக்கொள்ளும் மாணவர்களுக்கு இவை பெரிதும் ஊக்கம் தருவன.]

### பெண் விடுதலை

[இது பெண் விடுதலையை வற்புறுத்துவது. இதனைப் பாடியவர் **தேசீய கவி சுப்பிரமணிய பாரதியார்.**]

பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன் ; அதற்குரிய பெற்றி கேளீர் :
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்
மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட் டீரே!
விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர் ;
விடுதலையென் பீர் ;கருணை வெள்ளம் என்பீர் ;
பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை. 1

### திறமான புலமை

[தமிழ் மக்கள் தம் தாய் மொழி வளர்ச்சிக்குச் செய்யவேண்டுவன இப்பாட்டில் கூறப்பட்டுள்ளன. இதுவும் சுப்பிரமணிய பாரதியாரால் பாடப்பட்டது.]

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் ;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் ;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை ;
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்ய வேண்டும். 2

### கவிமணியின் ஆசை

[கீழ்வரும் பாடலில், வருங்காலத்தில் நாடும் மக்களும் எவ்வாறு சிறக்க விளங்கவேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. வருங்கால மக்களாகிய இன்றைய மாணவர் இதனை உணர்ந்து உளம்கொள்ளுதல் நன்று. இப்பாடல் 'மலரும் மாலையும்' என்னும் நூலில் உள்ளது. இதனை இயற்றியவர் **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.**]

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;
சாலைகளில் பலதொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்;
சிலையுடை கதருடையாய்த் திகழ வேண்டும்;
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்;
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;
வெற்றியின்மேல் வெற்றியெமக் கெய்தவேண்டும். 3

### கவிஞரின் கட்டளை

[இளந்தமிழர் கடைப்பிடிக்க வேண்டியவற்றை அவர்கட்கு அறிவுறுத்தும் முறையில் இப்பாடல் அமைந்துள்ளது. இதனைப் பாடியவரும் **நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.**]

ஓடிஓடி நாட்டிலெங்கும் உண்மையைப் பரப்புவாய்;
ஊனமான அடிமைவாழ்வை உதறித்தள்ள ஓதுவாய்;
வாடிவாடி அறம்மறந்து வறுமைப்பட்ட தமிழரை
வாய்மையோடு தூய்மைகாட்டும் வலிமைகொள்ளச் செய்கு [வாய்;
கூடிக்கூடிக் கதைகள்பேசிச் செய்கைபற்ற யாரையும்
குப்பையோடு தள்ளிவிட்டுக் கொள்கையோடு நின்றுநீ
பாடிப்பாடித் தமிழின்ஓசை உலகமெங்கும் பரவவே
பார்த்தயாரும் வார்த்தைகேட்டுப் பணியுமாறு சேவை செய்.

### கவிஞரின் அழைப்பு

[பழந்தமிழ் புது நலம் பெற்றுப் பொலியச் செய்யவேண்டுவனவற்றை இப் பாடல்கள் தொகுத்துக் கூறுகின்றன. இவை கவிஞர் பாரதி தாசனால் பாடப் பட்டவை.]

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்;
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்;
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு

தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும்வேண்டும்;
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். 5

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்;
தமிழ்மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்;
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்;
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம் குறைகளைந்தோ மில்லை;
தகத்தகா யத்தமிழைத் தாபிப்போம் வாரீர்! 6

*சமரசம்*

[இப்பாடல் சமய சமரசத்தை வற்புறுத்துகின்றது. இதனைப் பாடியவர் **தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.**]

உலகினில் துன்பம் நீங்க உண்டனை நஞ்சை, அன்பே
சிலுவையில் நின்று செந்நீர் சிந்தினை, அரசை நீத்து
விலகினை, மாடு மேய்க்க விரும்பினை, அடியும் தாங்கி
இலகினை, சமர சத்தை எண்ணினால் துயரம் போமே. 7

*அருட்பணி*

[தமிழ் நாட்டைப் பழம்பெருமை பெறுவிக்கும் அருட்பணிக்கு எழுமாறு தமிழ் மக்களை அழைப்பதாக அமைந்துள்ளது இப்பாடல். இதனைப் பாடியவர் **கவி யோகி சுத்தானந்த பாரதியார்.**]

முன்னாளில் உலகமெலாம் கப்பல் ஊர்ந்தோம்;
முச்சங்கக் கலைவளர்த்தோம்; தொழில்வளத்தால்
பொன்னூறு நாட்டினிலே பொங்க வைத்தோம்;
புவியரசர் கவியரசர் புலனை வென்ற
தன்மயமாந் தவத்தரசர் தறுகண் வீரர்
தணலுங்கற் பரசிகளுந் தழைக்க வாழ்ந்தோம்;
அன்னபுகழ் இந்நாளும் அடைய வல்லோம்;
அயராமல் எழுந்திருமின் அருட்ப ணிக்கே. 8

# 1. நீயும் உனது நாடும்

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்.

உலகம் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறது ? உலகம் வெறும் கல்லும் மண்ணும் அன்று. மக்கட்கூட்டம் உலகினை மாற்றி யமைத்த வரலாறே உலக வரலாறு. எத்தனையோ இக்கட்டு ! எத்தனையோ வருத்தம் ! இவ்வளவும் பட்டு, மரத்தில் தொத்தியும் குகையில் ஒளிந்தும் வாழ்ந்த மனிதன், இன்று ஆகாயத்திற் பறந்தும் அணுவைப் பிளந்தும் வாழ்கிறுன். காந்தியடிகளைப் போலத் தம் உயிரையும் கொடுத்து அறத்தோடு அன்பினை நிலை நாட்டி வரும் மக்களின் முயற்சியே இந்த உலகின் முடிமணியாக விளங்குகிறது. விலங்கு நிலையிலிருந்து மனிதத் தன்மை பெற்று நிற்கும் இந்த வெற்றியைப் பாதுகாப்பது உன்னுடைய கடமை.

உலகம் இன்று ஒரு குடும்பமாக விளங்குகிறது. வானெலி, ஆகாய விமானம் முதலான விஞ்ஞானக் கருவிகள், தொலை தூரம் என்பதே இல்லாதபடி, எல்லா நாட்டினையும் அண்டை அயல் வீடுகள் போல அமைத்து வருகின்றன. அமெரிக்காவில் பேசு வது அந்த இமைப் போதிலேயே நமக்குக் கேட்கவில்லையா ? உலகம் ஒரு குடும்பம் என்பது அவ்வளவு தூரம் உண்மையாகி விட்டது. ஆதலின், தனியே நான் என்ன செய்வேன் என்று தயங்காதே ! புலியும் சிங்கமும் யானையும் இன்று உன் அடிமை கள் ! நீர் வீழ்ச்சிகளும், பெரு மலையும், நீலக் கடலும், அகன்ற வானமும் உன் காலடியில் பணிசெய்து வழிபடும் கையாட்கள். ஐந்தாறடி மனிதன் உயிர்ப் பொருள்களையும் உயிரல்லாத பொருள் களையும் ஆள்கிறுன். அண்டத்தில் அரிசிப் புழுப் போன்ற இவன் அண்டத்தினையே எடையிட்டுச் சொல்கிறுன். இந்த வியத்தகு செயலினை இவன் செய்வது எப்படி ? கூட்டுறவு வாழ்வின் பயன் இஃது. ஆதலின் தனியே நான் என்ன செய்ய முடியும் என்று

தயங்காதே ! கூட்டுறவு வாழ்வே மனித வாழ்வு. தனியே நீ செய்ய வேண்டுவது என்ன ? தனித் தனியே ஒவ்வொருவனும் இந்த உலக அன்பினை, இந்த உலக அறத்தினை, இந்த உலக அழகினை எண்ணத்தாலோ பேச்சாலோ செயலாலோ கெடுக்காமல் இருக்க வேண்டும். இஃது உன்னால் ஆகக்கூடியது. 'எல்லோரும் வாழக் கேடு ஒன்றும் இல்லை'. இந்த நோக்கத்தோடு கூடும் மக்கட் சமுதாய நிலையங்களில் சேர்ந்து உழைப்பதும் உன்னால் ஆகக் கூடியதே ஆம்.

அணுக்குண்டால் உலகம் அழியுமோ' என்று எல்லோரும் நடுநடுங்குகின்றனர். தீயைக் கண்ட மனிதன் விருந்து உண்ணக் கற்றுக்கொண்டதோடு, அயலார் வீட்டினையும் எரித்தழித்தான். அன்றும் உலகம் நடுநடுங்கிற்று. வெடிகுண்டு கொண்டு மலையைப் பிளந்து வழிகண்ட மனிதன், வெடிகுண்டு கொண்டு மக்களைக் கொன்று குவித்தான். அன்றும் உலகம் நடுநடுங்கிற்று. இன்றும், அணுச்சக்தியால் கப்பலோட்டலாம்; விமானத்தில் பறக்கலாம் ; எந்திரம் சுழற்றலாம் ; இன்பமாக வாழலாம். ஆனால் மனிதன், விலங்கிலிருந்து வளர்ந்தோங்கியவன். புலியும் சிங்கமும் நரியும் ஓநாயும் அவனுக்கு உள்ளே அடங்கிக் கிடக்கின்றன ; அப்போதப்போது எரிமலைத் தீயைக் கக்குகின்றன. அணுக்குண்டு அத்தகையதொரு நிகழ்ச்சி. ஆனால், மனிதனிடம் கடவுள் தன்மையும் உண்டு. புத்தரும் காந்தியும் கிறிஸ்துவும் மகமது நபியும் அவனுள்ளே ஓங்கி வளர்கின்றார்கள். உலகம் நடுநடுங்குகிறது என்றாலும், அந்த நடுக்கம் கெட உன் நாளில், நீ காண வாழ்ந்த காந்தியடிகள் வழியே நடந்து செல் ; விஞ்ஞானப் புலவர்கள் அணுச்சக்தியைப் பயன்படுத்தி உலகினை வாழ்விக்க முயல்கின்ற முயற்சியில் நீயும் ஈடுபடு. எல்லோருமாகச் சேர்ந்து அவர்களுக்குத் துணை செய்து போற்ற வேண்டும். அதுவேனும் செய். முன் சென்றோரைப் போல நீயும் மனிதன் ; வெறும் விலங்கன்று. புத்தர் வழி வந்தவன் நீ. வள்ளுவர் வழி வந்தவன் நீ. ஆளுடைய நாயன்மார்கள் வழி வந்தவன் நீ. ஆழ்வார்கள் வழி வந்தவன் நீ. அசோகன் வழி வந்தவன் நீ. அக்பர் வழி வந்தவன் நீ. சிவாஜி வழி வந்தவன் நீ. கரிகாலன் வழி வந்தவன் நீ. செங்குட்டுவன் வழி வந்தவன் நீ. நெடுஞ்செழியன் வழி வந்தவன் நீ. கண்ணகி வழி வந்தவன் நீ. சங்கப்புலவர் வழி வந்தவன் நீ. காளிதாசன் வழிவந்தவன் நீ. கம்பன் வழி வந்தவன் நீ. பாரதி வழி வந்தவன் நீ. அம்மட்டுமா ! உலகப் பெரியார் எண்ணியன எல்லாம் இன்று

உன் எண்ணம் அன்றோ? சாக்ரடீஸ், கிறிஸ்து, மகமது நபிகள், கன்பூசியஸ், ஷேக்ஸ்பியர்—அனைவரும் எண்ணிய எண்ணங்களும், பேசிய பேச்சுக்களும், செய்த செயல்களும் உன்னை மாற்றியமைத்திருக்கவில்லையா? இத்தனை பேர் தோளிலும் ஏறி நிற்கின்ற நீ வானகத்தினையே கண்ணாரக் காணவில்லையா? அஞ்சாது முன் செல்.

உன்னுடைய உடம்பிலே பல ஆற்றல்கள் வளரக்கூடும். உன்னுடைய அறிவு உயர்ந்த நிலையை அடையக் கூடும். உன்னுடைய ஒழுக்கம் எல்லோரும் வியக்கும் நிலையை எட்டுதல் கூடும். பொன்னும் மணியுமிருந்தால் அவற்றினைக் காத்துப் பொலிவு பெறச் செய்யாது, கடலில் எறிவார் உண்டோ? இந்த ஆற்றல்களை வீணே நீ அழியவிடலாமா? உன்னால் முடிந்தவரையில் முயன்று சிறப்படைய வேண்டாவா? முயன்றால் முடியாதது எது? **'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணிய ராகப்பெறின்'** என்று உன் நாட்டு வள்ளுவர் கூறியுள்ளார். கதிரவன் மறையாத சாம்ராஜ்யம் என்று பெருமை பேசும் ஆங்கிலப் பேரரசினைக் காந்தியடிகள் தன்னந் தனியே அன்பால் வென்ற காட்சியினை நீ காணவில்லையா? ஆதலால், முடிந்தவரையில் முயல்! அஃது உனக்கும் நல்லது; உலகுக்கும் நல்லது. உலகம் இதற்கு மேல் உன்னிடம் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. இயற்கை, முன் சென்றவர்களுக்கு எல்லாம் துணை செய்தது போல, உனக்கும் துணை செய்ய வளங்கொழித்துக் கிடக்கிறது. இமயமலை நுறுங்கவில்லை. காவிரியும் கங்கையும் வற்றவில்லை. கடல் தூர்ந்துவிடவில்லை. வானம் இடியவில்லை. கதிரவன் கறுக்கவில்லை. காற்று ஒய்ந்துவிடவில்லை. பிரளயம் வந்துவிடவில்லை. இவை யத்தனையும் மேலும் மேலும் சிறந்து உனக்குத் துணை செய்யக் காத்துக்கிடக்கின்றன. பொன்னும் இரும்பும் உன் கைப்பட்டதும் உடலெல்லாம் பூரித்துக் காட்சியளிக்கக் காத்துக்கொண்டிருக்கின்றன. உன் நாட்டு மண்ணுக்குள் என்ன என்ன வியப்பு!—அருகே சென்று உழைத்துப் பார். இயற்கை மட்டுமா? மக்கள் கூட்டமும் இந்தக் குறிக்கோள்களைப் போற்றி வழிபட்டு உன்னைச் சுற்றி நிற்கின்றது. மனங் குன்றாதே, எழுந்திரு. உன்னை நீயே பார். நடந்து செல்! உயர்ந்த நோக்கத்தினை மறவாதே. ஆனால், இந்த நோக்கங்கள் வெறும் பகற்கனவாக ஒழிதல் ஆகாது; இவை செயலாக மலர வேண்டும்; உலகெல்லாம் மணக்கவேண்டும். அடுத்த அடி

எங்கு எடுத்து வைப்பது என்பதனையும் மறவாதே. தொலைவிலும் பார்; அண்மையிலும் பார். முடிவையும் நோக்கு; வழியையும் நோக்கு. வெற்றி நமதே!

தனியாளின் பெருமை உனக்கு விளங்குகிறது அன்றோ? நீ சாகப் பிறந்தவன் அல்லன்; வாழப் பிறந்தவன்—வாழ்விக்கப் பிறந்தவன். யார் அறிவார்? நீ காந்தியாகலாம்; விஞ்ஞான இராமனாகலாம்; கணக்கறிஞன் இராமானுசனாகலாம்; பாவலன் பாரதியாகலாம்; இராசேந்திர சோழன் போன்ற படை வீரனாக லாம்; காவிரிக்குக் கரைகோலி யணைகட்டும் கரிகாலனாகலாம். உன் தனித் தொந்தரவுகள் பல இருக்கலாம். வறுமை, நோய், இன்னும் எத்தனை எத்தனையோ இக்கட்டுகள்! வருங்காலத்தி லேனும் வருகின்ற உனது பரம்பரை இப்படி வாடக்கூடா தன்றோ? உன் சிக்கல் எனச் சோர்ந்துவிடாதே. இவை ஒரு வகையில் உலகினை அரித்துத் தின்னும் பெரு நோய்கள் என உறுதிகொள். ஆதலின், அவற்றினை அடியோடு அழிக்க ஊக்கத் தோடும் போரிடு. ஆனால் தன்னலத்திற்கு அடிமையாகாதே. உலக நலமே இவ்வாறு உன்னலமாக இன்பந்தர எதிர் நிற்கும் போது, நீ வாடி வதங்குவதேன்! உன் சிக்கல்களைக் கட்டாயம் தீர்க்கத்தான் வேண்டும். ஆனால், அவற்றினை நினைத்தவுடன் ஒழித்துவிட முடியும் என மனப்பால் குடியாதே. நீ ஒருவன் மட்டுமா உலகில் வாழ்கிறாய்? எல்லோரும் வாழ எல்லோரும் உழைக்கின்றனர். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? ஆதலின், ஒரு நாள் தீரும்; ஐயம் இல்லை. அறிவோடும் அன் போடும் அனைவருடனும் ஒத்துழை. பெனிசிலின் போன்ற மருந்துகள் சஞ்சிவிகளாய் எவ்வளவு உயிர்களைக் காப்பாற்று கின்றன! விஞ்ஞானம் எவ்வளவு வகையில் நம் தொந்தரவுகளைக் குறைத்திருக்கின்றது பார்!

ஆனால், இந்த நெறியில் ஆளும் மனப்பான்மை வேண்டா. அடிமை மனப்பான்மை வேண்டா. தொண்டு மனப்பான்மையே வேண்டும். எல்லோரும் இந்த நாட்டின் தலைவராக (ஜனாதி பதி) முடியுமோ! ஒருபோது ஒருவர்தாமே தலைவராக இருக்க முடியும்! அப்படித்தான் ஒவ்வொரு துறையிலும்! ஆதலால், அதற் காக வருந்திக்கொண்டு கிடக்க வேண்டா. கிடைத்தால் நல்லது. கிட்டாதாயின் வெட்டென மற. இந்த நாட்டில், பிறர் கொள்ளை நோயால் சாவாதபடி, குப்பை வாரும் தோட்டியும் நாட்டுத் தலைவர்

போல நாட்டினையும் உலகினையும் காக்கும் பெருந் தொண்டினையே செய்கிறான் என்று உள்ளத்திலே உறுதிகொள். ஒவ்வொருவனும் தன்தன் கடமையைச் சரிவரச் செய்து வந்தால், உலகம் இன்பம் கொழிக்கும். இந்த அறிவுரையைத் தோட்டியிடம் பேசி ஏமாற்றாதே. தோட்டியும் தொண்டமானும் ஒன்றென நடந்து காட்டு. தோட்டியாகவும் தொண்டு செய்; தொண்டைமானாகவும் தொண்டு செய். 'புறக்கடையில் இருந்து (பாய்கானாவிலிருந்து) ஓலக்கம் (திவான்கானா) வரை தன் தொண்டினைத் தானே செய்யப் பழகவேண்டும்' என்றார் காந்தியடிகள். ஆளும் மனப்பான்மை ஒழியுமானால், உரிமையைப் பறிக்கும் நிலைமையும் ஒழியும்; எல்லோரும் உரிமையோடு வாழமுடியும். கடமையும் உரிமையும் ஒன்றாக இயைந்து உலகினை வாழ்விக்கும் வழி இதுதான்.

உன்னுடைய தொழில் என்ன? நீ எதற்காகப் பிறந்திருக்கிறாய்? உன்னுடைய வாழ்வின் நோக்கம் என்ன? உன்னுடைய ஆற்றலை எல்லாம், அறிவினை எல்லாம், அன்பினை யெல்லாம், அறத்தினை எல்லாம் உன்னால் முடிந்தவரை வளர்த்துவிடு! பயன்படுத்து! உன் தொல்லைகள் உலகத் தொல்லைகள் என எண்ணி உறுதி கொண்டு நீக்க முயல். தன்னலம் ஒழியும் என்பது இல்லை. அஃது உலக நலமாக மாறிவிடும். ஆளும் மனப்பான்மை வேண்டா. நீ இன்பமாக இருக்க இதுவே வழி; வாழ இதுவே வழி. உன்னால் ஆனதை வஞ்சனையின்றி உன் நிலைமைக்குத் தக்கபடி உன்னையும் மறவாது உன்னலத்தினை உலக நலமாகக் கருதி எல்லோர் உரிமையையும் போற்றி ஓரடியேனும் முன்வைத்து நடப்பதே உன் வாழ்வில் வெற்றி பெறும் வழியாம். நடந்து செல். நிமிர்ந்து நில். உனக்கும் வெற்றி! உன் நாட்டிற்கும் வெற்றி! உலகுக்கும் வெற்றி!

# 2. தமிழ் நாடு

ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

நமது தாய் நாடு தமிழ் நாடு; தாய் மொழியும் தமிழ் மொழியே.

> "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
> தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
> தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
> சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று பாரதியார் பாடியவாறு இன்பமும் வீரமும் தமிழ் நாடெங்கும் பொங்கித் ததும்புகின்றன. தமிழ் நாட்டின் பெருமை, நமது பெருமையே யாகும். நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாக இந் நாடு, செம்மை சான்ற நன்னாடாய்ச் சிறப்புற்று விளங்கிற்று.

### வளங்கள் நிறைந்த தமிழ் நாடு

பழந் தமிழ் நாட்டில் பலவகை வளங்களும் நிறைந்திருந்தன. நீர்வளமும் நிலவளமும் நிலைத்திருந்தமையால் தமிழ் மக்கள் பசியும் பிணியும் அறியாராய் வசியும் வளனும் சிறக்க வாழ்ந்து வந்தார்கள். செந்தமிழ் நாட்டின் சென்னியாய்த் திகழ்ந்த வேங்கட மலையின் ஓங்குயர் சாரலும், தமிழ்முனி வதியும் தென் தொடர் மலையும், அம் மலைக்குத் தென்பால் மந்திரமலையாய் இலங்கிய மகேந்திர மலையும், தமிழகத்தில் நீங்கா வளத்தை நிலைபெறச் செய்தன. இன்னும், பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடப் புலவர் பாடும் புகழமைந்த பொன்னியாறு, சோழ நாட்டை நீர் நாடாக்கியது. வையை யென்னும் பொய்யா நதியும், பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை யெனும் திருநதியும் பழம் பதியாய பாண்டி நாட்டை வளம்பெறச் செய்தன. இன்னும் மஞ்சு சூழ்சோலை மலைநாடாய சேர நாட்டில் பெரியாறு பொழிந்து பெருவளம் பெருக்கியது. தென் குமரிக்குத் தென் பால், பல துளியாய்ப் பெரு வெள்ளமாய்ப் பல்கிப் பெருகிய பஃறுளி யாறும் பரந்து சென்றது. இத்தகைய நீர்வளமும் நில வளமும் நிறைந்த தமிழ்நாடு அறத்திற்கோர் இருப்பிடமாய் அமைந்து விளங்கிற்று.

### வண்மை மிகுந்த தமிழ் நாடு

"தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது" என்னும் உண்மையைத் தமிழ் மக்கள் கடைப்பிடித் தொழுகினார்கள். வேளாண்மை என்னும் விழுமிய பணியை மேற்கொண்ட தமிழ் மக்கள் அறவோர்க்கும் ஆதரவாய் நின்று அறநெறியைப் போற்றினார்கள். வறுமை நோயகற்றும் வள்ளன்மை, தமிழ்நாட்டினைத் தலைசிறப்ப விளக்கிற்று. வரையாது பொருள் வழங்கி வண்மைக் கோர் இருப்பிடமாய் விளங்கிய வள்ளல்களின் வரலாற்றைத் தமிழ் நூல்கள் விளக்குகின்றன. அறிவால் குறைந்த உயிர்களிடத்தும் அருள் நெறி காட்டிய வள்ளல்களின் பெருமை உலகம் உள்ளளவும் அழியாததாகும். செழித்தோங்கிப் படர்வதற்குக் கொழுகொம்பின்றி நிலத்தில் குழைந்து கிடந்த ஓர் முல்லைக் கொடியின் துவண்ட நிலை கண்டு மனமுருகி, அக் கொடிக்குப் படரிடமாய்த் தன் அழகிய தேரை விட்டுச் சென்ற வள்ளலின் வரலாறு பழந் தமிழ் நூல்களில் பாராட்டப்படுகின்றது. இன்னும் "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று புகழப்பட்ட பாரி என்னும் வள்ளலும் நம் தமிழ் நாட்டின் திருமகனே யாவான். இவ்வாறு அன்பும், அருளும் தமிழ் நாட்டில் நிறைந்து தமிழ் மக்கள் களித்துச் செழித்து வாழ்வாராயினர்.

### வீரம் செறிந்த தமிழ் நாடு

வண்மையில் ஒப்புயர்வற்று வாழ்ந்திருந்த தமிழ் மக்கள், ஆண்மையிலும் அவ்வாறே தலை சிறந்திருந்தார்கள். ஆண் மக்கள் அனைவரும் ஆண்மையும் நிறைந்து விளங்கினார்கள். பெண்களும் வீரமக்களைப் பெற்றெடுத்த வீரத் தாயராக விளங்கினார்கள். அமர்க்களம் செல்லுமாறு போர்க்கோலம் புனைந்து நின்ற தன் மகனை நோக்கி, "ஐயனே! நீ மாற்றாருடன் போர்புரிந்து வெற்றி பெற்று மீண்டால், நான் மிக மகிழ்வேன். அவ்வாறின்றித் தோல்வியுற நேரின், அஞ்சா நெஞ்சோடு அமர்க்களத்தில் நின்று மாற்றாரது அம்பு, நின் மார்பில் பாய்ந்து உயிர் துறப்பாயாயின் உன்னைப் பெற்ற போதினும் பெரு மகிழ்வடைவேன்" என்று ஆசி கூறித் தன் அருமைத் திருமகனை அமர்க்களத்துக்கு அனுப்பிய, வீரத் தாயர் விளங்கிய நாடு நம் தமிழ் நாடேயாகும். இன்னும் தமிழ் நாட்டின் பெருமையை இந்திய நாடு முழுமையும் பரப்பக் கருதித் தமிழ்ச் சேனை கொண்டு வடநாடு சென்று அயலரசர் அனைவரும் அஞ்சி அடங்க, இமயமலை வரையும் சென்று அம்மலையில் தனது

வெற்றிக் கொடியை நாட்டிய வீரனை கரிகாற் பெருவளத்தான் தமிழ் அரசனே யாவான்.

அன்றியும், தமிழ் நாட்டின் பெருமையையும் ஆற்றலையும் அறியாது வட நாட்டரசர் இருவர் தமிழ் வீரத்தை இகழ்ந்துரைத் தார் என்று கேள்வியுற்று, அடங்காச் சீற்றம்கொண்டு வட நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அவரது செருக்கையும் சிறுமை யையும் அமர்க்களத்தில் அழித்துச் சிறை செய்து மீண்ட சேரன் செங்குட்டுவனும் தமிழ் அரசனே யாவான். இவ்வாறு பெருமை யும் புகழும் நிறைந்து வீரம் செறிந்த நாடாய் நம் தமிழ் நாடு விளங்கிற்று.

*மறைகள் மலிந்த தமிழ் நாடு*

இனி, உலகில் வாழும் மக்களது உயிர்க்கு உறுதி பயப் பனவாகிய உண்மைகளை உயரிய ஞானத்தால் கண்டு உணர்த்திய ஆன்றோர் தோன்றிய நாடும் தமிழ் நாடேயாகும். அறம், பொருள், இன்பம், வீடென்னும் உறுதிப் பொருள் நான்கையும் மறை முனிவர் நால்வர்க்கும் தென்முகப் பெருமான் தெரிவித்த நாடு தமிழ் நாடேயாகும். உறுதிப் பொருள்களில் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய வீட்டை விடுத்து அறம், பொருள், இன்ப மாகிய மூன்றையும் முப்பாலாக வகுத்துரைத்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் தோன்றியதும் தமிழ் நாடேயாகும். உலகில் வாழும் மக்களுக்கெல்லாம் உயர்நெறி காட்டிய புலவர் பெருமான் தோன்றிய பெருமை, தமிழ் நாட்டிற்கே உரியதென்னும் உண்மை.

"வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்னும் அழகிய மொழிகளால் இனிதுணரப்படும். இன்னும் நயம் தெரி புலவர்க்கு நல்விருந்தாய், கவிநயமும் கற்பனையும் கனிந்த இலக்கியக் காவியம் வரைந்த கம்பர் பெருமான் பிறந்ததும் தமிழ் நாடேயாகும். இன்னும் தமிழ் மக்களது பெருமைக்கும் செம் மைக்கும் என்றும் அழியாச் சான்று பகர்வதாய்ச் சிலப்பதிகாரம் என்னும் சீரிய நூலைச் செய்த சேரர் சிகாமணி தோன்றியதும் தமிழ் நாடேயாகும். இந்நூல் கற்றறிந்த புலவர்களுள்ளத்தைக் கவர்ந்து தமிழ் நாட்டின் பெருமைக்கு ஓர் கலங்கரை விளக்க மாய் நிற்கும் தன்மை, "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்னும் உண்மை உரையால் இனிது விளங்கும்.

### எம்மதமும் சம்மதமாய் ஏற்று நின்ற தமிழ் நாடு

பழந் தமிழ் நாட்டில் பலவகைச் சமயங்கள் பரவியிருந்தும் பல்வேறு வகுப்பார் வாழ்ந்திருந்தும் சமயப் போரும் சாதிப் போரு மின்றி ஒரு வயிற்றில் பிறந்த மக்கள் போலவே தமிழ் மக்கள் வாழ்வாராயினர். செம் பொருளாய சிவபெருமான் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், அறவோர் பள்ளியும் தமிழ் நாட்டில் அடுத்தடுத்து அமைந்திருந்தன. தமிழ் மக்கள் தமது அறிவிற்கும் மனப்பான்மைக்கும் பொருந்திய சமய நெறியை ஏற்றொழுகும் உரிமை பெற்றிருந்தார்கள். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள் சமண சமய அடியாராகவும், அவரது உடன் பிறந்தவனாகிய சேரன் செங்குட்டுவன் சைவ சமய சீலனாகவும் விளங்கிய தன்மையே இவ்வுண்மைக்குத் தலைசிறந்த சான்றாகும். இவ்வாறே அறுபான் மும்மை அடியார்களில் ஒருவராய மங்கை யர்க்கரசியார் சைவ நெறியில் சிறந்த பற்றுடையராயிருப்ப அவரது தலைவனான பாண்டிய மன்னன் சமண சமயம் சார்ந்தொழுகு வானாயினான். இத்தகைய மனப்பான்மை, தமிழ் நாட்டில் சமயப் பொதுமை இனிது இலங்கிற்றென்பதற்கு என்றும் அழியாச் சான்று தருவதாகும்.

### சாதி கடந்த சமத்துவ நன்னாடு

இன்னும், இவ்வுலகில் மக்களாய்ப் பிறந்தா ரெல்லாம் பிறப்பால் ஒற்றுமையுடையவ ரென்றும், ஒழுக்கத்தாலும், செய் தொழிலாலுமே வேற்றுமை உலகில் உண்டென்றும் விளக்கமாக எடுத்துரைத்த நாடு இத்தமிழ் நாடேயாகும். ஏனைய நாடுகள் சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறி நின்ற காலத்தில், "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்ற உண் மையை உலகினர்க்கு உணர்த்தியது தமிழ் நாடேயாகும். தொழில் முறையில் எத்தொழிலையும் இழிதொழில் என்று இகழாது மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் தொழில்களெல்லாம் சிறந்த தொழில் களாகவே பாராட்டப்பட்டன. இதனாலேயே தமிழ் நாட்டில் வழங்கும் வகுப்புப் பேர்களெல்லாம் பிறப்பினை அடிப்படையாகக் கொள்ளாது, தொழில் முறையால் பிறந்த பேர்களாகவே விளங்கக் காண்கிறோம். மறை பயிலும் தொழிலை மேற்கொண்ட மாந்தர் மறையோர் என்றும், வேளாண்மை என்னும் விழுமிய தொழிலை மேற்கொண்ட மக்கள் வேளாளரென்றும், வாசம் விற்பவர் வாசவர் என்றும், வெற்றிலை விற்போர் இலை வாணிகர்

என்றும், பறை சாற்றுவோர் பறையர் என்றும், பண்ணோடு பாட வல்லோர் பாணரென்றும் இவ்வாறே பல வகுப்பாரும் அவரவர் மேற்கொண்ட தொழிலுக்குரிய பெயர் பெற்று வாழ்வாராயினர். எக்குடியில் பிறப்பினும் எத்தொழிலைச் செய்யினும் ஒழுக்க முடையவர் உயர்ந்தவரென்றும், ஒழுக்கமற்றவர் தாழ்ந்தவரென்றும், தமிழ் மக்கள் கருதுவாராயினர்.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பது, தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் திருவாக்காகும்.

### *இறை ஒளியும் இசை ஒளியும் இலங்கி நின்ற தமிழ் நாடு*

இன்னும், இயற்கை நலங்கள் இனிதமைந்த இந் நாட்டில், இறைவனை இயற்கை அழகில் கண்டு வணங்கிய வரலாறு அறிவுடையார் கருத்தைக் கவர்வதாகும். கண்ணினைக் கவரும் வனப்பு வாய்ந்த மலை நாட்டில், மந்தியு மறியா மரங்களும், மஞ்சு தோய்ந்த சோலைகளும், மனத்தினை ஊக்கி ஒரு வழி நிறுத்த, இளமையும் அழகும் இனிதமைந்த பாலன் வடிவமாக இறைவனைக் கண்டு வழிபாடியற்றிய பெருமை தமிழ் நாட்டிற்கே யுரியதாகும். இன்னும் வேங்கட மலையின் விழுமிய சோலையினும், "கொம்பார் சோலைக் கோலவண்டியாழ் செய்" குற்றாலத்தினும் இறைவனது பெருமையைக் கண்டு வழிபட்டு நின்றது தமிழ் நாடேயாகும். இறைவனது பெருமையைக் குழலினும் யாழினும் அமைத்து ஊன் கரைந்து, உயிர் கரைந்து உருகி நின்றதும் தமிழ் நாடேயாகும். குழலும், வீணையும், யாழும் குழைய மழலை மொழிகளால் மறைமொழி யோதிய ஞானப்பாலர் பிறந்ததும் இந்நாடே. திறம்படக் கற்ற கல்வியின் திண்மையால் இறைவனது நெற்றிக் கண்ணைக் கண்டும் கலங்காது நின்ற புலவரேறுகள் பிறந்ததும் இந்நாடே. இத்தகைய புலவரது வண்மையால் வளம்பெற்று, இயல் இசை நாடகம் என்னும் முத்துறைகளிலும் மேம்பட்டு, என்றும் சீர் இளமை குன்றாச் செம்மொழியாய் விளங்கும் தமிழ் மொழி வழங்கும் திருநாட்டை மனமொழி மெய்களால் வழிபடுகின்றேன்.

# 3. வாழ்க்கைப் போராட்டம்

## பண்டித ஜவஹர்லால் நேரு

அங்கும் இங்கும் சிலரைப்பற்றிக் கூறுவது உண்மையான சரித்திரமாகாது. ஒரு தேச மக்களின்—பாடுபடுகிற ஜனங்கள், தங்களுடைய உழைப்பினால் சாதாரண வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களையும் ஆடம்பர வாழ்வுக்கு வேண்டிய பொருள்களையும் உற்பத்தி செய்பவர்கள், பல்வேறுபட்ட செயல்கள் புரிந்து தங்களுடைய செயலினால் பிறரைப் பாதித்தும் பிறருடைய செயலினால் தாங்கள் பாதிக்கப்பட்டும் வருகிற பொது ஜனங்கள் ஆகியவர்களின்—சரிதைகளைக் கூறுவதுதான் உண்மையான சரித்திரமாகும். இத்தகைய மனித சரித்திரம் உண்மையில் அற்புதமானதாக விளங்கும். மனிதன் யுக யுகாந்தரங்களாக இயற்கையோடும், பஞ்ச பூதங்களோடும், காடுகளோடும், காட்டு மிருகங்களோடும் எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னைச் சுரண்டித் தின்று கொழுக்க முயலும் தன் இனத்தாரில் சிலரோடும் நடத்தி வரும் போராட்டத்தின் கதையாக அது விளங்கும். சுருங்கச் சொல்லின் மனிதனுடைய வாழ்க்கைப் போராட்டத்தின் கதையாக அது விளங்கும். மனிதன் பிழைத்திருக்க வேண்டுமானால் உண்ண உணவும், தங்க இடமும், உடுக்க உடையும் வேண்டுமல்லவா? ஆகவே, இவ் வத்தியாவசியமான பொருள்களை உடையவர்கள் மனிதனை அடக்கி ஆண்டு வந்திருக்கிறார்கள். ஆட்சி புரிவோரும், எஜமானர்களும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களை உடையவர்களாகவும் அல்லது அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துவோராகவும் அவ்வாதிக்கத்தின் காரணமாக ஜனங்களைப் பட்டினி போட்டுப் பணியவைக்கக் கூடியவர்களாகவும் இருந்தபடியால், அவர்கள் மக்கள் மீது அதிகாரம் செலுத்த முடிந்தது. ஆகவே ஒரு சிலர் பெரும்பாலான மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் விபரீதக் காட்சியை நாம் பார்க்கிறோம். சிலர் ஒரு வேலையும் செய்யாமல் நிறையச் சம்பாதிக்கிறார்கள்;

---

. நேரு தம் மகள் இந்திராவுக்கு மார்ச் 28, 1932-ல் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி 'உலக சரித்திரம்' எனும் நூலினின்றும் எடுக்கப்பெற்றது. திரு. ஓ. வி. அழகேசன் அவர்கள் தமிழ்ப்படுத்தியது.

கோடிக்கணக்கான மக்கள் நன்ருக உழைத்தும் மிகவும் குறைவாகச் சம்பாதிக்கிருர்கள்.

ஆதியில் வேட்டையாடித் தனியே திரிந்த காட்டுமிராண்டி மனிதன், பின்பு சிறிது சிறிதாக ஒரு குடும்பமாக மலர்ச்சி அடைகிருன். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டமாகவும் ஒருவர் மற்றெருருவருக்காகவும் உழைக்கும் வழக்கம் ஏற்படுகிறது. பல குடும்பங்கள் அல்லது வீடுகள் சேர்ந்து ஒரு கிராமம் உண்டாகிறது. பல கிராமங்களிலுமுள்ள வியாபாரிகளும் கைத்தொழிலாளிகளும் சேர்ந்து சங்கங்கள் அமைத்துக்கொள்ளுகிருர்கள். இவ்வாறு சிறிது சிறிதாகச் சமூகம் என ஒன்று வளர்ச்சி பெறுகிறது ஆரம்பத்தில். காட்டுமிராண்டி நிலேயில் மனிதன் தனியாக வாழ்ந்தான்; எந்தவிதமான சமூகமும் இல்லே. அதற்கு அடுத்த நிலே குடும்பம்; அதன் பிறகு கிராமம்; அதன் பிறகு பல கிராமங்களின் சேர்க்கையாலாகிய ஒரு சமூகம். இந்தச் சமூகம் இவ்வாறு வளர்ந்த காரணம் என்ன? பிழைப்புக்காகப் போராடவேண்டி யிருந்ததால்தான் இந்த வளர்ச்சியும் ஒத்துழைப்பும் ஏற்பட்டன. யாவருக்கும் பொதுவான விரோதியைத் தாக்குவதாயினும் அல்லது அந்த விரோதியினின்றும் தம்மைக் காத்துக்கொள்வதாயினும் தனியே இருந்து அதைச் செய்வதைவிட எல்லாரும் சேர்ந்து செய்வது அதிகப் பலன் அளிக்கக் கூடியதாயிருந்தது. இதை விட, வேலே செய்வதில் ஏற்பட்ட ஒத்துழைப்பு அதிகப் பலனேக் கொடுத்தது. தனியாக உழைப்பதைவிடப் பலர் கூடி உழைத்தால் அதிகமான உணவுப் பொருள்களேயும் இன்னும் வாழ்க்கைக்கு அவசியமான மற்றைப் பொருள்களேயும் உண்டாக்கலாம். தனக்காக மட்டும் வேட்டையாடிப் பிழைத்து வந்த காட்டுமிராண்டி நிலேயிலிருந்து மக்கள் கூடி வேலே செய்யத் தலேப்பட்டவுடன் அந்த வேலேயில் ஏற்பட்ட ஒத்துழைப்புக் காரணமாக அவர்கள் பொருளதாரத் துறையிலும் வளர்ச்சி பெற்று வந்தார்கள். மனிதன் பிழைப்பை உத்தேசித்துச் செய்யும் முயற்சி பெருகப் பெருகப் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட இவ்வளர்ச்சிதான் சமூகம் என ஒன்று உண்டாவதற்கும், அது வளர்ச்சியுறுவதற்கும் காரணம் என்று சொல்லலாம். நீண்ட காலமாக வரும் சரித்திரத்தைக் கவனித்துப் பார்த்தால் அதன் ஊடே, முடிவில்லாத போராட்டத்துக்கும் துன்பத்துக்கும் சில வேளேகளில் பிற்போக்குக்கும் இடையில், இவ்வளர்ச்சியைக் காணலாம். ஆனல், இவ்வளர்ச்சியின் பயனுக உலகம் முன்

இருந்ததைவிடப் பிரமாதமாக முன்னேற்றம் அடைந்துவிட்ட தென்றோ, அல்லது அதிக இன்பம் பொங்குமிடமாக விளங்குகிற தென்றோ சொல்ல முடியாது. முன்னைவிடச் சிறிது உயர்நிலையை அடைந்திருக்கிறதென்று சொல்லலாம். ஆனால், எல்லாக் குற்றங் களும் நீங்கிய உத்தமமான நிலையை அடைவதற்கு இன்னும் வெகு தூரம் இருக்கிறது. எங்கு நோக்கினும் துன்பத்துக்குக் குறைவில்லை.

பொருளாதார வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும் அதிகமாக ஆக வாழ்க்கையும் அதிகச் சிக்கலுள்ளதாக மாறுகிறது. வியா பாரமும் வர்த்தகமும் பெருகுகின்றன. பெற்றுக்கொள்பவனிடம் ஒன்றையும் எதிர்பாராமல் பண்டங்களைக் கொடுத்துவந்தது போய்ப் பதிலுக்கு வேறு பண்டங்களைப் பெற்றுக்கொள்வது என்கிற பண்டமாற்று முறை ஏற்படுகிறது; அதன் பிறகு பணம் புழங்க ஆரம்பிக்கிறது. அதனால் எல்லாவிதமான பேரங்களிலும் பெரிய மாறுதல் உண்டாகிறது. வாங்கின பொருளுக்குப் பொன் அல்லது வெள்ளி நாணயங்களைக் கொடுப்பது மிகவும் சுலப மான முறையாயிருப்பதால் வியாபாரம் பெருகுகிறது. இதற்குப் பிறகு ஜனங்கள் நாணயங்களைக்கூட எப்பொழுதும் உபயோகிக் காமல் அடையாளங்களை உபயோகிக்க ஆரம்பிக்கிறார்கள். இவ்வளவு பணம் கொடுக்கப்படும் என்று ஒரு காகிதத்தில் உறுதி எழுதப்பட்டிருந்தால் அதுவே போதும் என்று கருதப்படு கிறது. இவ்வாறு 'பாங்கி நோட்டு'களும் 'பண முறி'களும் வழங்கத் தலைப்படுகின்றன. அதாவது பணம் கொடுக்கப்படும் என்கிற நம்பிக்கையின்மீது கடன் வியாபாரம் செய்யப்படுகிறது என்று அர்த்தம் (**doing business on credit**). இந்த நம்பிக்கை காரணமாகவும் வியாபாரமும் வர்த்தகமும் விருத்தியடைகின்றன. இக்காலத்தில் நோட்டுகளும் பண முறிகளும் அதிகமாக உப யோகப்படுத்தப்படுகின்றன என்பது உனக்குத் தெரிந்ததே. தெரிந்தவர்கள் பொற்காசுகள் அல்லது வெள்ளிக்காசுகள் கொண்ட பைகளைத் தூக்கிக்கொண்டு போவதில்லை.

ஆகவே, சரித்திரம் ஆதிகாலத்தை விட்டு முன்னேறிச் செல்லச் செல்ல, மனிதர்கள் அதிகமாகப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வியாபாரத்தை எடுத்துக்கொண்டு அதைச் செவ்வையாகச் செய்கிறார்கள். பிறரிடமிருந்து பொருளைப் பெற்றுக்கொண்டு தங்களிடமுள்ள பொருளைக் கொடுக்கிறார்கள். இவ்வாறு வியாபாரம் விருத்தி யடைகிறது என்று நாம் காண்கிறோம்.

# 4. அருள் ஞானத் தந்தை

## ரோமெய்ன் ரோலந்து

இந்திய தேசிய சரித்திரம் பிற்காலத்தில் எழுதப்படு மானுல் அதில் மகாத்மா காந்தி ஒரு தேசிய வீரராக மட்டும் போற் றப்படமாட்டார். யுக சரித்திரத்தில் அவருடைய பெயர் புனித ஞாபகத்துடன் போற்றப்படும். இந்திய மகா ஜனங்களின் ஒற்றுமை உணர்ச்சியையும், அவர்களுடைய சக்தியையும், அவர்க ளுடைய சுதந்திர இச்சையையும் பிரதிபலித்துக் காட்டும் கிரியா சக்தியாக அவர் விளங்குகிருர். மேனுட்டார் மறந்துவிட்ட— அல்லது—புறக்கணித்துவிட்ட ஏசுநாதரின் உபதேசத்தை மீண்டும் அவர் புதுப்பித்துக் கொணர்ந்திருக்கிருர். மானிட சமுதாயத்தின் முனிவர்கள், சாதுக்கள் முதலியோர்களுடைய வரிசையில் அவர் பெயர் சேர்க்கப்பட்டுவிட்டது. உலகத்தின் மூலை முடுக்குகளி லெல்லாம் அவருடைய உருவத்தின் ஒளி வீசுகிறது. அவர் தோன்றியதை ஏதோ ஒரு வியத்தகு செயல் நிகழ்ந்திருப்பதாகவே மேனுட்டார் கருதினுர்கள். அப்படிப்பட்ட ஒரு காலத்தில்தான் அவர் தோன்றினுர். அப்பொழுது ஐரோப்பிய மகாயுத்தம் நான்கு வருஷம் கோரமாக நடைபெற்று முடிந்திருந்த காலம். அந்த யுத் தத்தினுல் ஏற்பட்ட அழிவுகளும், மனக் கசப்புகளும் மறைய வில்லை. அதற்கு மாருக அவை வேரூன்றிக் கொண்டு வந்தன. அதே சமயத்தில் இன்னும் கடுமையான யுத்தங்களுக்கு விதை களும் தெளிக்கப்பட்டு வந்தன. மற்றும் அநேக நாடுகளில் புரட்சிகள் ஏற்பட்டுச் சமுதாயத் துவேஷங்களை அதிகப்படுத்திக் கொண்டு வந்தன. இவை எல்லாம் சேர்ந்து தேசங்களின் மனத்தை அரித்து வந்தன. ஐரோப்பா துக்கமும் ஏக்கமும் நிறைந்த ஓர் இரவுபோலிருந்தது. எங்கும் ஒளியின் ரேகை கூடக் காணப்படவில்லை. இப்படிப்பட்ட தருணத்தில் மெலிந்த தேகத் துடன் அரை நிர்வாணமுள்ள ஒரு சிறிய மனிதர் தோன்றினுர். அவர்தான் காந்தியடிகள். அவர் பலாத்காரத்தைப் புறக்கணித் தார். நியாய புத்தியும் அன்புமே அவருடைய ஆயுதங்கள். அவ

---

'மகாத்மா காந்தி' எனும் நூலின் ஒரு பகுதி. திரு. வெ. சாமிநாத சர்மா அவர்களின் தமிழாக்கம்.

ருடைய சாந்த சுபாவம் — ஆம், உறுதியான சுபாவம் — இப்பொழுது தனது ஆரம்ப வெற்றிகளை அடைந்து வந்திருக்கிறது. இதுகாறும் தனித்தியங்கிக் கொண்டு வந்த மேனாட்டு எண்ணம், பரம்பரை முதலியவைகளுக்கெல்லாம் விரோதமாக ஏற்பட்டிருக்கிற இந்த வெற்றியானது, ஒரு பெரிய புதிராகவே பலருக்கும் தோன்றியது. ஆனால், இந்த வெற்றியானது ஏக்கத்துடன் தவித்துக் கொண்டிருக்கும் மானிட ஜாதிக்கு ஓர் ஒளிபோலிருந்தது.

முதலில் யாரும் இதை நம்பவில்லை. இப்படிப்பட்ட ஒரு மகான் தோன்றியிருக்கிறாரென்பதைப் பலரும் நம்பச் சிறிது காலமாயிற்று. அவருடைய பெருமையை என்னைத் தவிர வேறு யாரறிவார்? ஏனென்றால் மகாத்மாவின் உபதேச உயர்வை முதன் முதலாகக் கண்டுபிடித்து அதனைப் பரப்பிய மேனாட்டார் பலருள் நான் ஒருவன். இந்தியாவின் ஆத்மீகத் தலைவரான அவருடைய நிதானமானதும், ஆனால், நிச்சயமானதுமான வேலைப்பாடுகளின் விளைவுகள் தெரிந்த பிறகே, மேனாட்டினர் பலரும் அவரை அங்கிகரிக்கவும் அவரிடம் நம்பிக்கை கொள்ளவும் ஆரம்பித்தார்கள். கிறிஸ்து நாதரே மீண்டும் தோன்றி யிருக்கிறாரென்று பலரும் கருதினர். சுயமாகச் சிந்திக்கிற வேறு பலர் மேனாட்டு நாகரிகம் ஒழுங்கீனமான முறையில் சென்று வருவதைக் கண்டும், தன்னுடைய விஞ்ஞான அறிவைக்கொண்டு தானே அழிந்துபோய்க் கொண்டு வருவதைப் பார்த்தும் மனமுடைந்தவர்களா யிருந்த சமயத்தில் அவர்களுக்குக் காந்தியடிகள் தோன்றியிருப்பது, மீண்டும் ரூஸ்ஸோவும்[1] டால்ஸ்டாயும் அவதரித்திருப்பதாகவே பட்டது. இந்த ரூஸ்ஸோவும் டால்ஸ்டாயும், தற்கால நாகரிகத்தினால் ஏற்பட்டிருக்கிற மயக்கங்களையும் குற்றங்களையும் கண்டித்து மனிதர்கள் இயற்கைவாழ்வுக்குத் திரும்பிச் செல்லவேண்டுமென்று கூறினார்களல்லவா? அரசாங்கங்கள் காந்தியடிகளைப் புறக்கணித்தன: இகழ்ந்தன. ஆனால், ஜனங்கள் அவரைத் தங்கள் சகோதரராகவும் நண்பராகவும் கொண்டார்கள். ஸ்விட்ஜர்லாந்தில் வசிக்கும் விவசாயிகள் முதலிய ஏழைமக்கள் அவரிடத்தில் எவ்வளவு பக்தி விஸ்வாசம் வைத்திருக்கிறார்களென்பது எனக்குத் தெரியும்.

இயேசுநாதருடைய மலைப் பிரசங்கத்தைப்போல் காந்தியடிகளின் அன்பும் ஞானமும் நிறைந்த உபதேசங்கள் இலட்சக்

---

1. ரூஸ்ஸோ — Rousseau. 1712—1778. ஒரு பிரெஞ்சு அறிஞர் (சமுதாய ஒப்பந்தம் என்னும் நூலை எழுதியவர்).

கணக்கான நன்மக்களின் இருதயத்தைத் தொட்டிருக்கிறதே யானுலும், தம்முடைய உபதேசத்தினுல் மட்டும், யுத்தத்திற்கும் அழிவுக்கும் தன்னை அர்ப்பணம் செய்துவிட்டிருக்கிற ஓர் உலகத்தின் போக்கை மாற்ற முடியுமென்று அவர் கருதவில்லை. அஹிம்சையை அனுஷ்டிக்க வேண்டுமானுல், அதற்கு இப்பொழுது ஐரோப்பாவில் எந்த ஒழுக்க நிலையுண்டோ அதற்கு வேறுபட்டதோர் ஒழுக்க நிலை வேண்டும். அப்படி அஹிம்சை வெற்றியடைய வேண்டுமானுல், மனிதன், தான் என்ற அகங்காரத்தை ஒழிக்க வேண்டும். ஆனுல், இந்த நிலை ஏற்படுமா? ஏன் என்ருல் இப்பொழுது உலகத்தில் சர்வாதிகார ஆட்சிமுறை உக்கிரத்தோடு பரவிவருகிறது. இந்த ஆட்சி முறையானது, இலட்சக் கணக்கான மக்களின் இரத்தத்தில் தன் அடையாளத்தைப் பொறித்து விட்டுப் போயிருக்கிறது.. இங்ஙனம் ஜனங்கள் செய்கிற தியாகமானது, இப்பொழுது ஒரு நல்ல பலனைக் கொடுக்குமென்று சொல்வதற்கில்லை. எப்பொழுதோ ஒரு காலத்தில், ஜனங்கள் அதிகமான கஷ்டத்தை அடைந்த பிறகு வெற்றி காணலாமோ என்னவோ? ஜனங்கள் இங்ஙனம் கஷ்டப்படுவதற்கு ஆற்றல் தேவை. இந்த ஆற்றல், காந்தியடிகளுக்கிருக்கிற நம்பிக்கையைப்போல் ஒரு நம்பிக்கை ஏற்பட்டால்தான் உண்டாகும்.

ஐரோப்பிய சரித்திரத்தின் மத்தியகாலத்தில், கிறிஸ்தவ மதத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் சில இயக்கங்கள் தோன்றின. அவை பெரிய சமுத்திரத்தின் மத்தியில் காணப்படுகிற தீவுகள் போலிருந்தன. அவை, நாகரிகத்தின் ஒழுக்க மேம்பாட்டையும். சமாதானம், அன்பு இவைகளையும், ஆத்மாவின் உயர்வையும்பற்றி உபதேசித்தன. இந்தஇயக்கங்கள் எந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றனவோ அந்த ஸ்தானத்தையே காந்தியடிகளின் இயக்கமும் பெறும். இது சிறந்த ஸ்தானந்தானே! மேற்படி கிறிஸ்தவச் சீர்திருத்த இயக்கங்களை ஸ்தாபித்த **செயின்ட் ப்ரூனே, செயின்ட் பெர்னுர்ட், செயின்ட் பிரான்சிஸ்** முதலியோர்களைப்போல் காந்தியடிகளின் ஆத்ம சக்தியும், இப்பொழுது மானிட சமுதாயம் எந்தக் கடுமையும் நெருக்கடியுமான பாதையில் சென்றுகொண்டிருக்கிறதோ அந்தப் பாதையில் அன்பையும் சாந்தியையும் புகுத்துமாக!

# 5. என் ஆசிரியர்

## டாக்டர் உ. வே. சாமிநாதையர்

[ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்முன் முதல் நாள் ]

அக்காலத்தில் பிள்ளையவர்கள் மாயூரத்தில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குரிய கட்டளை மடத்தை அடுத்து மேல்பாலுள்ள வீட்டில் இருந்து வந்தனர். நாங்கள் அவ்வீட்டிற்குச் சென்றேம்.

அப்போது அங்கே பிள்ளையவர்களுடைய தவசிப் பிள்ளை ஒருவர் வந்தார். அவரிடம் என் தகப்பனார் பிள்ளையவர்களை நாங்கள் பார்க்க வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டனர். அவர் அங்ஙனமே போய்ச் சொல்லப் பிள்ளையவர்கள் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தனர்.

### முதற் காட்சி

அப்புலவர் பெருமான் வரும்போதே அவருடைய தோற்றம் என் கண்ணைக் கவர்ந்தது. ஒரு யானை மெல்ல அசைந்து நடந்து வருவதைப்போல் அவர் வந்தார். நல்ல வளர்ச்சி யடைந்த தோற்றமும், இளந் தொந்தியும், முழங்கால் வரையில் நீண்ட கைகளும், பரந்த நெற்றியும், பின்புறத்துள்ள சிறிய குடுமியும், இடையில் உடுத்தியிருந்த தூய வெள்ளை ஆடையும் அவரை ஒரு பரம்பரைச் செல்வரென்று தோற்றச் செய்தன. ஆயினும் அவர் முகத்திலே செல்வர்களுக்குள்ள பூரிப்பு இல்லை; ஆழ்ந்து பரந்த சமுத்திரம் அலையடங்கி நிற்பது போன்ற அமைதியே தோற்றியது. கண்களில் எதையும் ஊடுருவிப் பார்க்கும் பார்வை இல்லை; அலட்சியமான பார்வையும் இல்லை: தம் முன்னே உள்ள பொருள்களில் மெல்ல மெல்லக் குளிர்ச்சியோடு செல்லும் பார்வைதான் இருந்தது.

அவருடைய நடையில் ஓர் அமைதியும், வாழ்க்கையில் புண் பட்டுப் பண்பட்ட தளர்ச்சியும் இருந்தன. அவருடைய தோற்றத்

தில் உத்ஸாகம் இல்லை; சோம்பலும் இல்லை; படபடப்பில்லை; சோர்வும் இல்லை. அவர் மார்பிலே ருத்திராட்ச கண்டி விளங்கியது.

பல காலமாகத் தவம் புரிந்த ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாஸகனைப்போல் நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத் தெய்வம்போல அவர் வந்தார். என் கண்கள் அவரிடத்தே சென்றன. என் மனத்தில் உத்ஸாகம் பொங்கி அலை எறிந்தது. அதன் விளைவாக ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது. அத் துளி இடையிடையே அப் புலவர் பிரானுடைய தோற்றத்தை மறைத்தது. சுற்றிலுமுள்ள எல்லாவற்றையும் விலக்கிவிட்டு அவரது திருமேனியில் உலவிய என் கண்கள் அவர் முகத்திலே பதிந்து விட்டன.

### 'வந்த காரியம் என்ன?'

அவர் வந்தவுடன் நின்றுகொண்டிருந்த எங்களை உட்காரும்படி சொன்னார். அந்தத் தொனியிலும் அமைதியைத்தான் நான் உணர்ந்தேன். எல்லாம் சாந்த மயமாக இருந்தன. அவரும் அமர்ந்தார்; என் தகப்பனாரைப் பார்த்து, "நீங்கள் யார்? வந்த காரியம் என்ன?" என்று விசாரித்தார்; அவ்வார்த்தைகள் அன்புடன் கலந்து வெளிவந்தன.

"நாங்கள் பாபநாசத்திற்குப் பக்கத்திலுள்ள உத்தமதானபுரத்திலிருந்து வருகிறோம். தங்களைப் பார்க்கத்தான் வந்தோம். இவன் என் குமாரன். தமிழ் படித்து வருகிறான். சில பேரிடம் பாடம் கேட்டிருக்கிறான். சங்கீதமும் அப்பியாசம் செய்திருக்கிறான். தமிழைத் தவிர வேறு ஒன்றிலும் இவன் புத்தி செல்லவில்லை. எப்போதும் தங்கள் ஸ்மரணையாகவே இருக்கிறான். ஆகையால் தங்களிடம் இவனை அடைக்கலமாக ஒப்பித்துவிட்டுப் போக வந்தேன்."

"உங்கள் பெயரென்ன?"

"என் பெயர் வேங்கடசுப்பன் என்பர். இவன் பெயர் வேங்கடராமன்" என்றார் என் தந்தையார்.

"வேங்கட சுப்பனென்பது நல்ல பெயர். வேங்கட சுப்ரமணியன் என்பதன் மரூஉ அது. திருவேங்கட மலையில் முருகக்

கடவுள் கோயில் கொண்டிருக்கிறார் என்பதற்கு இந்த வழக்கு ஓர் ஆதாரம்.''

அவர் பேச்சில் ஒரு தனி இனிமையை நான் உணர்ந்தேன். ''சாதாரணமாகப் பேசும்போதே அருமையான விஷயம் வெளி வருகின்றதே!'' என்று நான் ஆச்சரியம் அடைந்தேன்.

பிறகு பிள்ளையவர்கள் என்னைப் பார்த்து, ''நீர் யார் யாரிடம் என்ன என்ன நூல்களைப் பாடம் கேட்டிருக்கிறீர்?'' என்று வினவினர். நான் மெல்ல என் வரலாற்றைச் சொன்னேன். சடகோபையங்காரிடம் படித்தது முதல் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் காரிகைப் பாடம் கேட்டது வரையில் விரிவாக எடுத்துரைத்தேன்.

''இவருக்கு இசையில் எந்த மட்டும் பயிற்சி உண்டு?'' என்று என் தந்தையாரை நோக்கி அவர் கேட்டார். சங்கீதத்தை இசையென்று அவர் சொல்லியதை நான் கவனித்தேன்.

தாம் எனக்குச் சங்கீதத்தை முறையாகக் கற்பித்து வந்ததை என் தந்தையார் தெரிவித்தார். அப்பால் தாம் கனம் கிருஷ்ணைய ரிடம் குருகுல வாசம் செய்து சங்கீதம் கற்றதையும் சொன்னார்.

''இந்த ஊரிலுள்ள கோபால கிருஷ்ண பாரதியாரைத் தெரியுமா?'' என்று பிள்ளையவர்கள் கேட்டனர்.

''நன்றாகத் தெரியும். அவரும் கனம் கிருஷ்ணையரிடம் சில காலம் அப்பியாசம் செய்ததுண்டு.''

### பரீட்சை

இவ்வாறு எங்கள் வரலாற்றை அறிந்துகொண்ட பின்பு அக் கவிஞர் பெருமான் என்னைப் பார்த்து, ''நைடதத்தில், ஏதாவது ஒரு பாடலைச் சொல்லும்'' என்றார். அந்த மகா வித்துவானுக்கு முன், காட்டுப் பிராந்தியங்களிலே தமிழறிவைச் சேகரித்துக்கொண்ட நான் எவ்வளவு சிறியவன்! எனக்குப் பாடல் சொல்லத் தைரியம் உண்டாகவில்லை. மனம் நடுங்கியது. உடல் பதறியது; வேர்வை உண்டாயிற்று. நாக்கு உள்ளே இழுத்தது. இரண்டு மூன்று நிமிஷங்கள் இவ்வாறு நான் தடுமாறினேன். அப்பால் ஒருவாறு நைடதத்திலுள்ள ''தழைவிரி கடுக்கை மாலை'' என்னும் காப்புச் செய்யுளைக் கல்யாணி ராகத்தில் மெல்லச் சொன்னேன். முதலடியை,

"தழைவிரி கடுக்கை மாலைத் **தனிமுதற் சடையிற்** சூடும்" என்று நான் சொன்னேன். பிள்ளையவர்கள் இடைமறித்து, "**தனிமுதல்** சடையிற் சூடும்" என்று சொல்லித் திருத்தினர். பல காலமாகப் பிழைபட்ட பாடத்தை உருவேற்றி இருந்த எனக்கு அந்தப் பாடமே முன்வந்தது. என் நடுக்கம் அதிகமாயிற்று. ஆனாலும் பாடல் முழுவதையும் சொல்லி முடித்தேன். நான் அதைச் சொல்லும்போதே அவர் முகத்தையும் கவனித்தேன். "நான் சொல்வதில் அவருக்கு வெறுப்பு உண்டாகுமோ?" என்று பயந்தேன். நல்ல வேளையாக அவர் முகத்தில் அத்தகைய குறிப்பு ஒன்றும் தோற்றவில்லை. எனக்கும் சிறிது ஊக்கம் உண்டாயிற்று.

"இன்னும் ஒரு பாடல் சொல்லும்" என்றார் அவர். நான் நைடதத்தின் சிறப்புப் பாயிரமாகிய, "நிலவுபொழி தனிக் கவிகை" என்னும் பாடலைச் சாவேரி ராகத்தில் சொன்னேன். அந்த இரண்டு செய்யுட்களையும் மீண்டும் சொல்லிப் பொருள் கூறும்படி கூறினர். நான் பாடல்களைச் சொல்லிப் பொருள் கூறத் தொடங்குகையில் நாக்குத் தழுதழுத்தது.

"தைரியமாகச் சொல்லும்" என்று அக் கவிஞர்பிரான் கூறினர். நான் இரண்டு செய்யுட்களுக்கும் பொருள்கூறி முடித்தேன்.

"நிகண்டு பாடம் உண்டோ?" என்று அவர் கேட்டார். நான் "பன்னிரண்டு தொகுதியும் பாடம் உண்டு" என்று கூறவே சில சில பாடங்களைச் சொல்லச்சொல்லிக் கேட்டுவிட்டு, "நிகண்டை மனனம் செய்வது நல்லதே. இக்காலத்தில் அதை நெட்டுருப் பண்ணும் வழக்கமே போய்விட்டது. சொன்னால் யாரும் கேட்பதில்லை" என்றார்.

### சந்தேகப் பேச்சு

அப்போது என் தந்தையார், "இவனைத் தங்களிடம் ஒப்பித்து விட்டேன். எப்போது இவன் பாடம் கேட்க வரலாம்?" என்று கேட்டார்.

அப் புலவர் பெருமான் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அவர் எதையோ யோசிக்கிறார் என்று எண்ணினேன்; "ஒருக்கால் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டாரோ?" என்று அஞ்சினேன். அவர் மெல்லப் பேசத் தொடங்கினர்:

"இங்கே படிப்பதற்கு அடிக்கடி யாரேனும் வந்த வண்ணமாகவே இருக்கிறார்கள். வரும்போது பணிவாக நடந்துகொள்ளுகிறார்கள். சிலகாலம் படித்தும் வருகிறார்கள். படித்துத் தமிழில் நல்ல உணர்ச்சி உண்டாகும் சமயத்திலே போய்விடுகிறார்கள். சிலர், 'ஊர் போய்ச் சில தினங்களில் வருகிறோம்' என்று சொல்லிப் போய்த் திரும்புவதே இல்லை. சில காலம் இருந்து படிப்பதாகப் பாவனை செய்துவிட்டுப் பிரிந்து சென்று என்னிடம் படித்ததாகச் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இப்படி அரைகுறையாகப் படிப்பதால் அவர்களுக்கு ஒரு பயனும் உண்டாவதில்லை; நமக்கும் திருப்தி ஏற்படுவதில்லை. இத்தகையவர்கள் இயல்பைக் கண்டு கண்டு மனம் சலித்துவிட்டது. யாராவது பாடம் கேட்பதாக வந்தால் யோசனை செய்துதான் ஏற்றுக்கொள்ளவேண்டி யிருக்கிறது."

அவர் பேச்சிலே அன்பும் மென்மையும் இருந்தன. ஆனால் அவர் கருத்து இன்னதென்று தெளிவாக விளங்கவில்லை. என் உள்ளத்திலே அப் பேச்சு மிகுந்த சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது. அவர் தம்மிடம் வந்து சிலகாலம் இருந்து பிரிந்துபோன மாணாக்கர் சிலர் வரலாற்றையும் சொன்னார். "இந்த விஷயங்களை யெல்லாம் சொல்வதன் கருத்து என்ன? நம்மை ஏற்றுக் கொள்ள விருப்பம் இல்லை என்பதைக் குறிப்பாகத் தெரிவிக்கிறார்களோ? அப்படி யிருந்தால் இவ்வளவு பிரியமாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டார்களே?" என்று நான் மயங்கினேன்.

### தவம் பலித்தது

என் தந்தையார் தைரியத்தை இழவாமல், "இவன் அவ்வாறெல்லாம் இருக்கமாட்டான். இவனுக்குப் படிப்பதைத் தவிர வேறு வேலை இல்லை. தங்களிடம் எவ்வளவு காலம் இருக்க வேண்டுமானாலும் இருப்பான். தங்களுடைய உத்தரவு இல்லாமல் இவன் எங்கும் செல்லமாட்டான். இதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இதற்கு முன் இவனுக்குப் பாடம் சொன்னவர்களெல்லாம் இவனைத் தங்களிடமே கொண்டுவந்து சேர்க்கும்படி வற்புறுத்தினார்கள். பல காலமாக யோசித்து அதிக ஆவலுடன் தங்களிடம் அடைக்கலம் புக இவன் வந்திருக்கிறான். இவனுடைய ஏக்கத்தைக் கண்டு நான் தாமதம் செய்யாமல் இங்கே அழைத்து வந்தேன். தங்களிடம் ஒப்பித்துவிட்டேன். இனிமேல் இவன் விஷயத்தில் எனக்கு யாதோர் உரிமையும் இல்லை" என்று கூறினார்.

அங்கிருந்தவர்கள் என் தந்தையார் வேண்டுகோளையும் எனது பரிவையும் உணர்ந்து இரங்கி, "இந்தப் பிள்ளை இருந்து நன்றாகப் படிப்பாரென்றே தெரிகிறது. தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறினார்கள்.

அக் கவிஞர்பிரானது முகம் மலர்ந்தது. ஒருவிதமான உறுதிக்கு அவர் வந்துவிட்டாரென்பதையும், அத் தீர்மானம் எனக்கு அநுகூலமாகத்தான் இருக்குமென்பதையும் அந்த முக மலர்ச்சி விளக்கியது.

"இவ்வூரில் பந்துக்கள் யாரேனும் இருக்கிறார்களா? இவருடைய ஆகாரத்துக்காக ஏற்பாடு ஏதேனும் செய்திருக் கிறீர்களா?" என்று பிள்ளையவர்கள் கேட்டனர்.

"இவ்வூரில் நண்பர்களும் பந்துக்களும் இருந்தாலும் அவர்கள் செல்வமுள்ளவர்களல்ல. அவர்களுக்குச் சிரமம் கொடுப்பது உசிதமாக இராது. தாங்களே ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்" என்றார் என் தந்தையார். பிள்ளையவர்கள் பல மாணாக்கர்களை வைத்துப் போஷித்துப் பாடம் சொல்லி வருகிறார் என்ற செய்தியைப் பலர் கூறக் கேட்டிருந்தமையின் இவ்வாறு எந்தையார் சொன்னார்.

பிள்ளையவர்கள்: "திருவாவடுதுறையிலும் பட்டீச்சுரத்திலும் நான் தங்கும் காலங்களில் இவருடைய ஆகார விஷயத்தில் ஒரு குறையும் நேராமல் பார்த்துக்கொள்ளலாம். சைவராக இருந்தால் ஒரு கவலையும் இராது; என் வீட்டிலே சாப்பிட லாம். இந்த ஊரில் ஆகார விஷயத்தில் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறேன்; அதுபற்றி வருந்துகிறேன்."

எந்தையார்: "அப்படியானால் இவ்வூரில் இருக்கும் வரையில் இவன் ஆகாரச் செலவிற்கு வேண்டிய பணத்தை எப்படியாவது முயன்று அனுப்பி விடுகிறேன். இவனைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

பிள்ளையவர்கள்: "சரி, ஒரு நல்ல தினம் பார்த்துப் பாடம் கேட்க ஆரம்பிக்கலாம்."

என் தவம் பலித்ததென்று நான் குதூகலித்தேன். அஸ்தமன சமயமாகி விட்டமையால் நாங்கள் மறுநாட் காலையில் வருவதாக விடைபெற்றுக்கொண்டு எங்கள் விடுதிக்கு மீண்டோம்.

# 6. வாழ்க்கைக்கு வழிகாட்டி

## டாக்டர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார்

கலைகள் அறுபத்துநான்கு வகைப்பட்டவை என்று நம் முன்னோர்கள் வகுத்திருக்கின்றனர். சுமார் 1800 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்திலும் 'எண் எண் கலையோர் இருபெரு வீதியும்' என்று வருவது குறிப்பிடத்தக்கது. கலைகள் மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தும் சாதனங்களாகும். ஆனால், எல்லாக் கலைகளிலும் சிறந்த கலை, வாழ்க்கைக் கலை. அன்றாட வாழ்க்கையை ஒரு கலையாய்ப் பண்படுத்துபவனைத்தான் மக்களில் சிறந்தவன் என்று சொல்லவேண்டும்.

வாழ்க்கையைக் கலையாய்ப் பண்படுத்துவதற்கு அறிவுதான் கருவி. ஆனால், இயற்கை அறிவைக் கொண்டே எல்லோரும் இந்தப் பயனை அடைய முடியாது. வாழ்க்கையில் என்னென்னவற்றை விலக்க வேண்டும், கையாளவேண்டும், எந்த விதத்தில் கையாள வேண்டும், என்றெல்லாம் எடுத்துச்சொல்ல ஒரு வழிகாட்டி வேண்டும். வாழ்க்கையின் வழி நுட்பங்களை அறிந்த பெரியோர் உலகத்திற்குத் தந்த நூல்களே இவ் வழிகாட்டிகளிற் சிறந்தவை.

ஜோராஸ்டர் (**Zoroster**), கன்பூசியஸ் (**Confucius**), புத்தர், இயேசுகிறிஸ்து, மகமதுநபி—இவர்களெல்லாரும் வழிகாட்டிகளாவர். இவர்கள் அவதார புருஷர்களாய் உலகில் தோன்றி வாழ்வின் வழியை மக்களுக்கு எடுத்துக்காட்டிய மகான்கள். இவர்கள் விளக்கிய அடிப்படையான உண்மைகள் உலக மக்களுக்கெல்லாம் பொருந்தியவை.

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வாழ்க்கை நூல் ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை, உலகிற்கு அளித்தது தமிழ். ஏறக்குறைய 2000 வருஷங்களுக்குமுன் தமிழ் நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றாச் சிறப்பைத் தந்தவர். அவர் தந்த **திருக்குறளே** தலைசிறந்த வாழ்க்கைத் துணைநூல்.

2000 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட ஒரு நூல் இக்காலத்தில் வாழும் மக்களுக்கு வாழ்க்கைத் துணையாய் இருக்க முடியுமா? உலகம் மாறுதல் அடைந்துகொண்டே போகின்றது. மக்களின் நடை, உடை, பாவனை, மனக்கருத்து, நம்பிக்கை, அரசியல் முறைகள், நாகரிகம் இவையெல்லாம் சென்ற 20 நூற்றுண்டுகளில் எவ்வளவு மாறுதல் அடைந்திருக்கின்றன! அப்படி இருக்க, நாம் வாழும் இன்றைய அமைப்புக்குத் திருக்குறள் முழுதும் பொருந்துவதா?'' என்று கேட்பதில் தவறில்லை.

இந்தச் சந்தேகத்தை ஓரளவிற்குச் சுருக்கமாய் ஆராய்தல் இன்றியமையாதது. நடை, உடை, பாவனை, நாகரிகம் இவையெல்லாம் நாம் உடலில் அணியும் ஆடையாபரணங்களைப் போன்றவை. அவை நாளுக்குநாள் மாறுதல் அடையத்தான் செய்யும்; நாடுகள் தோறும் அவை மாறுபட்டும் இருக்கும். ஆனால், உயிரின் அடிப்படையான உண்மை என்றும் மாருதது.

மனித வாழ்க்கையில் எக்காலத்திலும், எந்நாட்டிலும் மாருத அடிப்படையான உண்மைகளைத்தான் திருவள்ளுவர் குறளில் கையாண்டிருக்கிருர். அதனுல்தான் குறளை உலக மக்களுக்கெல்லாம் எக்காலத்திலும் பயன்படும் வாழ்க்கை வழிகாட்டி என்று போற்றுகின்ருேம். அணுவில் உலகத்தை அழிக்கவல்ல அபார சக்தி இருக்கிறதென்று விஞ்ஞான சாஸ்திரம் நிலைநாட்டி விட்டது. இரண்டு வரிகள் கொண்ட சிறு குறள் வெண்பாவில் உலகத்தைக் காக்கவல்ல தலைசிறந்த உண்மை இருக்கிறதென்று எத்தனைபேர் அறிந்திருக்கிருர்கள்?

குறளில் காணும் வாழ்க்கை விதிகள் மக்களில் ஒரு சிலர் மட்டும் கையாளவேண்டியவையல்ல; உலக மக்கள் எல்லோரும் கையாளவேண்டியவை; கையாளக்கூடியவை.

பொருளின்மேல் ஆசை வைக்கக்கூடாது என்பதும், பொருளாசை ஒருவன் நல்ல கதியை அடைவதற்கு இடையூருனதென்பதும் பல சமயங்களின் கொள்கை. திருவள்ளுவர் இந்தத் தத்துவத்தை ஒப்புக்கொள்வதில்லை. உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் பொருளை விலக்கிவிட்டால், உலகம் நடைபெறுவது முடியாது. உலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. இதனுல்தான்;

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருள்
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" [இல்லார்க்கு

என்றார். இதன்மூலம் பொருளின் அவசியத்தை வலியுறுத்துகிறார். அருள் வளர்வதற்குங்கூட, பொருள் வேண்டும். அன்பு பெற்ற அருள் என்னும் குழந்தை பொருள் என்னும் செவிலித்தாய் வளர்த்தால்தான் வளரும் என்பது அவர் உள்ளக் கிடக்கை.

"அருள் என்னும் அன்பீன் குழவி பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு."

பொருள் கட்டாயம் வேண்டும் என்று சொன்ன அவர் அப்பொருளை நியாய வழியிலும், பிறர்க்குத் தீங்கு விளைவிக்காமலும் சேர்க்கவேண்டும் என்பதையும் நினைவூட்டுகின்றார். அப்படி நியாயமான வழியில் சம்பாதித்த பொருளின் மூலமாகத்தான் அற வாழ்க்கையையும், இன்ப வாழ்க்கையையும் பெறலாம்.

"அறன் ஈனும், இன்பமும் ஈனும், திறன் அறிந்து
தீதின்றி வந்த பொருள்."

நாட்டிற்குப் பொருள் பெருகும் வழிகளை மேலும் மேலும் உண்டாக்குவதிலும், உண்டான பொருள்களை ஓரிடத்தே தொகுப்பதிலும், அப்பொருளைப் பிறர் கொள்ளாமல் காப்பதிலும், காக்கப் பட்டவைகளைக் குடிகளுக்குப் பங்கிடு செய்தலிலும் வல்லவனாயிருப்பவன்தான் அரசன் என்ற தத்துவத்தை,

'இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு'

என்ற குறளிலே வள்ளுவர் விளக்குகிறார்.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட சில குறள் வெண்பாக்களிலிருந்து உலக நாகரிகம் எவ்வளவு மாறுதல் அடைந்தபோதிலும், திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான வாழ்க்கைத் துணை நூல் என்பது நன்கு விளங்குகிறது. இது காரணம் பற்றித்தான் வள்ளுவருக்கு 'பொய்யா மொழிப் புலவர்' என்ற சிறந்த பட்டத்தை நம் முன்னோர்கள் வழங்கினார்கள். வள்ளுவர் வாக்கு எக்காலத்திலும் பொய்யாகாது; வாழ்க்கையில் என்றும் அழியாமல் நிலைபெற்ற உண்மைகள் நிறைந்த நூல் திருக்குறள்.

# 7. அன்னைக்கு

டாக்டர் மு. வரதராசனர்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

*அன்புள்ள அம்மா,*

உன் கட்டளைப்படியே இதுவரையில் நடந்தேன். இன்று நடக்க முடியவில்லை.

"தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள். இந்த இரண்டும் மட்டும்பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடைய முடியாது. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்று மட்டும் இருந்து, மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலையில்லாமல் தமிழ்நாடு எப்போதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன்; பழங்காலப் பிற்போக்குத் தமிழனாக இருந்து வாயால் மட்டும் விளங்காதே; உணர்வால் மட்டும் உயராதே; செயலால் சீர்படு" என்று எனக்கு எழுதிய கடிதத்தை மறந்துவிடவில்லை. என் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து முற்போக்குத் தமிழன்தான் என்பதைக் காட்டப்போகிறேன். பாடங்களை நன்றாகக் கற்று முதல் வகுப்பில் தேறப்போகிறேன். ஆனாலும், நேற்று வரையில் அமைதியாக இருந்ததுபோல், இன்று இருக்க முடியவில்லை. ஆகையால்தான் சில திங்கள் கழித்து இதுபோல் கடிதம் எழுதுகிறேன்.

அம்மா! நான் எப்படி இன்று அமைதியாக இருக்க முடியும்? உலகமே அழுகின்றதே! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னை மறக்க முடியுமா?

உலகம் கண்ணீர் விடுகின்றது; ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு கலங்கவில்லை; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடுதோறும் இழவு, நகரந்தோறும் சாக்காடு நேர்ந்தது போல் இருக்கின்றதே! ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கி விட்டதே!

அம்மா, இமயமலை தலைகீழாய்ப் புரண்டிருந்தாலும், இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. பூகம்பம் உண்டானாலும், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனால் உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்துவிட்டதே!

வாழ்ந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு வகை மாறுதலை ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத் தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒருசேரக் கலங்க வைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே!

புத்தர் வாழ்ந்தார்; அவர் வாழ்நாளில் லக்ஷக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரடிஸ் வாழ்ந்தார்; அவருடைய வாழ்நாளில் பதினாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளைக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனால், வாழ்நாளிலேயே கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கினவர் யார் அம்மா? காந்தியடிகள்—இந்தப்பெயரையும் நினைத்து தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும்! அவருடைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்த்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்து கொள்வார்களே!

எல்லாரும் அரசியல் காந்தியை அறிவார்கள். அரசியலில் அவர் பெருந்தலைவர் என்பதே பெரும்பாலோருக்குத் தெரிந்தது. ஆனால், இது முழு உண்மையல்ல. ஓரளவுதான் உண்மை. இன்னும் எண்ணிப் பார்த்தால், அவருடைய அரசியல் கொள்கையில் கருத்து வேறுபட்டவர்கள் எங்கும் இருக்கின்றார்கள். அவருடைய அரசியல் கொள்கைக்குச் செல்வாக்கு இருந்தாலும் உடன்படாமல் புறக்கணித்த தலைவர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு; தொண்டர்களும் உண்டு.

ஆனாலும், அவருடைய அரசியல் நெறியே இன்றுவரையில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலைவர்கள் உயர்வுக்குக் காரணம்; பல அறிஞர்கள் பெருமைக்குக் காரணம்; இந்தியாவின் தலைநிமிர்ந்த வாழ்வுக்குக் காரணம்.

அம்மா, மறக்க முடியவில்லை. நம் வீட்டில் நாம் பல நாள் காந்தியடிகளின் கொள்கைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த நாட்களை மறக்க முடியவில்லை. அரசியலில் அவர் சொல்வதில் இதுமட்டும் சரி, அது சரியல்ல என்று வாதாடினோம். ஆனால், ஒவ்வொரு நாளும் அவருடைய தொண்டு வாழ்வையோ, இயற்கை நெறியையோ, சமயக் கொள்கையையோ, அற ஒழுக்

கத்தையோ, கடமை ஒழுங்கையோ முடிவில் குறிப்பிட்டு அங்கே ஒப்பற்ற நிலையை வணக்கத்தோடு போற்றி அடக்கத்தோடு அமைதி அடையவில்லையா? அவரைவிடப் பெரிய அரசியல் அறிஞர்கள் இருக்கலாம். ஆனால், அவர் வாழ்ந்த வாழ்வைவிடச் சிறந்த வாழ்வை—தூய வாழ்வைக் குறிப்பிட வாய் இல்லாமல் அடங்கிவிட்டோம் அல்லவா?

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழன் எழுதிவிட்டுச் சென்றான். இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த ஒரு குறளுக்கு எடுத்துக் காட்டு இல்லாமல் இருந்தது. காந்தியடிகளின் வாழ்வுதான் ஒரே எடுத்துக்காட்டாக நின்றது. அன்று திருவள்ளுவர் உண்மையின் பெருமையினை உணர்ந்து உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப் பற்றியே தமிழகத்தில் பலருக்குத் தெரியாது. ஆனால் அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை கற்பனையாகவே நிற்கவில்லை; ஓர் அரிய வாழ்வாக மலர்ந்தது. அந்த மலர் வாடியது; சாம்பலானது. மத வெறியின் போர்வை போர்த்த அரசியல் வெறி அந்த அருமை மலரைக் கசக்கி எறிந்தது.

அந்த ஒரு குறள் மட்டும் என்ன? திருவள்ளுவரின் அறத்துப் பாலில் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்த வாழ்க்கை அல்லவா அது?

எத்தனையோ நம்பிக்கைகள் எவ்வெவ்வாறோ தடுமாறும் நாட்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின்றன. ஆனால், அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டமாக இருக்கிறது என்பதை என்றும் தளரா நம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை அன்று மாலை அடங்கிய அந்தப் பெருவாழ்வு!

இன்னொன்றும் இந்த நேரத்தில் எனக்குத் தோன்றுகிறது. அடிகள் பெரியவர், ஒப்பற்ற தலைவர் என்பதை உலகமெல்லாம் உணர்ந்துவிட்டது உண்மைதான். ஆனால், அவருடைய கொள்கைகளின் பெருமையை உணர்ந்தவர்கள் எத்தனை பேர் அம்மா? அரசியலில் மட்டுமே அவர் இன்னவர் என்பதைப் பொது மக்கள் உணர முடிந்திருக்கலாம். இயற்கை, அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலியவற்றில் அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயனடைந்தவர்கள் மிகமிகச் சிலரே என்று எண்ணுகிறேன்.

அப்பா ஒருநாள் கூறியதுபோல், காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகள் பொது மக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே. பசியில்லாமல் உணவு விடுதிக்குச் சென்று உண்பதுபோல், கலையுணர்வு இல்லாமல் சினிமாவுக்குச் சென்று காண்பதுபோல், அன்பு இல்லாமல் திருமணத்திற்குச் சென்று ஆரவாரம் செய்வது போல், நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாக இருக்கின்றார்கள். அதனால் தான், அந்தத் தூய உடல் வாடிய அன்று இரவே, கொலையும் கொள்ளையும் தீயிடலும் துன்புறுத்தலும் தொடங்கச் சிலர்க்கு மனம் வந்தது. ஆனாலும் அவர்கள் துயரக் கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும்போது, அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரணமல்ல, நெடுங்காலமாக நிலவிவரும் வெறியே காரணம் என்று தெரிகின்றது.

அம்மா! என்னென்னவோ நினைவுக்கு வருகின்றது. தென் ஆப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணையாக நின்று அவருடைய அன்பையும் பெற்றார்கள். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்னும் பழமொழியாலும், திருக்குறள் கருத்துக்களாலும் தமிழ் மொழி அவருடைய போற்று தலைப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாதபோது அவரே தமிழாசிரியராக இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகின்றது. இன்னொன்றை நினைக்கும்போது நெஞ்சம் நெக்குருகுகின்றது. தமிழர்களின் பண்பாடும், தமிழ் மொழியின் கருத்து வளமும் அவர் மனத்தைக் கவர்ந்தது போலவே, தமிழ் நாட்டு வறுமையும் அவருடைய கோலத்தையே மாற்றிவிட்டது. சேலத்திற்குத் தெற்கே தமிழ் மக்கள்—ஆண்களும் பெண்களும்—அரை நிர்வாணமாய் முழங்கால் வரையில் அரையாடை உடுத்து உழைப்பதைக் கண்ணால் கண்ட அன்றுதானே, அடிகளின் தலைப்பாகையும் அகன்றது! நீண்ட அங்கியும் அகன்றது! பத்து முழ வேட்டியும் அகன்றது! இவர்களுக்கு மானத்தை மறைக்கவும் கந்தல் போதவில்லை என்று கசிந்துருகித் தமிழ் நாட்டுக் குடியானவன் கோலத்தை அல்லவா அன்று முதல் மேற்கொண்டார்! அந்தக் கோலம் தானே உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம்!

அம்மா! ஏதோ எழுதினேன், ஆறுதல் பெற.

அன்புள்ள மகன்,

எழில்

# 8. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

**வித்துவான் எஸ். ஆறுமுக முதலியார்,**

எம்.ஏ., பி.ஓ.எல்., எல்.டி.,

அன்பர்களே! சென்ற நூற்றுண்டின் இடையிலும் இறுதியிலும் தமிழ்க் கல்விக்குப் புத்துயிரளிக்கும் பெரும் பணியில் ஈடுபட்ட பலருள்ளும், பலவகைகளிலும், பேராசிரியர் பிள்ளையவர்கள் மிகச் சிறந்தவராவர் என்பதற்குப் பல காரணங்கள் காட்டலாம். முதலாவதாக இவர் கல்லூரியில் மெய்யுணர்வுநூற் புலவராயிருந்தும், தம் தாய்மொழியாகிய தமிழ்மொழிக் கல்வியிலும், அதன் முன்னேற்றத்திலும் பெரிதும் ஈடுபட்டவராய்ச் சிறந்த புலவரானதோடு, பல துறைகளிலும் நூல்கள் யாத்தனர். தமிழ் மக்கள் எத்துறையில் ஈடுபட்டிருப்பினும், தாய் மொழி முன்னேற்றத்தை மறந்துவிடக்கூடாது என்பதை அறிவுறுத்த இக்கால மக்களுக்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டன்ருே? மேலும், நாடகத்தமிழின் முன்னேற்றத்துக் குழைத்தவர் இயல் இசை நாடகம் ஆகிய மூன்று தமிழுக்கும் உழைத்தவராகாரோ? முத்தமிழ்த் துறை போகிய புலவர்களே உத்தமப் புலவர்களென இத்தலத்துப் புகழப்படுகின்றனர். என்னே? இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத்தமிழில் அடங்குதலானும், இயல் இசைகளுக்கில்லாத சில சிறப்பியல்புகள் நாடகத் தமிழுக்குள்ளன வாதலானும் என்க. பாலில் வெண்ணெய் திரண்டு வருவதுபோல இயல் இசையடியாகப் பிறக்கும் நாடகத்தமிழ் இவை யிரண்டின் தெளிவும், முதிர்ந்த வளர்ச்சியும், பயனுமாகும். இவையிரண்டும் கூடிய வழியே நாடகம் பிறக்குமாதலின் அது கருதி அது ஈற்றில் வைக்கப்பட்டுள்ளது. கையில் நூலெடுத்துப் படிக்கத் தெரியாதோரும், படித்தற்குரிய காலமில்லாதோரும் நாடகத்தினுல் நல்லறிவு வாய்க்கப்பெறுவர்; உலக இயல்பையும், மக்களியற்கையையும் உள்ளபடியே படம் பிடித்து நாடகம் காட்டும்; இயல் இசைகளேப்போல் கேள்வி இன்பத்தோடு நின்றுவிடாது காட்சியின்பமும் உடன் அளிக்கும். காட்சி இன்பமே காதால் கேட்பதைவிட உள்ளத்தில் நன்ருய் அமைக்கப்படும். உலகத்தின் சாயலாக இருக்கும் நாடகமேடையில் மக்கள் ஒழுக்கத்தின் விழுப்பத்தை நேரிற் கண்டு கொள்ளலாம், நல்லதன்

நலனும், தீயதன் தீமையும் கண்ணுக்கெதிரே நாடகத்தில் காணப் படுகின்றன. உழைத்த உள்ளத்திற்கு ஊக்கம் விளைத்து, மன எழுச்சிகளாகிய உளச்சுவைகளைப் பண்படுத்திக் கற்பனையை வளமுறச் செய்து, சிந்தனை அனுமானங்களையும் செம்மையாகப் பேசி, உரையாடும் ஆற்றல்களையும் வளர்த்துப் பயன் விளைவிக்கும் இன்னோரன்ன இயல்புகளால் தலைசிறந்து விளங்கும் நாடகம்.

இச் சிறந்த கலை, கடைச்சங்க நாட்களுக்குப் பிறகு நம் தமிழ் மொழியில் வளர்ச்சியுருது போனதோடன்றி அதற்கு முன்னெழுந்த எண்ணிறந்த நாடக இலக்கியங்களும், அகத்தியம், பரதம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்தநூல் முதலிய நாடக இலக்கணங்களும் அழிந் தொழிந்தன.

சென்ற நூற்றுண்டில் நாடகத் தமிழின் மறுமலர்ச்சிக்கு அடிகோலி நாடகத்துக்கே சிறந்த இலக்கியமாய் என்றும் விளங் கும்படி சிறந்த நாடக இயல்புகள் எல்லாம் செகப்பிரியர் நாடகங் களிற்போல் இடம் பெறவும், ஒன்பான் சுவைகளும் ஒருங்கே பொருந்தவும், பத்து வகை அழகுகளும் பாங்குடன் அமையவும், சிறந்த தலைவியை அமைத்து ஏற்ற உறுப்பினர்களையும் சேர்த்துச் சிறந்த நாடகமாகிய "மனோன்மணீயத்தை" உலகிற்களித்த பெருமை பிள்ளையவர்களுக்கே உரியது.

அன்றியும் பாயிரத்தில் அமைத்த தமிழ்த் தெய்வ வணக்கம் தமிழ் நாடெங்கும் இன்று ஒலித்துக்கொண் டிருப்பதோடு தமிழ் அன்னையின் திருச்செவிகளிலும் திருவுள்ளத்திலும் இனிது ஒலித் துக்கொண்டிருக்கிறது. மணிவாசகப் பெருந்தகை, இறைவனை, முன்னைப் பழம்பொருளுக்கும் முன்னைப் பழம்பொருளாயும், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனுயும், ஆக்கினுர். முன்னைப் பழமொழிக்கு முன்னைப் பழமொழியாகவும், பின்னைப் புதுமொழிக்குப் பின்னும் புதுமொழியாகவும் விளங்கும் நந்தம் செந்தமிழ் மொழி "உயர் தனிச் செம்மொழி" எனற்பாலது என்று கருதிய பிள்ளையவர்கள் அதற்குக் கடவுளையே உவமை கூறினுர்.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்

ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே''

என்பது அவர் அருள்வாக்கு.

சிறந்த நாடகப் புலவராகிய இவர் இவ்வாழ்த்தின் வாயிலாய், மொழிநூற் புலவர்களுக்கெல்லாம் அறிவுறுத்தும் சிறந்த மொழி நூல் உண்மைக்காகவும் தமிழ் மக்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம். ''சதுமறை ஆரியம் வருமுன்'' இந்திய நாடாகிய ''பெரு நிலவுலகின் இருநிலப் பரப்பையும்'' திராவிட மொழியாம் தமிழ் ஆண்டு வந்தது என்னும் மொழிநூல் உண்மையையும், சிறப்பாகக் ''கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும்'' தமிழாகிய தாயினின்றும் தோன்றின என்னும் திராவிட மொழி நூல் உண்மையையும் எடுத்துக்காட்டி மொழிநூல் ஆராய்ச்சிக்கும் அடிகோலியுள்ளார் இவர்.

இன்னும் இவர் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியிலும், தமிழ் நாட்டு, திருவாங்கூர் நாட்டு வரலாற்று ஆராய்ச்சியிலும், ''அறிவியல்களின் (சாஸ்திரங்களின் **Sciences**) வகைகளும் அவற்றின் முக்கிய முறைமையும் பொருளும்'' என்னும் அறிவியல் துறையிலும் ஒருங்கே சிறந்தவர் என்பதை இவர் எழுதிய பத்துப்பாட்டு ஆராய்ச்சி, திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி, நூற்றொகை விளக்கங்கள் காட்டிக்கொண்டு நிற்கின்றன. இங்ஙனம் பல துறைகளிலும் சிறந்த இவர் இன்றைய தமிழ் மக்கள்,

''தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங்—கோங்கும்
உயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை''

என்றதற்கிலக்கா யிராமல், நம் பண்டைப் பெருமைகளை மட்டும் பேசி நின்றுவிடாமல், ஒவ்வொருவரும் தமிழ் மொழியின் நிலையையும் நாட்டின் நிலையையும் தம்மாலியன்ற அளவு உயர்த்த வேண்டும் என்றும் அறைகூவியதோடு நில்லாமல் தாமே தொண்டாற்றிச் செயலிலும் காட்டியிருக்கிறார். இவர் பூதவுடம்பு அழியினும் ''மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே'' என்றதுபோல் இவர் புகழுடம்பு என்றும் நின்று நிலவும்.

# 9. வார்ப்பிரும்பு

## திரு. மு. அருணசலம் எம். ஏ.

பட்டணத்தில் மோட்டார் விட்டவர்களில் ஒரு விளக்குக் கம்பமாவது உடைக்காதவர்கள் இருக்கமாட்டார்கள். எவ்வளவோ கனமான பெரிய விளக்குக் கம்பம் நொறுங்கி விழும்போதும், மோட்டாரின் முன்புறமுள்ள பம்பர் (முட்டுத்தாங்கி) கொஞ்சமும் சேதமடையாது. முட்டுத்தாங்கி மிகவும் சிறியது; கால் அங்குலப் பருமன்தானிருக்கும்; இது உடைவதில்லை. அரையடி, முக்காலடிக் குறுக்களவும் முப்பதடி உயரமுமுள்ள கம்பம் உடைகிறது.

இதற்குக் காரணம், விளக்குக் கம்பம் வார்ப்பிரும்பாலானது. மோட்டாரின் முட்டுத்தாங்கி எஃகாலானது என்பதாகும். அதாவது கம்பம் செய்த இரும்பில் 10 சதவீதம் 'பத்திலொருபங்கு' வேறு வஸ்துக்கள் (அசுத்தம்) கலந்திருக்கும்; இதில் 5 சதவீதம் வரையில் கரியிருக்கும்; மிச்சம் வேறு வஸ்துக்கள்; கந்தகம், பாஸ்பரஸ், மாங்கனீஸ், ஸிலிகன் என்பன. இவற்றுள் எது எந்த அளவு இரும்பில் இருக்கிறது என்று, வார்ப்பிரும்பைப் பொறுத்தவரையில் சோதிப்பதோ நிர்ணயிப்பதோ இல்லை. ஆனல், முட்டுத்தாங்கி செய்த எஃகின் நிலைமை வேறு. இதில் அன்னிய வஸ்து இன்னது தான் உண்டு என்பதும், இவ்வளவுதான் என்பதும், சோதனை மூலம் திட்டமாகத் தெரியும். தவிர இதில் சேர்ந்துள்ள கரியும், ஆயிரத்தில் 2 பங்கு முதல் 15 பங்குக் குள்ளாகவே 'அதாவது ஒன்றரை சத வீதத்துக்குள்ளாகவே' இருக்கும். இந்தக் கலப்புத் தான், முட்டுத்தாங்கியின் உறுதிக்கும் கம்பத்தின் பொரபொரப்புக்கும் காரணமாகிறது.

சுத்தமான இரும்பென்பது, அதாவது 100க்கு 100 பங்கு முழுமையும் இரும்புதான் என்று சொல்லக்கூடிய இரும்பு, இது வரை யாரும் செய்ய முடிந்ததில்லை. இதுவரை செய்ய முடிந்த தெல்லாம், இருபதாயிரத்தில் ஒரு பங்கு அசுத்தம் அடங்கிய இரும்புதான். சுத்தமான இரும்புக்கு உறுதி கொஞ்சமும் இல்லை;

---

உலோகங்களும் நாமும் என்ற நூலினின்றும் எடுக்கப்பெற்றது.

எனவே, விசேஷமாக எந்த உலோக வேலைக்கும் அது பயன் படாது. ஆகவே, அதில் இயற்கையாய்க் கலந்துள்ள அசுத்தங் களில் சிலவற்றைப் போக்கியும் சிலவற்றைப் போக்காமலும், வேலைக்கு உபயோகிக்கிறார்கள். இவ்விதம் உபயோகிப்பது, பொதுவாய் மூன்று வகைப்படும். முதல்வகை, வார்ப்பிரும்பு. மேற்குறிப்பிட்டபடி இதில் அசுத்தம் சாதாரணமாய் 2–5 சதவீதமும் 5–10 சதவீதமும் இருக்கும்; சிலவிசேஷ வகைகளில் 19 சதவீதம் வரையிலும் உண்டு. இரண்டாவது, தேனிரும்பு. தொழில்முறையில் பயன்படுகிற இரும்புக் கலப்புக்கள் அனைத்தினும் இதுவே மிகவும் சுத்தமானது; அசுத்தம் இதில் 1 சதவீதம் இருக்கக்கூடும். மூன்று வதுவகை எஃகு. இதில் அசுத்தம் $1\frac{1}{2}$ அல்லது 2 சதவீதமே இருக் கும். செயற்கையாகவே இதில் பலவேறு வஸ்துக்கள், பலவேறு அளவில் சேர்க்கப்படுகின்றன. இவற்றை யொட்டி, எஃகும் பல் லாயிரம் வகையில் உள்ளது. தவிர, தோய்ச்சல் முதலான சில தனித்த தொழில்முறைகளும் இதற்கு உள்ளன. இங்கு முதலாவ தான வார்ப்பிரும்பை மட்டும் கவனிப்போம்.

தாதுவிலிருந்து செய்த இரும்பை நாம் உருக்கு இரும்பு என்று சொல்வோம். இந்த உருக்கை அப்படியே எந்த வேலைக்கும் உபயோகிப்பதில்லை. இதைப் பல சமயங்களில் குழம்பாகவே எஃகுத் தொழிற்சாலைக்குக் கொண்டுபோய் எஃகு செய்ய உபயோகிக்கிறார்கள். இதேபோல, மறுபடியும் இதை வேறு சிறிய உலைக் கூடத்தில் சுத்தப்படுத்தி வார்ப்பிரும்பு செய்கி றார்கள். அதிகச் செலவு ஏற்படாமல் இது செய்ய முடிகிறது. கெடுதலான பல அசுத்த வஸ்துக்களை இதன் மூலம் நீக்கவும் முடிகிறது.

உருகிய நிலையில் வார்ப்பிரும்பானது நன்றாய் ஓடக்கூடியது. இதனால், வார்க்கிற அச்சில் சற்றே சிக்கலான அமைப்பு இருந்தா லுங்கூட அங்கெல்லாம் இது ஓடி நிரம்பி உறைய வல்லது. ஆயி னும், சூடாயிருப்பினும், இதன் இயல்பான பொரபொரப்பு இதை விட்டு நீங்குவதில்லை. ஆதலால், இதனிடம் சம்மட்டி வைத்து எந்த வேலையும் செய்ய இயலாது.

கிடைக்கிற இரும்புத் தாதுவுக்கு ஏற்றபடி, உலையிலிருந்து வெளிப்படுகிற உருக்கிரும்பிலும் சொற்ப வேறுபாடுகள் காணப் படுவது இயற்கை. இவற்றுக்கு ஒத்தபடி, வார்ப்பிரும்பும் சில வேறுபாடுகளுடையதா யிருக்கும். இவற்றுள், பெரிய தொழிற் கூடங்களில் திட்டமான இரண்டு தனி ரகங்கள் செய்கிறார்கள்.

ஒன்று வெண்ணிற வார்ப்பு; மற்றது சாம்பல் நிற வார்ப்பு; வார்ப் பிரும்பில், இரும்புடன் கலந்துள்ள அசுத்த வஸ்து, கரி என்று முன்னமே கூறினேம். இவ்விருவகை வார்ப்பிலும் கரியுண்டு. அதுவும் 2 சத விதம் முதல் 4 சதவீதம் வரையில்தானிருக்கும். வேறுபாடெல்லாம், எந்த ரூபத்தில் இந்தக் கரி இரும்பில் சேர்ந் திருக்கிறது என்பதைப் பொறுத்ததாகும்.

இயற்கையில் கரியானது மூன்று ரூபத்தில் காணப்படுகிறது; ஒன்று, கரி (கார்பன்); இரண்டு, வயிரம்; மூன்று, கிராபைடு. பென்சிலில் கறுப்பாக எழுதுகிற வஸ்து இந்தக் கிராபைடு என்ற கரிதான். கரியானது கிராபைடு ரூபத்தில் கலந்துள்ள வார்ப்பு, சாம்பல் நிற வார்ப்பு. இந்த வார்ப்புச் சட்டமொன்றை ஒடித்தால், ஒடித்த இடம் சாம்பல் நிறமாயிருக்கும். இதனுல்தான் இதற்குச் சாம்பல் நிற வார்ப்பிரும்பு என்ற பெயரும் வந்தது. கிராபைடு கரி மிருதுவும் வழவழப்புமுடையது. இதன் கலப்பால் சாம்பல் நிற வார்ப்பும் சற்றே மிருதுவாயிருக்கும். இயந்திரத்தால் கடைவது முதலான வேலைகளுக்குக் கொஞ்சம் நயமாயிருக்கும்; பொரபொரப்புக் கொஞ்சம் குறைவானது.

இரும்பும் கரியும் சில சமயம் இரசாயன ரீதியாக ஒன்ரோ டொன்று கூடிவிடுவதுண்டு. இப்படிக் கூடிய கலப்பை இரசாயன பரிபாஷையில் இரும்புக் கார்பைடு என்பார்கள். இதற்கே, உலோகத் தொழில் பரிபாஷையில் சிமென்டைடு என்ற பெயரும் வழங்கும். வெண்ணிற வார்ப்பிரும்பில் அடங்கியுள்ள கரியவ்வள வும் இந்த சிமென்டைடாகவே அடங்கியுள்ளது. இவ்விரும்புச் சட்டமொன்றை உடைத்தால் உடைபட்ட இடம் வெண்ணிறமா யிருக்கும்; இதுபற்றித்தான் இதற்கு வெண்ணிற வார்ப்பிரும்பு என்ற பெயர் வந்தது. சிமென்டைடு என்பது மிகவும் அழுத்த மானது. ஆகவே, வெண்ணிற வார்ப்பிரும்பும் மிக்க அழுத்தம் (திண்மை) உடையது. ஆனுல் பொரபொரப்பு மிகுதி; கெடாழ லிருக்கக் கூடியது.

காய்ச்சி உருக்கிய உருக்கானது, வார்ப்பாகும்போது வெண் ணிற வகையாகிறதா, சாம்பல் நிற வகையாகிறதா என்பது, ஓரளவுக்கு அதை ஆறவைக்கும் பக்குவத்தைப் பொறுத்தது. மிகவும் விரைவாக ஆறவைத்துவிட்டால், வெண்ணிற வார்ப்பா கிறது. தகடு சுருட்டும் யந்திரங்கள் முதலியவற்றிற்கு வேண்டிய வார்ப்பு உருளைகள் தயாரிக்கும்போது, வார்ப்பிரும்பை இங்ஙனம்

அமையுமாறு விரைவாய் ஆறச் செய்வார்கள். இதனுல் பெரிய உருளைகளின் வெளிப்புறம் விரைவில் குவிந்து வெண்ணிற வார்ப்பாகிறது. இது உறுதியும் அதிகமுடையது. அதே உருளை யின் உட்புறம் மெதுவாகத்தான் ஆறுமாகையால், அது சாம்பல் நிற வார்ப்பா யிருக்கிறது.

தவிர, வார்ப்பில் அடங்கியுள்ள ஸிலிகனும், வார்ப்பு வெண் ணிறமா சாம்பல் நிறமா என்பதை நிர்ணயிக்கிறது: 1 சதவீதம் இருந்தால் வெண்ணிற வார்ப்பு; 3 சதவீதம் இருந்தால் சாம்பல் நிறமாம். அப்படியே, குரோமியக் கலப்பிருந்தால் வெண்ணிற வார்ப்பு; நிக்கெல் கலப்பிருந்தால் சாம்பல் நிற வார்ப்பு.

மோட்டார் காரில், இயந்திரமுள்ள ஸிலிண்டர் பகுதி யெல் லாம், சாம்பல் நிற வார்ப்பாலானது; ரெயில் என்ஜின் முதலிய வற்றிலும் இப்படியேதான். விளக்குக் கம்பம், சாலையின் பெய ரெழுதியுள்ள கம்பம், பெரிய தண்ணீர்க் குழாய், அடுப்புக்கள், கையால் வீசும் வெடிகுண்டுகளின் கூடு முதலியன யாவும் இதனுலானவை.

வெண்ணிற வார்ப்பிலிருந்து, சில தொழில் முறைகள் மூலம், மற்ருெரு சிறந்த வகை வார்ப்புச் செய்கிருர்கள். இது சொற்ப நெகிழ்ச்சியுடையதா யிருக்கிறது; 'நெகிழும் வார்ப்பு' என்பது இதன் பெயர். வெண்ணிற வார்ப்பிலுள்ள சிமென்டைட்டானது சொற்ப கிராபைட்டாகப் பிரிந்துவிடுகிறது; இதனுல்தான் இந்த நெகிழ்ச்சி. இந்த வார்ப்பு, அதிர்ச்சி தாங்கவேண்டியே இயந்திரப் பகுதிகளுக்கு உபயோகமாகிறது. போர் மோட்டார்களின் கவசம், சைக்கிள் இணைப்புக்கள், விவசாயக் கருவிகள் முதலி யன இவ்வார்ப்பால் செய்யப்படுகின்றன.

பொதுவாக வார்ப்பிரும்பு பொரபொரப்பு உடையதாயினும், உருக்கி வார்க்க எளிதாகையாலும், தீயைத் தாங்குமாகையாலும், தீ வழங்கும் அடுப்பு, கணப்பு முதலியவற்றுக்கெல்லாம் இதுவே ஏற்றது. தேனிரும்பையும் எஃகையும் விட இதில் துரு குறைவு. எனவே, தண்ணீர்க்குழாய், நீர்த்தொட்டி முதலியவற்றுக்கும் இதுவே ஏற்றது.

சாதாரண வார்ப்பிரும்பைக் கந்தகத் திராவகம் போன்றவை அரித்துவிடும். ஆனுல், 12—19 சதவீதம் வரையில் ஸிலிகன் சேர்ந்த வார்ப்பிரும்பைத் திராவகங்கள் அரிப்பதில்லை; இது மிகுதியும் பொரபொரப்புடையது என்பது வெளிப்படை.

# 10. கலையும் தொழிலும்

## வித்துவான் கி. வா. ஜகந்நாதன்

அழகிய சோலையில் நெடுமரம் ஒன்று பூத்துக் காய்த்துக் கனிந்து நிற்கிறது. மரத்தின் கிளைகள் வேர்கள் எல்லாம் நன்ருக வளர்ந்திருக்கின்றன. ஆழ்ந்து சென்ற வேரும் படர்ந்து சென்ற கிளைகளும் மரத்தின் வளர்ச்சியை அளவிட்டுரைக்கின்றன. அந்த மரத்திற்குப் பெருமை வேரினுலும் கிளைகளாலும் வந்ததா? மலரினுல்வந்ததா?

மரத்திற்குப் பெருமை சந்தேகமில்லாமல் மலரினுல் உண்டா வதுதான். வேரும் கிளையும் மலருக்கு ஆதாரமாக இருந்தாலும் அவற்றின் சமுதாயத்துக்கே புகழை வருவிப்பது மலரே. ஆனுல் அந்த மலரின் மணமும் பொலிவும் எப்படி வந்தன? வேரின் செம் மையாலும் கிளையின் வளப்பத்தாலும் மலர் மலர்கிறது; மணக் கிறது.

தொழிலுக்கும் கலைக்கும் வேரையும் மலரையும் உபமான மாகச் சொல்லலாம். ஒரு நாட்டின் பெருமைக்குக் காரணமாக இருப்பது அந்நாட்டின் கலைச் செல்வந்தான். எத்தனையோ ஆண்டு களாகப் பண்பட்டு வந்த சமுதாயத்திலேதான் கலைமலர்ச்சி உண்டாகும். உடல் வளப்பம் மாத்திரம் கலைக்குப் போதாது. உள்ளத்தின் வளப்பமும் வேண்டும்; உயிர் வளப்பமும் வேண் டும். காவியமும் ஓவியமும் சிற்பமும் இன்னிசையும் ஆகிய கவின் கலைகள் பண்பட்ட உள்ளத்திலிருந்து பிறப்பவை; பண் பட்ட சமுதாயத்திலே படர்பவை; பண்பட்ட நாட்டிலே கால்கொள் பவை.

ஒரு நாட்டில் கலைமலர்ச்சி வரவேண்டுமானுல் அங்கே முதலில் தொழில் வளர்ச்சி மலிய வேண்டும். வேர் ஊன்றிக் கிளை பரந்து தழை மலிந்து பிறகு மலர் தோன்றுவது போலே தொழில் வன்மை மிக மிகக் கலையின் மலர்ச்சிக்கு வாய்ப்பு உண்டாகும். ஆயிரம் தொழிலாளர்கள் கூடிய சமுதாயத்தில், அவருடைய தொழில் முயற்சியால் உண்டான வலிமையைப் பெற்ற நிலத்தில்' ஒரு கலைஞன் பிறப்பான். ஆதலின் தொழிலாளர்கள் நாட்டுக்கு

வேரைப் போன்றவர்கள், கவின் கலைஞர்கள் மலரைப் போன்றவர்கள்.

நாட்டில் தொழில் பல்கவேண்டும். பலவகைத் தொழில்களும் சிறக்கவேண்டும். வெறுந் தொழில்களே மலிந்தால் மனிதன் வாழ்விலே சுவை இராது. அவன் யந்திரமாகி விடுவான். கலையும் வேண்டும். கலையினுல்தான் மனித சாதி இம்மையிலே இன்பம் காண முடியும். நித்தியமான அழகைத் தருவது கலை. தொழிலால் உரம் ஏறுகிறது; கலையால் அந்த உரத்திற்கு மெருகு ஏறுகிறது. தொழில் செல்வத்தைத் தரும்; கலை இன்பத்தைத் தரும்; தொழில் ஊக்கத்தைத் தரும்; கலை அமைதியைப் பாய்ச்சும்.

தொழிலும் கலையும் வளரவேண்டுமென்பதே நம் நாட்டினர் குறிக்கோள். அம்மி பொளியும் கல் தச்சன் வீட்டில் விக்கிரகம் அமைக்கும் சிற்பி பிறக்கிருன். பாரதியார் தொழிலும் கலையும் ஒருங்கே வளரவேண்டும் என்று சொல்கிருர்.

காவியம் செய்வோம்—நல்ல—காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம்—கொல்லர்—உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம்—நல்ல—ஊசிகள் செய்வோம்
உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்.

தொழிலுக்கும், கலைக்கும் தெய்வமாகிய கலைமகளை இந்த நாட்டில் நவராத்திரியில் கொண்டாடுகிருர்கள்: சரஸ்வதி பூஜையன்று கலைஞர்கள் கலைமகளை வழிபடுகிருர்கள். அடுத்த நாளை ஆயுத பூஜையென்று தொழிலாளிகள் கொண்டாடுகிருர்கள். இதை நினைந்தே பாரதியார்,

கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்

என்று வெள்ளைத் தாமரைப் பூவில் இருக்கும் வாணியைப் பாடுகின்ருர். 'தொழில்' என்னும் பாட்டில் 'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே' என்பது முதலாகப் பல பல தொழில்களைச் செய்யும்படி ஊக்குகிருர்.

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடுவீரே

என்கிருர். பல தொழில்களையும் சொல்லிவிட்டுக் கடைசியில் கலைக்கு வருகிருர்.

பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடுவீரே
பரத நாட்டியக் கூத்திடுவீரே.

# 11. ஜப்பான் செலவு

## திரு. எஸ். இராமசாமி நாயுடு

*நாடு காணும் அவா*

உலகின் கீழ்த்திசையில் உயர்தனிச் சிறப்புடைய நாடாக ஜப்பான் மிளிர்கின்றது என அன்பர் சிலர் கூறக்கேட்டு, அந் நாட்டினைக் காணுதல் வேண்டும் என்னும் பேரவா என்னுள்ளத்தே தோன்றிற்று. அந்த அவா நாளுக்கு நாள் மிகுந்து ஜப்பானைக் காணச் செல்ல வேண்டுமென உந்தியமையால் அக் கீழ்க்கோடி நாட்டிற்குப் போக முற்பட்டேன்.

டாட்டா கம்பெனியாரின் "ஏர் இந்தியா" என்னும் வான ஊர்தியில் சென்னையிலிருந்து பயணத்தைத் தொடங்கி இலங்கைக் குப் போனேன்; அங்கிருந்து "பிரிட்டிஷ் ஓவர்சீஸ் ஏர் வேய்ஸ் கார்ப்பொரேஷனின்" (B. O. A. C) வானவூர்தியில் சிங்கப்பூர் நோக்கிச் சென்றேன்.

*வான்வழிச் செலவு*

வானத்தில் மிதந்து பறக்கும் வானவூர்தியில் பயணம் செய்தல் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாகும். கப்பலில் சென்றால் பல நாட்கள் கடலில் மிதந்து கடக்க வேண்டும் தொலைவை வானத் திற்பறக்கும் வானவூர்தி, மிக விரைந்து கடந்து செல்லுகிறது. மணிக்கு முந்நூறு மைல் வேகத்தில் பறந்து செல்லும் வானவூர்தி அசைவதாகவும் தோன்றவில்லை. அசையாமல் ஆகாய வெளியில் ஒரே இடத்தில் மிதப்பதுபோன்ற உணர்ச்சியே தோன்றுகிறது. புகை வண்டி முதலிய பிற ஊர்திகளில் பயணம் செய்கையில் எதனையும் எழுத முடியாது; முயன்று எழுதினாலும் கையெழுத்துக் கிறுக்கெழுத்தாக மாறிவிடும். ஆனால் வானவூர்தியில் பயணம் செய்கையில் தெளிவாக எழுதலாம்.

*வெளிக் காட்சி*

வானவூர்தியில் உள்ள கண்ணாடிச் சாளரங்களின் வழியாக வெளியே நோக்கினால், முகிற் கூட்டங்கள் ஆங்காங்கே ஆகா யத்தில் மிதப்பதைக் காணலாம். சில சமயங்களில் வான்வூர்தி

அம் முகிற்கூட்டங்களிடையே ஊடுருவிச் செல்லும்போது, நாம் எங்கிருக்கிறோம் என்பதை அறிய முடியாதவாறு மூடுபனியில், அல்லது புகைத்திரளில் அகப்பட்டவர்களின் நிலையை அடைய நேரும். கடல்மீது வானவூர்தி செல்லுகையில், கடல் அமைதி மிக்கதொரு கருநிறப் பெருங்குளம் போன்ற காட்சி அளிக்கும். கடலிற் செல்லும் கப்பல்கள் ஒன்றிரண்டைக் காண நேர்ந்தால், அவை சிறுவர்கள் குட்டைநீரில் விட்டு விளையாடும் பதுமைக் கப்பல்கள் போலத் தோன்றும். நிலப்பரப்பின்மீது வானவூர்தி பறந்து செல்லும்போது, கீழே இருக்கும் பெரிய மலைகள் சிறு மணற்குன்றுகள் போலத் தோன்றும்; நெடிய மரங்கள் எளிதிற் புலனுகா. ஆறுகள் வளைந்து வளைந்து ஓடும் காட்சி காண்பதற்கு இனிமை நல்கும்.

*வானவூர்தியின் அமைப்பு*

புகைவண்டியி லிருப்பதுபோன்ற வகுப்புவேறுபாடுகள் வானஊர்தியில் இல்லை. அமர்ந்துகொள்ளவும், வேண்டுமானுல் அப்படியே சாய்ந்துகொள்ளவும் கூடியவாறு இருக்கைகள் வான ஊர்தியில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய இருக்கைகள் வேறு எந்தஊர்தியிலும் இல்லை. குறித்த அளவு சுமையைத்தான் வான ஊர்தி தாங்கிச் செல்லுமாதலின், ஒரு வானவூர்தியில் இத் துணையர் போகலாம் எனவும், இவ்வளவு பொருள்கள் ஏற்றலாம் எனவும் அதிகாரிகள் வரையறுத்துவிடுகின்றனர்; அதிற் போக வேண்டிய பெயர்களையும் குறிப்பிட்டு விடுகின்றனர். நான் சென்ற வானவூர்தியில், வெளி ஓசை பிரயாணிகள் செவியில் படா வண்ணம் செய்யப்பட்டிருந்தது. வெளியில் வெப்பம் இருப்பின் உள்ளே குளிர்ச்சியும், வெளியில் குளிர்ச்சி இருப்பின் உள்ளே வெப்பமும் உண்டாகுமாறு வானவூர்தி முழுவதும் அமைக்கப் பட்டு இருந்தது.

*தாதி*

வானவூர்தியில் செல்லுகையில், மற்றெவ்வூர்தியிலும் இல்லாத உபசரிப்பு நடைபெறுகிறது. பிரயாணிகள் சோர்வும், வெறுப்பும் கொள்ளாதிருக்கும் பொருட்டு, ஓரழகிய தாதி (Air Hostess or stewardess) அடிக்கடி தேநீர், காப்பி, ரொட்டி, பிஸ்கட், மிட்டாய் ஆகியவற்றைக் கொண்டுவந்து கொடுக்கிருர். வேண்டுவோர் அவற்றை வாங்கிக் கொள்ளலாம். படித்துக் கொண்டிருக்க விரும்புகிறவர்களுக்குக் கதைப் புத்தகங்கள்,

பத்திரிகைகள் முதலியன தருகிறுர். அவர் புன்முறுவல் பூத்த் முகத்துடன் இன்னுரையாடிப் பிரயாணிகளை உற்சாகப்படுத்து கிறுர். இவ்வாருக நான் பயணம் செய்த வானவூர்தி சிங்கப்பூரை அடைந்தது.

***சிங்கப்பூர்***

சிங்கப்பூர், மலேயா நாட்டின் தென் கோடியில் அமைந்துள்ள ஒரு சிறு தீவாகும். இதனை ஆங்கிலேயர் தமக்குரிமை செய்து கொண்டு, கிழை உலக 'ஜிப்ரால்டர்' ஆக்கியிருக்கின்றனர். சிங்கப்பூர் அமைந்துள்ள இடம் கீழ்த்திசை நாடுகளுக்கு நடுநாயக மாக மிளிர்கின்றமையால், அதனைச் சிறப்புமிக்கதோர் இடமாக அமைத்திருக்கின்றனர். போர்க்காலத்தில் சிங்கப்பூர் கீழ்த்திசை நாடுகளின் தலைமைப் பாடிவீடாக விளங்குகிறது.

சிங்கப்பூரில், உலக நாகரிகங்கள் அனைத்தும் கலந்து உறைவதைக் கண்டேன். உலகிலுள்ள பல்வேறு இனத்தவரும் அங்கு வாழ்கின்றனர். கடின உழைப்புக்குரிய தொழில்களில் நம் தமிழகத்து மக்களும் சீனநாட்டவரும் ஈடுபட்டு வருந்தி உழைக்கின்றனர். சிங்கப்பூர் போன்ற நாகரிகத்திற் சிறந்ததும், செயற்கை எழில் செறிந்ததுமாகிய நகரம், கீழ்த்திசையில் வேறு இல்லை எனக் கூறலாம்.

நான் சிங்கப்பூரை விட்டுப் புறப்பட்ட பிறகு, இந்தோ னேஷியா, சியம், இந்தோ-சீனம் முதலிய நாடுகளுக்குச் சென்று ஆங்குள்ள சிறப்பிடங்களைக் கண்டேன்.

***மகிழ்ச்சிக்குரிய விவரங்கள்***

மலேயா நாடும், இந்தோனேஷியா, தாய்லந்து, இந்தோ-சீனம் முதலியவைகளும் முன்னொருகாலத்தில் தமிழ் நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன என்பதையும், இராஜேந்திர சோழன் கப்பற்படையுடன் வந்து இப்பகுதிகளிற் சில இடங் களைக் கைப்பற்றித் தன் ஆட்சியை நிறுவிச் சென்றுன் என்பதை யும், எண்ணியபோது, என்னுள்ளம் பெருமித உணர்ச்சி கொண்டது.

இந்நாடுகளில் தமிழர் நாகரிகத்திற்கான சான்றுகள் பல ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன. தமிழரின் பண்பாடுகள், பண்டை இறைவழிபாட்டு முறைகள் முதலியவை இப்பகுதி மக்களிடையே விரவிக்கிடக்கக் கண்டேன். உணர்ச்சிப் பெருக்

கால் என் உள்ளம் துள்ளித் துடிப்புப் பெற்றது. கம்போடியா, அங்கோர்வாட் போன்ற இடங்களில் சிவலிங்க வழிபாடு நிகழ்ந்தது என்பதனை விளக்கவல்ல சான்றுகள் இன்றும் பல காணப் படுகின்றன.

*ஜப்பான் நாடு*

நான் பின்பு சிங்கப்பூருக்கு மீண்டு வந்து வான் வழியே ஹாங்காங் நகரைப் பார்த்துக்கொண்டு ஜப்பான் நாட்டை அடைந்தேன். வானவூர்தியில் போய்க்கொண் டிருந்தபோதே, ஜப்பான் நாட்டு மலைவளம் புலனாயிற்று. ஜப்பானின் சிறப்பை உலகறியச் செய்துகொண்டிருக்கும் பூஜியாமா மலைச்சிகரத்தை வானவூர்தியில் இருந்தவாறே நன்கு காண முடிந்தது. எங்கள் விமானம் டோக்கியோ நகரத்திலுள்ள 'ஹனிதா' விமானநிலை யத்தை நெருங்கிக்கொண்டிருந்த சமயம் எழில்மிக்க பல காட்சி களைக் காண வாய்ப்புக் கிடைத்தது.

நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப்படையில் குறித்த 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்னும் சொற் றொடரை ஜப்பான் நாட்டு இயற்கை வனப்புக்கு உரித்தாக்கலாம். 'எழு ஞாயிற்றுக்குரிய நாடு' என்னும் பொருளைத் தன்னகத்தே தாங்கியுள்ள ஜப்பான், எல்லா வகையாலும் சிறப்பிததுப் பாராட்டு தற்குரிய நலங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளது எனல் பொருந்தும்.

காலை வானின் நீல நிற வனப்பும், அந்திவானின் செந்நிறக் காட்சியும், வெள்ளிப் பனி மலைகளின் பொலிவும், கண்ணைக் கவர்வன. மழைநீர் அருவியாக ஓடும் அழகும், அவ்வருவிகள் ஆறாகப் பெருகிப் பசுமை வளம் பெருக்கும் பொற்பும், நாடெங்கும் பச்சைப் பசேல் எனப் பெருங்காட்சி நல்கும் இயற்கை—செயற்கைப் பொழில்களும் கண்டு இன்புறத்தக்கன. வானுற ஓங்கி வளர்ந்து நிற்கும் மரங்களும், அவற்றினைக் கொழு கொம்பாகக் கொண்டு பின்னிப் பிணைந்து கிடக்கும் கொடிகளும், இப்பசுமையினூடே காணப்படும் பலநிற மலர்களும் அந் நாட்டினைக் காண்போர் உள்ளத்தைக் கொள்ளைக்கொள்வன. ஜப்பானில் சில நாட்கள் தங்கியிருப்பவரும் இவற்றினை நேரிற் கண்டு மகிழலாம்.



தஞ்சை பிரகதீசுவரர்
ஆலயம்



கடற்கரைக் கோயில்கள்
மாமல்லபுரம்

# 12. தமிழர் கலைகள்

**'கல்கி' ஆசிரியர்—ரா. கிருஷ்ணமூர்த்தி**

முதலில் தமிழர் என்றால் யார் என்று பார்ப்போம். அதன் பிறகு கலைகளைப்பற்றி ஆராய்வோம். தமிழ் நாட்டில் உள்ள எல்லோரும் தமிழர்கள். தமிழர்கள் வாழும் நாடு வடக்கே திருப்பதி முதல் தெற்கே குமரிவரை என்று கூறப்படுகிறது.

தமிழர்கள் பர்மா சென்றார்கள்; இலங்கை சென்றார்கள்; தென்னாப்பிரிக்கா சென்றார்கள். அங்கங்கே அவர்கள் நாகரிகத்தை அழிக்க முடியாதவாறு கற்களில் செதுக்கி வைத்திருக்கிறார்கள். தமிழர் என்றால், தமிழ் பேசுகிற எல்லாரும் தமிழர்தான்; அவர்கள் எங்குச் சென்றாலும் தமிழர்தான். அவர்கள் தங்கள் நாகரிகம் பரப்பி வாழும் இடமெல்லாம் தமிழ் நாடுதான். இப்படிப் பார்த்தால் கிழக்கே மலாயா, சயாம், சுமத்ரா, இந்தோ—சைனா தமிழ் நாடாகும். தெற்கே இலங்கை, ஆஸ்திரேலியா வரை மேற்கே தென்னாப்பிரிக்காவரை தமிழ்நாடுதான்.

வேறு எந்த நாடும் அடைய முடியாத கலைச் செல்வத்தைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இதற்குச் சாட்சி நம் நாட்டிலுள்ள சித்திரங்களும், செதுக்கப்பட்ட கற்சிலைகளுந்தான். மேனாட்டார் பெரிய மலையைப் பார்த்ததும், 'இங்கே தேயிலைத் தோட்டம் போடலாமா?' என்று நினைப்பார்கள். ஆனால் அந்தக் காலத் தமிழர் எந்த மலையைக் கண்டாலும் கோவில் கட்டலாமா, சிலை செதுக்கலாமா என்று நினைத்தார்கள். இதற்கு உதாரணமாக ஒன்றைத் தெரிவிக்கிறேன்.

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் பல்லவ அரசர்கள் கடற்கரைப் பக்கம் சென்றனர். அங்கு ஒரே பாறைமயமாக இருந்தது. கல் தச்சர்களைக் கூப்பிட்டு அவ்வளவையும் சிற்பங்களாகச் செய்துவிட்டார்கள். ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் செதுக்கப்பட்ட அந்தச் சிற்பங்கள் இன்று உண்டாக்கப்பட்டவைபோல் முகபாவம் மாறாமல் நிற்கின்றன.

பகீரதன் தவம் செய்வது, தேவர்கள் விரைந்து வருவது போன்ற உயிர்ச்சிலைகள் காணப்படுகின்றன. அதே சமயத்தில்

அவர்கள் ஒரு வேடிக்கைக் காட்சியையும் அமைத்திருக்கிருர்கள் ; ஓர் உண்மைப் பக்தன் தவம் செய்வது போலவும், போலியாக உருத்திராட்சப் பூனை ஒன்று தவம் செய்வது போலவும் இரண்டு அற்புதமான காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மிக அருமையானது தஞ்சாவூரில் காணப்படும் நந்தி. இரண்டாள் உயரத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்த ஒரு அன்பர், 'ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறதே; கல்லுக்குக் கிராக்கி வந்துவிட்டதோ?' என்று கேட்டார். ஒரே கல்லில் செதுக்கப்பட்டதன் சிறப்பை அந்த அன்பர் உணரவில்லை. ஆனால் அவர் கேட்டதிலும் ஓர் உண்மை இருக்கிறது. தஞ்சாவூர்ப் பக்கத்தில் கற்கள் கிராக்கிதான்; மலையே கிடையாது. இப்பொழுதுதான் நந்தியை உண்டாக்கியவரின் செய்கை தனிச் சிறப்பை யடைகிறது. மலையே இல்லாத இடத்தில் ஒரே கல்லினுல் நந்தி செய்வது எவ்வளவு சிறப்பு! இந்தக் காலத்திலாவது ஒரு பொருளை ஓர் இடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குக் கொண்டு செல்ல வசதி யிருக்கிறது. வசதியே இல்லாத அந்தக் காலத்தில் ஒரு கல்லை எங்கிருந்தோ எவ்வாருே கொண்டுவந்து நந்தி உண்டாக்குவது என்ருல் அது எவ்வளவு பெரிய காரியமாகும்! இதிலிருந்து தமிழர்களுக்குக் கலையின்மீது எவ்வளவு ஆர்வம் இருந்தது என்பதும் அதற்காக அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிருர்கள் என்பதும் தெரியவருகின்றன.

தமிழர் பெரிய சிலைகளைச் செய்தது போலவே, சிறிய சிறிய சிலைகளையும் செய்தார்கள். கொழும்பிலுள்ள பொருட் காட்சிச் சாலையில் புன் சிரிப்பு, கோப நிலை, தவ நிலை ஆகிய பாவங்களைத் தத்ரூபமாக விளக்கிக் காட்டக் கூடிய அபூர்வமான சிற்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே மூன்ருள் உயரமுள்ள சிலையுமிருக்கிறது. இவைகளை யெல்லாம் பார்க்கும் பொழுது தமிழர்கள் சிறந்த கலைகளில் எவ்வாறு உயர்ந்திருந்தார்கள் என்பது தெரிகிறது.

கண்ணுல் பார்த்து அனுபவிக்கிற கலைகள் இரண்டில் கற்சிலையைப் பார்த்தோம்; இரண்டாவதான சித்திரத்தைப் பார்ப்போம்.

தஞ்சாவூர்க் கோவிலில் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் தீட்டப்பட்ட சித்திரங்கள் இன்றும் காணப்படுகின்றன. பழங்காலச் சித்திரத்தின் மீது முதலில் சுண்ணும்பு அடிக்கப்பட்டு அதன்மீது புதிதாகச் சித்திரம் தீட்டப்பட்டது. ஆனுல், புதிதாக அடிக்கப்பட்ட

சுண்ணும்பும் தீட்டப்பட்ட சித்திரமும் படை படையாக விண்டுவிழு கின்றன. அதன் இடைவெளிகளில் பழங்காலச்சித்திரம் காணப் படுகிறது. அது எவ்வித வர்ணமும் போகாமல் நேற்று எழுதப் பட்டதுபோலக் காணப்படுகிறது.

இலங்கையில் **சிக்ரி** என்பது ஓர் இடம். அங்குச் செங் குத்தான மலை இருக்கிறது. ஏறுவது கஷ்டம். நாங்கள் நாலைந்துபேர் ஏறத் தொடங்கினோம். கீழே பார்த்தால் கிடுகிடு பாதாளம்; மேலே பார்த்தால் ஒரே ஆகாயம். பயந்து இறங் கியவர் இருவர். தமிழரின் கலைகளை அறியவேண்டுமென்ற ஒரே ஆவலால் உந்தப்பட்டு மேலே சென்றவர்கள் நாங்கள் மூவர் தான். ஒருவாறாக மேலே சென்றோம்; திடுக்கிட்டோம்; திக் பிரமை யடைந்தோம். ஓர் அரசனின் அந்தப்புரத்தை அடைந்து விட்டோமோ என்று எண்ணினோம். அங்கு அரசகன்னி தன் தோழிகளுடன் கோயிலுக்குச் செல்வது தெரிந்தது. கண்களைக் கசக்கிக்கொண்டோம்; மீண்டும் பார்த்தோம். என்ன விந்தை! அவ்வளவும் சித்திரம்! ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டவை! மழை வெயிலில் அடிபட்டும் கெடாமல், மறை யாமல் இன்றும் காட்சியளிக்கின்றன! தமிழர்கள் சித்திர வித்தை யில் எவ்வளவு தேர்ந்திருந்தார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்?

முற்காலத்தில் கலைகளுக்கு எவ்வளவு ஆதரவு இருந்தது என்பதற்கு ஒரு கதை தெரிவிக்கிறேன்: புதிதாகக் கட்டப்பட்ட கோவிலின் மேல்பாகத்தில், ஒரு சித்திரக்காரன் சாரத்தில் மல்லாந்து படுத்தவண்ணம் சித்திரம் தீட்டுகிறான். இதைப் பார்க்க அரசன் வந்தான். சித்திரக்காரன் தாம்பூல எச்சிலை உமிழ ஒரு பையன் அதை ஒரு பாத்திரத்தில் பிடித்துக்கொள்வது வழக்கம். அரசன் வந்ததைக் கண்ட சிறுவன் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றான். இதை யறியாத சித்திரக்காரன் "அடே பையா" என்றான். உடனே அரசன் கீழேயிருந்த கிண்ணத்தை எடுத்துப் பிடித்தான். சித்திரக்காரன் எச்சில் உமிழத் திரும்பினான்; உமிழ்ந் தும்விட்டான். கிண்ணத்தைப் பிடித்திருந்தவர் அரசரெனப் பிறகு அறிந்தான். அவன் உடல் பதறியது. கீழே குதித்தான். அரச னுக்குத் தவறு செய்த தன் நாக்கை இழுத்து உளியால் வெட்டிக் கொள்ள முனைந்தான். அரசன் அதைத் தடுத்து, 'அப்பா! நான் இராச்சியம் ஆளலாம்: ஆனால் உன்னைப்போல் சித்திரம்

தீட்ட முடியுமா? உனக்கு நான் இதுவும் செய்யலாம்? இதற்கு மேலும் செய்யலாம்' என்றுனும். இவ்வாறு ஆதரவும் இருந்தது. கலையும் ஓங்கிற்று என்பதற்கு அறிகுறிகளே இப்பொழுதிருக்கும் கோயில்கள். கோயில்களினுல்தான் எல்லாக் கலைகளும் வளர முடியும்; வளர்க்கவேண்டும் என்றும் சொல்லுகிறேன்.

உலகத்திலே வேறெங்குமில்லாத அபூர்வ கலை, பரத நாட்டியம். இங்கிலாந்தில் 1939 ஆம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் நடந்த **உதயசங்கர்** நாட்டியத்திற்கு 1938-ஆம் வருடத்திலேயே டிக்கெட்டுகள் வாங்கித் தீர்ந்துவிட்டனவாம் அத்தகைய கலைச் செல்வராகிய உதய சங்கர் 'தென்னுட்டுப் பரத நாட்டியத்தைப் போல் உயர்ந்த கலை உலகத்திலேயே கிடையாது' என்று சொன்னுர். நம் கலையை ஆங்கில நாட்டார் சுவைக்கும் அளவுகூட நாம் சுவைக்கவில்லை. ஆனுல் இப்பொழுது இந்தக் கலை வளர்ச்சியடைந்து வருகிறது.

நாடகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தது என்பதற்கு வள்ளுவரின் ஒரு பாடல் சான்றுகும். இந்த நாடகமும் சங்கீதம் போல் படாத பாடுபட்டுவிட்டது. இராவணன் இராமனை எதிர்த்துப் போராட வரும்பொழுது மகாஜனங்கள் 'கீர்த்தனை பாடு,' 'தில்லானு பாடு' என்பார்கள். இவ்வாறு மூலைக்கொரு குரல் கிளம்பும். இராவணன் திகைப்பான்! என்ன பாடுவதென்று அவனுக்குத் தெரியாது. 'ராமா நீ சமானமெவரு?' என்று பாடத் தொடங்கிவிடுவான்! பாடுகிற பாட்டுக்கு அவனுக்கே பொருள் விளங்காது! பொருள் தெரிந்திருந்தால் இராவணன் வேடம் தரித்தவன் "ராமா! உனக்குச் சமானமானவர் யார்?" என்று சமய சந்தர்ப்பம் தெரியாமல் பாடுவானு? இப்படி இடப்பொருத்தமின்றிப் பாடி நாடகத்தையே கெடுத்துவிட்டார்கள். தற்பொழுது ஏதோ ஒருவாறு நாடகக்கலை தலைதூக்கி எழுவதைக் காண ஆறுதலாயிருக்கிறது.

கண்ணுல் பார்த்து அனுபவிக்கும் கலை சிற்பம், சித்திரம். காதால் கேட்டு அனுபவிக்கும் கலை இசை. கண்ணுலும் காதாலும் அனுபவிப்பது கவிதை. கலைகளிலெல்லாம் உயர்ந்தது கவிதை. இதை அனுபவிக்கக் கூரிய அறிவுவேண்டும். கலையானது தமிழுடன் கலந்து இயங்குமானுல் அதுவே பூரண கல்விச் செல்வமாய் இருக்கும்.

# 13. பஞ்சாயத்து ஆட்சி

எம். எம். கிருஷ்ணசாமிபிள்ளை பி.ஏ., பி.எல்.

"இந்தியாவின் உயிர்நாடி அதன் ஏழு லட்சங் கிராமங்களில் தான் இருக்கிறது. என்றைக்கு இந்தக் கிராமங்கள் அனைத்தும் பிறர் கையை எதிர்பாராமல் தம்முடைய தேவையைத் தாமே பூர்த்தி செய்துகொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின்றனவோ அன்றைக்குத்தான் இந்நாடு பரிபூரண சுதந்தரம் பெற்ற நாடாக முடியும்''

இது, மகாத்மா காந்தியடிகளின் வாக்கு. இதிற் பொதிந்துள்ள உண்மையை எவரும் மறுக்க முடியாது. நம் நாட்டின் முன்னேற்றம் கிராம முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது. உழவையுந் தொழிலையும் பெருக்கி நாட்டின் செழிப்பை வளர்ப்பவர்கள் கிராமவாசிகளே. அவர்களது உழைப்பின் பலனுகவே நகரவாசிகள் கவலையின்றி வாழும் சூழ்நிலையைப் பெறுகிறுர்கள். கிராம மக்களின் சேவையையும் தேவையையும் உணர்ந்து அவர்களுக்கு ஏற்ற வசதிகளை வழங்கினுல்தான் நாடு செழிக்கும்.

### பழங் காலத்திற் கிராம ஆட்சி

கிராம ஆட்சிமுறை நம் நாட்டிற்குப் புதியதன்று. பண்டைக் காலத்திலேயே நம் கிராம மக்களுக்கு ஆளுந்திறமையும் வாழும் வகையும் நன்ருக அமைந்திருந்தன என்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் உள்ளன. பண்டைக்கால இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் அக்காலக் கிராம ஆட்சி முறையின் சிறப்பை அறிவிக்கின்றன. கிராம மக்கள் 'குடவோலை' மூலம் ஊர்ச் சபையாரைத் தேர்ந்தெடுத்தனர் என்றும், அந்தச் சபையினருக்கு 'ஏரி வாரியர், பொன் வாரியர், பஞ்ச வாரியர்' என்ற பெயர்கள் வழங்கப்பட்டன என்றும் சாசனங்கள் கூறுகின்றன. 'ஐம்பெருங்குழு' 'எண்பேராயம்' போன்ற கிராம மன்றங்களைப் பற்றிய செய்திகள் முற்கால இலக்கியங்களில் காணப்படுகின்றன. 'ஐம்பெருங்குழு' என்ற சொல் 'பஞ்சாயத்து' என்பதன் தமிழ் வடிவாகவே தோன்றுகிறதல்லவா?

தம்மில் சிறந்தவராகவும், தன்னலமற்றவராகவும், அன்பிற்குப் பாத்திரராகவும் உள்ள ஒரு பெரியவரின் தலைமையில் கிராம மக்கள் தம் குறைகளைத் தீர்த்துக்கொண்டதாக அறிகிறோம். சிக்கலான எத்தனையோ வழக்குகளைக் கிராமப் 'பட்டி மன்ற'த்திலே நேர்மையாகத் தீர்த்துக்கொண்டார்கள் என்பதை விளக்கும் பழங்கதைகள் பலவுண்டு. மதிநுட்பம் படைத்த கிராமத் தலைவர்களின் திறமையால் அக்காலக் கிராம மக்கள் கவலையின்றிச் செழிப்பாக வாழ்ந்தனர் என்றும் அறிகிறோம். மக்களின் கருத்திற்கு மதிப்புத்தந்து அவர்களது தேவையை நிறைவுசெய்து, அவர்கள் மாசிலா வாழ்க்கை நடத்துதற்கேற்ற வாய்ப்புக்களைக் கிராமப் பொது மன்றம் பண்டைக்காலத்திலும் வழங்கி வந்திருக்கிறது. நம் நாட்டை அரசாண்ட அரசர் பரம்பரையினரும் கிராம ஆட்சிமுறைக்கு ஆதரவு தந்தனர். கிராம மக்களின் பூரண ஒத்துழைப்போடுதான் பண்டைக்கால அரசர்கள் சாலைகள் அமைத்தல், குளங்கள் கால்வாய்கள் வெட்டுதல், நீர்ப்பாசன வசதிகள் செய்தல் முதலிய நாட்டிற்குத் தேவையான நற்பணிகளைச் செய்து வந்தனர்.

### *சிறந்த முறையை இழந்த காரணம்*

நமது அரசர் பரம்பரை மறைந்தபின் மொகலாய மராட்டிய ஆட்சிகள் நடந்த காலத்திலும் கிராம ஆட்சிமுறை தொடர்ந்து நடந்து வந்ததாகவே அறிகிறோம். ஆனால், பிரிட்டிஷாரின் ஆட்சி இந்நாட்டில் தோன்றிய பின்னரே கிராம ஆட்சி முறை பாதிக்கப் பட்டது. கிராம மக்கள் தமக்குள்ளேயே வரிவசூல் செய்து தேவைகளை நிறைவேற்றும் பழைய நிலை மாறிற்று. நில சம்பந்தமான 'ரயத்துவாரி' திட்டத்தைப் பிரிட்டிஷார் அமுலுக்குக் கொண்டுவந்தனர். இதன்மூலம் குடிகளிடமிருந்து அரசாங்கமே நேரடியாக வரிவசூல் செய்யும் நிலைமை ஏற்பட்டது. கிராமக் காரியங்களை நிர்வகிக்கும் அதிகாரம் அரசாங்கப் பொதுஅதிகாரிகளுக்குத் தரப்பட்டது. மக்களின் கருத்திற்கு மதிப்புக் குறைந்தது. ஆட்சி முறையில் மக்களுக்கு ஈடுபாடு மறைந்து பயமும் பதற்றமுமே தலைதூக்கி நின்றன. இதனால் கிராமத்தில் ஜனநாயக ஆட்சிமுறை அழிய நேர்ந்தது. சுயேச்சையாகவும் ஆர்வத்துடனும் தொழில் நடத்திவந்த கிராமவாசிகள் பல கட்டுப்பாடுகளுக்கு ஆளாகி அக்கறை இழந்தனர். உற்பத்தியைப் பெருக்குவதில் உள்ள ஊக்கம் நாளடைவில் குறைந்து வந்துவிட்டது.

### சமய சஞ்சீவி

தற்காலத்திய கிராம வாழ்க்கை விவரிக்கமுடியாத சிக்கல்கள் நிறைந்ததாகவுள்ளது. வாழ்க்கை எங்குமே இயந்திர மயமாகி விட்டது. இந்த உண்மை நகரத்திற்கும் பொருந்தும்; கிராமத் திற்கும் பொருந்தும். சமுதாய நலன் கருதும் பழைய கிராமப் பழக்க வழக்கங்கள் மறைந்து போயின. வாழ்க்கை முறையிலும் எத்தனையோ மாறுதல்கள்!

கிராமக் காரியங்களில் மக்களுக்கு ஆர்வமும் ஆவலும் அக்கறையும் உண்டாகச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். அவர்களுக்குச் சில பொறுப்புகளையும் கடமைகளையும் கொடுத் தால்தான் கிராம முன்னேற்றத்தில் அவர்களுக்கு ஈடுபாடு உண் டாக்க முடியும். பிறர் உதவியை அனுவசியமாக எதிர்பாராமல், தம்முடைய தேவையைத் தாமே பூர்த்திசெய்துகொள்ள வேண்டும் என்ற ஊக்கத்தைக் கிராம மக்களுக்கு ஊட்டவேண்டும். இத் துறையில் கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம் ஒரு சிறந்த வழிகாட்டி; கிராம மக்களுக்குக் கிடைத்த சமயசஞ்சீவி. இந்தச் சட்டம் சென்னை சட்டசபையில் 1950-ஆம் ஆண்டு ஜனவரியில் நிறை வேற்றப்பட்டது. அதே ஜனவரிமாதம் 26-ஆம் தேதியில்தான் புதிய அரசியல் அமைப்பின்படி இந்தியா குடியரசு நாடாயிற்று என் பதும் குறிப்பிடத்தக்கது. கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம் 1950 ஆம் வருடம் ஜுலை மாதம் 15 ஆம் தேதி இந்திய ஜனாதிபதி யின் அங்கீகாரம் பெற்று 1951-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அமுலில் இருந்து வருகிறது.

### தேவைக்கேற்ற திட்டம்

சட்டத்தின்படி ஏற்படுத்தப்படும் பஞ்சாயத்து சுதந்திர இந்தி யாவில் ஒரு முக்கியமான அங்கம் வகிக்கிறது. 500-க்குக் குறை யாத ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து அமைக்கவேண்டியது சட்டத்தின்படி அவசிய மாகும். 500-க்குக் குறைவான ஜனத்தொகையுள்ள கிராமங்கள் இருப்பின் அவற்றைப் பக்கத்துக் கிராமங்களோடு இணைத்துப் பஞ்சாயத்து அமைக்கப்படும். சென்னை ராஜ்யத்தில் ஏற்கெனவே சுமார் 8500 பஞ்சாயத்துக்கள் உள்ளன. இவை புதிய சட்டத் தின் கீழ்க் கொண்டுவரப்படும். இவை தவிர இன்னும் 15,830 பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி புதிதாக அமைக்கப்படும்.

கிராமத்திற்குத் தேவையான சுகாதார வசதி, வைத்திய வசதி, பிரசவ சிசுபாலன வசதிகள், குடிதண்ணீர் வசதி, கல்வி அபி விருத்தி, வாசகசாலைகள் அமைத்தல், சந்தை–திருவிழா முதலிய ஏற்பாடுகள், போக்குவரவு சாதனங்கள், வண்டிப் பேட்டைகள், விளையாட்டு மைதானங்கள் அமைத்தல் முதலிய எல்லா முக்கிய மான தேவைகளையும் பூர்த்தி செய்யும் பொறுப்பு ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் உண்டு. விவசாய அபிவிருத்தி, குடிசைத் தொழில் முன்னேற்றம், கால்நடை பராமரிப்புப் போன்ற பணிகளை யும் பஞ்சாயத்து ஏற்று நடத்தலாம். குடி மராமத்து வேலைகள் செய்தல், நீர்ப்பாசன வசதிகள் செய்தல், நீர்ப்பாசனக் கட்டிடங் களை நிர்வகித்தல், புறம்போக்கு சமுதாய நிலங்களைப் பராமரித்தல் போன்ற காரியங்களை நிர்வகிப்பதற்கும் பஞ்சாயத்திற்கு அதிகாரம் உண்டு. சிறு வழக்குகளைத் தீர்த்துவைக்கும் நீதிமன்றமாகவும் பஞ்சாயத்து விளங்கும். பத்திரங்கள் பதிவு செய்யும் அதிகாரமும் அதற்கு உண்டு. பொதுவில் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கை யோடு சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் பஞ்சாயத்து கவனித்து ஆவன செய்யக் கடமைப்பட்டுள்ளது. பஞ்சாயத்திற்கு வெளிப்புறக் கட்டுப்பாடு குறைவு. ஜில்லா போர்டுகளுக்குக் கூடப் பஞ்சாயத்தைக் கட்டுப்படுத்தும் உரிமை கிடையாது. பஞ்சாயத்து நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் உரிமையும் கட்டுப்படுத்தும் உரிமையும் அரசாங்கத்திற்கே உண்டு. அரசாங் கம் பஞ்சாயத்து மீதுள்ள தன் அதிகாரங்களை நிர்வாக அதிகாரி களின் மூலம்—சிறப்பாகப் பஞ்சாயத்துக்களின் உற்பத்தியாளர் என்று கருதப்படுபவரும், அவற்றின் வழிகாட்டியாகவும் பாதுகாவ லராகவும் இருப்பவருமான ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டரின் மூலமாக—நிறைவேற்றுகின்றது.

### வருவாய்க்குரிய வழிகள்

முன்னே குறிப்பிட்ட முக்கிய தேவைகளை நிறைவேற்றுவதற் குப் பஞ்சாயத்துக்குப் பொருள்வசதி வேண்டுமல்லவா ? அதற்கும் சட்டத்தில் வழிகாட்டப்பட்டுள்ளது. அதாவது வரிவிதித்து வசூல் செய்யும் அதிகாரமும் பஞ்சாயத்துக்குத் தரப்பட்டுள்ளது. கிரா மத்தார்களுக்குத் தம் ஊரிலுள்ள பஞ்சாயத்து ஆட்சி முறையில் அக்கறை ஏற்படுவதற்கும் வரிவிதிப்பு முறை உதவி செய்கிறது. தாம் செலுத்தும் வரி எவ்வாறு செலவிடப்படுகிறது என்று கிராம மக்கள் அக்கறையோடு கவனிப்பார்கள் அல்லவா ?

மக்கள் செலுத்தும் வரிதவிர வசூல் செய்யும் நிலத்தீர்வையில் 12½ சத விகிதத்தை அரசாங்கம் பஞ்சாயத்துக்கு மான்யமாக வழங்குகிறது. இது சட்டத்திற் காணும் ஒரு நல்ல—வரவேற்கத் தக்க—அம்சமாகும். ஆனால் பஞ்சாயத்துக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புக்களைக் கவனித்தால் சர்க்கார் மான்யத்தின் மூலம் கிடைக்கும் நிதியும், வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் நிதியும் பஞ் சாயத்திற்குப் போதாது என்றுதான் தோன்றுகின்றது. தேவைக்கு ஏற்றபடி நிதி நிலைமை முன்னேறினால் ஒழியப் பஞ்சாயத்து நிர்வாகம் திறமையாக நடைபெறமுடியாது. கல்வி, போக்கு வரவு, பொது சுகாதாரம் போன்றவை கிராமங்களுக்கு மட்டுமே தேவை யானவை என்று கூறமுடியாது. இவையெல்லாம் பொதுவாகவே தேசத்தின் செழிப்பிற்குரிய சிறந்த சாதனங்கள். எனவே இவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து பஞ்சாயத்துக்கு அதிகமான சலுகை காட்டப்படவேண்டும். அதாவது போதுமான அரசாங்க மான்யம் தரப்படவேண்டும். விற்பனை வரி, பெட்ரோல் வரி, மோட்டார் வாகன வரி, முதலிய பொதுப்படையான ராஜ்ய வருமானங்களிலிருந்தும் ஒரு பகுதியைப் பஞ்சாயத்துக்கு வழங்கி னால் நல்லது.

அகில இந்திய ஸ்தல ஸ்தாபனங்களின் நிதி நிலைமை விசாரணைக் கமிட்டியாரின் முக்கியமான சிபாரிசுகளில் நிலத்தீர் வையில் 15 சதவிகிதம் பஞ்சாயத்துக்கு நிபந்தனையின்றி ஒதுக்கப் பட வேண்டுமென்பதும் ஒன்றாகும். இதனை அந்தக் கமிட்டியார் 1951-ஆம் வருட மத்தியில் வெளியிட்ட அறிக்கையில் காணலாம். இந்த யோசனையை அமுல் நடத்தினால் பஞ்சாயத்தின் நிதி நிலைமை யில் அபிவிருத்தி ஏற்படும்.

---

இஃது ஆந்திரப் பிரிவினைக்கு முன் எழுதியதாகும்.

# 14. பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள்

சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி.ஏ.

நாகரிகத்தின் அடிப்படையும் அரசியல் எழுச்சி தொடங்கும் இடமும் பல்கலைக் கழகமாகும். நம் நாட்டுச் சுதந்திர இயக்கத் தலைவர்கள் அனைவரும் பல்கலைக் கழகங்களிற் கல்வி பயன்றவரே யாவர். ஏனைய நாடுகளிலும் இவ்வாறேயாம். உலகம் விஞ்ஞானத்திலும் தொழில் வளர்ச்சியிலும் முன்னேறி வருகின்றது. இத்துறைகளில் புதிய புதிய ஆராய்ச்சிகள் நடத்த உதவியாய் இருப்பவை ஆங்காங்கேயுள்ள பல்கலைக் கழகங்களேயாம். இதற்குச் சான்றாக ரஷ்யாவில் 1910-ல் 13 பல்கலைக் கழகங்களும் 1937-ல் (350 தொழிற் கல்லூரிகளுட்பட) 750 பல்கலைக் கழகங்களும் இருந்ததைக் குறிப்பிடலாம்.

உலகின் சிறந்த பல்கலைக் கழகங்கள் அரசியல் துறையில் முன்னேற்ற மடைந்துள்ள பிரிட்டனிலும் அமெரிக்காவிலுமே உள்ளன. இவை வேறு வேறு முறைகளில் நாட்டு மக்களின் பண்பாடு, சூழ்நிலை, வாழ்க்கைநெறி முதலாயவற்றுக்கேற்ப அமைந்துள்ளன. பிற நாடுகளிலுள்ள பல்கலைக் கழக முறைகள் இவ் விரண்டில் ஏதாவதொன்றைப் பின்பற்றியனவாகவே உள்ளன. ஆஸ்திரேலியாவில் இவ்விரண்டுங் கலந்த ஒரு திட்டம் கையாளப்படுகிறது.

#### சில வேறுபாடுகள்

பிரிட்டிஷ் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கட்கு இடையேயுள்ள சிறப்பான வேறுபாடு ஒன்று உண்டு. அமெரிக்காவில் ஓரிடத்திலேயே உள்ள பல கல்லூரிகளின் தொகுதியே பல்கலைக் கழகம் எனப்படுகிறது. பட்டம் வழங்கும் உரிமை பல்கலைக் கழகங்கட்கு மட்டுமேயன்றிக் கல்லூரிகட்கும் உண்டு. பிரிட்டனில் கல்லூரிகளை மேற்பார்வையிட்டு அவற்றை இணைக்கும் கழகங்களாகவும், அக்கல்லூரிகளில் பயிலும் மாணவருக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கும் நிலையங்களாகவும் பல்கலைக்

என் பிரயாண நினைவுகள் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

கழகங்கள் உள்ளன. இந்த முறையே இந்தியாவில் இருப்பதை நாம் அறிவோம்.

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில், மிகப் பெருவாரியான ஆசிரியர் இருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவைப் போல், 6 அல்லது 7 மாணவருக்கு ஓர் ஆசிரியர் இல்லாவிடினும் 10 மாணவருக்கு ஓர் ஆசிரியர் இருப்பது, இந்தியாவிலிருந்து சென்ற எனக்கு வியப்பாகவே இருந்தது.

*பிற சிறப்புகள்*

விளையாட்டுக்குக் கொடுக்கப்படுஞ் சிறப்பு, மிகுதியானது. ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் என்றதும் பலருக்குப் படகுப் போட்டி தான் நினைவுக்கு வருகிறது அல்லவா? மொழி ஆராய்ச்சியிலும் பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள் சிறந்த பங்கெடுத்துக்கொள் கின்றன. ஆங்கில அகராதிகளிற் சிறந்தவை ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் வெளியீடுகளேயாம்.

*வெளி நாட்டு மாணவர்*

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களின் பெருமைக்குச் சிறந்த காரணம், இவை உலகுக்கே கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாகும். சில ஆயிரம் அமெரிக்கர் உள்பட வெளி நாட்டவர் எல்லோரும் பிரிட்டனுக்கு மாணவராக வருவதைப் பற்றிப் பிரிட்டிஷார் மகிழ்ச்சியடைகின்றனர்.

இந்திய மாணவர் மட்டும் பிரிட்டனில் பத்தாயிரம் பேருளர். இவர்களிற் பலர் உணவு விடுதிகளிலேயே இருக்கின்றனர்; சிலர் தனிக் குடும்பங்களுடன் தங்குகின்றனர். தலைமுறை தலைமுறை யாக வெளிநாட்டு மாணவர்களைத் தம் வீடுகளில், பணம் வாங்கிக் கொண்டு விருந்தாளியாக (**Paying Guests**) ஏற்கும் குடும்பங்கள் பிரிட்டனில் மிகுதியாக இருக்கின்றன. இக்குடும்பப் பெண்கள் தம் விருந்தினரைத் தாயன்போடு பேணி வருவது பாராட்டுக் குரியது. பிரிட்டிஷ் இளைஞர் உணவு விடுதிக் கழகத்தார் (**British Youth Hostels' Association**) பெரு நகரங்களிலெல் லாம் மாணவருக்கான விடுதிகளை அமைத்துள்ளனர்.

வெளிநாட்டு மாணவர்கள் இத்துணைப்பேர் பிரிட்டனுக்கு ஏன் வருகிறார்கள் என்பதை அறிய, சென்ற ஆண்டில் ஒரு பிரிட்டிஷ் பத்திரிகை வாக்கெடுத்ததில், ஆக்ஸ்போர்டில் படிக்கும் மாணவரில் 100க்கு 15 பேர் தம் வாழ்க்கையை அனுபவ

வாயிலாக அறிந்துகொள்ள வந்ததாயும், மேலும் 15 பேர் தமக்குத் தம் அரசியலார் உதவிச் சம்பளம் தந்ததால் வந்ததாயும், 20 பேர் தமக்குக் கணவன் அல்லது மனைவி தேடுவதற்காக வந்ததாயும், எஞ்சிய பாதிப்பேர் மட்டுமே கல்வி கற்க வந்ததாயும் கூறினராம். சராசரியில் வெளிநாட்டு மாணவர் ஒவ்வொருவரும் 4,700 ரூபாய் ஆண்டுதோறும் செலவிடுவதாயும் அப்பத்திரிகை வெளியிட்டது.

*மாணவரும் ஆசிரியரும்*

பிரிட்டனில், மாணவர்கள் கட்டுப்பாடாகவும் ஒழுங்காகவும் நடந்துகொள்ளுகின்றனர். ஆசிரியரும் மாணவரும் உயர்வு தாழ்வு மனப்பாங்கின்றி ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகுகின்றனர். விரும்பியபோதெல்லாம் மாணவர் தம் ஆசிரியரை எளிதில் காண இயலும். ஆசிரியர்களிற் பலர் பேரறிஞராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நூல் நிலையங்கள் பல நூறாயிரம் நூல்கள் உடையனவாக இருக்கின்றன. பல மாணவர் தம் நேரத்திற் பெரும் பகுதியை இந் நிலையங்களிலும், விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைகளிலும், பொருட்காட்சிச் சாலைகளிலுமே கழிப்பர்.

*மிகப் பெரிய பல்கலைக் கழகம்*

பிரிட்டனில் மிகப் பெரிய பல்கலைக் கழகம் தொழிலாளர் கல்விக் கழகத்தாரால் நடத்தப்படுகிறது. நூறாயிரம் மாணவர்களையுடைய இக் கல்விநிலையம் பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள், கூட்டுறவு மன்றங்கள், தொழிலாளர் இயக்கம் இவற்றின் கூட்டு முயற்சியால் நடைபெறுகின்றது. பல பொது இடங்களில் உழவர், சுரங்கத் தொழிலாளர், ரயில்வே ஊழியர் ஆகியோர் தம் வேலை முடிந்ததும் கல்வி கற்கின்றனர்.

*லாஸ்கியின் வகுப்பு*

லண்டன் பல்கலைக் கழகத்தில் ஒரு வகுப்புக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பம்பாயின் முன்னைய முதலமைச்சரின் மைந்தர் **கெர்** தம்முடைய பி எச். டி. வகுப்பில் நடந்த அறிஞர் லாஸ்கியின் சொற்பொழிவுக்கு என்னை அழைத்தார். சொற்பொழிவு நடக்கவிருந்த மண்டபத்திற்குச் சென்றோம். அம் மண்டபத்தின் வாயிலில் பல நூறு மாணவர் வரிசை முறையில் காத்துக்கொண்டிருந்தனர். அவ் வகுப்பு மாணவர்

மட்டுமன்றி, விஞ்ஞானம் கணிதம் போன்ற துறைகளில் மேற் பயிற்சி பெறுபவரும் அச் சொற்பொழிவுக்குத் தாமே வந்திருந்தனர். உரிய நேரத்திற் கதவு திறக்கப்பட்டதும், எல்லோரும் இடத்துக்கு முந்தினர். இது நம் நாட்டில் திரைப்படங்களுக்கு மக்கள் செல்லுவது போன்ற காட்சியாயிருந்தது. போதிய இடம் இல்லாததால், பல மாணவ மாணவிகள் சன்னல்களில் இருந்தனர் ; சிலர் மாடிப் படிகளில் நின்றனர் ; வேறு சிலர் ஆசிரியருக்கு அருகில் தரையில் அமர்ந்தனர். லண்டன் பல்கலைக் கழகத்தில் நான் இக்காட்சிகளைக் காணலாம் என்று எதிர்பார்க்கவே இல்லை.

ஹெரால்டு லாஸ்கி ஒரு சிறந்த கல்விமான்; ஆங்கில மொழியில் நிரம்பிய புலமை உடையவர் ; குடி ஆட்சி முறையைப் பற்றியும் அரசியலின் தத்துவங்களைப் பற்றியும் அரிய கருத்துக்களை வெளியிட்டிருப்பவர் ; ஆதாரமான நூல்கள் பலவற்றை இயற்றியிருப்பவர் ; பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் மூளைகளில் ஒருவர் ; ஈராண்டுகளுக்கு முன் அக் கட்சியின் தலைவராயிருந்தவர் ; இந்தியாமீதும் இந்தியர்கள்மீதும் பேரன்பு உடையவர். இவர் ஒரு யூதர் ; யூதரின் இஸ்ரேல் அரசியலாரை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்பது இவர் கருத்து.

மேடையில் ஆறு அடி தொலைவுக்குள் நடந்து கொண்டும், இடையிடையே தண்ணீர் பருகிக்கொண்டும், நின்ற வண்ணமே ஆசிரியர் லாஸ்கி ஒரு மணி நேரம் சொன்மாரி பொழிந்தார். ஒரே அளவான கம்பீரமான ஒலியில், இனிமையும் தெளிவும் சேர்ந்த குரலில், தங்குதடையின்றிச் சீரிய முறையில், அருமையான பொருள்களைப் பற்றிக் கடல் மடை திறந்ததுபோல், உயரிய நடையில் லாஸ்கி பேசினார். அவர் அன்று பேசியது பேச்சுச் சுதந்திரம் என்னும் பொருள் பற்றியது. அவ்வப்போது இக் கால அரசியல் நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டித் தம் கருத்துக்களை அவர் விளக்கினார். பல மேற்கோள்களையும் படித்துக் காட்டினார். ஆசிரியன் ஒவ்வொரு சொல்லையும் எல்லா மாணவரும் கூர்ந்து கவனித்துப் பல குறிப்புக்களை எழுதிக்கொண்டனர். இக் குறிப்புக்களைக் கொண்டு, தனித்தனியே, ஆசிரியருடன், பின்னர் விவாதிப்பார்கள் என்றும் அறிந்தேன்.

# 15. ஔவையார் தூது

**திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை**

## காட்சி—1

*உறுப்பினர் :* ஔவையார் ; அதியமான்

*இடம் :* அதியமான் மாளிகை.

*பொழுது :* மாலைப்பொழுது. அதியமான் ஔவையாரைத் தொண்டைமான்பால் தூதுபோக வேண்டுதல்

**ஔவையார் :** வெற்றி மிகும் தப்பாத வாளினை ஏந்தியவனே! மிக்க மகிழ்ச்சிக்குரிய மதுவினையுடைய அதியர் தலைவ! எதிர்த்த வரைப் போர்முனையிற் கொல்லும் வீரவாளும் பொன் மாலையும் அணிந்த அஞ்சி வேந்தே! நீ, பழைய பெரிய மலையினில் எவரும் அடைய முடியாத உயரத்து இரு பிளவுகளின் இடையே தோன்றிய சிறு இலைகளைப் பெற்ற நெல்லியின் பழத்தை, அஃது உண்டவர் அடையும் பெருவாழ்வை உணர்த்தாது, பால்போன்ற பிறைநிலா விளங்கும் திருமுடியையும் நீலமான அழகிய கழுத்தையுமுடைய, ஒப்பற்ற முதல்வனும் சிவபெருமானைப் போல, யான் சாகாம லிருக்குமாறு எனக்குத் தந்து மகிழ்ந்தனையே!

**அதியமான் :** அம்மையே, ஒன்றுக்கும் பற்றாத யான், உண்டு உலகுக்குச் சுமையாவதினும், உலகு அவாவும் விழுமிய கல்விச் செல்வம் படைத்த தாங்கள் வாழுதல் சிறப்பன்றோ?

**ஔவையார் :** காவல் மதில் சூழும் பல அரண்களை வென்ற நெடுமான் மன்ன! யாழ்போல இனிய ஓசையும் பெறாது ; இசைக் குரிய கால அளவும் கூடியிராது ; பொருளும் உணர இயலாது ; ஆயினும் பிள்ளையின் மழலை மொழிகள் தந்தைக்கு அன்புநிலை ஆகின்றன. அதுபோல, நீ அருள் புரிதலால் எனது வாய்ச் சொற் களும் அவ்வாறே அமைகின்றன. மேலும் என்னை யொத்த புலவர் கள், தமது நெஞ்சை நோக்கி, உண்ண விரும்பும் நெஞ்சமே! நீ பரிசுக்காக வருந்தாதே ; யாம் ஒருநாள் மட்டும் செல்லாது, இரண்டு நாள்மட்டும் போகாது, எத்துணையோ முறை, பல நண்

பர்களோடு சென்று பழகினும், முதன் முறையாகப் பெற்ற அன்பைப்போலவே அணிகள் பூணப்பெற்ற யானையையும், இயலும் தேரையும் உடைய அதியமான், எப்போதும் பெற்றுளான். பரிசு பெறுகின்ற நாள் கூடினாலும் குறைந்தாலும், யானை தனது பெரிய கொம்புகளின் நடுவே வைத்துள்ள கவளம் போல அப்பரிசு நமது கையிலிருப்பதே யாகும், அது பொய் அல்ல. அவன் திருவடி வாழ்க'' என நாளும் வாழ்த்தி வருவது பொய்க்குமா?

**அதியமான்** : அன்னாய்! 'எட்டுத் தேர்களை ஒரே நாளில் செய்யும் தச்சன் ஒரு திங்கள் முயன்று முடித்த ஒரு தேரின் கால் போன்ற வலிமையுள்ளவன்' எனப் பலவாறு என்னைத் தாங்கள் புகழ்ந்து கூறினும் என் உள்ளம் அதனால் அமைதியுறவில்லை. மலையன் ஒரு திசையிலும், மூவேந்தர் மற்றொரு புறமும், இன்னொரு பக்கம் திதியன், பொருநன், எருமையூரன், இருங்கோவேள்மா என்பவர்களும் என்மீது நாளும் அழுக்காறும் வஞ்சமும் கொண்டவர்களாக உள்ளனர். போதாக்குறைக்குக் காஞ்சித் தொண்டைமானும் என்னை வெறுக்கின்றனனாம்.

**ஔவையார்** : 'பெரும! ஊர்ச் சிறுவர்கள் தனது வெண்மையான கொம்புகளைக் கழுவுமாறு நீர்த்துறையினில் அடங்கியிருக்கும் பெரிய யானைபோல, புலவர்களாகிய எங்கட்கு இனியவனாகின்றாய்; பின்னர் அவ் யானை பிறர் அணுகமுடியாதவாறு பெற்ற மதங் கொண்ட நிலைமையைப்போல, உனது பகைவர்களுக்கு நீ கொடியனாகின்றாய்' என்ற செய்தி உலக மறிந்திருக்க, ஏனோ இம்மன்னர் பொருட்டு நீ கவலையுறவேண்டும்?

**அதியமான்** : அம்மே! தாங்கள் என்ன கூறினும் என் திடங்கொண்ட நெஞ்சம் இதுபோது விடங்கொண்ட மீனைப்போலக் கலங்குகின்றது. எனக்குற்ற உழுவலன்பன் எனக் கருதப்பெற்ற காஞ்சித்தொண்டைமானும் மாற்றலர்தம் கூட்டுறவால், சார்ந்த தன் வண்ணமாகி எமது நட்பின் மேன்மையையும் எவ்வாறோ மறந்தனன். அவன் செயலே என்னைப் பெரிதும் வருத்துகின்றது.

**ஔவையார்** : "எழு மரம் போன்ற, முழந்தாளினைத் தொடுகின்ற பெரிய கைகளோடுற்றவனே! தவறாத வலிய கைகளையுடைய மழவர்களின் தலைவனே! முறிந்த வளை போன்ற மலர்ந்த காந்தட்பூ, இலைமிக்க மல்லிகையோடு மணம் வீசும் மலைச்சாரிவினிலுள்ள கடும்புலி சீறினால், அதனை எதிர்க்கும் மான் கூட்டங்களுமுண்டோ? ஞாயிறு வெப்பமுற்றுத் தோன்றும் போது மருண்ட

வானத்தும் திசைகளிலும் செறிந்த இருள் நிறையுமோ ? நீ, போர்க் களம் புகுந்தால், பெரிய உலகமாகிய நிலத்தைப்பெற்று ஆரவாரஞ் செய்யும் வீரர்களும் உளரோ ?'' எனவே மன்ன, நீ எதன் பொருட்டும் கவலற்க : உன் நெஞ்சம் விழைவதை என்பால் கூறின் யான் இயன்றன ஆற்றுவன்.

**அதியமான் :** எம்மனோர்க்கு உற்ற துணையாய தாயே! என் பொருட்டுத் தாங்கள் காஞ்சி வேந்தன் தொண்டைமான்பாற் சென்று அவனது நட்பு எனக்கு என்றும் இருக்குமாறு செய்ய வேண்டும். எனது கருத்துக்கு இயைந்த அவனது கூட்டுறவு என்னை இன்னும் மிகுந்த வலிமை பெற்றவனுக்கும். இதுவே எனது உளம் நிறைந்த விருப்பமாம்.

**ஔவையார் :** அன்புடையானோடு உண்டு உறவு பெறவல்ல வனே! போர் முனையிலும் கொடைத்திறன் கெடாதவனே! நின் வீட்டின் இறவானத்தில், செருகப்பெற்ற தீக்கடைக் கோல்போல, நினது வலிமை வெளிப்படவேண்டாத நாளில் அடங்கி வாழ வல்லவனாகின்றாய். இன்னும், அத்தீக்கடைக் கோலால் கக்கப் பட்டு வெளியாகும் காட்டுத் தீயையொப்ப, நீ விரும்பியபோது மிகவும் வலிமை பொருந்திய வீரனாகவும் விளங்குகின்றாய். ஆத லால், எம் நண்ப! நீ வளமையிற் குறைந்தாயெனக் கருதி அஞ் சற்க. நின்னை வெல்லுவார் எவரும் ஈண்டில்லை : இஃது உறுதியே யானும் இன்றே தொண்டைமான் பாற்சென்று, அவனும் நீயும் நேர்மையுற்ற நேசராக நெடிதுவாழ முயலுவேன். கவலற்க : வாழ்க மன்ன! வாழ்க நின் கொற்றம். செல்கின்றேன் விடை தருக.

**அதியமான் ;** தாயே! வணக்கம். அவ்வாறே ஆகுக. எனது என்றும் நீங்கா நன்றியையும் அன்பினையும் ஏற்றருள்க. (நின்று கூப்பி வணங்குதல்.)

## காட்சி 2

*பொழுது :* மாலைப்பொழுது.
*உறுப்பினர் :* தொண்டைமான் இளந்திரையன் ; ஔவையார்.
*இடம் :* காஞ்சி மன்னன் மாளிகை.

**தொண்டைமான் :** மையுண் கண்ணும் ஒளிமிகு நெற்றியும் பெற்ற விறலியர் தலைவீ, தங்களுடைய பெரும் பரப்புடைய நாட்டில் என்னோடு போரில் வெற்றிகொளும் வீரர்களும் உளரோ ?

**ஔவையார் :** போர்ப்படை மிகுந்த வேந்தே, எமது நாடு அடிக்கும் கோலுக்கும் அஞ்சாமற் சீறி எதிர்த்து வரும் பாம்பு போல, வலிமை பெற்ற இளமை மிக்க பல வீரர்களைப் பெற்றது ஆகும். இன்னும் பொது மன்றத்தில் கொட்டுவாரற்றுத் தொங்கிக் கொண்டிருக்கும் முழவம், காற்றின் அசைவினால் சிறிதளவு ஓசையை எழுப்பினும் போர்ப்பறையின் முழக்கம் அஃது எனக் கருதும் எம் தலைவனும் உள்ளான்.

**தொண்டைமான் :** நன்று, என் அன்னையே, தாங்கள் எளியனின் போர்க்கலக் கூடத்தைக் கண்ணுற்றீர்களோ ?

**ஔவையார் :** அன்ப, நன்கு கண்டு மகிழ்ந்தேன். படைக் கலக் கொட்டிலில் உள்ள உனது படைக் கலங்கள் யாவும் மயிற் றோகையால் அலங்கரிக்கப் பெற்றுள்ளன ; மாலைகள் சூட்டப் பெற்றுமுள. அவற்றின் உடலிடந் திரண்டுள்ள வலிய காம்புகள் அழகுபெற அமைக்கப் பெற்றுள்ளன. இன்னும் நெய் தடவப் பெற்று, காவல் பெற்ற அகன்ற நகரத்தேயும் உள்ளன. ஆனால் செல்வம் வந்தபோது உணவு அளித்து, இல்லாத நாளில் தாம் பெற்றதைப் பலரோடுங்கூடி உண்ணும் வறிஞர்களின் உறவினர்க் குத் தலைவனாய, எம் அதியமான் அஞ்சி மன்னனின் கூர்மையான நுனியையுடைய வேல், பகைவர்களைக் குத்துவதால் கங்கும் நுனியும் முறிந்து கொல்லனது சிறிய உலைக்களத்தில் கிடக் கின்றன.

**தொண்டைமான் :** தமிழ்ப்பெருமாட்டியே, நும் அஞ்சி என்னினும் வலியன் ஆவனோ ? நன்று கூறினீர்கள். பல்லாண்டு போர்ப் பயிற்சியும் முதிர்ந்த தேர்ச்சியும் பெற்ற என்பால் அவனது திறமை என்ன ஆகும் ?

**ஔவையார் :** ஊர்ச்சிறுர்கள் ஆடுவதனால் கலங்கக் கூடிய காலினது அளவே குறைந்த நீரினில், இழுக்கும் வலிமைபெற்ற முதலை, யானையைக் கொன்று வீழ்த்தும். அஃது ஒத்தவன் எம் தலைவன் அஞ்சி. அவனது நுணுக்கமான பல செய்திகளைக் கருதிப் பாராது 'இளைஞன் அவன்' என மதியாமற் பேசினால், நீவிர் வெல்வது அரிதாம்.

**தொண்டைமான் :** தமிழன்னாய், அதியமான் நெடுமானஞ்சி, காஞ்சித் தொண்டைமான் இளந்திரையனைவிடப் போர்ப்படை பெற்றவன் என்பதுதானே தங்கள் உள்ளக்கிடக்கை.

**ஔவையார் :** அன்பு கெழுமிய வேந்தே, வேற்றுமை நாடாது யான் கூறுவதன் பொருளைச் செவிமடுப்பாய். அன்ப, உங்கள் இருவரையும் யான் நன்கு உணர்வேன். நீவிர் இருவீரும் ஒத்த நலனும் வலிமையும் கொண்டவர்கள் என்பது திண்ணம். ஆயினும், அஞ்சி, பேராற்றல் படைத்தவன்; நீயோ பெரும்படை கொண்டவன். ஆதலினல் நீவிர் இருவீரும் உம்முள் எவர் வலியவர் என நாட விழைவது நலனன்று. அதற்கு மாருக யான் விரும்புவது ஒன்றுண்டு. நீ தடை செய்யாது யாவர் நலனையும் கருதி, உடன்படுவாயானுல் அதனைக் கூற ஆணை தருக.

**தொண்டைமான் :** தமிழ்ச் செல்வி, உலகு இன்புறுதற்கு ஏதுவாய ஒன்றினை, யான் என்றும் தடை செய்யேன். எனது இயல்புக்கு உரித்தாயின் யான் தங்களது ஆணையை மறுக்கேன். இஃது உறுதியே.

**ஔவையார் :** கற்றவரைக்காக்கும் காஞ்சித் தலைவ! நீ நெடிது வாழ்க. பெருமை பெற்றவனுய அஞ்சியினது நற்ருெடர்பு நினக்கு மிகவும் வேண்டற்பாலதென வுணர்க.

**தொண்டைமான் :** தமிழ்த்தேவீ, அதற்காக யான் என்ன செய்யவேண்டும்? மிக்க புகழ் பெற்றவனுக அவன் இருப்பின், யான் வலியச் சென்று புகழ வேண்டுமோ?

**ஔவையார் :** அற்றன்று அரசே, அவன் சிறந்தவன்; வீரன்; அத்தகைய அஞ்சி இது போது, நின் நட்புப் பேற்றை நாடுகின்ருன். நீயும் அவனுக்குற்ற உழுவலன்பினனுக ஆகவேண்டும். இஃ தொன்றுதான் எனது உளங்கொண்ட வேண்டுகோளாகும்.

**தொண்டைமான் :** தமிழ்த்தாயே, தாய்சொல் தடுத்தல் தனயர்க்குத் தகுமோ? தங்கள் கருத்துப் படியே ஆகுக. எம் இருவரது நட்பு நாளும் முற்பக்கத்து மதியம் போல முடுகி வளரத் தாங்களே துணைபுரிய வேண்டும். இனி எனக்கு என்ன குறை?

**ஔவையார் :** இனிய நன் மொழிகளும் இன்பவாழ்வும் கொண்ட எம் வேந்தே, நினது இனிய தேன் போன்ற மொழிகள் எமது உள்ளத்தை மிகவும் களிக்கச் செய்கின்றன. இன்று இவ்வுலகில் என்னினும் பேறு பெற்ருர் எவரும் இல்லை. வாழிய மன்ன! நின் வாழ்வு ஓங்குக! நின் புகழ் நீடு நிலைபெறுக!

## குறிப்புரையும் பயிற்சி வினாக்களும்.

### 1. வாழ்த்து

மருந்தானை—மருந்தாக உள்ளவனை. மணியானை—மணியாக உள்ள வனை. வழுத்தா நின்ற—துதிக்கின்ற. மந்திரங்கள் ஆனானை—மந்திரங்களாக ஆனவனை. கடவுள் தாமே மணி மந்திர ஔடதங்களாக உள்ளார் என்பது கருத்து. வானநாட்டு விருந்தானை—வானுலகத்தில் உள்ள தேவர் களுக்கு விருந்தாக உள்ளவனை. என் உயிரிற் பொருந்தினானை—என் உயி ருக்குள் உயிராய் அமைந்தவனை. பொதுவாய் எங்கும் இருந்தானை இருப் பானை இருக்கின்றானை—சிறப்பாக ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே இருக் கின்றான் என்பதில்லாமல் பொதுவாக எங்கும் முக்காலத்திலும் இருக் கின்றவனை. எம்மானை—எம் தலைவனை.

(i) வேலை—கடல். கன்னி—இளமை. தேங்கமழும்—தேன் கமழும். பாலி—பாலாறு. பொன்னி—காவிரி. பொருநை—தாம்பிரபரணி.

(ii) மலைகளிலே உயர்மலை—இமயமலை. மாநதியுள் வான்நதி— கங்கை. மறைமுடி—வேதாந்தம்: உபநிடதம்.

அருணன்—சூரியன். அளி—அருள். அவனி—உலகம்.

#### பயிற்சி வினாக்கள்

1. இராமலிங்க அடிகள் கடவுளை எவ்வெப் பொருள்களாகக் கூறு கிறார்?
2. இப்பாடலில் குறிக்கப்பெற்றுள்ள கடவுளின் இயல்புகள் யாவை?
3. தமிழ் நாட்டின் சிறப்புக்கள் யாவை?
4. பாரத நாடு பெற்றுள்ள சிறப்புக்களைக் கூறுக.
5. தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
6. தமிழ் நாட்டில் உள்ள மலைகள், பாயும் ஆறுகள் இவற்றைக் கூறுக.
7. விளக்குக: "மலைகளிலே உயர்மலை," "மாநதியுள் வானதி"

# 2. அறவுரை.

## 1. நீதிநெறி விளக்கம்

1. ஆக்கம்–செல்வம் (கல்வி, பொருள்). மீச் செலவு–வரம்பு கடந்த கடத்தை. நனி–மிகவும்; உரிச்சொல். தாழ்ப–தாழ்வார்கள்; பலர் பால் வினைமுற்று. தாழ்+ப. துலே–தராசு. செல்லச் செல்ல; அடுக்குத் தொடர்.

2. சுட்டு–நன்கு மதிக்கப்படுதல்; முதனிலைத் தொழிற்பெயர். யாண்டும்–எப்பொழுதும். மறவாமே; எதிர் மறை வினையெச்சம். நோற்பது–கடைப் பிடியாகக் கொள்ளத் தக்கது. சீர்–புகழ். தூற்றி–பிறர் அறியச் சொல்லி. சிறுமை–குற்றங்கள். புறங்காத்து–வெளிப்படுத்தாது மறைத்து. தாழ்ச்சி–பணிவான வார்த்தைகள்; தொழிலாகு பெயர்.

3. இல்லார்–பொருள் இல்லாத ஏழையர்; எதிர்மறை வினையாலணையும் பெயர். குறை இரந்து நிற்றல்–தம்மிடம் இல்லாத பொருளை வேண்டி நிற்பது.

4. செய்வினையின் மூலம்–செய்யும் காரியத்தின் காரணம். செய்வினை; வினைத்தொகை. விளைவு–பயன். சூழ்வன–ஆராயத்தக்கவை; வினையாலணையும் பெயர். சூழ்ந்து–ஆராய்ந்து; வினையெச்சம்.

## 2. சிறுபஞ்சமூலம்

1. பிறந்த இல்–பிறந்த குடி; பெயரெச்சத் தொடர். கடைப் பிடித்து–உறுதியாக மேற் கொண்டு. கருதற்பாடு–நன்கு மதிக்கப்படுதல். சாவ என–சாவானாக என்று பிறர் கூறும்படியாக. வாழான்; முற்றெச்சம். வாழ்க; வியங்கோள் வினைமுற்று.

2. இழைத்த–செய்த; பெயரெச்சம். பல்பொருளார்–பலவகைச் செல்வமுடையார். நகை கெட–இகழ்தல் இல்லையாக. பெருமை, சிறுமை; பண்புப்பெயர்கள்.

3. தொட்டு–தோண்டி; வினையெச்சம். கோடு–மரக்கொம்பு. சீத்து–சீர்ப்படுத்தி. உழுவயல்; வினைத்தொகை.

4. நாணிலான்–நாணமில்லாதவன். சால்பு–அமைதி. நடை–நல்லொழுக்கம். உதாரதை–ஈகைத் தன்மை. ஏண்–வலிமை. சேவகம்–வீரத்தொழில். நாடின்–ஆராய்ந்தால்; வினையெச்சம். செந்தமிழ்–செம்மை+தமிழ்; பண்புத்தொகை. இலான், தேலுன்; எதிர்மறை வினையாலணையும் பெயர்கள்.

## 3. திருக்குறள்

1. முதல-முதலாக உடையன; பலவின் பால் குறிப்பு வினைமுற்று. அகரம்; கரம், எழுத்துச் சாரியை. முதற்று-முதலாக உடையது; ஒன்றன்பால் குறிப்புவினைமுற்று. உலகம் - உலகத்தில் உள்ள உயிர்கள்; இடவாகு பெயர்.

2. வான்-மழை; ஆகுபெயர். வான் நின்று-மழை இடைவிடாமல் பெய்து நிற்க. வழங்கி வருதலான்-நிலைபெற்று வருவதால். உணரற்பாற்று-உணரும் தன்மையை உடையது.

3. செயற்கரிய-செய்வதற்கு அருமையான செயல்கள், அரிய; வினையாலணையும் பெயர். செய்கலாதார்-செய்யமாட்டாதவர்.

4. மாசு-குற்றம். ஆதல்-ஆகுக; வியங்கோள் வினைமுற்று. அனைத்து-அவ்வளவினதே. ஆகுல நீர-ஆரவாரத் தன்மையுடையவை.

5. எல்லாம்-எல்லாப் பொருளாலும். என்பு-உடம்பு; சினையாகு பெயர். என்பும், உம்மை; உயர்வுச் சிறப்பு

6. இனிய-இனிய சொற்கள். இன்னாத-இன்னாச் சொற்கள்; கடுஞ் சொற்கள். இனிய, இன்னாத; வினையாலணையும்பெயர். கவர்ந்தற்று-உண்டதனோடு ஒக்கும். இக்குறள் உவமையணி.

7. நன்றன்று-அறமன்று. நன்று; பண்பாகுபெயர். நன்றல்லது-தீமை. அன்றே-செய்த அப்பொழுதே. நன்று-அறம்.

8. சமன் செய்து-(முன்னே தான்) சமனாக நின்று. சீர் தூக்கும்-(பின் தன் கண் வைக்கப்பட்ட பாரத்தை) அளவிட்டுக் காட்டும். கோல்-தராசுக் கோல். கோடாமை-வளையாமை; எதிர்மறைத் தொழிற்பெயர். இக் குறள் உவமையணி.

9. அமரர் உள்-தேவருலகு. ஆர் இருள்-நரகம். உய்த்துவிடும்-செலுத்திவிடும். அடக்கம்; தொழிற் பெயர். அடங்காமை; எதிர்மறைத் தொழிற் பெயர்.

10. விழுப்பம்-சிறப்பு. உயிரினும்-உயிரைக் காட்டிலும். ஓம்பப் படும்-பாதுகாக்கப்படும். ஒழுக்கம்; தொழிற் பெயர்.

11. ஒறுத்தார்க்கு-தண்டித்தவர்க்கு; வினையாலணையும் பெயர். பொன்றும் துணையும்-அழியும் அளவும்.

12. அஃகாமை-சுருங்காமைக் காரணம்; தொழிலாகு பெயர். வெஃகாமை - வேண்டாமை; எதிர்மறைத் தொழிற்பெயர்.

13. புறம் கூறி-(பிறனைக்) காணாத இடத்தில் இகழ்ந்துரைத்து. பொய்த்து-கண்ட இடத்தில் (இனியவனைப்) பொய்யாக நடித்து. அறம்-அற நூல்கள்; ஆகுபெயர். ஆக்கம்-பயன்; காரணப்பெயர்.

14. பாராட்டுவான்-பலகாலும் சொல்லுபவன். எனல்-என்று சொல்லாதொழிக; எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. பதடி-பதர். எனல்-என்று சொல்லுக; உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

15. தீயவை-தீவினைகள். தீய-துன்பங்கள். தீயினும்-நெருப்பைக் காட்டிலும்.

## பயிற்சி வினாக்கள்

### 1. நீதிநெறி விளக்கம்

1. நீதிநெறி விளக்கம்—பெயர்க் காரணம் விளக்குக.
2. இந்நூலின் ஆசிரியர் வரலாற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. பெரியோர் இயல்பு யாது? அதற்குக் கூறப்பட்டுள்ள உவமையை விளக்குக.
4. பிறரால் நன்கு மதிக்கப்படுதலை விரும்புவோர் கடைப்பிடிக்க வேண்டுவன யாவை?
5. கல்வியுடைமையும் பொருளுடைமையும் எந்நிலையில் செல்வம் எனப்படும்?
6. ஆள்வினை எவ்வாறு ஆளப்படும்?
7. பொருள் கூறுக: மீச்செலவு. துலை, சுட்டு, இல்லார், மூலம், ஆள்வினை.

### 2. சிறுபஞ்ச மூலம்

1. சிறுபஞ்ச மூலம்—குறிப்பு எழுதுக.
2. இந்நூலை இயற்றிய ஆசிரியர் யார்?
3. வாழும் முறை பற்றிச் சிறுபஞ்ச மூலம் கூறுவது யாது?
4. பெருமையும் சிறுமையும் யாவை?
5. சுவர்க்கத்து இனிது ஏகுவான் யாவன்?
6. நகைத்தற்குரிய செயல்கள் யாவை?
7. பொருள் கூறுக: கருதற்பாடு, பிழைத்தல், பகை, நகை, கோடு, சுவர்க்கம், நாண், சால்பு, நடை, நோன்பு, உதாரதை, சேவகம்

8. பிரித்தெழுதுக: நாணிலான், நடையிலான், செந்தமிழ்.

9. சேர்த்தெழுதுக: குளம் + தொட்டு, நீங்கு + எண்ணி.

10. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக:

தான் பிறந்த இல்; சாவ என வாழான்; வாழ்க என வாழ்தல்; நாணிலான் செய்யும் உதாரதையும், நாவகமே நாடின் நகை; செந்தமிழ் தேருந் கவிசெயல்.

## 3. திருக்குறள்

1. திருக்குறள்—பொருளும் இலக்கணமும் கூறுக.
2. திருக்குறள்—குறிப்பு எழுதுக.
3. ஆசிரியர் வரலாற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
4. உலகம் யாரை முதலாக உடையது? இதற்குக் கூறப்பட்டுள்ள உவமையை விளக்குக.
5. அமிழ்தம் என்று உணரத்தக்கது எது? ஏன்?
6. பெரியார், சிறியார்—இவர்கள் இயல்புகள் யாவை?
7. அறமாவது யாது? ஆகுல நீர யாவை?
8. அன்பிலார், அன்புடையார்—இவர்கள் தன்மைகள் யாவை?
9. 'என்பும் உரியர் பிறர்க்கு'—இதற்கு எடுத்துக்காட்டாவார் யாவர்?
10. எது கனி யிருப்பக் காய்கவர்ந்தற்று?
11. எது நன்றன்று? எது நன்று?
12. சான்றோர்க்கு அணியாவது யாது?
13. எது அமரருள் உய்க்கும்? ஆரிருள் உய்த்துவிடுவது எது?
14. யாருக்குப் பொன்றுந் துணையும் புகழ்?
15. செல்வத்திற்கு அழகாமையாவது யாது?
16. அறங்கூறும் ஆக்கம் தரும்—எது? எவ்வாறு?
17. மக்களுள் பதராவார் யாவர்?
18. எவை தீயினும் அஞ்சப்படும்? ஏன்?
19. பொருள் விளக்குக: வானின் றுலகம் வழங்கி வருதலால், அன்பிலாரெல்லாம் தமக்குரியர், சமன் செய்து சீர்தூக்கும்

கோல், புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தல், பயனில் சொல் பாராட்டுவான்.

20. பொருள் கூறுக: மாசு, ஆகுலம், அமரர், ஆரிருள், விழுப்பம், ஒறுத்தார், அஃகாமை, வெஃகாமை, ஆக்கம், பதடி.

21. பிரித்தெழுதுக: மக்கட் பதடி, செல்வத்திற் கியாதெனின், ஆரிருள், நன்றன்று, மாசிலனாதல்.

22. சேர்த்தெழுதுக: பொய்த்து + உயிர், அறம் + கூறும், அமர ருள் + உய்க்கும்.

23. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக:

ஆதிபகவன் முதற்றே உலகு, மனத்துக்கண் மாசிலன் ஆதல், என்பும் உரியர், இனிய உளவாக, நன்றி மறப்பது நன்று அன்று, கோடாமை சான்றோர்க்கு அணி, சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும், மகன் எனல், மக்கட் பதடி எனல்.

24. உவமை அணியை ஓர் உதாரணம் தந்து விளக்குக.

# 3. காதை

## 1. ஆசிய ஜோதி

1. ஆயர்குலம்–இடையர் குலம். வாடியிருந்தவன்–சோர்ந்திருந்த புத்தர் பெருமான். கண்டான்–காண் + ட் + ஆன். காண் – பகுதி ; ட்-இறந்த கால இடைநிலை ; ஆன்–விகுதி.

2. வையகம்–பூமி ; இங்குப் பூமியில் உள்ள உயிர்கள் ; இடவாகு பெயர். நட்டான்–நடு + ஆன் ; நடு–பகுதி ; ஆன்–விகுதி ; பகுதி ஒற்றிரட்டி இறந்தகாலம் காட்டிற்று.

3. தெய்வ குலத்தினன்–புத்தர்.

4. மயக்கு–மயக்கம் : பிறவினை முதனிலைத் தொழிற்பெயர். மடு–பால். வள்ளல்–புத்தர்.

5. கவிந்து–தாழ்ந்து. நாற்புறம்–நான்கு + புறம். காட்சி; தொழிற் பெயர்.

6. பொலிந்து–விளங்கி. மேவு–பொருந்திய. விதானம்–துணியால் மேலே விரித்துக் கட்டப்படும் மேற்கட்டி. அம்மா–வியப்பிடைச் சொல்.

7. ஐயன்–புத்தர். உலகம்–உலகத்திலே உள்ளவர் ; இடவாகுபெயர். இல்லா–ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

8. கலம்–பாத்திரம். தருவாய்; முன்னிலை ஒருமை வினைமுற்று.

9. தீண்டவொண்ணு–தொடத்தகாத. ஒண்ணு; ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

10. பெரியோன்–புத்தர். அலகு–எல்லை; அளவு. உலகம்; இடவாகு பெயர். அமுத மொழி–அமுதம் போன்ற மொழி; உவமைத்தொகை

11. உதிரத்தில்–இரத்தத்தில். ஓடும்–பெயரெச்சம் கண் + நீர்–கண்ணீர்.

12. இடர்–துன்பம்.

13. வாராது; எதிர்மறை வினைமுற்று. செய்கை; தொழிற் பெயர். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யால்" (திருக்குறள்).

14. நாடு–விரும்பும். தின்மை–தீமை.

15. நிலத்து–உலகத்தில். ஞானி–புத்தர். நிகழ்த்தி–சொல்லி.

16. தாயினும் இனியான்–புத்தர். அளித்த; பெயரெச்சம். தளர்ச்சி; தொழிற்பெயர்.

## பயிற்சி வினாக்கள்

1. ஆசிய ஜோதி—குறிப்பு எழுதுக.
2. இந்நூலின் ஆசிரியர் வரலாற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. புத்தரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
4. ஆயர் சிறுவன் புத்தரை எங்கு, எந்நிலையில் கண்டான்?
5. புத்தர் வாட்டம் நீங்க ஆயர் சிறுவன் செய்தவை யாவை?
6. சிறுவன் புத்தரைத் தீண்டத் தயங்கியது ஏன்?
7. சிறுவன் புத்தருக்குப் பாலூட்டியது எவ்வாறு?
8. சிறுவன் கட்ட தழைகள் எவ்வாறு காட்சி அளித்தன?
9. சிறுவன் கலத்தில் பால் கறந்துதர உடன்படாதது ஏன்?
10. புத்தர், ஆயர் சிறுவனுக்குக் கூறிய அமுதமொழிகளைத் தொகுத்தெழுதுக.
11. "ஐயையோ! ஆகாது"–இதற்கு இடம் காட்டிப் பொருள் விளக்குக.
12. பிரித்து எழுதுக: கண்ணீர், மேற்குலத்தார், குலச் சிறுவன், வெள்ளாடு.

13. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக.

நட்ட தழைகளெல்லாம், கைகள் தொழுது நின்றான், உலகம் புகழ் பெரியோன்.

14. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களில் உள்ள வேற்றுமை உருபைக் குறித்து, இன்ன வேற்றுமை என்பதையும் எழுதுக.

ஐயனை இவ்வுலகம், நிலத்திற் கிடந்தவனை, கையினால் தீண்ட வொண்ணு, என் தம்பீ.

## 2. நளவெண்பா.

1. வேலை-கடல். பெரு; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வான்நாடர்-தேவர். வேலை-கடல். கலி-ஓசை. புன்நெறி-இழிவான வழி. புன்மை + நெறி; பண்புத்தொகை. கலி-சனிபுருடன்.

2. இமையவர்தம் கோன்-இந்திரன். விருப்பான-விரும்பிய. இருப்பான்; வினையெச்சம்.

3. வை-கூர்மை; உரிச்சொல். வதனம்-முகம். மதிவதனம்; உவமைத்தொகை; வெள்ளைத்தனி யானை-ஐராவதம். வேந்து-இந்திரன்.

4. வெறி-வாசனை. மடமாது-இளமையான பெண்; தமயந்தி. கேள்வன்-கணவன்.

5. நன்னெறி இல்-நல்வழி அல்லாத; தீநெறி. நன்னெறி-நன்மை + நெறி; பண்புத்தொகை. களவு-வஞ்சனை. போதுவாய்-வருவாயாக. புலை நரகு-இழிந்த நரகம். ஏதுவாய்-காரணமாய். தருகின்றேன்-தா + கின்று + ஏன்.

6. கன்னி இளமேதி-மிக்க இளமையான எருமை. கவர்-சூது. கொல் ஏறு-கொல்லும் எருது; வினைத்தொகை.

7. என்றேம்-இசைந்தோம்; ஏல், பகுதி. வான்தோய்-ஆகாயம் அளாவிய. தெங்கு-தென்னை. தேறல்-தேன். தேக்கி-மிகுதியாக உண்டு. மீது ஆடி-மேலே துள்ளி விளையாடி. உழக்கும்-கலக்கும்.

8. காதல்-பிறர்பொருளை விரும்புதல். போது-தாமரைப் பூ. செம்மை-நேர்மையான நெறி; தரும நெறி. நன்னுடன்-நன்மை + நாடன். பூண்டார்-வினையாலணையும் பெயர்; பூண் + ட் + ஆர்.

9. சூது பொர-சூதாட. விலக்கலிர்-விலக்காதீர்; எதிர்மறைப் பன்மை ஏவல் வினைமுற்று. வரால்-ஒருவகை மீன். கலக்கலை-கலக்கு + அலை; வினைத்தொகை. பைந்தாள்-பசுமை + தாள்; பண்புத்தொகை.

10. கனி–பழம். சூதம்–மாமரம். வார்பொழில்–நீண்ட சோலை. பனி–குளிர்ச்சி. போது–அரும்பு. போதும்–போவோம்; தன்மைப் பன்மை வினைமுற்று.

11. பொடி–புழுதி. ஆட–படிய. கொடியான்–புட்கரன். இப்பாட்டு உவமையணி. மென்கால்–மென்மை + கால்; புன்காகம்–புன்மை + காகம்; பண்புத் தொகைகள். போயினன்–போ + இன் + ஆன்.

12. ஆர் உயிர்–அருமையான உயிர்; அருமை + உயிர்; பண்புத் தொகை. அறம்–தருமம். பாரிடம்–பார் + இடம். பாரிடத்தை யார் காக்க நீ யாங்குப் போவது.

13. காதல் இருவர்–அன்புக்குரிய மக்கள் இருவர். கடும் சுரம்–கடுமையான பாலைவனம்; கடுமை + சுரம்; பண்புத் தொகை. ஏதம் உடைத்து–துன்பமுடையது. தாமம்–மாலை.

14. திருவுள்ளம்–எண்ணம். கோலம்–அழகு. ஏதிலர்–அயலார். என்றுள் எடுத்து–என்று குறித்துச் சொன்னாள். செங்கோல்–செம்மை + கோல்; பண்புத்தொகை. எங்கோன்–எம் + கோன். விதர்ப்பன்–வீமன். எழில் நகர்–குண்டினபுரம். போக்கி அருள்–வியங்கோள்வினைமுற்று.

15. பேதை–தமயந்தி. பிரியாத–நீங்காத; எதிர்மறைப் பெயரெச்சம் தாதை–தந்தை. காட்டு; ஏவல் ஒருமை வினைமுற்று; பிறவினை. வாட்டு நீர்–மக்கள் பிரிவினால் உண்டான வருத்தம் காரணமாகத் தோன்றிய அவலநீர்; வாட்டு; முதனிலைத் தொழிற்பெயர். வைத்து–தோற்றுவித்து.

17. பயந்தாள்–பெற்றவள்; தமயந்தி; வினையாலணையும்பெயர். இந்து–சந்திரன். இந்துமுகம்–சந்திரன் போன்ற முகம்; உவமைத் தொகை. எந்தம்மை–எம் + தம்மை. போக்குதிரோ–போக்குவீர்களோ.

### பயிற்சி வினாக்கள்

1. நளவெண்பா—குறிப்பு எழுதுக.
2. இந்நூலின் ஆசிரியர் வரலாற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. 'ஈங்கு வரவென்' என்ற இந்திரனுக்குக் கலி கூறிய விடை யாது?
4. இடைவழியிற் கண்ட கலியை நோக்கி இந்திரன் யாது கூறினான்?
5. தமயந்தி நளனுக்கு மாலை சூட்டியது அறிந்த கலி கொதித்துக் கூறியது யாது?
6. கலி நளனுக்குக் கீழ்மை கொடுக்க யாது செய்தான்?
7. புட்கரன் காடு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
8. சூதாடத் துணிந்த நளனுக்கு அமைச்சர் கூறிய அறிவுரையை எழுதுக.

9. செம்மை நினையாமை பூண்டார் நெறி யாது?

10. அமைச்சர் அறிவுரை கேட்டு நளன் யாது கூறினன்?

11. 'உன் மனைவியைப் பணயம் வைத்து ஆடுக' என்று புட்கரன் கூறியதும் நளன் யாது செய்தான்?

12. "மென்கால் சிறையன்னம்...போனாற்போல்"—இவ்வுவமையை விளக்கி உவமேயத்தோடு பொருத்திக் காட்டுக.

13. நளன் நாடிழந்து செல்வது கண்ட நகர மக்கள் நிலையை விளக்குக.

14. நாடிழந்து காடு செல்லும் நளன் தமயந்தியை நோக்கி யாது கூறினன்?

15. 'வீமன் திருநகர்க்கே மீள்' என்ற நளனுக்குத் தமயந்தி கூறிய விடையாது?

16. நளன் அந்தணனிடம் கூறியது யாது?

17. பெற்றோரைப் பிரியும் மக்கள் நிலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

18. இப்பாடப் பகுதியில் நிடத நாடு எவ்வெவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

19. இடங் காட்டிப் பொருள் விளக்குக:
'ஈங்கு வரவென்?', 'யாதும் விலக்கலிர் நீர்', 'எந்தம்மை வேறாகப் போக்குதிரோ?'.

20. இமையவர்தம் கோன், வெள்ளைத் தனியானை வேந்து, புலைநரகுக்கு ஏது வாய் நின்றான், விண்ணவர்முன் தாமம் புனைவாள்—இவை யார் யாரைக் குறிப்பன?

21. பிரித்தெழுதுக:—வானாடர், புன்னெறி, விண்ணரசர், நன்னாடன், பூம்போது, மென்கால்.

22. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக:—'வேலைபெரு அமுதம்', 'வீமன் திருமடந்தையோடும் இருப்பான் வருகின்றேன்', யாதும் விலக்கலிர் நீர். நினையாமை பூண்டார் நெறி; 'கொடியானுக்கப்பார் கொடுத்து'.

23. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக:—போயினன், பூண்டார், தருகின்றேன், கண்டார்.

## 3. இரட்சணிய யாத்திரிகம்

1. எற்கு–எனக்கு. ஐய; விளி. தருக; வியங்கோள் வினைமுற்று. இரந்து கேட்ப–வேண்டிக் கேட்க. நிருவிகற்பாக–வேறுபாடு இல்லாமல். பங்கிட்டு–பங்கு + இட்டு.

2. கைப்பொருள்–கையில் உள்ள பொருள்; ஏழாம் வேற்றுமைத் தொகை. கரைந்த–சொன்ன; பெயரெச்சம். சொற்பொருள்–சொல்+ பொருள், சொல்லினது பொருள்; ஆறும் வேற்றுமைத் தொகை. காணுன் ;எதிர்மறை வினைமுற்று. விழைந்த–விரும்பிய. சிற்றின்பம்–சிறிய இன்பம், அற்பமான இன்பம்; சிறுமை + இன்பம்; பண்புத் தொகை. பொய்ப்பொருள்–நிலையில்லாத பொருள்; பொய்மை + பொருள்; பண்புத் தொகை. நச்சி–விரும்பி. புறம்பு–வெளியே. அந்தோ; இரக்கக் குறிப்பு இடைச்சொல். அகதி–திக்கற்றவன். சின்னுள்–சில + நாள்.

3. குடும்பி–இல்லறத்தான். திங்கள்–மாதம். வெதுப்பிடும்–வருத்தும். ஆற்ருணுய்–பொருணுய். நுங்கினுன்–தின்ருன். குற்றுமி–குற்று + உமி.

4. கொடும்பஞ்சம்–கொடுமை + பஞ்சம். சஞ்சலித்து–வருந்தி. உண்டு தேக்கெறிய–உண்டு ஏப்பம்விட. துற்றுணவு–துற்று + உணவு. சோர் குவல்–தளர்வேன்; தன்மை ஒருமை வினைமுற்று. சோர் + கு + வ் + அல்.

5. புகல்–பாதுகாப்பாகச் சென்று அடையும் இடம்; தொழிலாகு பெயர். புந்தி–புத்தி. உன்னி–எண்ணி. நைந்தான்–வருந்தினுன்; நை + த் + த் + ஆன். மனத்தாபம்–மனவருத்தம். கொண்டான்–கொள் + ட் + ஆன். தாதை–தந்தை. பரிவர்–அன்பு செய்வர்.

6. ஒல்லையே–விரைவாக. ஈர்க்க–இழுக்க. அல்லல்–துன்பம். உந்த– தள்ள. வல்லே–விரைவாக. மகவாசை–மகவு + ஆசை.

7. எந்தை–எம் தந்தை. நெட்டுயிர்த்து–பெருமூச்சு விட்டு. கண்ணீர்– கண் + நீர். உந்தம்–உம் + தம். அபாத்திரன்–தகுதியில்லாதவன். மதி–அறிவு. ஒன்றும்–சிறிதும். புரிந்தனன்–புரி + த் + த் + அன் + அன்.

8. சித்தமாயின்–மனம் உண்டானுல். மற்று; இடைச்சொல்; அசை. அளியனேன்–கருணைக்கு உரியவன். உய்யுமாறு–பிழைக்கும் வகை. இருத்துக; வியங்கோள் வினைமுற்று. அரற்றி–அழுது. நையல்–வருந்தாதே; எதிர் மறை ஏவல் வினைமுற்று.

9. மரித்தான்–இறந்தான்.இன்னே–இப்பொழுதே.எமர்க்கு–எம்மைச் சேர்ந்தவர்கட்கு. சமைக்க–செய்வீராக. பணித்து–கட்டளையிட்டு. உகவை– மகிழ்ச்சி. வத்திராதி–ஆடை முதலிய. அருங்கலம்–அரிய ஆபரணம். புகர்– குற்றம். மகிழ்–மகிழ்ச்சி; முதனிலைத் தொழிற்பெயர்.

## பயிற்சி வினுக்கள்

1. இரட்சணிய யாத்திரிகம்—குறிப்பு எழுதுக.
2. இந்நூலின் ஆசிரியர் யார்? அவர் வரலாற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. தன் பாகப்பொருளைப் பெற்ற இளைய மகன் யாது செய்தான்?

4. அகதியாகிய இளையமகன் வறுமையால் எவ்வாறு வருந்தினன்?

5. இளையமகன் தன் தவறு உணர்ந்து எவ்வாறு வருந்தினன்?

6. தன் பிழையை எண்ணி வருந்திய இளைய மகன் தேறுற்றது எவ்வாறு?

7. மனம் தெளிந்த இளைய மகன் செய்தது யாது?

8. தந்தை மகனை எவ்வாறு வரவேற்றான்?

9. மகன் தந்தையிடம் வருந்திக் கூறிய மொழிகள் யாவை?

10. தந்தை மகனை எவ்வாறு ஆதரித்தான்?

11. இப்பகுதியால் உணர்த்தப்படும் உண்மைக் கருத்தை விளக்குக.

12. இடம் காட்டிப் பொருள் விளக்குக:
'என்னொரு பாகம் எற்குத் தருக', 'தான் பெற்ற, மகவெனப் பரிவதல்லால் மறுத்திடார்', 'மகவாசைக் கோர் எல்லையும் உளவோ?', 'உமக்கு முன்னும் தெய்வத்திற் கெதிருமாகப், புந்தியற் றளவில் பாவம் புரிந்தனன்', 'தகவுடை விருந்தெமர்க்குச் சமைக்க'.

13. பிரித்தெழுதுக: சொற்பொருள், சின்னாள், குற்றுமி, மகவாசை, சிற்றின்பம்.

14. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக:—'என்னொரு பாகம் எற்குத் தருக,' 'குற்றுமித் தவிடும் கிட்டாக் கொடும் பஞ்சம்,' 'அந்தோ அகதியாயினன் சின்னாளில்', 'புகலொன்று மில்லேன்', 'நையல் என்றருளிக் கூட்டிச் சென்றனன்.'

15. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக:—ஈந்த, இழந்தான், நைந்தான், கொண்டான், புரிந்தனன், சென்றனன்.

## 4. மானவிஜயம்

8. தவிச்ச–தவித்த. 9. அங்ஙனே–அவ்விடம். 11. பரிசு–வெகுமதி. 17. வைச்சிட்டு–வைத்துவிட்டு. 19. வெட்டிவேலை–பயனற்ற தொழில். 32. பீடு–சிறப்பு. 24. புன்மையேன்–அற்பன்; கீழ்மையேன். 26. விழுப்புண்–போரில் முகத்திலும் மார்பிலும் படும் புண்; உரிச்சொல் தொடர். மேதக–மேம்பாடுற. 27. செவ்விய–உயர்ந்த. துறக்கம்–வீர சொர்க்கம். 28. கைதலார்–வருந்துதல் மிக்க. 29. சாதல், போதல்,—இவை இறத்தல் என்னும் ஒருபொருள் குறித்தன. 35. நகை பலராட–பலர் நகையாட. குமலி–காய். 32. இருப்புத் தொடர்–இரும்புச் சங்கிலி. ஈண்டை–இங்கு. 35. மாண்பு–சிறப்பு. 36. ஆர–நிறைய, நிரம்ப. 37. இயலுமோ–கூடுமோ. 38. பாா–பூமி.

40. ஆர் உயிர்–அருமையான உயிர்; அருமை+உயிர்; பண்புத் தொகை 41. செம் பொருள்–உண்மைப் பொருள். 43. மாட்சி சான்றது–சிறப்பு மிக்கது. 45. உத்தமம்–உயர்ந்தது. 46. தகவிலாது–பெருமையில்லாமல். 47. பேணுவர்–போற்றுவர். நீசர்–இழிந்தவர்.

## பயிற்சி வினாக்கள்

1. மான விஜயம்—குறிப்பு எழுதுக.
2. இந்நூலாசிரியரைப் பற்றிக் குறிப்புத் தருக.
3. இந்நூலுக்கு இப்பெயர் எவ்வாறு பொருந்தும்?
4. 'விரைவாக் கொண்டு போய்க்கொடு' என்ற சிறைகாவலன் முதல்வனைத் தடுத்து இரண்டாமவன் கூறியது யாது?
5. சிறைகாவலன் சேரமானை நகையாடிக் கூறிய இகழுரையை எழுதுக.
6. சிறைகாவலன் வெகுண்டு கூறிய வெறுப்புரை யாது?
7. சிறைகாவலர் செய்கையால் சேரமான் வருந்திக் கூறியவை யாவை?
8. சேரமான், தனக்கு வீரன் என்னும் பெயர் தகாதென்றது ஏன்?
9. செவ்விய துறக்கம் எய்துவோர் யாவர்?
10. சேரமான் 'இனியெனக் கிவ்வுயிர் இனியது கொல்லோ?' என்று கூறியது ஏன்?
11. சேரமான் மானத்தின் சிறப்பை எவ்வாறு கூறுகிறான்?
12. சேரமான் தன் உடலை நோக்கிக் கூறியவை யாவை?
13. இடம் காட்டிப் பொருள் விளக்குக: 'தாமதம் செய்தால் தலைபோய் விடுமோ?', 'தவிச்ச வாய்க்குத் தண்ணீர் இல்லையோ?', 'எடுத்துக் கொள்ளடா எல்லாப் பரிசையும்' 'குடிச்சாற் குடியும், குடியாவிட்டாற் கொட்டிக் கவிழும்', 'இனியிவ் வாழ்வெனக் கினியது கொல்லோ?'.
14. பிரித்து எழுதுக: தண்ணீர், இருப்புத்தொடர், நின்னருள்.
15. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக. 'வாழ்தல் விரும்பேன் வறட்சி மிக்கு; 'என்னையும் காத்தி; 'மானமே எவற்றிலும் மாட்சி சான்றது; 'இனியிவ் வாழ்வெனக் கினியது கொல்லோ', 'நீரின் வேட்கை ஆரத் தணித்து'.
16. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக: தருவாய், நின்றேன், வருகிறேன்.

## 4. துதிப்பாடல்கள்

ஈன்ருள்—பெற்ற தாய்; வினையாலணையும் பெயர்; ஈன்+ற்+ஆள். எந்தை—எம் தந்தை; மரூஉ. ஏன்ருன்—இசைந்தான்; ஏல்+ற்+ஆன். இமையவர்—தேவர். தோன்ருத் துணை—கண்முன் தோன்ருமலே துன்பக் காலத்து உடனிருந்து உதவும் துணை. தோன்ரு—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்,

2. தரு துயரம்—பழைய வினையினுல் தரப்படும் துன்பம். தடாயேல்—தடுக்கமாட்டாயாஞல்; எதிர்மறை வினையெச்சம். உன் சரண்—உன்னுடைய திருவடிகள். சரண் இல்லை—புகலிடம் இல்லை. விரை—வாசனை. குழூவும்—மிகுந்த. அரிசினத்தால்—மிக்க கோபத்தால். குழவி—குழந்தை. மற்று—அசை; இடைச்சொல். தன்; சாரியை.

3. உத்தமன்—உயர்ந்தோன் ; திருமால். பேர்—திருநாமம் ; புகழ். பாவை—பாவைநோன்பு. திங்கள்—மாதம். மாரி—மழை. போது—மலர். பொறி—புள்ளி. தேங்காதே – தியங்காமல்; எதிர்மறை வினையெச்சம். சீர்த்த—சிறப்புப் பொருந்திய. வள்ளல்—வண்மை. மும்மாரி—மூன்று + மாரி. செந்நெல்—செம்மை + நெல் ; பண்புத் தொகை. பூங்குவளை—பூ + குவளை. பொறிவண்டு—புள்ளியை உடைய வண்டு; இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை. நீங்காத; எதிர்மறைப் பெயரெச்சம்.

4. இருவினை—நல்வினை, தீவினை; இரண்டு+வினை. மதி—அறிவு. தரிசனை—காட்சி. கனகசபை—பொன்னம்பலம்; சிதம்பரம்.

5. இடர்—துன்பம். என் எவையும்—எவ்வெவையும். மனுவுடல்—மனித உடல். மறவினை—பாவச் செயல். கூளி—சாத்தான். கொடுங்கோல்—கொடுமை + கோல்; பண்புத்தொகை. படி—உலகு. சேசு—ஏசு.

### பயிற்சி விஞக்கள்

1. தேவாரம், பெருமாள் திருமொழி, திருப்பாவை, திருப்புகழ்—இவற்றிற்குப் பொருள் விளக்கம் கூறுக.
2. திருநாவுக்கரசர், குலசேகர ஆழ்வார், ஆண்டாள், அருணகிரியார், வீரமா முனிவர்—குறிப்பு எழுதுக.
3. நாவுக்கரசர், தமக்குச் சிவபெருமான் எவ்வெவ்வாறு அருள் புரிந்ததாகக் கூறுகிருர்.
4. குலசேகரர், தமக்கு விற்றுவக்கோட்டுத் திருமாலைத் தவிர வேறு கதியின்மையை எவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார் ?
5. ஓங்கி உலகளந்த உத்தமன் யார்? இதனுல் குறிக்கப்படும் வரலாறு யாது?

6. பாவை நோன்பினல் பெறும் நன்மைகள் யாவை?

7. கனகசபையில் உள்ள கந்தப்பெருமான் சிறப்பியல்புகள் யாவை?

8. அருணகிரியார் கந்தப்பெருமானை வேண்டுவது யாது?

9. ஏசு பெருமான் பூமியில் வந்து தோன்றியது ஏன்?

10. பொருள் விளக்குக: தோன்றாத் துணை, அரிசினம், தருதுயரம், பரவு தரிசனை, கூளி. கொடுங்கோல்.

11. திருப்பாதிரிப்புலியூர், விற்புவக் கோடு, கனகசபை-குறிப்பு வரைக.

12. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணம் கூறுக:—'ஈன்றாளு மாயெனக் கெந்தையுமாய்', 'தோன்றாத் துணை' 'தருதுயரம் தடாயேல்', 'ஈன்ற தாய்', 'ஓங்கி உலகளந்த', 'நீங்காத செல்வம்'.

13. பிரித்தெழுதுக:—உலகளந்த, மும்மாரி, செந்நெல், பூங்குவளை, பொற்கழல்.

# 5. சிறு நூல்கள்

## 1. நால்வர் நான்மணிமாலை

1. மலி—நிறைந்த. மணிநீர்—நீலமணி போன்ற நிறமுடைய நீர்; உவமைத்தொகை. பொய்கை—சீகாழிக் கோவிலில் உள்ள திருக்குளம். இயற்பா—இயற்றமிழ்ச் செய்யுள். சம்பந்தர் ஞானப்பால் உண்டு பதிகங்கள் பாடினமை இங்குக் குறிக்கப்படுகின்றது. மறித்து—மீட்டும். பிரான்—சம்பந்தர். வெறி—வாசனை, தண்டை—காலணி. தண்கமலம்—குளிர்ந்த தாமரை; தண்மை+கமலம்; பண்புத் தொகை. கமலமே—ஏ, பிரிநிலை. கமலம்—உருவகம்.

2. வீடு—மோட்சம். வாயில்—வழி; இலக்கணப் போலி. தொடை—தேவாரப் பாடல், சொல் வேந்தர்—வாகீசர்; நாவுக்கரசர். பொது நீட்டிற்கு வல்லன்—நடராசப் பெருமான். பொது—மன்று. ஒருவற்கு—சம்பந்தருக்கு. அமுது—பால். நாட்டிற்கு இலாத—நாட்டில் வராத. குடர் நோய்—சூலை நோய். குடர்; குடல் என்பதன் போலி. எப்படியினும்—எத்தன்மையினும்.

3. படி—ஒப்பு. ஆரூரர்—சுந்தரர், வான்—தேவர்; இடவாகுபெயர். தொடி—வளையல். மென்கை—மெல்லியகை; மென்மை+கை-பண்புத் தொகை. மாதர்—பரவையார். மிடி—வறுமை, உழன்றமை—வருந்தினமை; அலைந்தமை.

4. விளங்கிழை—உமாதேவி ; வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இழை—ஆபரணம். மெய்—உடம்பு. ஆரணம்—வேதம். வாதவூர் அண்ணல்—மாணிக்கவாசகர். அண்ணல்—பெருமை பொருந்தியவன். மலர்வாய்—மலர்போலும் வாய் ; உவமைத் தொகை. வாசகத் தேன்—திருவாசகமாகிய தேன். நிற்பவர்—வினையாலணையும் பெயர். காண்கிலேம்—தன்மைப் பன்மை எதிர்மறை வினைமுற்று. கருங்கல்—கருமை+கல் ; பண்புத்தொகை. கருங்கல் மனம்—உவமைத் தொகை. மனமும்—உம், உயர்வு சிறப்பு, இடைச்சொல். தொடு மணல் கேணி—தோண்டப்பட்ட மணல் நிலத்திலுள்ள சிறு குளம். தொடு மணற்கேணி—வினைத்தொகை. மணற்கேணி—மணல்+கேணி ; ஏழாம் வேற்றுமைத் தொகை. விதிர் விதிர்ப்பு—அடுக்குத்தொடர். ஆகுநர்—வினையாலணையும் பெயர். மன்பதை உலகு—மக்கள் உலகம்.

## 2. அழகர் அந்தாதி

1. நீர் ஆழி—நீர்மயமான கடல். பால் ஆழி—பாற்கடல். நின்மலன்—குற்றமற்றவன். சீர் ஆழி—சிறந்த மோதிரம். கேள்வன்—கணவன். தெய்வப் புள்—கருடன். கூர் ஆழி—கூர்மையான சக்கராயுதம். வெய்யோன்—சூரியன். ஓர் ஆழி—ஒற்றைச் சக்கரம். மால்—பெருமை. அலங்காரன்—அழகப் பெருமான்.

2. உரைமாற்றம்—சொல்லும் சொல். பொறி—இந்திரியங்கள். இரை—உணவு. உரைமாற்று—உரைகல்லில் உரைத்துப் பார்த்து அறியத்தக்க மாற்று. பொன்—பொன்னுடை, பீதாம்பரம். வரை—மலை. மாற்றவர்—பகைவர். செற்றாய்—அழித்தாய்.

3. மாணிக்க நகம்—மாணிக்க மலை. புரை—ஒத்த. பாணி கன கம்—கையில் ஒட்டிக் கொண்ட பெரிய கபாலம். பலி—பிச்சை. ஆணிக் கனகம்—ஆணிப் பொன். அண்டம்—உலகங்கள். பேணி—விரும்பிப் பாதுகாப்பவன். அனகன்—குற்றமில்லாதவன்.

4. பித்து—ஆசை. அரும்பாநின்ற—உண்டாகின்ற. கைத்து—வெறுத்து. முத்தர்—முத்தி பெற்றவர். பார்—இவ்வுலகத்தோர் ; இடவாகுபெயர். புத்தரும்பு—புதிய அரும்பு.

பயிற்சி வினாக்கள்.

1. நான்மணி மாலை, அந்தாதி—இவற்றின் இலக்கணத்தை வரைக.
2. சிவப்பிரகாச சுவாமிகள், பிள்ளைப் பெருமாளையங்கார்—இவர்களைப் பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.
3. நால்வர், அழகர்—குறிப்பு வரைக.
4. ஞான சம்பந்தர் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளார் ?

5. நாவுக்கரசர் தேவாரத்தின் சிறப்பு யாது ?

6. பொது ஆட்டுக்கு வல்லான் யார் ? அவன் ஞான அமுது உதவியது யாருக்கு ?

7. சிவபெருமான் நாவுக்கரசரை எவ்வாறு ஆட்கொண்டார் ?

8. சிவபெருமான் சுந்தரர் பாட்டில் விருப்பமுடையவன் என்பதற்கு ஆசிரியர் காட்டும் காரணங்கள் யாவை ?

9. வேதத்தினும் சிறந்தது திருவாசகம் என்பது ஆசிரியரால் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது ?

10. அந்தாதி ஆசிரியர் நெஞ்சிற்குக் கூறும் உபதேசம் யாது ?

11. அந்தாதி ஆசிரியர் அழகர்பால் செய்யும் விண்ணப்பம் யாது ?

12. அந்தாதி ஆசிரியரால் பித்தரல்லாதவராகக் கூறப்படுவோர் யாவர் ?

13. அந்தாதி ஆசிரியர் அழகப் பெருமானை வேண்டிக் கொள்வது யாது ?

14. அந்தாதியில் அழகப் பெருமான் எவ்வெவ்வாறு சிறப்பிக்கப் பட்டுள்ளார் ?

15. பிரித்தெழுதுக : இயற்பா, ஞானப்பால், மென்கை, மனைக டொறும், விளங்கிழை, முக்கண், மணற் கேணி,

16. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு வரைக.

மணிநீர்ப் பொய்கை, வீட்டிற்கு வாயில், காட்டிற்கிலாத குடர் நோய், விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண் காரணன், மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேன், தொடு மணற் கேணியில்.

## 6. தனிப் பாடல்கள்

1. பெரிய விடம்–பெரிய+விடம்–மிக்க விஷம்; பெரிய+இடம்–(அரச சமுகம் போன்ற) பெரிய இடம் ; பித்தர்–சிவபெருமான் ; பைத்தியம் கொண்டவர். அரியுண்ணல்–காற்றை ஆகாரமாக உட்கொள்ளுதல் ; அரியப்படுதல். உப்பும் மேல் ஆடும்–உடல் ஊதப்பெறும், படம் எடுத்து ஆடும் ; உப்பிட்டுக் குலுக்கப்படும். எரி குணம்–கோபித்துச் சீறும் குணம் ; புண்ணில் பட்டால் எரியும் தன்மை.

2. பாணர்க்குச் சொல்லுவது–தை; பைம்புனலை மூடுவது–மாசு (அழுக்கு); தாணு உரித்தது–இபம் (யானை); சக்கரத்தோன் ஊணது–கு(பூமி); எம்மானை ஏத்துவது–நி (நீ); ஈசன் இடத்தும்–மாது (பார்வதி); சிரத்தும்–அம் (நீர், கங்கை நீர்). எம்மான்–எமது தலைவன்; இறைவன். பைம்புனல்–பசுமை + புனல், பண்புத் தொகை. தாணு–சிவபெருமான். சக்கரத்தோன்–திருமால். ஊண்–உணவு. சிரம்–தலை.

3. இரவலன்–யாசகன். உனக்கு இல்லாதது என்ன?–திரு; இதயம் என்ன?–வேம்; பரவுணவேது?–கடன்; சுவையற்றது என்ன?–நா; சொற்பான்மை என்ன?–தா. திரு + வேம் + கடன் + நா + தா = திருவேங் கட நாதா. வர–மேலான.

4. இம்பர்–இவ்வுலகம். வான்–ஆகாயம். பாணி–பாணன் மனைவி; பாணன் × பாணி. வம்பு–புதுமை, வாசனை. களபம்–யானை, சந்தனம். மாதங்கம்–யானை, சிறந்த பொன். பம்பு சீர்–மிக்க சிறப்பு; வினைத்தொகை. வேழம்–யானை, கரும்பு. பகடு–யானை, காளைமாடு. பழனம்–வயல். கம்பமா–யானை, கம்புமா. கைம்மா–யானை.

5. கலை–ஆடை. அக்கினி–தீ; இங்குப் பசித்தீ. உதரம்–வயிறு. அரன்–சிவபெருமான். நிருதி–அரக்கன்; நரமாமிசம் உண்போன். அனிலம்–சாற்று. அமுது–உணவு. தலைசெயும்–தலைமை பெற்றிருக்கும். மந்தரம்–மந்தரமலை. புயம்–தோள். மாசுஇல்–குற்றம் இல்லாத. ஈசான பூபதி–வடகிழக்குத் திசைக்குரிய ஈசுவரன். இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்கள் எண்திசைப் பாலகர். திப்பையராயன், புலவரை ஆதரித்த வள்ளல். இவன் சாளுவ மன்னன்; கோப்பையன் பெற்ற மகன்; மந்தர மலை போன்ற தோளு டையவன்.

6. கமலாலயம்–தாமரைக் குளம் (போலக் குளிர்ந்த சிந்தை உடைய வன்.) கடல்மடை திறந்த வெள்ளம்–மிக்குப் பெருகும் வெள்ளம் போலப் பேசும் பேச்சுத் திறமை வாய்ந்தவன். விற்பனம்–அறிவு. கற்பூர தீபம்–கற்பூர தீபம்போலப் புகழ் விளக்கம் உடையவன். சுகிர்த குணம்–நற்குணம். அவதானி–அஷ்டாவதானி. சனது–கடிதம். விலட்சணன்–அழகன். மால்–திருமால். வேல்–வேல்தாங்கிய முருகன். காமா–மன் மதனைப் போன்றவனே. கா–என்னைக் காப்பாயாக. நா ஒன்று பா ஒன்று–நாவிற் பொருந்திய செய்யுள் ஒன்று.

7. கார்–மேகம்; பண்பாகுபெயர். கார் நடக்கும்படி–மேகம் நடப்பது போல. காராளர்–வேளாளர்; மழையை ஆள்பவர் என்பது பொருள். இயல் இசை நாடகம்–முத்தமிழ். சீர்–பெருமை. திறன்–வலிமை. அறத்தின் செயல்–அறச் செயல்கள். பார்–பூமி. பசி நடக்கமாட்டாது–பசி தலைகாட்டாது.

## பயிற்சி வினாக்கள்

1. 'பாம்பும் எலுமிச்சம் பழம்'—எவ்வாறு ?

2. பெரியவிடமே சேரும், பித்தர் முடியேறும், அரியுண்ணும், உப்பு மேலாடும், எரியுண்ணும்—ஒவ்வொன்றிற்கும் இருபொருள் கூறுக.

3. பாணர்க்குச் சொல்லுவது, பைம்புனலை மூடுவது, தானு உரித்தது; சக்கரத்தோன் ஊண்—இவை யாவை?

4. 'தை மாசி பங்குனி மாதம்'—இத்தொடர் தனித்தனிப் பிரிந்து வெவ்வேறு பொருள் தருமாறு அமைக்கப்பட்டுள்ள விதத்தை விளக்குக.

5. திருவேங்கடநாதன் இரவலனை வினவிய வினாக்கள் யாவை? அவற்றிற்குரிய விடைகளை அவன் பெயரிலேயே அமைத்துக் காட்டிய திறத்தை விளக்குக.

6, 'இம்பர் வானெல்லை' என்று தொடங்கும் பாடலில் கூறப்பட்டுள்ள செய்தியை உரையாடல் முறையில் அமைத்து எழுதுக.

7. பாணனுக்கும் பாணிக்கும் நடந்த உரையாடலில் அமைந்துள்ள நயத்தை விளக்குக.

8. சொக்கநாதப் புலவர் தம் வறுமைநிலையை நயம்பட விளக்கியுள்ள திறத்தை எடுத்துக் காட்டுக.

9. சீட்டுக் கவியில் சரவணப் பெருமாள் கவிராயர் தம் பெருமைகளை எவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்?

10. கவிராயர் கறுப்பண்ணனை எவ்வாறு சிறப்பித்துள்ளார்?

11. சீட்டுக்கவியில் குறிக்கப்பட்டுள்ள செய்தியை எழுதுக.

12. உழவர் ஏர் நடத்தலால் நடப்பன யாவை? நடவாதது யாது?

13. காராளர் யார்? அவர்கள் சிறப்பு யாது?

14. சிலேடை, வினவிடை, சீட்டுக்கவி—இவற்றை விளக்கிக் குறிப்பு எழுதுக.

15. பிரித்து எழுதுக: அரியுண்ணும், இருகண், கமலாலயம்.

16. தொடரிலக்கணம் கூறுக: இருகண், மந்தர புயத்தான், இயல் இசை நாடகம், பைம்புனல்.

17. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக: விலட்சணன் எதிர்த்து காண்க, கார் நடக்கும்.

# 7. வருணனை

1. காமர்–அழகிய. கயல்–மீன், காவி–நீல மலர். முகை–மொட்டு. நெகிழ–விரிய. தளை–கட்டு. பூமடந்தை–பூமி தேவி. நாட்டம்–கண். சாகரம்–கடல்.

2. வளவன்–சோழன் மரபுப் பெயர்; உறந்தை–உறையூர் மரூஉ; விலை பகர்தல்–விலை கூறுதல். வில்; வானவில். சால–உரிச்சொல். தன்மைத்து–இயற்கையானது.

3. மந்தி–பெண் குரங்கு. கவி–குரங்கு. கானவர்–வேடர். விழி எறிந்து–கண்பார்வையை வீசி. கவன சித்தர்–ஆகாய வழியே செல்லக் கூடிய சித்தர். காயசித்தி–உடலை நீண்ட நாள் வாழச் செய்யத் தக்க ஒரு மருத்துவ முறை. கதிரோன்–சூரியன். பரி–குதிரை. தேர்க்கால்–தேர்ச் சக்கரம். கூனல் இளம் பிறை–வளைந்த பிறைச் சந்திரன். வேணி–சடை முடி. இளம் பிறை–இளமை+பிறை; பண்புத் தொகை. பரிக்கால், தேர்க் கால்; ஆறும் வேற்றுமைத் தொகை.

4. மருங்கு–ஆற்றின் இருபக்கம். வண்டு–வண்டு; வளையல். பூ.ஆடை–பூவாகிய ஆடை: பூவேலை செய்த ஆடை. மணி–அழகு. கயல்கண்–கயலாகிய கண்; கயல்போலும் கண். வளையாமை: எதிர்மறைத் தொழிற் பெயர். இச்செய்யுள் சிலேடை அணி.

5. வதுவை–திருமணம். குனிக்கும்–நடிக்கும். மஞ்ஞை–மயில். அயில் விழி–வேல் போன்ற கண். அரங்கு–நடன மேடை. பனி–குளிர்ச்சி. பள்ளி–படுக்கை. தும்பி–வண்டு. செவ்வழி–ஒரு பண். முரல்வ–ஒலிப்பன. அயில் விழி–உவமைத் தொகை. முரல்வ–பலவின்பால் வினைமுற்று.

6. சுடர்–ஒளி. பரிதி–சூரியன். முகில்–மேகம். நீலவண்ணம்–நீல வர்ணம். வன்னம்–அழகு.

7. கான்–காடு. ககனம்–ஆகாயம். தாரை–நட்சத்திரங்கள். நிரை நிரை–வரிசை வரிசையாக. வேனிலான்–மன்மதன். விழவு–திருவிழா; காமவேள் விழா. கும்பம்–நிறை குடம்; பூரண கும்பம். குணதிசை–கிழக்குத் திசை.

8. அயர்வு–சோர்வு. பொலிந்து–அழகாக விளங்கி. மேற்கு + திசை–மேற்றிசை. கொழித்தது–தெளித்தது. சுடர்க்கோமன்–சூரியன்.

9. கள்ளம்–வஞ்சகம். கலகலத்த–இரட்டைக்கிளவி சிரிப்புமுகம்–சிரிப்பை உடைய முகம். கொள்ளை கொள்ளை–மிகுதியாக; அடுக்குத் தொடர். நினைவு கூர்ந்தால்–நினைத்தால்.

பயிற்சி வினாக்கள்

1. நிடத நாட்டின் வளப்பத்தினை வரைக.
2. உறையூர் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
3. மாலை விற்போர் கிள்ளிக் களைந்த பூ எவ்வாறு தோன்றுகிறது?
4. குற்றால மலையின் சிறப்புக்களைத் தொகுத்தெழுதுக.
5. விளக்கிக் குறிப்பு எழுதுக: கவன சித்தர், காயசித்தி.
6. காவிரியாறு எவ்வாறு புனைந்துரைக்கப்பட்டுள்ளது?
7. சோலைக் காட்சி எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
8. அரங்கினுக்கு அழகு செய்வது யாது?
9. செவ்வானம் வழங்கும் காட்சி எவ்வாறு வியந்துரைக்கப்பட்டுள்ளது?
10. பரிதியைச் சூழ்ந்த முகில் கூட்டத்தின் தோற்றம் எவ்வெவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
11. நட்சத்திரக் கூட்டங்களின் தோற்றம், முழுமதியின் உதயம்—இவை எவ்வெவ்வாறு புனைந்து கூறப்பட்டுள்ளன?
12. சூரிய ஒளியின் செயல்கள் எங்ஙனம் சிறப்பிக்கப்பட்டுள்ளன?
13. சிதம்பரம் பிள்ளையின் திருவுருவத்தை இராமலிங்கம் பிள்ளை எவ்வாறு நினைவூட்டுகின்றார்?
14. பிரித்தெழுதுக: தன்னுட்டம், செந்தேன், தேனருவி, கயற்கண் நீலப் பொய்கை, பொற்கரை.
15. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு எழுதுக: தாமரையின் செந்தேன், சால மிகுவதோர் தன்மைத்து, திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன், அயில்விழி மகளிர், செவ்வழி முரல்வ சோலை, வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற, கள்ளமற்றுக் கலகலத்த, வேறு நிறம் அறியா ஆடை.
16. பகுபத உறுப்புக்களைப் பிரித்தெழுதுக: கலங்கினள், கொள்வோம், வருகின்றது. முரல்வ, தோன்றிற்று.

## 8. புதுமைப் பாடல்கள்

1. பெற்றி–தன்மை. மதி கெட்டீரே–அறிவு கெட்டவர்களே. விண்–ஆகாயம்.

2. இறவாத–கெடாத, அழியாத; எதிர்மறைப் பெயரெச்சம். மகிமை பெருமை. திறமான–உறுதியான. இயற்றல்; தொழிற் பெயர். பழங்கதைகள்–பழமை + கதைகள்; பண்புத்தொகை.

15

3. சாலைகள்–தொழிற்சாலைகள்.

4. ஊனம்–இழிவு. வாய்மை–உண்மை. தூய்மை–சுத்தம். சேவை–தொண்டு. 'ஓடி ஓடி' முதலியன்வை அடுக்குத் தொடர்கள்.

5. சுவடி–நூல். செந்தமிழ்–செம்மை + தமிழ்; செழுந்தமிழ்–செழுமை + தமிழ்; பண்புத் தொகைகள். நாணிடவும்–வெட்கப்படவும்.

6. சலசலென–இரட்டைக் கிளவி. சாய்க்காமை–கலக்காமை. தாபிப்போம்–நிலைநிறுத்துவோம்.

7. நஞ்சு–விஷம்; ஆலால விஷம். செந்நீர்–இரத்தம்; செம்மை + நீர்; பண்புத் தொகை. இலகினை–விளங்கினை. நஞ்சு உண்டது, சிவ பெருமான். சிலுவையில் நின்று செந்நீர் சிந்தியது, ஏசு பெருமான். அரசை நீத்து விலகினது, புத்த பெருமான். மாடு மேய்க்க விரும்பினது; கண்ணபிரான். அடியும் தாங்கி இலகினது, முகம்மது நபி.

8. ஊர்ந்தோம்–செலுத்தினோம். முச்சங்கம்–முதல் இடை கடைச் சங்கம். புலன்–ஐம்புலன். தவத்தரசர்–முனிவர். தறுகண்–அஞ்சாமை. அயராமல்–சோர்வடையாமல். முன் + நாளில்–முன்னாளில். முச்சங்கம்–மூன்று + சங்கம்; பண்புத்தொகை. பொன் + ஆறு–பொன்னாறு. புவியரசர், கவியரசர்; நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள். அயராமல்–எதிர்மறை வினையெச்சம். அருள் + பணி–அருட்பணி.

## பயிற்சி வினாக்கள்

1. பாரதியார் பெண் விடுதலையை எவ்வாறு வற்புறுத்தியுள்ளார்?
2. தமிழ்மொழி வளர்ச்சிக்குச் செய்யவேண்டுவன யாவை?
3. திறமான புலமை எவ்வாறு இருக்கவேண்டும்?
4. கவிமணியின் ஆசைகள் யாவை?
5. இளந்தமிழர்க்கு இராமலிங்கம்பிள்ளை அறிவுறுப்பன யாவை?
6. பழந்தமிழ் புது நலம்பெறச் செய்யவேண்டுவனவாகப் பாரதிதாசன் கூறியுள்ளவற்றைத் தொகுத்து எழுதுக.
7. கலியாண சுந்தர முதலியார் துயரம் போகக் கூறும் வழி யாது?
8. கலியாண சுந்தர முதலியார் சர்வசமய சமரசத்தை எவ்வாறு விளக்கியுள்ளார்?
9. தமிழர்களாகிய நாம் முன்னாளில் எவ்வாறு வாழ்ந்தோம்?
10. பிரித்தெழுதுக: பழங்கதைகள், படிப்பில்லை, ஊரறியும், முன்னாளில், பொன்னாறு, அருட்பணி.

11. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு எழுதுக: இறவாத புகழுடைய புது நூல்கள், வாடிவாடி அறமறந்து, தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும், புவியரசர் கவியரசர் புலவீன வென்ற, மின்னிக்க உலகினிலே வாழ்க்கை யில்லை, ஊர் அறியும் தமிழில்.

## உரை நடை

## பயிற்சி வினக்கள்

### 1. நீயும் உனது நாடும்

1. மனிதத் தன்மை பெற்று நிற்கும் வெற்றி யாது?
2. கூட்டுறவு வாழ்வின் பயன்கள் யாவை?
3. அணுக் குண்டின்முன் அஞ்சாது முன்னேறுவது எவ்வாறு?
4. தனியாளின் பெருமை எத்தகையது?
5. உலகினை வாழ்விக்கும் வழி யாது?
6. வாழ்வில் வெற்றி பெறுவது எவ்வாறு?

### 2. தமிழ் நாடு

1. தமிழ் நாட்டின் சிறப்பு யாது?
2. தமிழ் நாட்டின் வளநிறைவு எத்தகையது?
3. தமிழ் நாட்டின் வண்மைச் சிறப்பை விளக்குக.
4. தமிழ் நாட்டின் வீரச் சிறப்பை விளக்கி வரைக.
5. தமிழ் நாடு மறைமலிந்த நாடாவதைப் புலப்படுத்துக.
6. தமிழ் நாட்டின் சமயப் பொதுமையைச் சான்று காட்டி விளக்குக.
7. தமிழ் நாட்டின் சாதி கடந்த சமத்துவத் தன்மை எவ்வாறு விளங்குகிறது?
8. தமிழ் நாடு இறையொளியும் இசையொளியும் இலங்கி நிற்பதாவது எவ்வாறு?

### 3. வாழ்க்கைப் போராட்டம்

1. உண்மையான சரித்திரமாவது யாது?
2. மக்கள் வாழ்வில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் யாவை? அவை எவ்வாறு உண்டாயின?

3. சமூகம் எவ்வாறு வளர்ந்தது?
4. சமூகம் தோன்றி வளர்ந்த காரணம் யாது?
5. பொருளாதார, சமூக வளர்ச்சியின் விளைவுகள் யாவை?
6. வியாபாரம் எவ்வாறு தோன்றி வளர்ந்தது?

## 4. அருள் ஞானத் தந்தை

1. இந்திய தேசியச் சரித்திரத்தில் காந்தியடிகள் எவ்வாறுபோற்றப் படுவார்?
2. காந்தியடிகள் எத்தகைய காலநிலையில் தோன்றினர்?
3. காந்தியடிகளைப் பற்றி மேனுட்டினர் கருதியவை யாவை?
4. காந்தியடிகளின் உபதேசங்களைப் பற்றி ஆசிரியர் கூறுவன வற்றை யெழுதுக.
5. காந்தியடிகளின் இயக்கம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

## 5. என் ஆசிரியர்

1. டாக்டர் ஐயரவர்களது ஆசிரியர் யார்?
2. பிள்ளையவர்களின் தோற்றத்தை ஐயரவர்கள் எவ்வாறு வருணித்துள்ளார்?
3. பிள்ளையவர்களை ஐயரவர்கள் முதன் முறை நோக்கிய நோக்கிற்குக் காட்டப்பட்டிருக்கும் உவமை யாது?
4. வேங்கடசுப்பன் என்பது நல்ல பெயர் என்று பிள்ளையவர்கள் ஏன் கூறினர்?
5. "தனி முதற் சடையிற் சூடும்" — ஈண்டுள்ள பிழையினைத் திருத்துக.
6. பிள்ளையவர்களை ஐயரவர்கள் முதலிற் கண்ட காட்சியைப் பத்து வரிகளுக்குள் வரைக.
7. ஐயரவர்களைப் பிள்ளையவர்கள் எவ்வாறு சோதித்தார்? பிறகு எவ்வாறு ஏற்றுக்கொண்டார்?

## 6. வாழ்க்கைக்கு வழிகாட்டி

1. வாழ்க்கை வழிகாட்டிகளிற் சிறந்தவை யாவை?
2. வாழ்வின் வழியை மக்களுக்கு எடுத்துக் காட்டிய மகான்கள் யாவர்?
3. தலை சிறந்த வாழ்க்கை நூல் யாது? அதனைத் தந்தவர் யார்?

4. திருக்குறள் எக்காலத்திலும் பயன்படும் வாழ்க்கை வழிகாட்டி யாவது எவ்வாறு?
5. திருவள்ளுவர் பொருளின் அவசியத்தை எவ்வாறு வலியுறுத்துகிறார்?
6. 'இயற்றலும் ஈட்டலும்' என்னும் குறளில் வள்ளுவர் விளக்கும் தத்துவம் யாது?

## 7. அன்னைக்கு

1. டில்லியில் நடந்த அதிர்ச்சி யாது?
2. காந்தியடிகளின் அரசியல் நெறியை விளக்குக.
3. "அம்மா, மறக்கமுடியவில்லை" என்று மகன் குறிப்பிடுவதாக ஆசிரியர் காட்டியன யாவை?
4. காந்தியடிகளின் வாழ்வு எந்தக் குறளுக்கு எடுத்துக் காட்டு? எவ்வாறு?
5. "திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை"—இப்பழமொழி கொண்டு விளக்கப்பட்டது யாது?
6. தமிழ்மொழி காந்தியடிகளின் போற்றுதலை எவ்வாறு பெற்றது?
7. காந்தியடிகள் செய்த தமிழ்த் தொண்டு யாது?
8. தமிழ் நாட்டின் வறுமை காந்தியடிகளின் கோலத்தையே மாற்றியது எவ்வாறு?

## 8. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

1. பேராசிரியர் பிள்ளையவர்கள் தமிழ்க் கல்விக்கு ஆற்றிய பெரும் பணிகள் யாவை?
2. பிள்ளையவர்கள் நாடகத் தமிழின் மறுமலர்ச்சிக்கு அடிகோலியது எவ்வாறு?
3. பிள்ளையவர்கள் உலகிற்களித்த நாடக நூல் யாது? அதன் சிறப்புக்களைக் கூறுக.
4. பிள்ளையவர்கள் பாடிய தமிழ்த் தெய்வ வணக்கத்தின் சிறப்பை விளக்குக.
5. பிள்ளையவர்கள் தமிழ்த் தெய்வ வாழ்த்தில் அறிவுறுத்தும் மொழி நூல் உண்மை யாது?
6. பிள்ளையவர்கள் மொழி நூல் ஆராய்ச்சிக்கு அடிகோலியுள்ளது எவ்வாறு?
7. பிள்ளையவர்கள் இயற்றிய ஆராய்ச்சி நூல்கள் யாவை?

## 9. வார்ப்பிரும்பு

1. விளக்குக் கம்பம், மோட்டார் முட்டுத்தாங்கி—இவற்றின் மூலப் பொருள்களில் உள்ள வேறுபாடு யாது?
2. சுத்தமான இரும்பின் இயல்பு யாது?
3. கலப்பிரும்புகள் மூவகைப்படும்—எவை?
4. பன்றி இரும்பு—எது? ஏன் இப்பெயர் பெற்றது? இதன் பயனென்ன?
5. வார்ப்பிரும்பு எப்படிச் செய்யப்படுகிறது?
6. இரு வகை வார்ப்பிரும்புகள் எவை? அவற்றின் வேறுபாடுகள் யாவை?
7. மூவகைக் கரிகள் எவை?
8. இரும்புக் கார்பைடு என்பது என்ன?
9. சாம்பல் நிற வார்ப்பு, வெண்ணிற வார்ப்பு—உதாரணங்கள் தருக.
10. வார்ப்பிரும்பின் பொதுவான பயன் என்ன?

## 10. கலையும் தொழிலும்

1. தொழிலுக்கும் கலைக்கும், வேரும் மலரும் உபமானமாவது எவ்வாறு?
2. தொழிலாளர், கவின் கலைஞர்—இவர்கள் முறையே எது எதைப் போன்றவர்கள்? எவ்வாறு?
3. நம் நாட்டினர் குறிக்கோள் யாது? ஏன்?
4. பாரதியார் வாணியை எவ்வாறு பாடுகிறார்? அவ்வாறு பாடக் காரணம் யாது?
5. பாரதியார், 'தொழில்' என்னும் பாட்டில் தொழிலையும் கலையையும் எம்முறையில் வைத்துப் பாடியுள்ளார்?

## 11. ஜப்பான் செலவு

1. வானவூர்திப் பயணத்தின் அனுபவங்களை எழுதுக.
2. வான ஊர்தியிற் செல்வோர் காணும் வெளிக் காட்சியை விளக்குக.
3. வான ஊர்தியின் அமைப்பை வரைக.

4. வான வூர்தியிற் செல்வோர் எவ்வாறு உபசரிக்கப் பெறுகின்றனர்?
5. சிங்கப்பூரின் சிறப்புக்களைத் தொகுத்து வரைக.
6. மலேயா முதலிய கிழ்த்திசை நாடுகளிற் காணப்படும் தமிழர் நாகரிகத்திற்கான சான்றுகள் யாவை?
7. ஜப்பானின் சிறப்பை உலகறியச் செய்துகொண்டிருப்பது யாது?
8. ஜப்பானின் இயற்கை வனப்பு எத்தகையது?
9. ஜப்பான் நாட்டில் அழகு மிக்க காட்சிகள் யாவை?

## 12. தமிழர் கலைகள்

1. தமிழர் யார்? தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
2. தமிழ் நாட்டின் கலைச் செல்வச் சிறப்பை விளக்குக.
3. தமிழர் சிற்பத்திலும் சித்திரத்திலும் சிறந்திருந்தனர் என்பது எவ்வாறு அறியப்படுகிறது?
4. மாமல்லபுரம், தஞ்சாவூர், இலங்கை ஆகிய இடங்களில் உள்ள சிற்ப, சித்திரங்களைப் பற்றி விளக்கி வரைக.
5. முற்காலத்தில் கலைக்கிருந்த ஆதரவை விளக்கும் கதையை யெழுதுக.
6. உதய சங்கர் எக்கலையில் தேர்ந்தவர்?
7. நாடகக் கலை எவ்வாறு கெடுக்கப்பட்டது?
8. கண்ணாலும் காதாலும் அனுபவிக்கும் கலை யாது? அதன் சிறப்பு யாது?

## 13. பஞ்சாயத்து ஆட்சி

1. கிராமங்களைப் பற்றிக் காந்தியடிகள் கூறுவது யாது?
2. கிராம மக்கள் நாட்டிற்கு எவ்வாறு சிறப்புற்றவர்கள்?
3. பழைய காலத்திற் கிராம ஆட்சி எவ்வாறு நடைபெற்றது?
4. கிராம ஆட்சி எவ்வாறு சீர்கெட்டது?
5. கிராமப் பஞ்சாயத்தின் அவசியத்தை விளக்குக.
6. அரசாங்கத்தார் கிராமப் பஞ்சாயத்திற்குச் செய்த வசதி யாது?
7. பஞ்சாயத்தார்க்குரிய உரிமைகள் யாவை?
8. பொருள் வருவாய்க்குரிய வழிகள் எவை?

## 14. பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள்

1. பிரிட்டிஷ் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கட்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
2. பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களின் பெருமைக்குக் காரணம் யாது?
3. பிரிட்டனில் வெளிநாட்டு மாணவர்கள் தங்குவதற்குள்ள வசதிகள் யாவை?
4. பிரிட்டனில் மாணவர்களும் ஆசிரியர்களும் எவ்வாறு நடந்து கொள்ளுகின்றனர்?
5. லாஸ்கியின் சொற்பொழிவுக்கு மாணவர்கள் திரண்டிருந்த தன்மை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
6. லாஸ்கியின் சிறப்பியல்புகள் யாவை?
7. லாஸ்கி சொற்பொழிவாற்றிய தன்மையை விளக்குக.

## 15. ஔவையார் தூது

1. அதியமான் தமக்கு நெல்லிக்கனி கொடுத்த தன்மையை ஔவையார் எவ்வாறு பாராட்டினார்?
2. அதியமானது பரிசு வழங்கும் தன்மை ஔவையாரால் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
3. அதியமானின் படைச் சிறப்பும் வீரச் சிறப்பும் ஔவையாரால் எவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளன?
4. அதியமான் ஔவையாரை வேண்டிக்கொண்டது யாது?
5. ஔவையார் தொண்டைமானிடம் அதியமான் வீரத்தைச் சிறப்பித்துக் கூறியன யாவை?
6. அதியமான் படைச் சிறப்பை ஔவையார் தொண்டைமானுக்கு எவ்வாறு அறிவுறுத்தினர்?
7. ஔவையார் தொண்டைமானுக்குக் கூறிய அறிவுரை யாது?
8. தம் வேண்டுகோளுக்கு இணங்கிய ஔவையார் தொண்டைமானை எவ்வாறு பாராட்டினர்.